15798

# தேவாங்க புராணம்

15534

★

மூலமும் கருத்துரையும்

★

மாடர்ன் பிரஸ்,
திருச்சி ரோடு, — கோயமுத்தூர்
1958

உரிமை

விலை ரூ. 2/-

உ

ஸ்ரீ இராமலிங்க சவுடாம்பிகை துணை.

# ஸ்ரீ தேவாங்க புராணம் மூலமும் கருத்துரையும்

பழனி திரு. மாம்பழக் கவிச்சிங்க நாவலர்
இயற்றிய

# தேவாங்கபுராணம் மூலமும்

கோவை ம. இராமச்சந்திர செட்டியார்
இயற்றிய

## பதிப்புரை, கருத்துரைகளும்

இதில் அடங்கியுள்ளன.

கோவை தேவாங்க பிரமுகர்கள் வேண்டுகோளின்படியும்
கோவை-இரண்டு தேவஸ்தானங்களின்
அறக்காப்பாளர்களின் விருப்பப்படியும்

கோவை, நிலக்கிழாரும் பிரபல வர்த்தகரும் ஆகிய
திரு. S. பீமைய செட்டியார் அவர்களால்

மாடர்ன் பிரஸில்
அச்சடிக்கப்பட்டது.

பதிப்புரிமை
உண்டு

கோவை
1956

கோயமுத்தூர் ராஜ வீதி

# ஸ்ரீ இராமலிங்க சௌடாம்பிகை அம்மன் தேவஸ்தானம்.

உற்சவ மூர்த்திகள்.



ஸ்ரீ இராமலிங்க சுவாமி ஸ்ரீ சவுடாம்பிகை அம்மன்

# கோயமுத்தூர் ராஜ வீதி
# ஸ்ரீ ராமலிங்க சௌடாம்பிகை அம்மன் தேவஸ்தானம்.

## நிர்வாக சபையார்.

**தலைவர் :**

S. பீமைய செட்டியார்

**உப தலைவர் :**

ஒக்க P. சுப்பிரமணிய செட்டியார்

**தர்மகர்த்தாக்கள் :**

A. சவடப்ப செட்டியார்
L. வெங்கிடசாமி செட்டியார்

**அங்கத்தினர்கள் :**

V. சிவராமகிருஷ்ண செட்டியார்
S. சதாசிவம் செட்டியார்
N. அருணுசலம் செட்டியார்
A. ராஜுவாட செட்டியார்
M. N. பொன்னுசாமி செட்டியார்
T. P. கந்தசாமி செட்டியார்
துளசி ராமச்சந்திரன் செட்டியார்
M. கோவிந்தசாமி செட்டியார்
N. கிருஷ்ணசாமி செட்டியார்
S. மாணிக்கம் செட்டியார்
V. ராமனுதன் செட்டியார்
சன்னுசி பசுவய்ய செட்டியார்
M. K. அய்யண்ண செட்டியார்
பெத்தம்புலிங்கப்ப செட்டியார்
A. K. சுப்பிரமணிய செட்டியார்
P. C. பழனிசாமி செட்டியார்
B. K. S. நடராஜ செட்டியார்
இருகூர் சின்னசாமி செட்டியார்
K. E. வேலைய செட்டியார்
கரணு V. எல்லைய செட்டியார்
குட்லு V. மருதாசலம் செட்டியார்

## கோயமுத்தூர் ரங்கே கவுண்டர் வீதி ஸ்ரீ புது சவுடம்மன் கோவில்.

உற்சவ மூர்த்திகள்.



ஸ்ரீ இராமலிங்க சுவாமி



ஸ்ரீ சவுடாம்பிகை அம்மன்

# புது சவுடம்மன் கோவில் தர்மகர்த்தாக்கள்.

## நிர்வாக சபையார்.

### தலைவர் :

P. பாலசுந்தரம் செட்டியார்

### உப தலைவர் :

P. பொன்னுசாமி செட்டியார்

### அங்கத்தினர்கள் :

S. குப்புசாமி செட்டியார்

கெட்டிமல்லைய செட்டியார்

தடாகம் வீரபத்திர செட்டியார்

V. பாபன்ன செட்டியார்

கலவா வீரபத்திர செட்டியார்

சிந்தகாயலு லிங்கப்ப செட்டியார்

சின்ன வீரபத்திர செட்டியார்

பங்கி குப்புசாமி செட்டியார்

பிட்லு வேலாசாமி செட்டியார்

S. கந்தசாமி செட்டியார்

நல்லஞ் செட்டி சுப்பிரமணி செட்டியார்

K. மோகன சுந்தரம்

### செயலாளர் :

A. சதாசிவம் செட்டியார்

உ

ஸ்ரீ இராமலிங்க சவுடாம்பிகை துணை,

# தேவாங்க புராணம்.

## பொருளடக்கம்.


| | | |
|---|---|---|
| | அம்மன் படங்கள் | |
| | கோயில்கள் தருமகர்த்தாக்கள் | |
| | பதிப்புரை | I |
| | முகவுரை | 1 |
| 1. | வரந்தரு வாழ்த்துச் சருக்கம் | 18 |
| 2. | நலன்திகழ்—பாண்டிநன்னாட்டுச் சருக்கம் | 22 |
| 3. | வளர்தென்காசை வளம்பதிச் சருக்கம் | 27 |
| 4. | தவமுயர் தேவலன் சம்பவச் சருக்கம் | 30 |
| 5. | சவுடநாயகி வரந்தந்த சருக்கம் | 41 |
| 6. | சுடர் நவமணி சூட்டிய சருக்கம் | 54 |
| 7. | கபிஞ்சலன் சாபங்களைந்த சருக்கம் | 60 |
| 8. | உக்கிரதனுவன் உவணைசேர் சருக்கம் | 65 |
| 9. | பற்பல கலையும் படைத்த சருக்கம் | 72 |
| 10. | அமரர்கட் கம்பரம் அளித்த சருக்கம் | 77 |
| 11. | மக்கட்கு அம்பரம் வழங்கிய சருக்கம் | 80 |
| 12. | நாகர்க்கு அம்பரம் நல்கிய சருக்கம் | 82 |
| 13. | அரன் விடைகொடியாள் அருளிய சருக்கம் | 84 |
| 14. | அரம்பை சாபமளித்த சருக்கம் | 91 |
| 15. | தேவதத்தை மணஞ்செய்த சருக்கம் | 97 |
| 16. | பெருமான் புதல்வரைப்பெற்ற சருக்கம் | 117 |
| 17. | திருதர் போர்க்கேக நினைத்த சருக்கம் | 121 |
| 18. | அரக்கர்தேவலன் அமர்க்கஞ்சிய சருக்கம் | 125 |
| 19. | வியாக்கிர முகத்தனை வீட்டிய சருக்கம் | 134 |
| 20. | விடைக்கொடிக்கரக்கர் வெந்நிடு சருக்கம் | 141 |
| 21. | மன்னவனிலிங்க வடிவுறு சருக்கம் | 145 |
| 22. | அருங்கலைபுணர் வித்தியாதரச் சருக்கம் | 163 |
| 23. | தருபுட்பதந்தாவதார சருக்கம் | 169 |
| 24. | உரங்கொள்வேதாள வுற்பவச் சருக்கம் | 180 |
| 25. | வேதாளசாப விமோசனச் சருக்கம் | 183 |
| 26. | யாமறை திருத்திய வரமுனிச் சருக்கம் | 193 |
| 27. | உயர்தேவசாலி உற்பவச்சருக்கம் | 198 |
| 28. | அருட் தேவதாச மய்யன் சருக்கம் | 202 |
| 29. | வளர் தேவாங்கன் மரபுச்சருக்கம் | 206 |
| | சேர்க்கை | 213 |

உ

சவுடநாயகி மலர்த்தாள் வாழ்க!

# தேவாங்க புராணம்

## பதிப்புரை.

**1. பொருள்:** தேவாங்கபுராணம் என்னும் நூல் தமிழ் மொழியில் பாடப்பட்டுள்ள ஒரு மரபு நூல். அது தேவாங்க மரபினுடைய தோற்றம், அரசபரம்பரை, அதன் வீரச்செயல்கள், அம்மரபின் பொதுத்தொழில், அதன் விளைவுகள், மக்கட்கு உதவி, மரபின் பெருக்கம் முதலிய பல செய்திகளைக் கூறுகின்றது. தேவாங்க மரபினது மூலபுருஷன் தேவலன் என்ற ஒரு முனிவர். அவர் அமோத நகரத்தில் அரசாண்டும் சவுடாம்பிகையம்மனைத் தன் குலதேவதையாகப் பெற்றும் அவ்வம்மையின் திருவருளினால் பல அரிய செயல்களைச் செய்தும் விளங்கினர். இறைவனுடைய ஆணையால் தோன்றிய அவர் இறைவனுடைய கட்டளையை மேற்கொண்டு நெசவுத் தொழிலைக் குலத்தொழிலாகப் பெற்று மக்கள் முதலியோர்களுக்கு ஆடைகளை நெய்து தந்தார். அன்னருக்குப் பிறகு அவருடைய பரம்பரை அனேக தலைமுறைகள் வரை பெருகிற்று. அப்படிப்பட்ட பரம்பரையில் அவரே ஏழு அவதாரங்கள் எடுத்து மரபினுடைய பெருமையையும், சீலத்தையும் காப்பாற்றினர். இறுதியில் அந்த மரபு பாரத நாடு முழுதும் பரவிப் பத்தாயிரம் குலங்களாகப் பெருகி நெசவுத் தொழிலையே சிறந்த தொழிலாகக் கொண்டு விளங்கியது. இந்த வரலாற்றைத்தான் இந்தப் புராணம் கூறுகிறது.

**2. விவரம்:** தேவாங்கபுராணத்தின் மூலம் வடமொழியில் இருக்கிறது. அது பிரம்மாண்ட புராணத்தின் ஒரு பகுதியாகும். இதைப்போலவே ஏனையமரபர்களின்புராணங்களும், அதே புராணத்தில் இருக்கின்றனவாம். அவ்வடமொழிப்பகுதி சம்ஸ்கிருத சுலோகங்களினால் ஆக்கப்பட்டது. அதனைத் தெலுங்கு கன்னட லிபிகளில் அச்சிட்டுள்ளார்கள். அச்சுலோகங்களுக்கு தெலுங்கு, கன்னட உரைகளும் எழுதி வெளியிட்டிருக்கிறார்கள். விவரங்கள் பின்னாலே காணலாம். தமிழ் லிபியில் வடமொழி நூல் அச்சாகவில்லை. ஆனால் அந்நூலை தமிழில் மொழி பெயர்த்துள்ளார்கள். அதுதான் முன்னொரு முறை அச்சடிக்கப்பட்டது. தற்போது இரண்டாம் பதிப்பாக அது அச்சடிக்கப்படுகின்றது. முதல் பதிப்பு தற்போது கிடைக்காத வகையில் இரண்டாம் பதிப்பு அச்சடிக்கவேண்டி நேரிட்டிருக்கிறது.

இனி, புராணம் என்றால் பண்டை வரலாறு என்பது பொருள். ஆகவே தேவாங்க புராணம் என்றால் தேவாங்கர்களுடைய பழைய வரலாறு என்று பொருள் படும். வடமொழியில் புராணங்கள சமய ஆதார நூல்களாக இருப்பவை வேதம், இதிகாசம், புராணம் என்ற பெரும் நூல்களில் புராணங்கள் மூன்றாம் தர கதியில் இருப்பவை. அவைகள் எண்பதினெட்டு என்பர். இவைகளோடு சேர்ந்த உப புராணங்கள் பதினெட்டும் உண்டு. உலக உற்பத்திமுதல் தற்காலம் வரை வரலாற்றைக் கூறுவதன்றிச் சில புராணங்கள் பிற்காலச் செய்திகளையும் கூறுமாம். இப்புராணங்களில் கணக்கற்ற செய்திகள் உண்டு. இவைகளில் இல்லாத செய்திகள் இல்லையென்றும் கூறுவர். அப்படிப்பட்ட புராணங்களில் மிகப்பெரியது பிரம்மாண்ட புராணம். அதில் உலகில் உள்ள பற்பல வகுப்புக்களின் வரலாறுகளும் உள்ளனவாம். பொதுவாகத் தேவர்கள், மக்கள், அரசர்கள, இராக்கதர்கள் இவர்களுடைய வரலாறுகளே மிகுதி. இவைகளைப் படித்தால் பெரும்பாலும் உயர்வு நவிற்சிகளாகவே தோன்றும். இக்காலத்தில் அவைகளை மக்கள் கற்பனையாகவே கொள்ளுவார்கள். எல்லா புராணங்களும் சூத புராணிகர் சௌனகாதி முனிவர்களுக்குக் கூறும் வகையிலே அமைந்துள்ளன. எல்லாப் புராணங்களும் வடமொழிச் செய்யுட்களே என்று அறியலாம்.

**3. பிரிவுகள்:** வடமொழிப் புராணங்கள் எல்லாம் சைவமவைணவம் முதலிய பிரிவுகளாக உள்ளன. ஒவ்வொன்றிலும் வெவ்வேறு புராணங்கள் வெவ்வேறு தேவதைகளின் பெருமைகளை விரித்துக் கூறும் முறையில் அந்தந்த தேவதைகளின் பெயர்களினால் வழங்கி வருகின்றனர். உதாரணமாக சிவபுராணம், கந்தபுராணம், பாகவதபுராணம், விஷ்ணுபுராணம், மச்சபுராணம் முதலியன. இப்புராணங்கள் ஒவ்வொன்றும் தங்கள் தங்கள் தெய்வங்களையே எல்லாவற்றிலும் மேலானவைகள் என்று புகழ்ந்து கூறுவதன்றி அவைகளை வற்புறுத்தும் வகையில் விளங்குகின்றன. மேலும் அக்கருத்துக்களை நிரூபிக்க பல விதக்கதைகளும் கூறுகின்றன. இவ்வித புராணங்கள் எல்லாம் வியாச முனிவராலே எழுதப்பட்டன என்று கூறினபோதிலும், இவைகள் வெவ்வேறு காலங்களில் தோன்றினவென்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

இப்புராணங்கள் வேறு மொழிகளில் முழுமையாகவோ பகுதி பகுதிகளாகவோ மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. தமிழில் மொழி பெயர்க்கப்பட்டபோது முழு புராணங்களாகவும் பகுதிப்புராணங்களாகவும் ஆக்கப்பட்டிருக்கின்றன. இவ்வாறு வெவ்வேறு காலங்களில் மொழி பெயர்க்கப் பட்டபோதுவடமொழியில் இருப்பதைக்காட்டிலும் தமிழில் அதிக

மான புராணங்கள் ஏற்பட்டன. அவைகள் பல பிரிவுகளாகவும் தோன்றின. சிவபுராணம், கந்தபுராணம், மச்சபுராணம் போன்ற முழுபுராணங்கள் ஒரு வகையாகும். அரிச்சந்திர புராணம் போன்ற பகுதிப் புராணங்களும் ஒரு வகையாகும். பேரூர்ப் புராணம் போன்ற தல புராணங்கள் மூன்றும் வகை. இனி தேவாங்க புராணம் போன்ற மரபுப்புராணங்கள் நான்காம் வகை. இந்த வகையில் தமிழில் பல வகைப் புராணங்கள் தோன்றின. வடமொழியில் இல்லாத தூய தமிழ்க்கதைகள் கொண்ட பெரிய புராணம் போன்ற தனி நூல்களும் தோன்றின. ஆகவே வடமொழியைக் காட்டிலும் தமிழில் பல பிரிவுகள் பெருகத் தொடங்கின.

**4. மரபுப்புராணங்கள்:** மேலே கூறிய வகையில் மரபுப்புராணங்கள் புதிய பிரிவாகத் தமிழில் தோன்றின என அறியலாம். ஆனாலும் அவைகளுக்கு ஒரு பெருமை தரும் பொருட்டு அப்புராணங்களும் வட மொழியிலிருந்தே மொழி பெயர்க்கப்பட்டன என்று கூறுவதே வழக்கமாகிவிட்டது. தமிழ் நாட்டிற்கே சொந்தமாக உள்ள மரபுகளும் தங்கள் தங்களுக்கு வெவ்வேறு புராணங்களை உண்டாக்கிக் கொண்டார்கள். ஒரு மரபுக்குப்புராணம் இருந்தாலே அதற்கு ஒரு பெருமை ஏற்படும். எப்படியெனில் ஒரு தலத்திற்கு மகிமை தருவதற்கு ஒரு தலபுராணம் தோன்றுவதைப் போலேயாம். நேற்று முளைத்த ஒரு கோயிலுக்கும் ஒரு தலபுராணம் தோன்றுவதும் இயல்பாகிவிட்டதல்லவா. இல்லாவிடில் தமிழ் நாட்டில் முந்நூறு செய்யுட் புராணங்கள் எப்படி ஏற்பட்டன? இனி மரபுப் புராணங்களைப் பற்றிக் குறிக்கும்போது, தற்போது தெரிந்த புராணங்களில் தேவாங்க புராணம், செங்குந்தர் புராணம், வேளாள புராணம், வைசிய புராணம், பலிஜவாரு புராணம் என்பவற்றைக் காண்கிறோம். இப் புராணங்களெல்லாம் தங்கள் தங்கள் மரபுகளின் மேன்மைகளையே புகழ்கின்றன. மரபுகளுக்குத் தோற்றங்களும், அரச பரம்பரைகளும், வீரச் செய்திகளும், சிறப்புத்தேவதைகளும், அழகிய கதைகளும், ஆங்காங்கே விளங்குகின்றன. இவைகளுக்குத் தமிழாசிரியர்கள் கொடுத்திருக்கும்படியான புகழுரைகளுக்கு எல்லையே இல்லை. இவைகளில் தேவாங்க புராணம் ஒன்று என்க.

**5. தேவாங்க புராணச்சிறப்பு.** மற்றைய மரபுப் புராணங்களைப் போலவே தேவாங்க புராணமும் தங்கள் மரபினை மிகவும் மேன்மைப்படுத்தி மூலபுருடன் சிவபெருமான் இருதய கமலங்களிலிருந்து தோன்றினனாகக் கூறி அரச முடியும் பெற்று ஆண்டதாகக் கூறுகிறது. ஆனால் நெசவு என்னும் ஒரு கைத் தொழிலை ஏற்றுக்கொண்டு பொதுமக்களுக்கு ஊழியம் செய்த

தாக கூறுவதில் ஒரு சிறப்புப் பெற்றிருக்கிறது. நெசவுத் தொழிலுக்கு மேன்மை தரும் கருத்தில் ஒரு அழகிய புராணத் தொடர்பு கற்பித்திருக்கிறதும் நோக்கத்தக்கது. அரசனானாலும் ஒரு தொழிலைக்கொண்டு பிழைப்பதும் உலகத்திற்குச் சேவை செய்வதுமே ஒரு சிறந்த கருத்து என்று நீதிபுகட்டும் வகையில் இப்புராணம் மிகச்சிறந்தது. இறைவனிடம் அன்பு காட்டுவது, அது குறைகிற காலத்தில் இறைவனுடைய அருளினால் அவதாரங்கள் தோன்றுவது, அறிவு குறைவுறாமல் நீதி நூல்கள் இயற்றி மக்களுக்குப் போதிப்பது, எத்துணை சிறந்தவனான போதிலும் தவறு செய்தால் அத்தண்டனைக்கு உட்படுவது, அறம் செலுத்துவதில் மேல் கீழ் என்பதின்றி ஒரே நடுநிலை நெறியில் தீர்ப்பு அளிப்பது, முதலான கணக்கற்ற உலகியல் அறிவுப் பண்புகள், இந்நூலில் உண்டு. மேலும் அம்மன் ஆற்றலின் அதி தேவதை; அந்தத்தேவியினுடைய கருணை இல்லாமல் எச் செயலும் வெற்றி அடையாது; எந்தச் சங்கடமான நிலையிலும் அம்மனைத் தொழுதால் அவளது கடாட்சம் கிடைக்கும்; அம்மன் சொற்படி நடவாமல் நிலைமாறினால் தோல்வி உறுதி; முதலான நீதிகளையும் இப்புராணம் போதிக்கிறது. மேலும், தமிழ்ப் புராணத்தில் காவியத்துக்குரிய இலக்கணங்களெல்லாம் வெகு நன்றாகப் புலப்படுகின்றன. நடைப்போக்கு வெகு விறுவிறுப்பாக உள்ளது. புகலும் செயல்களுக்கு ஏற்ப செய்யுள் நடையும் புகுத்தியிருப்பது மிகவும் போற்றத்தக்கது. அம்மனுடைய துதிகள் வெகு சிறப்பாக உள்ளன. அச்சம், நகை, காதல், அவலம், வீரம் முதலான ஒன்பது சுவைகளும் வெகு எடுப்பாக அமைந்து உள்ளன. தமிழ் மாணவனுக்கு இந்நூற் படிப்பு இலக்கியத்தை அறிவதற்கு ஏற்ற சாதனமாக இருக்கும்.

**6. நூல் ஆசிரியர் :** தேவாங்க புராணத்தைத் தமிழில் அழகிய செய்யுள் நடையில் இயற்றிய ஆசிரியர் மாம்பழக் கவிராயர் என்ற ஒரு பெரும் புலவர். இப்புலவர் பழனியில் விசுவகரும வகுப்பில் தோன்றியவர். அங்கே முத்தையாச்சாரியார் என்ற ஒரு பெரியவருக்கு இரண்டாம் புதல்வராக கி. பி 1836ல் பிறந்தார். அக்குடும்பத்தின் பழையவழக்கப்படி அக்குழந்தைக்கு மாம்பழம் என்ற பெயரிடப்பட்டது. அக்குழந்தையின் மூன்றாம் யாண்டில் வைசூரியம்மையின் வாய்ப்பட்டு உடல் முழுவதும் கொப்புளங்கள் உண்டாகி இறைவன் அருளால் நோய் நீங்கிற்று. ஆனால் கண்கள் இரண்டும் மங்கிப்போயின. பெற்றோர்கள் கண் இல்லாக் குழவியை வெகு அன்போடு வளர்த்தினர். தந்தையார் கற்ற பண்டிதராகஇருந்தபடியால் குழந்தைக்குக் கல்வி புகட்ட வேண்டும் என்ற கொள்கையில் குழந்தையின் முதுகில் விரலால்

எழுத்துக்கள் எழுதுவார். குழந்தையோ கற்பலகையில் அவற்றை எழுதும். இந்த முறையில் பிழையின்றி நேராக எழுதும் பழக்கம் பெற்றது. தகுந்த வயது ஆனதும் புலவர்களைக் கொண்டு பல நூல்களும் ஓதுவிக்கப்பட்டன. ஒரு முறை படித்துக் காட்டின் கேட்டவை முழுவதும் மனப்பாடம் ஆகிவிடும். இந்த முறையில் மாம்பழம் தமிழ் நூல்கள் எல்லாம் கற்று பெரும் பண்டிதராகி எளிதில் செய்யுளியற்றி எவரையும் மகிழ்விப்பார். இவ்வாறு கற்கையில் பழனியில் எழுந்தருளியுள்ள முருகப்பிரான் மீது கணக்கற்ற பதிகங்களைப் பாடினார்.

தமிழ் இலக்கண இலக்கியங்களேயன்றி வடமொழி, தத்துவ நூல்கள், சங்கீதம், முதலிய பல கலைகளிலும் வல்லவரானார். அக்காலத்தில் புலமையிலும் வள்ளல் தன்மையிலும் சிறந்து விளங்கியிருந்த இராமநாதபுரம மன்னர், அவரது உடன்பிறந்தார் பொன்னுசாமித் தேவர், இவர்களை அண்டி அரிய பாடல்களைப் பொழிந்து சன்மானம் பெற்றார். அக்காலத்தில் அவர் பாடிய தனிப்பாடல்களுக்கு அளவில்லை. அப்போது கவிச்சிங்கம் என்றும் கவிராயர் என்றும் நாவலர் என்றும் பட்டங்களைப் பெற்றார். பின்னர் சென்னை, தஞ்சை, சேலம், மதுரை, கோவை, நெல்லை முதலிய பட்டணங்களிலும் சென்று பல்குறுநில மன்னர்கள், செல்வர்கள், அலுவலாளர்கள் இவர்களிடையே புதுப்புது பாடல்களும் நூல்களும் பாடிப் பரிசுகளைப் பெற்றார். அப்போது பாடிய நூல்களில் மிகச்சிறந்தது தேவாங்க புராணம் ஆகும். காசையம்பதியாகிய போடிநாய்க்கனூரில் தேவாங்க குலத்தவர் விருப்பப்படி பாடினார். இது பாடிய காலம் 21 ம் ஆண்டான 1857 கி. பி. ல் ஆகும். நிரம்பிய இலக்கண அமைதியுடன் அருமையான கற்பனை சாரங்களை வைத்து மதுரச் சுவைமிக்க கம்பீரமான செய்யுள் நடையில் அதனை அமைத்துள்ளார். அதனைப் போடி நாயக்கனூர் குறுநிலமன்னர் பேரவையில் அரங்கேற்றினார். அப்போது எழுதப்பட்ட சாற்றுக்கவி பின் சேர்க்கையில் தரப்பட்டுள்ளது.

இனி சேலத்திலிருந்தபோது அவ்வூரார் கேட்டுக்கொண்டபடி வடமொழியிலுள்ள சிங்கார ரசமஞ்சரியைத் தமிழில் செய்யுளாக மொழி பெயர்த்திருக்கிறார். இவர் இயற்றிய மற்றொரு நூல் சந்திரவிலாசம் என்பது. அது வேளுக்குறிச்சி குறுநில மன்னர் வேலப்பகவுண்டர் மீது பாடப்பட்டது.

இவரது 27-ம் ஆண்டாகிய கி. பி. 1863 ல் திருமணம் செய்துகொண்டு இல்லறம் நன்கு நடத்தினர். அவ்வாறு பழனியில் இருந்த நாளில் பழனியம்பதியைக் குறித்து பழனி நான் மணிமாலை, பழனி வெண்பா, குமரனந்தாதி சிவகிரியமக மந்தாதி முதலிய பிரபந்தங்களை இயற்றினர்.

இந்த வகையில் தமிழன்னைக்கும் இறைவனுக்கும் தொண்டு புரிந்து வருகையில் தம் உடலில் நோய் உண்டாக வருந்தினர். அதுபோக முருகப் பெருமானைத் துதித்து நலம உற்றார். இவ்வாறு இறை வழிபாட்டில் பல ஆண்டிருந்து தமது 48 ம் ஆண்டு கி. பி. 1884ல் இறைவன் திருவடி அடைந்தார். இறக்கும் தருவாயிலும் கவிபுகலும் ஆற்றல் பெற்றிருந்தார். இறக்கும் முன்னர் சொன்ன பாடல்:—

"என்னபிழை யான் செய்திருந்தாலும் எண்ணுமல்
அன்னபிழை யெல்லா மகற்றியின்னே—நின்னு பய
பாத நிழல் நல்கியெனைப் பாவித்துக் கொள்சமயம்
நீதருகனே நம்பினேன்."

என்பதாகும். இதனல் அவர் இறையன்பு தெற்றென விளங்கும்.

**7. புராணப் பதிப்பு:** மாம்பழக்கவிராயர் தேவாங்க புராணத்தைத் தமிழ்ச்செய்யுளில் மொழிபெயர்த்த காலத்தில் அவருக்கு பல அறிஞர்கள் உதவி கிடைத்தது. வடமொழியில் இருந்த புராணத்தைப்படித்துத் தமிழ் உரையாக மொழி பெயர்த்துத் தந்தவர்கள் தொட்டயதேசிகரும், கோவை தேவாங்க மரபில் குலகுருவாகத் திகழ்ந்த சதாசிவ சுவாமிகளுமே ஆவார்கள். அவர்கள் இருவரும் வடமொழியிலும், தெலுங்கு மொழியிலும் சிறந்த அறிஞர்கள். அவர்கள் பொழிப்புரை வகுத்துக்கொடுக்க அதனை நன்குஒழுங்குபடுத்தி 29 படலங்களாக வகுத்துச் செய்யுள் நூலாக நமது நாவலர் பெருமான் பாடினர். அதில் புராணஇலக்கணங்களை வழுவவிடாமல் தமிழ்க்காவியங்களுக்கு உள்ள சிறப்புக்களையெல்லாம் நன்கு அமைத்து 1062 செய்யுள்களாகப் பாடினர். இவ்வாறு பாடிய தம்நூலை போடி என்ற காசை நகர் குறுநில மன்னரின் அவையில் அரங்கேற்றினர். அந்தவிழாவில் போடிநகர் தேவாங்கப் பிரமுகர்கள் எல்லாரும் இருந்து பெருமைப்படுத்தினர்கள். இந்த விழாச் சிறப்பு அக்காலத்தில் எழுதிய சாற்றுக்கவியில் காணலாம்.

**8. அச்சுவாகனம்:** இப்படி அரங்கேற்றப் பெற்ற நூல் ஏட்டுப்பிரதியிலேயே வெகு ஆண்டுகள் இருந்தது. அதனல் மக்களுக்குப் பெரும்பயன் கிட்டவில்லை. ஆகவே அதனை அச்சு

வாகனம் ஏற்றி மக்கட்குப் பயன்தரும் பொருட்டுக் கோவைநகர் தேவாங்கப் பிரமுகர்கள் மிகவும் விரும்பினார்கள். கோவையில் ஒக்கிலிய மரபில் தோன்றிய ஒன்னேகவுடர் ஒரு சிறந்த தமிழ் அறிஞராகவும் நூல் வெளியிட்டு விற்பவராகவும் இருந்தார். அன்னார் இம்முயற்சியில் ஈடுபட்டு ஏட்டுப்பிரதிகளைச் சேகரித்து அச்சுவாகனம் ஏற்ற முயன்றார். அச்செயலில் திருவாளர்கள் வெரிவாட செட்டியார், சிரிய செட்டியார் இருவரும் பொருளுதவியும் ஊக்கமும் தந்தார்கள். மற்ற வியாபாரிகளும் பொருளுதவி செய்தார்கள். ஆனால் அதனைச் சரிபார்த்துப் பிழையின்றி அச்சுக்கு உரிய உதவி செய்தவர்கள் குலகுரு சதாசிவ ஐயரும், புலவர் சபாபதி பிள்ளையும் ஆவார்கள். அவர்களில் சபாபதி பிள்ளையவர்கள் மூலத்திற்கு சிறந்த உரை எழுதித் தந்தார்கள். இந்த வகையில் முதல் பதிப்பு சென்னையில் 1893-ம் ஆண்டில் வெளிவந்தது. இந்நூல் முழுவதும் செலவாகித் தற்போது ஒரு பிரதியும் வாங்கக்கூடிய நிலைமையில் இல்லாமல் போய்விட்டது.

**9. இரண்டாம் பதிப்பு :** தேவாங்கர்கள் மிகப்பெரிய இனத்தவர்கள். பல மாகாணங்களிலும் குடிவளம் பெற்றவர்கள். அவர்களிலே படித்தவர்கள் வெகு விரைவாகப் பெருகி வருகிறார்கள். நெசவுத் தொழிலிலும், வர்த்தகத்திலும், அலுவல்களிலும் தேர்ச்சிபெற்று விளங்குகிறார்கள். அரசியல் சபைகளிலும் அங்கம்பெற்று வருகிறார்கள். ஆகவே பொதுவாகத் தங்கள் குலத்தைப்பற்றிய விவரங்கள் தெரியவேண்டும் என்பது அவர்கள் விருப்பம். தேவாங்கர் குல கோத்திரங்களைப்பற்றி ஒரு நூல் எழுதப்பட்டது. அதனைப்படித்த பெருமக்கள் மீண்டும் பல செய்திகளை அறியவேண்டும் என்று அவா கொண்டார்கள். அவ்வவாவில் மிகவும் சிரத்தை கொண்டவர்கள் திருவாளர். S. பீமைய செட்டியார் அவர்கள். அவர்கள் இராச வீதி ஸ்ரீ சௌடாம்பிகை கோயில் அறக்காப்பாளர் சங்கத் தலைவராக இருப்பது மன்றி கோவையில் சிறந்த நிலக்கிழாராகவும், வர்த்தகராகவும் இருக்கின்றார்கள். மேலும் அவர்கள் தேவாங்கபுராணம் முதலில் அச்சடிக்க உதவின திரு. வெரிவாட செட்டியார் அவர்களின் பெரிய குமாரரின் மருகர் ஆகவும் இருக்கின்றார்கள். அவர்கள் பேரன்பு பூண்டு தம் அச்சாலையிலேயே நல்ல முறையில் தேவாங்க புராணத்தை அச்சடிக்க ஏற்றுக் கொண்டார்கள். தேவாங்க புராணத்தைச் சரிபார்த்து கருத்துரைகளும் தேவாங்க சமூக வரலாறும் எழுதித் தந்தவர் கோவை ம. இராமச்சந்திர செட்டியார் அவர்கள். அவர்கள் வழக்கறிஞராக இருந்தது மன்றி சென்னை அறக்காப்பாள அலுவலராகவும், பல கலாசாலைகளின் பார்வையாளராகவும்,

தற்போது பேரூர் தமிழ்க் கல்லூரித் தலைவராகவும் இருக்கிறார்கள். வரலாற்றுப் பகுதியில் விரிவான ஆராய்ச்சிகள் செய்து கொங்கு நாட்டு வரலாறு முதலிய பல நூல்களையும் செய்யுட்களையும் இயற்றிப் பரிசு பெற்றவர். கல்வி, அரசியல், சமயப் பட்டங்களைப் பெற்றவர். அன்னார், கோவை வாசியாகவும் முதலில் தேவாங்க புராணத்தை அச்சடிக்க உதவிய திரு. கிரிய செட்டியார் அவர்களின் உடன் பிறந்தாரின் புதல்வராகவும், வெரிவாட செட்டியாரின் மற்றொரு மகனாரின் மருகராகவும் இருப்பவர். அவர்கள் இரண்டாம் பதிப்பிற்கு ஆகவேண்டிய திருத்தப்பாடுகள் படங்களின் சேர்க்கை முதலியவைகளையும் செய்திருக்கிறார்கள். இவ்விரு பெரியார்களின் உதவியும் சௌடாம்பிகை அம்மன் தேவஸ்தானங்களின் அறக்கப்பாளர்களின் விருப்பமும் ஒன்று சேர்ந்து நூல் உருவாகி இருக்கிறது.

***10.*** **முடிப்புரை:** இந்நூல் முடிவு பெறுவதற்குத் தக்க படங்களும் தேவையானதினால் ஸ்ரீ சௌடாம்பிகை அம்மனின் படங்கள் சேர்க்கப்படுள்ளன. மேலும் கோவைக் கோயில்களின் படங்களும் சேர்க்கப்படடிருக்கின்றன. இந்நூல் வெளிவர உதவிய பெரியார்களின் உருவப்படங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. எல்லோரும் எளிதாகப் பெறும் பொருட்டு விலை மிகக் குறைவாகப் போடப்பட்டிருக்கிறது. பொதுமக்கள் ஆதரவு தந்து நூலைப்பெற்றுப் பயன் அடைவார்களாக! அன்னையின் திருவருளுக்குப் பாத்திரர் ஆவார்களாக!

இன்னணம்,

**பதிப்பாளர்கள்.**

உ

ஸ்ரீ சௌடாம்பிகை துணை.

# தேவாங்க புராணம்.

## முகவுரை.

### 1. தேவாங்கர் குலம்.

மக்களுக்கு இன்றியமையாத தேவைகள் மூன்று. அவைகள் உணவு, உடை, உறையுள், என்பன. உணவு உடலைப் போற்றுவதற்கும், உடை அதனைக் காப்பதற்கும், உறையுள் வசிப்பதற்கும் உதவுகின்றன. இம் மூன்றும் இல்லாவிடில் மனிதன் பிழைக்க முடியாது. ஆகவே மனிதன் இம்மூன்றையும் பெறுவதற்காக உழைக்கிறான். அவ்வாறு உழைப்பதில் பங்கு வீதமாக வேலைசெய்ய முயல்கிறான். உணவுப் பொருளைப் பெருக்குகிறவன் உழவன், உடைகளை ஆக்குகிறவன் நெய்பவன், உறையுள் கட்டுகிறவன் சட்டட வேலைக்காரன். இம்மூன்று தொழிலாளிகளும் மக்களில் இன்றியமையாதவர்கள். நாகரீகம் முதிர நெய்பவனுடைய தொழிலும் முக்கியமாகின்றது. உணவுக்கு அடுத்த படியாக உடை வேண்டியிருக்கிறது. ஆகவே எந்த நாட்டிலும் நெய்யும் தொழில் ஒரு சிறந்த தொழிலாக இருக்கின்றது. உலக முழுவதிலும் நெசவுத்தொழில் கொண்ட குடும்பங்கள் மிக உண்டு நமது பரத கண்டத்தில் ஏனைய தொழில் வகுப்பார்களைப்போல் நெசவுத்தொழில் வகுப்புகளும் உண்டு. வடமலை முதற்கொண்டு குமரிமுனை மட்டும் கணக்கற்ற நாடுகளிலும், எண்ணற்ற மொழியினவர்களிடத்திலும் நெய்யும் வகுப்பார்கள் உண்டு. இவ்வகுப்பார்களில் நாட்டைப் பொருத்தும், மொழியைப் பொருத்தும் ஆசாரங்களைப் பொருத்தும் பல வகுப்புகள் தோன்றியிருக்கின்றன. விந்தியமலைக்குத் தெற்கே தக்ஷிண இந்தியாவில் பல வகுப்புகள் இருக்கின்றன. அவர்களில் தேவாங்கர், பத்மசாலியர், சௌராஷ்டிரர், சேணியர், செங்குந்தர் முதலிய வகுப்பார்கள் எல்லாம் நெசவுத்தொழிலையே தொழிலாகக் கொண்டுள்ளார்கள். இவர்களில் பதுமசாலியர் தெலுங்கும், சௌராஷ்டிரர் சௌராஷ்டிர மொழி

யும்,சேணியர் கன்னடமும்,செங்குந்தர் தமிழும் பேசுகிறார்கள். தேவாங்கர்களோ தெலுங்கு, கன்னடம், மராட்டி முதலிய மொழிகளைப் பேசுகிறார்கள். தேவாங்கர்கள் மூன்று மொழிகளைப்பேசினபோதிலும் அவர்களின் தொழில், குல ஆசாரம், சமயாசாரம் முதலியவைகள் எல்லாம் ஒன்றே. வெவ்வெறு நாடுகளில் வசித்தபடியால் வெவ்வேறு மொழிகளைப் பேசத் தொடங்கினார்கள். சமய ஆசாரமும், மடத்து சம்பிரதாயங்களும் அநேகமாக ஒற்றுமைப்பட்டிருக்கும். எந்த மொழி பேசினாலும் சமயக் கட்டுப்பாட்டில் ஈடுபட்டிருப்பார்கள். மொழி பேதமிருந்தும் ஒற்றுமைப்பாடு ஏற்படுவதற்கு ஒரு சிறந்த காரணம் என்னவென்றால் அச்சமூகத்தார்களில் வழிபடும் தேவதை ஒன்றேயாக இருப்பதுவே ஆகும.

தக்ஷிண இந்தியா முழுவதும் எந்தப் பகுதி எடுத்தாலும் தேவாங்கர்களைக் காணலாம். அவர்கள் எல்லாரும் சௌடாம்பிகையாகிய ஒரே தேவதையைக் குல தேவதையாகக் கொண்டிருக்கிறார்கள். இதுவே ஒரு சிறந்த காரணமாக இருக்கின்றது. தேவாங்கர்கள் எல்லாரும் பொதுவாகக் கடவுள் கொள்கை கொண்டவர்கள். அவ்வாறு தெய்வ வழிபாட்டில் ஈடுபட்டிருப்பதினால் அவர்களுடைய குல ஆசாரமும் மாறுபாடு அடையாமல் நிலைத்து இருக்கின்றது. அவர்கள் தங்கள் தொழிலையும் விடாமல் பாதுகாத்து வருவதினால் அவர்களில் ஒற்றுமைப்பாடு மிக உண்டு. இந்தக் குணங்களோடு தேவாங்க சமூகம் தொன்றுதொட்டு நிலை பெற்றிருக்கின்றது.

## 2. குலப்பெயர்.

தக்ஷிண இந்தியா முழுவதிலும் தேவாங்கம் என்ற பெயரே குலப்பெயராக வழங்கி வருகின்றது. இந்தப் பெயருக்கு பல காரணங்கள் கூறுவதுண்டு. தேவாங்க என்ற சொல் தேவ + அங்க என்ற இரண்டு சிறு சொற்கள் சேர்ந்த ஒரு பெயராகும். அவற்றில் "தேவ" என்றால் அமரர் என்ற பொருள். "அங்க" என்றால் உறப்பு என்ற பொருள். இந்த இரண்டையும் சேர்த்தினால் அமரர் உறுப்பு என்ற பொருளாகும். இதற்கு இருவித வரலாறுகள் கூறுவர். ஒன்று தேவாங்கர்களின் ஆதி புருஷனை தேவல முனிவர் மகாதேவனுடைய சங்கல்பத்தினால் அவனுடைய இதயத்திலிருந்து தோன்றினவன் என்பது. மற்றொன்று என்னவெனில் ஆதியில் தேவர்களும் ஆடையின்றி இருந்தார்கள் என்றும் அவர்களுக்குத் தேவலன் ஆடை உண்டாக்கி உடுப்பித்தனன் என்றும்,

அதன்படி தேவர்களுடைய அங்கங்களுக்கு உடை அளித்த காரணத்தினால் "தேவாங்கன்" என்ற பெயர் வந்ததென்றும் கூறுவர். இவ்விரண்டு காரணங்களும் புராண வரலாறுகளே ஆகும். பின்வரும் புராணத்தில் இக் காரணங்கள் கூறியிருக்கக் காணலாம். பண்டைக் காலத்தில் புராண ரீதியைவிட்டு வேறு எந்தப் பொருள்பற்றி இப் பெயர் ஏற்பட்டதோ அறிய முடியாது. காரணம் இல்லாமல் இடுகுறிப்பெயராக ஏற்பட்டதோ என்றும் கூற வகையில்லை. மற்றொரு காரணமும் கூறலாம். "தேவ" என்ற வடமொழிச் சொல்லுக்கு "ஒளி பொருந்தியவன்" என்ற பொருள் உண்டு. "அங்கம்" என்றால் உறுப்பு அல்லது கூறு என்பது பொருள். ஆகவே "தேவாங்கம்" என்றால் ஒளி பொருந்திய கூறு, அல்லது பங்கு என்று பொருள்படும். நெய்யும் தொழிலாளர் பல வகுப்பார்களிலும் ஒளி பொருந்திய பங்கு பெற்றிருந்த வகையில் இவ் வகுப்பார்களுக்கு தேவாங்கம் என்ற பெயர் ஏற்பட்டிருக்கலாம். அவர்கள் வழிபடும் தேவதையின் பெயரிலும், ஒளி பொருந்திய திருமுடி அணிந்தவள் என்ற பொருள் இருப்பதினால் தேவாங்கம் என்ற பெயர்க்கும்ஒளியைப்பற்றிய பொருளேஆகஇருக்கலாம் அல்லவா? இனி தேவாங்கர்களில் உட்பிரிவுகள் பல உண்டு. தெலுங்கு, கன்னடம், மராட்டி பேசும் மொழிகளைப் பின்பற்றி வேறு பெயர்கள் இல்லை. பண்டைக்காலத்தில் மொழிகளைப் பின்பற்றிப் பிரிவினையும் இல்லை. கொடுக்கல் வாங்கல் முதலிய இரத்த சம்பந்தம் இருந்தது ஆனால் நடுக்காலத்தில் அது நின்றுவிட்டது. சமயப்பிரிவினை குறித்துசசம்பிரதாய பேதம் சிறிது உண்டு. இது சின்னங்கள் அணிவதில் மாத்திரம் தெரிகின்றது. எல்லாருக்கும் பூணூல் தரிக்கும் உரிமையிருந்தாலும் சில சிவாசாரிய குடும்பங்கள் மட்டும் ஆண் பிள்ளைகள் இலிங்கம் கட்டிக்கொள்ளுவார்கள். பெரும்பான்மையானபேர் சைவர்களாக இருந்தபோதிலும் சில குடும்பங்கள் மட்டும் வைஷ்ணவர்களாகித் திருநாமம் தரித்துக்கொள்வார்கள். கன்னடிய மொழியாளர்களில் வைஷ்ணவ சம்பிரதாயம் அதிகம். வீர சைவம், சைவம், வைஷ்ணவம் என்ற பிரிவுகள் இருந்தபோதிலும் ஒரே மொழியாளராயிருந்தால் திருமண விலக்கு இல்லை. இந்த வகையில்தான் சில வேறுபாடுகள் காணப்படும்.

## 3. குல ஆசாரம்.

குல சம்பிரதாயங்களில் சிற்சில இடங்களில் சிறிது மாறுபாடு இருந்த போதிலும் பொதுவாகச சில சம்பிரதாயங்கள் எங்கும் உண்டு. குல

விஷயங்களைப் பரிபாலனம் செய்வதற்காகப் பரம்பரையாகச் சில உரிமைக் காரர்கள் உண்டு. குல விஷயங்களில் முதல் தாம்பூலம் அந்த வரிசைக் கிரமத்திலேயே கொடுக்கப்படும். 1. பட்டக்காரன். 2. நாட்டு எஜ மானன். 3. செட்டிமைக்காரன். 4. எஜமானன். 5. குடிகள் என்பன அவ்வரிசை. திருவிழா, கலியாணம், குலக்குற்ற விசாரணை இவைகளில் இந்த வரிசையில்தான் மரியாதை நடைபெறும்.

குலச் சடங்குகளாகிய திருமணம், ஈமச்சடங்கு, முதலிய நலம் பொலம் நடத்துவதற்கு ஒவ்வொரு ஊரிலும் குரு அல்லது புரோகிதர், என்ற சமயப் பெரியோர்கள் இருப்பார்கள். இவர்கள் எல்லாம் அக்குலத் தவர்களே. சில தெலுங்கர்களில் மட்டும் பிராமணப் புரோகிதரை வைத் திருப்பார்கள், அந்த வழக்கம் இப்போது மறைந்து வருகிறது. குரு என் பவர் திருமணம், ஈமச்சடங்கு, திதி முதலியவைகளை நடத்துவார். ஐயர் என்பவர் விசேஷ காலங்களில் சமாராதனைகளுக்கு அழைக்கப்படுவார். அவர்களில் 1. தளவாய், 2. உதாசு, 3. சிரந்தி, 4. காறுபாறு, 5. கொரடா என்ற ஐந்து பிரிவுகள் உண்டு. தளவாயும், உதாசும், கர்ணகுண்டலம், நாகபடலம், பாதகுரடு அணிவார்கள். ஏனையோர் செருப்பு மட்டும் அணிவார்கள். தவிர கூட்டங்களிலே தாம்பூலம் முதலியவைகளை வழங் குவதற்கு சேஷராஜு என்ற குல சேவகர் ஒருவர் உண்டு. அவரும் குலத்தவரே ஆவார்.

மேலும் தேவாங்க குலத்திலே இரண்டு தாழ்ந்த பிரிவுகள் உண்டு. தேவாங்க குலத்தார்களுக்குக் குல வேலையாளாக இருந்து, கலியாணம், சாவு இவைகளில் மக்களை அழைத்தல், குழல் ஊதுதல் முதலிய பணி விடைகளைச் செய்யும் சில குடிகளுக்குச் சிங்கம் என்று பெயர். அவர்கள் அச்சு கட்டும் தொழிலில் ஈடுபடுவார்கள். அவர்களுக்கு ஒரு குறித்த ஊதியம் உண்டு. புராணப்படி இவர்கள் அம்மையின் வாகனமாகிய சிங்கத்தின் காதிடம் ஒளிந்துகொண்டு சரண் அடைந்து காப்பாற்றப் பட்டவர்கள் என ஐதீகம் உண்டு.

சில குலக்கோயில்களில் பணிவிடை செய்வதற்காக சம்பிரதாயப் படிச் சில குடும்பங்கள் விடப்பட்டனர். அவர்கள் பெண்கள். கோயி லுக்கு பொட்டுக் கட்டிவிட்ட வகையில் மாணிக்கம் அல்லது பங்காரு எனப்பெயர் பெற்றனர். அவ்விதம் நடந்த வழக்கம் இப்போது நின்று விட்டது. இந்த இரண்டு குடி வகைகளும் தாழ்ந்தோராக எண்ணப்

பட்டு மற்றவர்களுடன் கலவாத நிலைமையில் இருக்கிறார்கள். குலத்தாரை அண்டிப் பிழைப்பதன்றி இவர்களுக்கு வேறு குல உரிமைகள் இல்லை.

இனி குலத்துப் பெருமக்கள் கோத்திரங்களாக பிரிந்தார்கள் என்பது புராண ஐதீகம். சகோத்திரத்தார்கள் தாயாதிகள் ஆனதினால் அவர்களுக்குள் திருமணம் கூடாது. மற்றொரு கோத்திரத்தில் தான் மணக்க வேண்டும். கோத்திரப் பெயர்களும் வீட்டுப் பெயர்களும் தனித்தனி உண்டு. கோத்திரங்களுக்கு மூல புருஷன் ஒரு ரிஷியாக இருப்பார். இதன் விரிவு பின்னால் புராணத்தில் காணலாம். முன்னாளில் 500 ரிஷிப் பிரவரங்களும் 10,000 குலங்களும் இருந்தனவாம்.

## 4. சமய ஆசாரம்.

தேவாங்க குலத்தாரின் சமய பரிபாலனத்தைக் குறித்துச் சில திட்டங்கள் ஆதி முதற்கொண்டே அமைந்திருக்கின்றன. அவைகளின் படி சிம்மாசனங்கள், குருபீடங்கள், மடங்கள் முதலியன ஏற்பட்டிருக்கின்றன. சிம்மாசனாதிபதிகள் அந்தந்த ஊர்களுக்குப் பட்டங்களும் செட்டிமைகளும் வழங்குவார்கள். தற்காலங்களில் அங்கங்கே வாரிசு இல்லாமற் போனால் குலக்கூட்டங்கள் கூட்டி அவர்களே தெரிந்தெடுத்துக்கொள்ளுகிறார்கள். குரு பீடங்களிலிருந்து பற்பல ஊர்களுக்குப் புரோகிதர்களை நியமனம் செய்கிறார்கள். இந்த முறையில் சமய ஆசாரங்கள் நடைபெறுகின்றன. மடத்துக் குருக்கள் இளைஞர்களுக்குத் தீட்சை கொடுப்பதும் யக்ஞோபவீதம் அணிவித்து உபதேசம் செய்வதும் உண்டு. இவ்வாறு ஏற்பட்ட நிலையங்களில் சிம்மாசனங்கள் நான்கு உண்டு. அவைகள் 1 சகரை, 2 முதுநூரு, 3 பெனுகொண்ட, 4 படவேடு என்பன. கொங்குநாட்டுத் தாராபுரத்தைச் சேர்த்து ஐந்து என்று சொல்வாரும் உண்டு. இவைகளிலே சகரை என்பது காசிக் கருகிலும், முதுநூறு கோதாவரிக்கு அருகிலும், பெனுகொண்ட அனந்தப்பூர் வட்டத்திலும், படவேடு (படை வீடு) வட ஆர்க்காடு வட்டத்திலும் இருக்கின்றன. இவைகளில் இருந்த எல்லா சிம்மாசன பீடங்களும் இப்போது அழிந்துவிட்டன.

இனி குருபீடங்கள் ஐந்து இருந்தன. 1 காசி, 2 ஸ்ரீசைலம், 3 ஹேமகூடம், 4 சோணசைலம், 5 சம்புசைலம், இவைகள் தற்போது சிலமடைந்து பல ஊர்களுக்கு அதன் உரிமையாளர்கள் சென்றுவிட்டனர்.

காசி உத்திரப் பிரதேசத்திலும், ஸ்ரீசைலம், கர்நூல் வட்டத்திலும், ஹேமகூடம் பல்லாரிக்குச் சேர்ந்த ஹம்பியிலும், சோணசைலம் திருவண்ணாமலையிலும், சம்புசைலம் கொள்ளேகாலத்திலும் இருந்தன. காசியில் இருந்த பீடம் இருக்குமிடம் தெரியவில்லை. ஸ்ரீ சைலத்தில் குருபீடம் சிறிதளவில் இருக்கின்றது. அங்கு சிவராத்திரியின்போது குலத்தார்கள் கோபுரங்களில் ஆடை இணைத்துக் கொடிகட்டுவது இன்றைக்கும் உண்டு. ஹேமகூடத்தில் பம்பாபதி அல்லது விரூபாக்ஷ சுவாமி கோயிலுக்குத் தெற்கே உள்ள ஒரு குன்றில் பாறையின்மேல் மண்டபம் ஒன்று இருக்கிறது. அதில் தற்போது ஒரே ஆள் வசித்துக்கொண்டு இருக்கின்றார். குருசந்ததியார் தற்போது ஹொசபேட்டையில் இருக்கின்றார்கள். சோணசைலத்தில மடம் அழிந்தது. திருவண்ணாமலையில் ஒரு தெருவிலும் அருகிலும் சில குடிகள் இருக்கின்றார்கள். சிறிது தொலைவில் ஒண்ணுபுரத்தில் அதைச் சேர்ந்த சில குடிகளும் ஒரு ஆசாரியரும் இருக்கின்றார்கள். சம்புசைலத்தில் குருபீடமும் அதே அளவில் இருக்கின்றது. அது கொள்ளேகாலத்திற் கருகில் இருக்கின்றது. இனி குருமார்களின் பெயர்கள் முறையே ரேவணர், மருளர், பண்டிதர், ககனர், ஏகோராமர் என்பவை. குருபீடங்களில் குருமார்களின் பெயர்கள் 1 காசி மகாருத்ரைய, 2 ஹேமகூடம் முத்சங்கைய, 3 சோணசைலம் இராமலிங்கைய, 4 சம்புசைலம் சாம்பலிங்கைய என்பன. இனி படவேட்டிற்கு 26 ஸ்தலங்களும், தாராபுரத்திற்கு 24 நாடுகளும் அவற்றிற்குச சேனதிபதிகளும் உண்டு. தாராபுரம் என்பது கொங்கு மண்டலத்தின் 24 நாடுகளுக்கும் தலைமை நகர். ஆகவே அதனைத் தாயிஸ்தலம் என்பார்கள். கொங்கு மண்டலத்து 24 நாடுகளில் ஆறைநாடு என்பது மேற்கே கோவையைச சுற்றி இருக்கும் பிரதேசத்தின் பெயர். ஒவ்வொரு நாட்டிற்கும் ஒவ்வொரு பட்டக்காரர் இருப்பதுபோல ஆறைநாட்டிற்கும் ஒரு பட்டக்காரர் உண்டு அவரை ஆறுநாட்டுப் பட்டக்காரர் என்று திருத்திச சொல்லுவார்கள். அவர் இருப்பது வேலாண்டிபாளையம். தாராபுரத்திலும் கோவையிலும் தெலுங்கு தேவாங்கர்கள் மிகுதி. மற்ற ஊர்களில் கன்னடிய தேவாங்கர்கள் மிகுதி.

## 5. குல தேவதை.

ஸ்ரீ சௌடாம்பிகை அம்மன் தேவாங்கர்களால் தொன்றுதொட்டு வழிபடும் குலதேவதையாகும். அவர்கள் எந்தக் காரியத்தைச் செய்யத் தொடங்கின போதிலும் குலதேவதையாகிய அம்மனை வழிபட்டுத்தான்

அக்காரியத்தைச் செய்வார்கள். அப்போதுதான் அம்மனுடைய திருவருள் கிடைக்குமென்று நம்புவார்கள். தேவாங்க குலத்தார்கள் எங்கெங்கு குடியிருக்கிறார்களோ அங்கங்கு அம்மனுக்கு ஓர் கோயில் கட்டி வழிபாடு நடத்துவார்கள். நித்திய வழிபாடு மட்டுமல்ல; நைமித்திகங்களும் விசேடவிழாக்களும் ஆண்டுதோறும் நடத்துவார்கள். அம்மனுக்குச் சிறப்புவிழா, நவராத்திரியாகும். அது எல்லா ஊர்களிலும் நடைபெறும். சில ஊர்கள் திருவாதிரை விழாவும் ஆவணி அவிட்ட விழாவும் நடத்துவதுண்டு. அந்தந்த ஊர்களில் அந்தந்த ஊர்க்கோயிலை ஊர்க்குடிகளே பங்குவீதம் வகிதந்து, கோயிலைப் பரிபாலித்தும், திருவிழாவை நடத்தியும் வருவார்கள். இவ்வாறு நடைபெறும் அம்மன் கோயில்கள் தமிழ் நாட்டில் தேவாங்கர்கள் குடியிருக்கும் எல்லா ஊர்களிலும் இருப்பதோடு ஆந்திரம், கர்நாடகம், மகாராஷ்டிரம், கேரளம், கலிங்கம், வங்கம், முதலிய நாடுகளிலும் மிக உண்டு. அதாவது தெற்கே குமரிமுதல் வடமேற்கே சௌராஷ்டிரம் வரைக்கும் வடகிழக்கே காளிகட்டம் வரைக்கும் அம்மன் கோயில்கள் பரவியிருக்கின்றன. எல்லா இடங்களிலும், அம்மன் சௌடாம்பிகை என்றே வழங்கப்படும். ஆனால் மகாராட்டிர நாட்டில் மட்டும் வன சங்கரி என்று பெயர் உண்டு. அங்கே அம்மனுக்குச் சாகாம்பரி என்ற மற்றொரு பெயரும் உண்டு. அத்தேவதையை மற்ற குலத்தார்களும் வழிபடுவார்கள். அக்கோயில் பாதாமிக்கடுத்து மூன்றுகல் தொலைவில் ஒரு செழிப்பான இடத்தில் உள்ளது. அதைச் சுற்றிலும் தேவாங்கர்கள் வசிக்கிறார்கள்.

## 6. கோயில்களும் சின்னங்களும்.

குலதேவதையாகிய சௌடம்மனுக்குத் தேவாங்கர்கள் குடியிருக்கும் ஊர்களில் எல்லாம் கோயில்களைக் கட்டி வழிபாடு செய்து உற்சவங்களை நடத்துவதுண்டு என்று கூறினோம். ஆனால் சில பண்டைய ஊர்களில் மிகப் புராதனமான கோயில்கள் உண்டு. அவைகளில் கல்வெட்டுச் சாசனங்களும் இருக்கின்றன. அவைகளில் சிலவற்றைக் கூறுவோம். வடக்கே இராயலுசீமையில் கதிரி தாலூக்காவில் கதிரியிலிருந்து லேபாட்சி போகும் வழியில் சோள சமுத்திரம் என்ற பழைய ஊரில் ஒரு பண்டைய ஆலயம் இருக்கின்றது. அதிலுள்ள சௌடேசுவரி அம்மன் மிகப் பெரியதாகவும் அழகாகவும் வீற்றிருக்கும் நிலையிலும் இருக்கிறது. அக்கோயில் கல்வெட்டில்தான் விசயநகரத்து அரசர்களுடைய பட்டத்தேதியை அறிவிக்கும் சிறப்பு இருக்கிறது.

அனந்தப்பூர் ஜில்லா குத்தி தாலூக்கா உபசர்லா என்றவூரில் உள்ள சௌடேசுவரி ஆலயத்தில் கன்னட மொழியில் ஒரு கல்வெட்டில் அம்மன் திருவுருவத்திற்கு வாணம் நீட்டின மல்லோஜா என்பவனுக்கு ஒரு நிலதானம் செய்யப்பட்டதாகக் காண்கிறோம்.

அனந்தப்பூர் ஜில்லா பாமிடியில் பாமிடியம்மன் கோயிலில் உள்ள ஒரு கல்வெட்டில் சௌடேசுவரியம்மன் பெயர் குறிக்கப்பட்டிருக்கிறது. அவ்வூர் பிநாகினி நதி தீரத்தில் இருக்கிறது. அக்கல்வெட்டு ஏற்பட்ட தேதியாகிய கி. பி. 1515 ஜூலை 25 அன்று சந்திர கிரகணம் ஏற்பட்டதை அனுசரித்து சாந்தி செய்யப்பட்டது என்று அது கூறுகிறது.

கர்னூல் ஜில்லா நந்தியால் தாலூக்காவில் பண்டி ஆத்மகூர் சந்தைப்பேட்டையில் சௌடேசுவரி ஆலயம் ஒன்று இருக்கிறது. அக் கோயிலில் உள்ள கல்வெட்டு ஒன்றில் கி. பி. 1725ல் வீர மாதாவுக்காக ஒரு கோயில் கட்டி அதன் வழிபாட்டிற்காக ஒரு தானம் செய்ததாகக் கண்டிருக்கிறது. இந்த ஆத்மகூர் வழியாக வடகிழக்கே சென்றால் ஸ்ரீசைலம் என்ற புகழ்பெற்ற க்ஷேத்திரத்தை அடையலாம். அங்கே சிவராத்திரியின்போது தேவாங்கர்கள் நடு இரவில் விமானங்களுக்குப் பாகை சூட்டும் கைங்கரியம் செய்கிறதுண்டு. இதன் பெருமை புராணத்தில் காணலாம்.

மேலும் கர்னூல் ஜில்லாவில் நந்தவரம் என்ற ஊர் சௌடேசுவரி அம்மன் கோயிலுக்குப் பெயர் பெற்றது. அவ்வூர் அம்மனை நந்த வைதீகர்கள் காசியிலிருந்து கொண்டுவந்து தாபித்ததாகச் சொல்லப்படுகிறது. ஆண்டுதோறும் இரத உற்சவம் இங்கே நடைபெறுகிறது. இந்த ஊர்த் தேவியின் பெயரால்தான் தேவியின் தண்டகங்கள் கூறப்படுகின்றன. தேவியை "நந்தவரமந்து நிலகொன்ன நைகதாம்பா" என்று தென் ளுட்டிலும் புகழுவதை அறிவோம். இனி மதனபள்ளி தாலூக்கா சனபாளையத்தில் கோட்டை சௌடேசுவரி கோயிலொன்று இருக்கிறது. அதில் கண்ட கல்வெட்டின்படி கி. பி. 1558-ல் கிருஷ்ண தேவராயன், வெங்கல் ராயன் கோயிலுக்குப் பணம் தானம் செய்தான்.

இனி தமிழ் நாட்டில் மதுரை மீனாட்சியம்மன் கோயிலின் கீழ்க் கோபுரசசுவரில் 1579-வது ஆண்டுக் கல்வெட்டு ஒன்று இருக்கிறது. அதன்படி இராமநாதபுரம் சீமைக்குச் சேர்ந்த தேவாங்கர்கள் மதுரை அரண்மனைக்கு தாம்பூலம் கொடுத்து வந்த வகையில் அவர்கள் மீது போடப்பட்ட வரி தள்ளுபடி செய்யப்பட்டதாம்.

தஞ்சை ஜில்லா, பாபநாசம் தாலூக்கா, கபிஸ்தலத்தில் ஒரு தேவாங்கர் மடம் இருக்கிறது. அதிலிருக்கும் கல் வெட்டின்படி விசயநகரத்து அச்சுத தேவராயன் காலத்து அதாவது கி. பி. 1542ல் சாரங்க தேவன் என்றவொரு பக்தன் தேவாங்கர்களுக்கு ஒரு தானம் செய்திருக்கிறான். இந்தக் கல்வெட்டுகளினால் 400 ஆண்டுகளுக்கு முந்தியே தமிழ்நாட்டில் தேவாங்கர்கள் குடியேறிச சிறந்திருந்தார்கள் என அறியலாம்.

## 7. தேவியின் திருப்பெயரின் பொருள்.

குலதேவதையின் திருப்பெயர் சௌடாம்பிகை என்ற சொல்லானது சூட + அம்பிகை என்ற இரண்டு சொற்கள் சேர்ந்த ஒரு பெயர் ஆகும். சூட என்றால் கிரீடம் அல்லது திருமுடி என்ற பொருள். அம்பிகை என்றால் தேவி அல்லது அன்னை என்பது பொருள். ஆகவே சூடாம்பிகை என்ற பெயருக்குக் கிரீடம் அணிந்த தேவி அல்லது திருமுடி அணிந்த அன்னை என்பது பொருள். எல்லா தேவிமார்களுக்கும் கிரீடமிருக்கத் தேவாங்க குல தேவதைக்கு மட்டும் எவ்வாறு கிரீடம் அணிந்த அன்னை என்று பெயர் வந்தது என்று கேட்கலாம். அதற்கு ஒரு சிறந்த காரணம் உண்டு. கிரீடம் அணிவது பெருமைக்கு ஓர் சின்னம். அதற்கு மேல் வெற்றிக்கு அது தகுந்த சின்னம். ஐதீகப்படி சௌடாம்பிகை அம்மன் அசுரர்களுடன் போர்புரிந்து தேவாங்க முனிவனை காப்பாற்றினாள். அந்த வெற்றியின் காரியமாக ஒளி பொருந்திய கிரீடம் அணிந்து காட்சி தந்தாள். ஆதலால் சௌடாம்பிகை என்ற திருப்பெயர் தோன்றிற்று மேலும் அசுரர்களை வெல்வதற்காக அம்மன் ஒளிபொருந்திய கிரீடத்தை அணிந்தே போருக்குச் சென்றதாகவே புராணம் கூறுகிறது.

எக்காலத்திலும், எந்நாட்டிலும் போருக்குச் செல்லுகிறவர்கள் ஆடை ஆபரணங்களினால் அலங்காரம் செய்துகொண்டுபோவது ஒரு முறையல்லவா? அதையே புராண ஐதீகமும் கூறுகிறது. அம்மன் போருக்கு எழுந்தருளியபோது கோடி சூரியப்பிரகாசம் பொருந்திய கிரீடத்தை அணிந்து சென்றாள். அக்கிரீடத்தின் தேஜஸினால் அசுரர்களுடைய கண்கள் மழுங்கிப்போக நிலத்தில் சாய்ந்தார்கள். அத்தகைய பிரகாசம் பொருந்திய கிரீடம் அல்லது சூடம் அணிந்ததினால் அம்மனுக்கு சூடாம்பிகை என்று பெயர் வந்தது.

## 8. பண்டை ஐதீகம்.

இறைவன் ஆணையினால் படைப்புக் கடவுள் எல்லா உயிர்களையும் படைத்தபோது அவ்வுயிர்களுக்கு ஆடைகளை உண்டாக்கவேண்டி மனுவைப் படைத்தான். அம்மனு இயற்கை அடைந்த பிறகு அறிவுபடைத்த உயிர்களுக்கு ஆடையில்லாமல் போய்விட்டது. அச்செய்தியை தேவர்கள் இறைவனுக்கு விண்ணப்பிக்க இறைவன் அதற்காக ஒரு அறிஞனை படைக்கவேண்டுமென்று கருதினான். அப்போது இறைவனுடைய இதய கமலத்திலிருந்து ஒரு மகா அறிஞன் தோன்றினான். அவனுக்கு தேவலன் என்ற நாமம் இட்டு திருமாலிடம் சென்று நாபிக்கமல நூலை வாங்கி ஆடையுண்டாக்கி அதனை யாவருக்கும் வழங்கும்படி ஆணையிட்டான். இறைவியும் கடாட்சித்தாள். தேவலன் திருமாலுடன் சென்று நூலைப் பெற்றுக்கொண்டுவந்து வனத்தில் ஒரு அழகிய இடத்தில் தங்கித் தன் வேலையில் ஈடுபட்டான். அத்தொழிலுக்கு தீங்கு நினைத்த அசுரர்கள் வஞ்சிக்க வந்தார்கள். போரும் புரிந்தார்கள். தேவலன் அபயம் கோர திருமால் வந்தும், அசுரர்கள் தோல்வி அடையவில்லை. இறைவியை எண்ணித் துதிக்க இறைவி கோடி சூரியப்பிரகாச கிரீடத்தை அணிந்து சிங்க வாகனத்தில் எழுந்தருளி அசுரர்களை வதைத்து வெற்றியுடன் திகழ்ந்தாள். தேவலன் தேவியைத் தன் குலதேவதையாகக் கொண்டு ஐந்து வண்ணங்கள் கொண்ட அசுரர்களுடைய குருதியில் நூலைத் தோய்த்து வர்ண நூல்கள் ஆக்கி துணிகள் நெய்து தேவர்கள் மக்கள் முதலியோருக்கு ஆடைகள் அணிவித்து அவர்களுடைய நன்றிக்குப் பாத்திரன் ஆனான். தேவியைத் துதிக்கையில் தேவலன் வரமும் பெற்றான். அசுரர்களை வென்றது அமாவாசை இரவு ஆனதினால் அப்பொழுது தேவலன் காப்பாற்றப்பெற்று அம்மனுடைய விஜயமும் ஏற்பட்டதினால் தேவலனும் அம்மனும் அன்றே உதித்ததாக கொள்ள வேண்டும் என்றும், அதுகொண்டு அமாவாசை தோறும் குலத்தொழிலாகிய நெசவை செய்யாமல் [illegible]கொண்டு அம்மையைத் தொழ வேண்டுமென்றும், அதனால் அக்குலத்தாருக்கு எல்லா சம்பத்துக்களும் கிடைக்குமென்றும் அம்மன் வரம் தந்து மறைந்தாள். தேவலனும் சௌடாம்பிகையைக் குல தெய்வமாகக்கொண்டு தேவர்களுக்கு ஆடைகளை வழங்கினதில் அவனுக்கு ஆமோத நகரத்தில் அரசாட்சி செய்யும் உரிமை தரப்பட்டது. தேவலன் ஆட்சி செய்கையில் பல போர்கள் புரிந்து வெற்றிகொண்டு மக்களைப் பெற்று இறுதியில் இலிங்கமயமானான். அவனுடைய சந்ததியார்கள் 10,000 கோத்திரங்களாகப் பெருகினார்கள்.

இறைவன் ஆணைப்படி தேவலன் எழு அவதாரங்கள் எடுத்துக் குலத்தைப்பெருக்கிச் சிவபதம் அடைந்தான். அவ்வவதாரங்களின் பெயர்கள் 1. வித்யாதரன், 2. சித்திரயோகி, 3. சாதுகன், 4. புஷ்பதந்தன், 5. வேதாளம், 6. வரருசி, 7. தேவதாசன் என்பன. புராணத்தின்படி 1. தேவலன், 2. வித்யாதரன், 3. புஷ்பதந்தன், 4. வேதாளம், 5. வாரமுனி, 6. தேவசாலி, 7. தேவதாசன் என்பன.

## 9. ஐதீகத்தின் பொருள்.

தேவலனுக்கு அருளப்பட்ட தொழில் ஆடை நெய்தல் ஆகும். அந்த நெய்தலையே புனிதத் தொழிலாக வள்ளுவனாரும் ஏற்றுக்கொண்டாரல்லவா? இந்தச் சீரிய தொழிலிலும் அடிக்கடி குற்றம் குறைவுகள் தீமை எதிர்ப்பு வருகின்றன அல்லவா? தற்காலத்தில் நெசவுத்தொழிலுக்கு ஏற்பட்டிருக்கும் இன்னல்களும், தீங்குகளும் கூறவும் வேண்டுமா? இப்போது உள்ள குறைகளே ஆதி காலத்திலும் இருந்தனபோலும். அதனைத்தான் அம்மனுடைய ஐதீகமும் விளக்குகின்றது எனலாம்.

நெசவாளி நூலைப்பெற்று நெய்வதற்கு முயலுகிறான். அப்போது அவன் செய்யவேண்டிய வேலைப்பகுதிகள் பல உண்டு. அவைகளாவன நூலைப் பக்குவப்படுத்தல்; அதனை இராட்டையில் பிணைத்துப் பாவு செய்தல், கஞ்சி தடவிச சுருட்டுதல், தறியில் பிணைத்து நாடா வீசி நெய்தல், உற்பத்தியான துணியை மடித்து கடைக்குக்கொண்டு சென்று விற்பனை செய்தல், முதலின. இவைகளுக்கு ஏற்ற சாதனக் கருவிகளும் வேண்டும். ஒரு குடும்பம் முழுவதும் ஒழுங்காக வேலை செய்தால்தான் மதிப்பான துணியும, அதற்கான விலையும், அதற்கேற்ற கூலியும் போதுமான கூழும் கிடைக்கும். இவைகளுக்குத் தடையாக சில தீமைக் குணங்கள் பேய்கள்போலப் பீடிக்கின்றன. அவைகள் தான் அறியாமை, வறுமை, ஊக்கமின்மை, சோம்பல் முதலியன. இவைகளைப் போக்க வேண்டுமென்றால் அறிவு, பொறுமை, சுறுசுறுப்பு, ஊக்கம் முதலிய நற்குணங்கள் வேண்டும். இவைகளைப்பெற அன்பின் ஆதரவு வேண்டும். அது இருந்தால்போதும் நெசவாளி உலகில் செல்வாக்கோடு பிழைப்பான்.

தேவலன் ஆடையுண்டாக்கத் தொடங்கியபோது அவனை அசுரர்கள் வஞ்சித்து அவனுடைய நூலை அபரிக்க முயன்றார்கள். அந்த வஞ்சக அசுரர்கள்தான் அறியாமை, சோம்பல் என்ற தூர்க்குணப்

பேய்கள். தேவலன் அசுரர்களோடு போராடி வெற்றி பெறுவதற்காக அம்மனைத் துதித்து அவளுடைய அன்பைப் பெற்றான். அவனுக்கு உதவியாக இருந்த நல்ல ஆயுதங்கள் அறிவு, சுறுசுறுப்பு, பொறுமை முதலியவைகள். அவனுக்கு உதவியாக வந்த அன்னையோ அன்பின் உருவம். அன்னைதான் ஆற்றலின் உரு அல்லது சிவசக்தியாகும். அச் சக்தியின் ஆதரவால் தேவலன் வெற்றிபெற்றுத் தன் தொழிலின் பயனைப் பெறுகிறான். சக்தியின் ஆற்றல் ஒளி பொருந்திய கிரீடமாகப் பிரகாசித்தது. அவ்வொளியின் முன் தீய குணங்கள் மாய்ந்தன. ஆகவே தேவலன் கோடிசூரியப் பிரகாசம் பொருந்திய கிரீடம் தரித்த அன்னையாக உருவகப்படுத்தி வழிபடத் தொடங்கினான். தற்காலத்திலும் ஆற்றலின் பெருமை விஞ்ஞானிகளால் போற்றப்பட்டு வருகிறது. அதையே அம்மனின் தத்துவப் பொருளாய்ப் புராணம் வர்ணிக்கிறது. இந்தப் பொருளின் ஐதீகத்தை உணர்ந்தால் அதன் பெருமையை நன்கு அறியலாம். இந்த நிலைமையைத்தான் தேவாங்க குலத்தார் புகழ்ந்து அம்மனை உருவகப்படுத்தி கோயிலில் எழுந்தருளச் செய்து வழிபடுகின்றார்கள்.

## 10. அம்மன் ஆராதனை.

அம்மனைக் குல தேவதையாகக் கொண்டிருக்கும் மற்ற குலத்தார்களுக்கும் தேவாங்கர்களுக்கும் ஒரு வித்தியாசம் உண்டு. அங்காளம்மன், மாகாளியம்மன், காமாட்சியம்மன் முதலிய சக்தி தேவிகளைக் குலதேவதையாகக்கொண்டு வழிபடும் குலத்தார்கள் அத்தேவதை ஒன்றையே ஆலயத்திலும் திருவிழாக்களிலும் எழுந்தருளப் பண்ணுவார்கள். ஆனால் தேவாங்க குலத்தவர்களோ அம்மனோடு சுவாமியையும் திருவிழாக்களில் எழுந்தருளப் பண்ணுவார்கள். அப்போது சுவாமியை இடப வாகனத்திலும் அம்மனைச் சிங்கவாகனத்திலும் எழுந்தருளப் பண்ணுவார்கள். முன் கூறியபடி தேவாங்க குலத்தார்கள் விஜயதசமி ஆவணி யவிட்டம் முதலிய விழாக்களை நடத்துவதன்றிச் சிறப்பாக அம்மன் பண்டிகை என்பதும் நடத்துவதுண்டு. இப்பண்டிகை ஏதாவது ஒரு குறிப்பிட்ட ஆண்டில்தான் நடைபெறும். ஏனெனில் அப் பண்டிகைக்கு நிரம்ப செலவும் சிரமமும் வேண்டும். ஆகவே அந்தப் பண்டிகையை மிகச்செழிப்பு விளைந்த ஆண்டில் மட்டும் நடத்துவார்கள். முதலில் தேவாங்கர்கள் தங்கள் கொடியாகிய நந்தித்துவஜத்தை நடுவார்கள். பிறகு மஞ்சநீர் எடுத்துவந்து, கோயிலில் கலசம் வைத்து ஆவாரஞ்செடியின்

நிழலில் அம்மனை நிறுத்தி அபிஷேகாதிகள் செய்து சுவாமியையும், அம்மனையும் தெருத்தெருவாக ஆரோகணம் செய்விப்பார்கள். அப்போது முதலில் அலகு நிறுத்தி உபவாசம் இருந்த சில வாலிபர்கள் கத்தி கொண்டு விளையாட தேவதைகளின் மெரமனை நடைபெறும். இவ்வாறு பல நாட்கள் பல தெருக்களிலும் பல சிற்றூர்களிலும் பவனி செல்வதுண்டு. பூஜைகளைக் கட்டளைக்காரர்களும் மற்றவர்களும் நடத்துவார்கள். மெரமனையின்போது கத்திபோடுவதுண்டு. இந்த வழக்கத்திற்கு புராணத்தில் ஆதாரம் இல்லாமல்போன போதிலும் நடைமுறையில் வழங்குவது உண்டு. கத்திகளை மார்புகளின்மீது அடிக்கும்போது காயங்களும் ஏற்படுவதுண்டு. ஆனால் அதற்கு மஞ்சள்பொடி தூவ இரத்தம் நின்றுபோய் ஆறிவிடும். இந்த முறையில் விழா பல நாட்கள் நடக்கும். ஒவ்வொரு தெருக்காரர்களும் மூர்த்திகளை மண்டபத்தில் நிறுத்தி அபிஷேகாதிகளையும் பூஜைகளையும் நடத்தி சமாராதனையும் நடத்துவாரகள். பவனி செல்லும் காலத்தில் அழகான தண்டகங்களைச் சொல்லிப் பூஜைசெய்வதுண்டு அத்தண்டகங்களில் அம்மனின் திருப்புகழை ஓதுவதுண்டு. இறுதி நாளில் மஞ்சநீர் ஆடிக் கொலுவில் வைத்துப் பூஜைசெய்து திருவிழாவை பூர்த்தி செய்வார்கள்.

அம்மன் பண்டிகைகள் நாட்டில் தொத்து வியாதிகள், துர்நிமித்தங்கள், வறகடம் இவைகள் ஏற்படும் காலங்களில் அவைகளை நீக்குவதற்காகப் பிரார்த்தித்துக் கொண்டாடுவதுண்டு அம்மனைத் துதிச்செய்யும் வகையில் ஏற்பட்ட தண்டகங்கள் தெலுங்கு மொழியில் உயர்ந்த நடையில் கம்பீரமான போக்கில் இருப்பன. கேட்பவர்கள் நெஞ்சில் உணர்ச்சி பொஙகும்படியான அடுக்குச் சொற்கள் செய்யுள் நடையில் அமைவு பெற்றிருப்பன. தண்டகஙகளைச் சொல்லுபவன் பட்டாக் கத்தியைக் கையிலேந்திக்கொண்டு அம்மன் திருமுன்னம் அதனை வீசிக்காட்டிக் கொண்டு உயர்ந்த தோரணையில் அதனைச் சொல்லிச்செல்வான். அதனைப் பார்ப்பதற்கும் கேட்பதற்கும் மிகுந்த ஆவேசமும மன எழுச்சியும் உண்டாகும்.

## 11. பொதுப் பண்பாடு.

வகுப்புத் திட்டத்தில் தேவாங்கர் மிக உயர்ந்த நிலைமை பெற்றவர்கள். சிலர் பிராமணர்களுக்குச சமானமானவர் என்று ஆதாரமும் காட்டுவர். மற்றவர் பிராமணர்களுக்கு அடுத்தபடியில் உள்ளவர்கள்

என்பர். அதை முன்னிட்டுச் சிராத்தத்தில் சர்மா என்று சிலர் தம் பெயர்க்குப்பின்னும் சிலர் வர்மா என்றும் கூறுவர். ஆனால் தற்காலத்து முன்னேற்றத்தில் இதனைச் சிந்திப்பவர் இல்லை.

கல்வி விஷயத்தில் வடப்பிராந்தியங்களில் அது மிகக் குறைவு. தென் வட்டாரங்களில் சுமாராக இருக்கும். பொதுவாகக் கணக்கு எடுத்ததில் இக்குலத்தார் படிப்பில் பின் தங்கியவரென்றே வகுக்கப்பட்டிருக்கிறார்கள். நகரங்களில் பெரும்பான்மையாக எல்லாரும் படித்தவர்களே. ஆனால் நாட்டுப்புறத்தில் அறியாமையே மிகவுண்டு. தற்போது மக்களில் உள்ள உற்சாகத்தினால், பல இடங்களிலும் பாடசாலைகள் வாசகசாலைகள், சங்கங்கள் முதலியவைகளை வைத்து நடத்தி வருகிறார்கள். ஆண் மக்களேயன்றி பெண்களும் உயர்படிப்பு பெற்று அரசியல் அலுவல்களுக்கும் செல்லுகிறார்கள். பட்டதாரிகளும் பெருகிக் கொண்டு வருகிறார்கள். தெலுங்கு, தமிழ் முதலிய மொழிகளில் பாண்டித்தியம் பெற்றுக் கவிஞர்களாகவும் அமர்ந்திருக்கிறார்கள். இந்த வகையில் ஏனைய மக்களுக்கு அறிவாற்றலில் குறையாத வகையில் தேவாங்கர்கள் இருக்கிறார்கள்.

நாட்டில் மக்கள் தொகை எடுத்துப்பார்த்தால், தெற்கே கோவை, சேலம், வடக்கே கோதாவரி, கிருஷ்ணா வட்டங்களில்தான் தொகை மிகுதி. படிப்பிலே கோவை, சேலம இவைகளில் மிகுதி என அறியவேண்டும். படிப்பு அதிகம் ஆக ஆக நாகரீகத்திலும், செல்வாக்கிலும் தேறியவர்களாக விளங்குகிறார்கள். நாட்டுப் புறத்தார் வறுமையினால் பீடிக்கப்பட்டுச் சக்தியற்றவர்களாக இருக்கிறார்கள். பொருளாதார விஷயத்தில் தேவாங்கர்கள் மிகத்தாழ்ந்தவர்கள் என்று சொல்வதற்கில்லை. குலத்தொழில் ஒன்று எல்லாருக்கும் உண்டு. எந்த காலத்திலும் பாடுபடுகிறவனுக்கு வயிற்றுக்கு கஞ்சி உண்டு. ஆண் மக்கள் நெசவில் ஈடுபட்டால் பெண் மக்கள் அவர்களுக்கு உதவி செய்வார்கள்.

ஆகவே குடும்பம் முற்றும் ஒரே தொழிலைக் குறிக்கோளாக வைத்துக்கொண்டு குடும்பப் பாதுகாப்பு செய்வார்கள். ஆகவே குடும்பத்தில் ஒற்றுமை நிலையச் சாதனங்கள் உண்டு. ஆனால் நெசவுத் தொழிலில் ஒரு குறைவு உண்டு. அன்னார் நூல் முதலிய உபகரணங்களைப் பெறுவதற்கு பிற மக்களின் உதவி வேண்டும். அரசியல் புரட்சிகளிலும் போர்களிலும் நெருக்கடி ஏற்பட்ட காலத்தில் நெசவாளிக்குச் சிரமம் ஏற்படும்

அப்போது பிறரால்தான் அவனுக்குச் சிரமம் ஏற்படுகிறது. தங்களைத் தாங்களே காப்பாற்றிக் கொள்ளும் ஆற்றல் கிடைக்கும்போது அவன் நிலைமை மிகவும் சீர்பட்டு இருக்கும். இப்போது ஏற்பட்டிருக்கும் தொழில் புரட்சியாலும் அவனுக்குத் துன்பம் தொடங்கி இருக்கிறது. அதனையும் தொலைப்பதற்கு கூட்டுறவினால் முடியும். அதில் அவன் முயற்சி எடுத்துக்கொள்ளக்கூடும்.

உலகப் போருக்குப் பிறகு ஏற்பட்ட தொந்தரவுகளுப்பின் நெசவாளனும் விழித்துக்கொண்டு நெசவு ஒன்றே தனக்குப போதுமான வேலை கொடுப்பதில்லை என்றும் ஆகவே யந்திர விசைத்தறிகளைப் பயன் படுத்திக் கொள்ளவேண்டும் என்றும் முயற்சித்து வருகிறான். நூல் நூற்பதிலும், உழவுத் தொழிலிலும், தான் ஈடுபடவேண்டுமென்று எண்ணத் தொடங்குகிறான். இது மட்டுமோ, அரசியல் அலுவல்கள், வாணிபம், மற்றத் தொழில்கள் முதலியவைகளிலும் அவன் புக எண்ணுகிறான். இந்த வகையில் அவனுடைய பொருளாதார நிலைமை செம்மையாகக் கூடும். உலகில் ஏனைய மக்களைப்போல் தானும் சிறந்து விளங்க தேவாங்கன் முயற்சி எடுத்துக் கொள்ளுகிறான்.

## 12. குலத்தைப்பற்றிய நூல்கள்.

மற்ற குலத்தார்கள் தங்கள் குலங்களைப்பற்றி நூல்கள் எழுதியிருப்பது போல நமது முன்னோர்களும் நமது குலத்தைப்பற்றி பல நூல்கள் எழுதியிருக்கிறார்கள். நமது குலத்தார்கள் எங்கே தங்கினார்களோ அந்தப் பிராந்திய மொழியையும் பேசத்தொடங்கினார்கள். இவ்வாறு பேசிய மொழிகள் தெலுங்கு கன்னடம் மராட்டி யென்பன. ஆகவே இந்த மூன்று மொழிகளிலும் நமது நூல்கள் இருக்கின்றன. மற்றும் தமிழ் நாட்டில் குடியேறிய தெலுங்கு கன்னடியர்கள் தமிழையும் நன்கு கற்றுக்கொண்டார்கள். ஆகவே தமிழிலும் நூல்கள் இருக்கின்றன. இந்நான்கு மொழிகளேயன்றி வட மொழியில் முதல் நூல் தோன்றியது இயல்பே. வட மொழியிலுள்ள மூலகிரந்தங்கள் இரண்டு. முதலாவது சமஸ்கிருத தேவாங்கப்புராணம்; இரண்டாவது, மூலத்தம்பனம் இந்த இரண்டையும் தெலுங்கு லிபியில் மூலத்தையும் பொழிப்புரையும் நெல்லூர் ஜில்லா கோமேதகம் ஓம் ஸ்ரீ சங்கரசுவாமிகளும், கோதாவரி ஜில்லா காளஹஸ்தி சித்தாந்தி அவர்களும தெலுங்குப் பொழிப்புரையோடு 1914-ல் வெளியிட்டிருக்கிறார்கள். தவிர

தேவாங்கப் புராணத்தை மட்டும் சூரியநாராயண சீர்த்தர் அவர்கள் தெலுங்கு வசனத்தில் எழுதி 1913-ல் வெளியிட்டிருக்கிறார்கள். இனி கன்னடத்தில் தார்வார் ஜில்லா பியாடிகியில் சுப்பைய சித்தலிங்கைய மகாசுவாமிகள் என்பவர் அச்சடித்திருக்கிறார். இது கன்னடச் செய்யுளாக அமைந்திருக்கிறது. மேலும் வடமொழித் தேவாங்கப் புராணத்தைக் கோவை, சதாசிவ சுவாமிகள் தமிழ்மொழி ஆக்கிக்கொடுக்க பழனி மாம்பழக் கவிராயர் தமிழ்ச செய்யுளில் 29 சருக்கங்களாகப் பாடியிருக்கின்றார். அதற்குப் பண்டிதர் சபாபதி பிள்ளையவர்கள் உரையெழுதிக் கொடுக்கக் கோவை வியாபாரிகள் வெரிவாட செட்டியார், கிரிய செட்டியார் முதலியோர்கள் பண உதவியைக்கொண்டு விசய வருடம் ஆனி மாதம் 28-ம் தேதி ஒன்னே கவுடரால் அச்சடிக்கப்பட்டது. தமிழ் நடை வுயர்ந்தது. உரையெழுதினவர் பாடல்களில் சில திருத்தங்கள் செய்துள்ளார். மேலும் மூலத்தம்பத்தை சேலம் பொம்மண்ண ஐயர் வடமொழி பெயர்ப்பையும் சேர்த்தி 1926ல் அச்சடித்துள்ளார்கள். மற்றொரு வடமொழி நூல் ஸ்காந்த புராணத்து இராஜதாசல கண்டம் என்பதை தெலுங்கு மொழி பெயர்ப்போடு பெடன கங்கையா அவர்கள் 1925-ல் அச்சடித்திருக்கிறார்கள். மேலே சொன்ன புராணங்களைத் தவிர தமிழில் பல பிரபந்தங்கள் வெளி வந்துள்ளன. வெங்கடசுப்புக் கவிராயர் சவுடாம்பிகைப் பிள்ளைத் தமிழை 1893ல் வெளியிட்டிருக்கிறார். மற்றும் சவுடாம்பிகை மாலையென்ற நூலையும் பாடியிருக்கின்றார். இவைகள் அருப்புக்கோட்டைத் தேவாஙகர்கள் வேண்டுகோளின்படி எழுதப்பட்டன. கோவையில் பண்டிதர் சபாபதி பிள்ளையவர்கள் சவுடாம்பிகை மாலையியற்றியுள்ளார். கீதாமிர்தம், பதிற்றுப்பத்து என்பவைகள் கோவையில் வெளி வந்தன. இவைகளைத் தவிர அம்மனைப் பற்றிப் பரம்பரைத் தோத்திரங்கள் தண்டகங்கள், கீர்த்தனைகள், தனிப் பாடல்கள், தெலுங்கிலும் கன்னடத்திலும் உண்டு. மேலும் தேவாங்கர்களைப்பற்றி அரசியல் வெளியீடுகள் சென்னை, மைசூர், கொசசி, திருவிதாங்கூர், பம்பாய், ஹைதராபாத் முதலியவைகளில் வெளி வந்துள்ளன. மற்றும் பற்பல மகாநாட்டு பிரசுரங்களும் செய்தித்தாள்களும் குலச் செய்திகளை அவ்வப்போது வெளியிட்டிருக்கின்றன.

இவைகளேயன்றி மனுமுதல் தேவதாசமையன் வரையில் தோன்றின எழு அவதாரங்களிலும் அரிய கிரந்தங்களை வடமொழியில் இயற்றியிருக்கிறார்களாம். அவைகளாவன மனு—மனுசூத்ரம் முதல் 8 நூல்கள்; தேவலன் — தேவலோபநிஷத் முதல் இரண்டு; வித்யாதரன் — மந்திர

சாஸ்திரம் முதல் 16 நூல்கள்; புஷ்பதந்தன்—மஹிம்ன ஸ்தோத்ரம் முதல் 10 நூல்கள், வேதாளம்—10 நூல்கள்; வரருசி—20 நூல்கள்; தேவசாலி—10 நூல்கள்; தாசமையன்—14 நூல்கள். இவைகள் தமிழில் மொழி பெயர்க்கப்படவில்லை.

தேவாங்க புராணமோ மனுத் தேவாங்கனுடைய ஏழு அவதாரங்களைக் கூறுவது. இப்புராணம் பிரம்மாண்ட புராணத்தில் சூதமுனிவர் சௌனகாதி முனிவர்களுக்குக் கூறிய முறையில் ஏற்பட்டவாறு வட மொழியில் உள்ளதைத் தமிழ் மொழிப்பெயர்ப்பாக செய்யுள் வடிவில் ஆக்கப்பட்டது. இந்நூல் கோவையில் உரையோடு வெளியிடப்பட்டதைத் தற்போது நூல் அகப்படாத காரணம்கொண்டு செய்யுளும் கருத்துரையும் எழுதி சேர்க்கப்பட்டு வெளியிடப்படுகிறது.

—ம. ரா.

உ

இராமலிங்க சவுடாம்பிகை துணை.



# தேவாங்க புராணம்.

முதலாவது

## வரந்தரு கடவுள் வாழ்த்துச் சருக்கம்.

[இச் சருக்கத்தின் கருத்து, நூலாசிரியர் தான் பாடத் தொடங்கிய புராணம் நன்றாக முடியும் பொருட்டு கடவுளருக்கு வாழ்த்துக்கூறித் தனக்கு வரம் தரும்படியாக வேண்டிக்கொள்ளுகிறதேயாகும்.]

### பிள்ளையார் காப்பு.

*எழுசீர்க் கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.*

புகழ்வளர் மதிதோய் பொலங்குவட் டிமவான்
பொருப்பிடைப் பிறந்தணி பொருந்தித்
திகழ்தரு கயிலைப் பவளநன் னிறத்துத்
திறற்பெருங் களிற்றினைச் சேர்ந்து
தகரமென் கூந்தற் பசும்பிடி யீன்ற
தடங்கரத் தருண்மதத் தனிக்கோட்
டகல்செவிச் சிறுகட் குஞ்சரக் கன்றி
னடிமலர் முடிமிசை யணிவாம். (1)

## இறைவன் வணக்கம்.

கொச்சகப்பா.

ஆதிநடு வந்தமின்றி யலர்தலைப்பற் பலபுவன
மீதினுமல் குயிர்தொறும்பூ விரைமணிவா றுரைபொருள்போன்
றோதியமா மறைத்தொகைக்கு முணர்வரிதா யுறைந்தபரஞ்
சோதிதிரு வருளையுன்னித் தொடர்மனத்தி னிடர்தவிர்ப்பாம்.(2)

## தென்முகக் கடவுள் வணக்கம்.

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

வருபிறவி நெடுங்கேதக் கொடுங்கோடை யொடுங்காம
வடவைத் தீயு
மொருவவிரு வடநிழலின் மூவாத நால்வர்தம
துளத்தி னூடு
பொருவரிய மெய்ஞ்ஞானப் பயிரெழுந்தா னந்தசிவ
போகம் வாய்ப்பக்
கருணைமழை பொழிமவுனக் கயிலைமுகி லிணையடிபொற்
கமலஞ் சேர்வாம். (3)

## சிவகாமவல்லியம்மை வணக்கம்.

திவளமலை நெடுந்தரங்கத் தெய்வநதி மதிகுலவு செக்கர் வேணி
துவளமலை வரியபதஞ் சலியுமொரு புலியுமெதிர் தொழுது நிற்பத்
தவளமலை யில்லியெனுந் தொல்லையருட் டில்லைமணிச் சபையி லாடும்
பவளமலை யிடத்துவளர் பசுங்கிளிப்பொற் பதநளினம் பணிதல் செய்வாம்.
(4)

## சித்திவிநாயகர் வணக்கம்.

கொச்சகம்.

எத்திக்குஞ் சரமாதி மற்றெவையு மீன்றெடுத்த
சத்திக்குஞ் சரவிதழி வேணியற்கு மோர்தனயன்
முத்திக்குஞ் சரம்பெருவித் தெனவாகி முளைத்தெழுந்த
சித்திக்குஞ் சரமுகனை நாடோறுந் துதிசெய்வாம். (5)

## முருகக்கடவுள் வணக்கம்.

*அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.*

*பனிப்பவனி யுறப்படரு மவுணரெனு மிருளறக்கோ*
*பதியைச் சூழ்ந்த*
*துனிப்பனியு மருட்குளிரு மொளிப்பவினை மாயைமுக*
*சோமன் மட்கக்*
*கனிப்பவள விதழ்ச்சசிதன் னிதயபங்கே ருகமலரக்*
*கதிர்வாய் செவ்வேற்*
*றனிப்பருதி யனுப்புமின்பத் தடங்கடல்சார்ந் தெமதுபவத்*
*தாகந் தீர்வாம்.* (6)

## கலைமகள் வணக்கம்.

*முதிர்பொறுமைக் கரைசிறந்து கருணைநறும் புனல்பருகி*
*முழுமெய்ஞ் ஞானப்*
*புதியமலர் விரிந்தடக்க மெனுங்கமடங் குடியிருந்து*
*புகழ்கொண் டோங்கு*
*மதிவலவர் தமதிதய வாவிதொறும் விளையாடி*
*வளர்பே ரின்பந்*
*ததிமதுர குணநயவெள் ளனப்பேடு தனைப்பாடி*
*யருள்பெற் றுய்வாம்.* (7)

## நந்தியடிகள் வணக்கம்.

*படருமிருட் கொடும்பிறவிப் பாவவனந் தனைச்சிதைத்துப்*
*பந்த பாசத்*
*தொடரதனை யறுத்துவினைத் தறிமுறித்து மனப்பாகைச்*
*சுளித்து ஞானத்*
*திடமருவி நெடுங்கயிலைத் தடங்கிரிவாழ் பரஞ்சுடரின்*
*திருமுன் னேங்கு*
*மடல்குலவு நந்தியெனுங் கடவிகட களிற்றிணைத்தாட்*
*கன்பு செய்வாம்.* (8)

## சவுடநாயகியம்மை வணக்கம்.

உந்துதிரை நெடுங்கடல்போ லொலித்தடர்ந்த வரக்கர்வெந்நிட்
டோடி வீழ
முந்துபரம் பொருளிதயாம் பரந்துதித்த தேவலினை
முழுதுங் காக்கக்
கந்துபொரு கடகளிறு கலங்குறுகண் மடரவவா
கன நடாத்தி
வந்துதிரு வருள்புரிந்த சவுடநா யகிதிருத்தாள்
வழுத்தல் செய்வாம். (9)

## அவையடக்கம்.

*கலிநிலைத்துறை.*

சலத ரங்கடற் புனல்கவர்ந் துவரினைத் தள்ளி
யுலக மின்புறப் பொழிதல்போ லெளியனே னுரையிற்
சிலகொ டும்பிழை யிருப்பினு மவையெலாந் திருத்திக்
கலைவி ரும்பினர்க் கோதுதல் சான்றவர் கடனே. (10)

**கருத்து:—** நூலாசிரியர் எடுத்துக்கொண்ட வரம்தரும் கடவுளர்கள்—பிள்ளையார், இறைவன், தென்முகக் கடவுள், சிவகாமவல்லி, சித்திவிநாயகர், முருகக்கடவுள், கலைமகள், நந்தியடிகள், சவுடநாயகியம்மை, என்ற கடவுளர்கள். இப்பெயர்களில் முதல் எட்டுப்பெயர்களும் பொதுக்கடவுளர்கள், சவுடநாயகியம்மை புராண தேவதை. தலத்துக் கடவுளர்கள் விடப்பட்டன. இவர்களுக்கு வணக்கம் கூறியபின் நூலாசிரியர் அவையடக்கம் கூறுகிறார்.

## இரண்டாவது

# நலன்திகழ் பாண்டிநன்னாட்டுச் சருக்கம்.

[இச்சருக்கத்தில் பாண்டிய நாட்டுச் சிறப்புக் கூறப்பட்டுள்ளது.]

### கலிவிருத்தம்.

உலக மெங்கணு மோங்கு நெடும்புக
ழிலக வின்ப மெவர்க்கு மளித்தெழில்
பலவு நன்குறு பாண்டிநன் னாட்டணி
சிலதெ ரிந்துரை செய்குது நாமரோ. (1)

காம பால னிறம்பெறு கந்தரந்
தாம மார்விண் டலத்திற் படர்ந்துவா
னாம வேலை நளிர்புன லுண்டுபின்
வாம மால்வடி வங்கொடு மீண்டவே. (2)

கதிர்த்த நாரங் கடுந்திரை யாலெறிந்
ததிர்த்த வேலை யருந்திய மேகவேந்
தெதிர்த்த கோடை யெனும்பகை வெந்நிட
விதிர்த்த வாளென மின்ன லெழுந்ததே. (3)

திரைநெ டுங்கட லென்னச் சிறந்தபல்
லுரைபெ றுங்கலை யோர்ந்த புலவர்தா
நிரைத ருங்கவி நேர வராகமால்
வரைசெ றிந்து மழைகள் பொழிந்தவே. (4)

கருவி மாமுகில் பெய்து கலித்தவெள்
ளருவி நீதி யறிந்து மனக்களங்
கொருவி வாய்மை யுயர்முடி வேந்தர்தம்
பொருவி லாத புகழிற் பொலிந்தவே. (5)

மால மேல மலையசம் வேங்கைத
மால மேல மரும்பணை காரகில்
சால மாலந் தரநிமிர் தேக்கொடு
சால மாலந் தருபுனல் சாய்த்ததே. (6)

தூல மேவுஞ் சுடர்மருப் பும்பல்சார்த்
தூல மேவுஞ் சுழல்விழிக் கோளரி
கோல மாருமென் குன்றவர் தானைதக்
கோல மாருமென் குங்கொடு சென்றதே. (7)

வாட ரும்பல மாமணி காந்தடேன்
வாட ரும்பல மற்றுங் கொடுமருட்
கோட ணிந்த குமரனைப் போற்றினீள்
கோட ணிந்த குறிஞ்சி கடந்ததே. (8)

சோக மாரஞ் சுகம்பசுந் தோகைய
சோக மாரஞ் சுமந்து நடந்தவி
வேக மாசுர வேடர் செறிந்துறை
வேக மாசுர மெய்தநவ் வெள்ளமே. (9)

தமரங் கோடத் தடம்புனல் வேடுவர்
தமரங் கோடத் தழைந்து செழுங்குலி
கமருந் திரக் கணைசிலை வாரிவெங்
கமருந் திரக் கலந்து சிறந்ததே. (10)

கொக்க ரித்துக் குலாவு கவுசிகங்
கொக்க ரித்துக் குறிய புறவைமோ
திக்க லைந்துச் செறிபர லோங்குமந்
திக்க லைத்துச் செழுமை புரிந்ததே. (11)

அந்த வாரியை யாம்பிரஞ் சாய்த்தரா
யந்த வாரியை தாள்பணிந் தார்த்துங்கி
வந்த வாரி வனமகன் றுழிபோல்
வந்த வாரி வளர்புற வுற்றதே. (12)

மான கந்தரு மாநிழற் கொன்றைதேன்
மான கந்தரு வம்பயில் வேய்ங்குழ
லான மைந்த வணிகவர்க் கண்டர்க
ளான மைந்த பதிர விரைந்ததே. (13)

அம்ப ரம்பணி யம்பக வாய்ச்சிய
ரம்ப ரம்பணி யாடு தொடுத்திடுந்
தும்ப ருந்தயிர் தோற்ற வமுதுத
தும்ப ருந்தயிர் சூறை புரிந்ததே. (14)

நிதி கழ்ந்த செழுந்தவர் தோய்நதி
நிதி கழ்ந்த திகிரியற் போற்றுபு
மாதி ருந்த வளர்முல்லை தீர்ந்துபோன்
மாதி ருந்த மருதம் புகுந்ததே. (15)

தேங்க ரும்பு திகழ்மகிழ் வாழைமாந்
தேங்க ரும்பு சிறந்த கமுகுதேன்
வாங்க ரும்பல வஞ்சி மருதரி
வாங்க ரும்பல வோங்க மலிந்ததே. (16)

காவி யப்புறங் கஞ்சங் குவளைமங்
காவி யப்புறக் கானல ரோங்கிட
வாவி முற்று வரால்செறி கால்பணை
வாவி முற்று மலிந்ததவ் வாரியே. (17)

கலிநிலைத்துறை.

இராக மாமணி குங்குமஞ் சாந்தகி லிலங்கு
மராக மாசறு மைவனந் தென்றினை யளைபால்
பராக மார்தரு மலர்பல கொடுபடர்ந் திடுமவ்
வராக மாநதிப் பெருமையா ரிசைத்திட வல்லார். (18)

எழுதி ரைப்புன லோதையுந் தடம்பணை யெங்கு
முழுதி றந்தினர் அழனியு முயர்குல தெய்வந்
தொழுது வித்தினர் சும்மையுங் குரவையின் றொனியும்
பழுத றத்திக ழெழுபெருங் கடலையும் பழிக்கும். (19)

கன்னி வாழைமென் கனிபுரு தேறலுங் கரும்பு
தன்னில் வார்தரு மதுவுமாப் பலவுமிழ் சாறுந்
துன்னி யேகமழ் மலர்பல பொழிசுவை யையுஞ்சிர்
மன்னி நீள்பணை தொறுந்தொறு நிறைந்துநெல் வளர்க்கும். (20)

மிகுத்த டம்பணை மிடைந்துநன் னடவுசெய் மின்னார்
முகத்தி னங்கெழு சேதகத் துளிபல மொய்த்தல்
மகத்து வந்தரு மருச்செழுங் கமலமென் மலரிற்
சுகச்சு ரும்பினந் தொடர்ந்துசூழ்ந் திருந்தெனத் தோன்றும் (21)

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

வியன்றிகழ் பழனந் தோறும் விளைந்துள பருவ நாடிக்
குயங்களாற் கொய்து சும்மை குவடென வனேகம் வேய்ந்து
செயம்புனை கரும்ப கட்டாற் றெழித்துவை நீத்தெல் லோரு
நயம்புரி வளவு தோறு நன்னரிற் றொருக்குப்ப ரன்றே. (22)

தடந்தொறு மெகினங் கஞ்சத் தவிசில்வீற் றிருக்குங் காவி
னிடந்தொறுங் குயில்வில் வேளை யிசையினா லினித ழைக்கு
மடந்தொறும் பலவ றங்கள் வழங்குறு மாதர் தெண்ணீர்க்
குடந்தொறும் வளைகள் சென்று கொழுமணி யுயிர்க்கு மாதோ.
(23)

விளரிமென் சுரும்பர் காவின் மிடைந்தபன் மலர்க டோறு
முளர்தரு மகரந் தங்க ளுற்றவந் நிலம ணைத்துந்
தளமலி கற்ப கப்பூந் தாமவா னித்தர் வாழு
களமுறு கிரணப் பைம்பொன் னாட்டினு நலம்பெற் றோங்கும்(24)

நாடெலாஞ் செந்நெல் காவி னடுவெலாங் கமல வாவி
மாடெலாந் துகிர்வா யன்னம் வரம்பெலாம் விளைந்த சொன்னங்
காடெலா மயிலி னாட்டங் கரும்பெலா மணியி னீட்டம்
வீடெலாந் திருமென் கோதை வெளியெலா முரச வோதை. (25)

மாவெலாங் குயில்கள் பாடும் வயலெலா மதுவா றோடுங்
காவெலாங் கவிகள் பாயுங் கரையெலாம் வளைகண் மேயும்
பூவெலாஞ் சுரும்பர் மன்னும் புறமெலாங் கமுகு துன்னும்
பாவெலா மிரதந் தேங்கும் பரமெலாங் குவளை யோங்கும்.
(26)

பணிமுடி மிசைபொ ருந்த பவளவாய்க் கரிய கூந்தற்
றிணிவரைக் களபக் கொங்கைச் சிலைநுதற் புவிம டந்தைக்
கணிபுனை பாண்டி நாடோ ராரமா மதின் வயங்கு
மணியென வளர்தென் காசை மாநகர் வளமை சொல்வாம். (27)

கருத்து:— நூலாசிரியர் பழசியில் வாழ்ந்தவர். நூல் பாண்டிய நாட்டுக்குச் சேர்ந்த போடிநாய்க்கனூரில் எழுதப்பட்டது. ஆகவே ஆசிரியர் பாண்டிய நாட்டின் பெருமையை வருணிக்கின்றார். அவ்வாறு வருணிக்கையில் அருமையான சொல் அழகுகள் பொருள் அழகுகள் முதலியவைகளை நலம்பெற வைத்திருக்கின்றார். புலமை வாய்ந்தவர்கள் இவற்றைப்படித்து இன்புறலாம்.

### மூன்றாவது

## வளர்தென்காசை வளம்பதிச் சருக்கம்.

[இச் சருக்கத்தில் நகரச்சிறப்பு கூறப்பட்டுள்ளது.]

*கலிநிலைத்துறை.*

*திருவ யங்கிய செழுமலர் செறிந்தநீ ரகழும்*
*பொருவி கந்தபொற் புரிசையும் பொலிதரு தோற்றங்*
*கருது வெண்டிரை யெழுந்திர் பெரும்புறக் கடலு*
*முருந லங்கெழு திகிரிமால் வரையுமொத் துளதால்.* (1)

*ஆம்ப லம்புயங் குவளையவ் வகழ்செறி காட்சி*
*தேம்ப யின்றசொற் காசைமங் கையர்செழுஞ் செவ்வாய்*
*மேம்ப டுங்கதிர் மாமுகம் விழிக்கெதிர் வெள்கிக்*
*தாம்ப டர்ந்தநீர் புகுந்தன வாமெனத் தருமால்* (2)

*ஆர்ப்ப ருதநீ ளகழ்செறி நன்னக ரணிக்கு*
*நீர்ப்ப யோதர வாகனன் வளம்பதி நிகரோ*
*பார்ப்ப நாமினி யென்றுவிண் புகுந்துள படிபோற்*
*சீர்ப்பன் மாமணிக் கனககோ புரநிரை திகழும்.* (3)

*திங்க ளங்கதிர் நிகர்தரு வெண்சுதை தீற்றி*
*பொங்கு பன்மணிப் பூரண கும்பமேற் பொருந்தி*
*மங்கு லின்புரந் தைவரு விலோதன மலிந்து*
*துங்க நன்குயர் மாடமெங் கணுமிகச் சூழும்.* (4)

*முல்லை மென்முகை யனையவெண் மூரல்பா யசம்பால்*
*சொல்ல ருந்துவை கருணைமுப் பழந்ததி சுகிர்தம்*
*பல்வி தம்பெறு பூபமு மினிதுபா லிக்கும்*
*நல்ல றம்புனை சாலைக ளெண்ணில நகுமால்.* (5)

*மதக யந்துர கதமணிச் சிவிகைவான் கவிகை*
*கதழ்செ ழுங்கதிர்க் கனகவா பரணநற் கலிங்க*
*முதல னந்தமேற் பவர்மனம் விருப்புறு முறையின்*
*நிதநி தந்தரு சாலைக ளெண்ணில நெருங்கும்.* (6)

பிணைவு றும்பல பேதொரீஇப் பெருங்கழை மதவேள்
கணையு மங்கையர் கணையுமூ தறிவினாற் கடிந்து
பணைத டந்தனக் கவுரியோர் பாதிய பாதத்
துணைவி ரும்பினர் தூய்மட மெண்ணில சூழும். (7)

ஓம சாலையும் யாகசா லையுமுணர்ந் துயர்ந்தோர்
நேம சாலையு நடனசா லையுநிறை கல்வி
வாம சாலையும் படையயில் சாலையு மதனக்
காம சாலையுங் கனகசா லையுங்கதித் திலங்கும். (8)

திருகு வெஞ்சினக் கயம்பல செறிந்தபந் திகளும்
வருக் டுங்கதிக் கலினவாய்த் துரங்கமந் திரமு
மருவி கொண்டவெற் பெனத்துகிற் கொடிகொடே ரணி
பொருவ ருஞ்சின கரங்களு மெண்ணில பொலியும். [யும்
(9)

கொம்மை வாண்மணி மாடமீ நாடிய கொடிகள்
வெம்மை கூர்தரு முலோபிகள் பாற்செல வேண்டா
செம்மை நூல்பல தேர்ந்துளீ ரெம்மிறை திருமுன்
வம்மி னீவிரென் றழைத்தெனை நிரைநிரை வயங்கும். (10)

வாணி லாமணி மேனிலை தொறுமட மாதர்
பூணி னீள்செழும் பூங்குழற் கூட்டகிற் புகையைச்
சேணி லார்கரும் புயலென மதித்துவான் சிலம்பிற்
பேணி வாழ்பசுந் தோகைமென் மயினடம் பெயரும் (11)

இந்து காந்தவெண் டகட்டினா லிழைத்தசெய் குன்றிற்
பந்து வாரிளம் பயோதர வனிதையர் பயில
வந்து சேர்தொறு மவர்முக மதியென மதித்துச்
சிந்து நீர்கரும் பரம்பைசூழ் பொழிற்கெலாஞ் செலுமால்
(12)

வார்க்கு லம்புரி முரசமெம் மறுகினு மலிதல்
கார்க்கு லங்களை நோக்கியிந் நகருளார் கரத்தின்
சீர்க்கு மின்னனார் குழற்குநேர் சிறிதுமொவ் வீரென்
றூர்க்கு பேதைபோன் றிருந்தன தினந்தொறு மன்றே.
(13)

தரள பந்தர்க டழைந்துமா மணிநிரை தயங்கிக்
கிரண தந்தமென் சாந்தகில் குங்குமங் கெழுமிக்
குரவை யுஞ்சரி யலவென வொலிகுடி கொண்டு
திரள்வ ளம்பல சிறந்தவா வணம்பல செறியும். (14)

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

மலைதரும் பொருளுங் கானில் வருதிர வியமு நாட்டி
னிலைபெறு பொருளு மின்ப நிறைநகர்ப் பொருளு நீடு
மலைகடற் பொருளும் யாவு மமைந்தவா வணங்க ணீங்காச்
சிலையுடைத் திரடோண் மாயன் றிருவயி றொக்கு மன்றே. (15)

வழாதவின் னிசைவி பஞ்சி வாரிதுந் துபித டாரி
முழாமணி முரசு தக்கை முதிர்வளை யாம்ப லின்ன
குழாமுகி லெனமு ழங்கக் கோதுறூர் நடத்துந் தெய்வ
விழாவணி மறுகு தோறும் விளங்குமென் றென்று
மன்றே. (16)

**கருத்து:**— நூல் எழுதிய ஊராகிய போடிநாயகனூருக்குத் தென் காசையென்ற பழம் பெயர் உண்டு. அவ்வூரில் இப்புராணம் பாடப்பெறுகிற தேவாங்க மரபினர் சிறப்பாக வாழ்கிறார்கள். தேவாங்கர்கள் குல தேவதையாகிய சௌடநாயகியம்மனின் திருக்கோயில் அவ்வூரில் சிறப்பாக அமைந்து இருக்கின்றது. ஆகவே அந்த வளம் பொருந்திய நகரத்தின் சிறப்புகளை மிக நன்றாக ஆசிரியர் வருணித்திருக்கின்றார். இதிலும் புலமைத் திறமை மிகவும் காணப்படுகின்றது.

### நான்காவது

## தவமுயர் தேவலன் சம்பவச் சருக்கம்.

*[இச்சருக்கத்தில் தேவாங்க மரபினர் மூல புருடனான தேவலன் என்ற முனிவன் தோன்றின விவரம் கூறப்பட்டுள்ளது.]*

*கலிநிலைத்துறை.*

அருமறை முடிவினி லமரு மெம்பிரான்
பொருவறு காரணப் புகழெ லாந்திரண்
டொருவடி வெடுத்தென வுயர்ந்தி லங்குமாற்
கருதிய கதிதரு கயிலை மால்வரை. (1)

*அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.*

அனகநெடுங் கதிரிரவி யனந்தமொரு புடைதிரண்டாங்
கணிகொண் டோங்கும்
கனகமணிச் சிகரத்துட் கவினுறுசிங் காதனமேற்
கருணை கூர்ந்து
பனகமணி பவளநெடுஞ் சடிலமின்ன வுமையினொடு
பரமன் ஞானச்
சனகமுனி முதலரிய தவர்தொழவீற் றிருப்பதந்தச்
சயில மாதோ. (2)

சுரர்தயித்தியர் காந்தருவர் விஞ்சையர்கின் னரரியக்கர்
தூய மோன
ருரகர்சித்தர் கிம்புருட ரமரர்மற்றோர் பலருமன
முவந்தெஞ் ஞான்றும்
பரமமுத்தி பெறவிரும்பிப் பனிவரையின் றெடுத்தபசும்
பாவை பாகன்
சரணிணைப்பொற் கமலமலர் தலைக்கணிந்து துதிக்குமிசை
தழைக்கு மாதோ. (3)

கொடியசினக் கனலவித்துக் குலவுமனந் தனைத்திருத்திக்
கொதிக்குங் காமக்
கடியவினை யிருடுரந்து புலன்களைந்துங் களைந்துமற்றோர்
கருத்து மின்றி

நெடியபரம் பொருளையுன்னி நாசிநுனி தனிற்பார்வை
    நிறுவி நாளு
முடிவரிய முடிவரையின் புடைகடொறு முனிவர்தவ
    முயல்வ ரன்றே. (4)

புடைகடொறுங் கிரணநவ மணிகொழித்துக் கனக
    மெங்கும் பொலியச் சிந்தி
யடருமலை குழுறவர வாபரண மணிபரம
    னருள்போ லோங்கிப்
படருமனத் தன்பினொடு படியுமுனி வரரிமையோர்
    பவங்க டீர்த்துத்
தொடர்சிவசா யுச்சியபதந் தோற்றுவிக்கு மருவிபல
    துவன்றிச் சூழும். (5)

விளரிவரிச் சுரும்பருண்டு மிழற்றவமு தனையசுவை
    வேரி தூற்று
முளரிசெழுங் கருங்குவளை கல்லாரங் குமுதமெழு
    முருகா ராம்பல்
வளமைகெழு மலர்பலவு மலிந்துகதி ருமிழ்கனக
    மணனுற் றோங்கித்
தளர்வரிய தெய்வநெடுந் தடஞ்சுனையெண் ணிலவுளவச்
    சயில மீதே. (6)

இனையநெடுந் தடஞ்சுனைக ளெவற்றினுமிக் குயர்ந்துசித்த
    ரிமையோர் போற்றத்
தனையடைந்து படிந்திடினுந் துதித்திடினுங் கருதினுமத்
    தவத்தோர் பாவ
வினைகடிந்தன் னவர்மனத்துள் விரும்பினவெ லாமெளிதில்
    விரைவி னல்கும்
புனைபெருபுட் கரதீர்த்த மெனவொருதண் சுனைநடுவட்
    பொலிந்து தோன்றும். (7)

படிபுகழுத் தடமடுவிற் படியவொரு பருவமதிற்
    பவங்க டீர்க்கு
முடிகுலவு கயிலைவரைப் புடைதொறுமா தவம்புரிய
    முனிவோர் தாமும்

வடிவமரு வியனைமி சாரணிய விருடிகளு
மகிழ்வு கூர்ந்து
சடிலமகு டம்பொலியத் தண்டுகமண் டலமேந்திச்
சார்ந்தார் மன்னோ. (8)

மருவியந்த மலர்வாவி தனின்மூழ்கி மௌனமுனி
வரர்கள் யாரும்
பொருவருந்தம் பெருநியம முதலமுடித் தமலனடி
புகழ்ந்து போற்றித்
திருவயங்கு மொருதலத்திற் சிறந்திருந்த பின்னரன்பு
திகழ்பே ரின்பக்
கருணைதங்கு நேமிவனத் துறவினர்சூ தனைத்தொழுது
கழற லுற்றார். (9)

உலகுபுகழ் வியாசமுனி யுரைத்தபல கலையுமொருங்
குணர்ந்த தூயோ
யிலகுமுன தருளதனா லீரொன்பான் புராணமுமற்
றவையுந் தேர்ந்தேம்
புலவர்மன விருளகலப் பொலிந்தசெழும் பிரமாண்ட
புராணந் தன்னி
னலமிகுபுண் ணியசீலன் காதைதனை முன்றொகையா
நவின்றா யன்றோ. (10)

அச்சரிதந் தனைவிரிவி னடியமுணர் வகையினிதி
னருடி யென்றே
யிச்சகவுஞ் சகவினைதீ ரின்பவிரு டிகடுதிசெய்
தியம்ப லோடு
மெச்சுசெழுங் கலைக்கடலாய் விளங்கியவச் சூதமுனி
விமல வேதத்
துச்சியரும் பொருளையுன்னி யுடல்பொடிப்ப விருந்துபின்ன
ருரைப்ப தானான். (11)

தன்மக னாசான் மைந்தன் றராபதி தனது செல்வன்
பொன்மிகத் தருவோ னென்றும் புகழ்பெரு வழிபா டுள்ளோன்
வன்மைசா லுரைகோ ளாளன் மற்றிவர் தமக்குத் தக்க
நன்மைநூ லவையுங் கற்றோர் நவில்வது கடமை யன்றோ. (12)

மாதவ முனிவீர் நீவிர் வழிபடன் மதியான் மிக்கி
ராதவி னுலகம் போற்று மரியபுண் ணியசி லன்ற
னீதமு முயர்வுஞ் சீரு நிலைகெழு புகழும் வாய்ந்த
காதையை யுண்மை யானு மறிந்தவை கழறு கின்றாம். (13)

திருந்திய கயிலை நாதன் சீர்கெழு சாயுச் சியத்தில்
பொருந்துபுண் ணியசீ லன்றன் புகழினை வினவி னோர்க்கு
வருந்தொரு துயர மின்றான் மனத்திலன் னவர் நினைத்த
வருந்திறன் ஞான மாதி யனைத்துஞ்சித் திக்கு மன்றே. (14)

பகர்மறைப் பொருளாய் மோனப் பரஞ்சுட ருருவா யொன்றாய்ச்
சுகவருட் கடலா யின்ப சுத்தசை தன்னிய வீடாய்ச்
சகலமுந் தானாய் நின்ற தனிப்பர சிவன்றான் ஞளிற்
செகமெலாம் படைப்ப தற்குச் சிந்தனை சிறிது செய்தான் (15)

அன்னதோர் காலை தன்னி லமலபூ ரணமெய்ஞ் ஞான
முன்னவன் முன்னே சோதி முதிர்சுட ருருவந் தாங்கி
மன்னிய பொருளாய் மூன்று வகைக்குணத் தொடுவ யங்கித்
தன்னிக ரான வாதி சத்திவந் துதித்து நின்றாள். (16)

அருளுரு வான மூர்த்தி யவடனை நோக்க லோடுந்
தெருளுறு மிராச தத்திற் செழுநறுங் கமலத் தேவு
மருவுசத் துவகு ணத்தின் மாயனுந் தாம தத்திற்
பொருமுருத் திரனுந் தோன்றிப் பொலிந்தனர் புவனம்போற்ற.
(17)

வயங்குமூ வரையு நோக்கி மவுனபே ரின்ப மூர்த்தி
பயங்கெழு மலர்வே தற்குப் பகர்சிருட் டியும்பொற் பாவை
முயங்குமச் சுதற்குக் காக்கு முறைமையு முருத்தி ரற்குச்
செயங்குல வியசம் மாரச் செயலுந்தந் தினைய செப்பும். (18)

இந்தமுத் தொழிலு நுங்கட் கீந்தன மினிமே னீவிர்
தந்தம தியல்வ ழாமற் சகலமும் படைத்துக் காத்து
முந்துறத் துடைத்திவ் வாறு முறைமுறை புரிமி னென்ன
வந்தமூ வருநன் றென்றவ் வமலனைத் தொழுது சென்றார். (19)

பராபர னருளாற் செய்ய பங்கயா சனத்தின் மேலோன்
புராதன வுலக மும்பல் புவனமும் புரிந்து பின்னர்
நிராதர மறுவைத் தந்து நினைவதன் முனமெண் ணில்லாச்
சராசர வகைகள் யாவுந் தான்படைத் தினிதி ருந்தான் (20)

இருந்தபின் மறுவெ ழுந்தே யிறைஞ்சிநின் றிருகை கூப்பிப்
பொருந்துற வெளியேன் செய்யும் பணியெவை புகறி யென்னப்
பெருந்திற லமரர் கட்கும் பின்னெவர் தமக்கு மாடை
தருந்தொழி லுனக்குத் தந்தா மென்றனன் சதுமு கத்தோன் (21)

அவ்வகை புரிவ னென்னு வயனடி முடிமேற் சூடிக்
கௌவையில் விடைகொண டேகிக் காம்பிலி நகரம் புக்குற்
றெவ்வனத் துகிலுந் தானே யியற்றிவிண் ணிமையோ ரேனோர்
செவ்வகக் குறிப்பிற் றந்து சிறந்துவீற் றிருந்தான் மன்னோ. (22)

எண்ணிறை குணத்தான் மிக்க விவனகத் திருளை நீத்துக்
கண்ணிய விடய மைந்துங் கடிந்தறு பகையுங் காய்ந்து
தண்ணிய வருணன் னீதி தவநிலை தழுவி யென்றும்
புண்ணிய சில னென்றோர் புகழுயர் பெயரும் பெற்றான். (23)

புவனமோர் மூன்றும் போற்றும் புண்ணிய சில னென்பான்
பவளவாய்க் கரிய கூந்தற் படர்வரி மதர்நெ டுங்கட்
டுவளிடை யுமையோர் பாகந் துலங்கவீற் றிருந்த வாதி
சிவனடிக் கன்பு செய்து செயல்வளர்ந் திருந்தா னின்னாள். (24)

கொச்சகம்.

பின்னரிவ னியல்புணர்ந்து பெரிதுதிரு வுளங்களித்து
வன்னமலர் வேதனுக்கு மறைபரவு மாதவற்கு
முன்னரிய பொருளாகி முளைத்துநின்ற முழுமுதல்வன்
றன்னதிக வின்பமுற்ற சாயுச்சியந் தரப்பெற்றான். (25)

சிலபகற்பின் கலையியற்றுந் திறலதிப னின்மையினாற்
பலபுவனத் துறைபவரும் பரிந்துமன மிகவருந்தி
யிலகுவனத் தழைசருமு மினியமர வுரிகளிவை
மலியவுடுத் துழன்றுதத்த மானங்காத் தினிதிருந்தார். (26)

பலபகலிவ் வணமெவரும் படர்தலுமோர் பொழுததனிற்
புலவன்முத லுளசகல புங்கவருந் திரண்டெய்திச்
சலசமுறை பவனுபய சரணமிசைத் தாழ்ந்திறைஞ்சி
மலரணைய கரங்குவித்து வழுத்தியிவை புகறலுற்றார். (27)

புங்கவகே ளிதுவரையும் பொருவறுபுண் ணியசீலன்
மங்கரிய தொழிலாலெம் மானநிலைத் திருந்தனவால்
அங்கவனைக் காணகிலே மணிகலிங்க மிலரானே
மெங்கடுய ரகற்றியரு ளெனலுமல ரயனியம்பும். (28)

உயர்வுறுபுண் ணியசீல னோங்குபர சிவனருளான்
மயலறுசா யுச்சியபத மருவினனு லினிவேறோர்
அயர்வில்கருத் தனையவன்போ லளிப்பதெனக் கரிதரன்பாற்
கயவிதனைப் பகருதுநாம் வம்மினெனக் கடிதெழுந்தான். (29)

பங்கயனு மிமையோர்கள் பலருமுயர் கயிலைநண்ணி
யங்கணுறை தருநந்தி யடிகள்விடை கொடுசென்று
சிங்கமணி யாதனத்திற் சிவையொடுவீற் றிருந்ததனிச்
சங்கரனை வணங்கிமலர்த் தடங்கைமுடி தனிற்கூப்பி. (30)

திருவிடயப் பரம்பொருளே நிமலகுணச் செழுஞ்சுடரே
கருதுமனத் தன்பர்வினை களைகருணைப் பெருங்கடலே
மருவுபனித் தடஞ்சயில மகட்கிசைந்த மாமணியே
யொருவரையொப் பிடவரிதா யுறைந்ததனிச் சிவக்கொழுந்தே (31)

வரிச்சுரும்ப ரிசைமிழற்ற மதுவுமிழ்பொன் மலரிதழி
தரித்தசெழும் பவளநிறத் தடஞ்சடிலத் தொருமுதலே
யெரித்தமகத் தழலிடைநோன் பியற்றுநர்நெஞ் சிருளகல
விரித்தவருட் பெருங்கிரண வித்தகமா மணிவிளக்கே. (32)

தாளமலை தனிற்கொழிக்குந் தடங்கடனா டெழுமிரவி
கிரணபண மணியரவ கேயூர வாபரண
மாணபவ வினைதொடரா மந்திரநா தாந்தசிவ
பரமசுகா ரம்பதயா பரவின்பப் பழம்பொருளே (33)

பகாரிய முழுமவுனப் பழமறையின் முடிவினிசை
மிகநடன மிடுசரண விநோதநிரா மயவடிவே
சகலவுயிர் தொறுநிறைந்த தத்துவதற் பரவென்றே
யகமகிழ்வி னொடுசெழுமி யருந்துதிகள் புரிந்தனரால். (34)

கலிநிலைத்துறை.

பரவி நின்றவப் பண்ணவர் குழாத்தையெம் பரமன்
வரமி குந்திரு வருள்கொடு நோக்கிநீர் வந்த
தரமெ வன்றெரி தரமொழி வீரெனத் தாழ்ந்து
பிரம னன்பொடு தொழுதுநின் றினையன பேசும். (35)

ஆதி கேளுன தருளினுன் முனமவ தரித்த
நீதி மாமறு வமரர்மற் றெவர்க்கும்பன் னிறத்துச்
சோதி யாடைகள் பற்பல வளித்துநா டோறுந்
தீதி லாதநாண் புரந்துவீற் றிருந்தனன் செகத்தில். (36)

அனைய வன்பெருந் தவம்பொறை கருணைமூ தறிவு
சினம கன்றபற் பலகுணத் தெவரினுஞ் சிறந்தோன்
மனமு வந்திட வழுத்தியர்ச் சித்த தான் மயக்க
வினைத விர்ந்தசா யுச்சியமாம் பதத்தின்மே வினனால் (37)

மற்ற தற்பினீ வியந்தரு பவரிலா மையினா
லுற்ற பொற்பினி லுயரிமை யவருமற் றெவரு
நற்ற ருத்தழை மரவுரி துவக்கிவை நாளு
மற்ற மற்றதம் முடற்கணிந் துழன்றலைந் தனரால். (38)

ஆன தாலுன தரும்பதம் புகலென வடைந்தேம்
ஞான நாயக வெனச்சது முகனவி லுதலும்
வான மேலவர் மருட்டுயர் விடுத்துள மகிழ
மோன மோடொரு கணப்பொழு துறைந்தனன் முதல்வன். (39)

உறைந்த மாமுத விதயபங் கயத்தினின் றொருவன்
மறைந்த காரிரு ளகற்றிட வெழுமுழு மதிபோ
னிறைந்த பேரழ கொழுகவொண் முகநில வெறிப்ப
வறைந்த வார்கழ லமரரேத் தெடுப்பவந் தணைந்தான். (40)

பருத்த தோட்டுணை சிரஞ்சிர வணங்கர பதுமந்
திருத்து கந்தரந் தடவரை நிகர்திரு மார்பம்
பொருத்த மாமிவை முதலிய விடந்தொறும் புனித
வுருத்தி ராக்கமா மணியினுற் பலவணி யுடையோன். (41)

உருவ யங்குபொன் முப்புரி நூல்வயங் குரத்தான்
கருது தண்டொளிர் கமண்டல மேந்திய கரத்தான்
மருவு மும்பர்க ளெவரினுஞ் சிறந்ததொல் வரத்தான்
பொருவில் வெண்பொடி புனைந்தழ கியசெழும் புரத்தான். (42)

குளிர்செ ழுங்குசைப் பவுத்திர மணிந்தவங் குலியான்
றெளிப தந்தரு மயிணைவா சனத்தினன் சிதையா
வளிவி ளங்கிய மனத்தினன் புலன்களோ ரைந்துங்
களிசி றந்தலை யாவகை நிறுவிய கருத்தான். (43)

கடல்வ ளைந்தபார் ககனமோ ரெண்டிசை கலந்து
புடைதொ றம்புகுந் தழிவுறு திலங்கிய புகழான்
றிடமி குந்தபற் பலவிர தம்புரி திறத்தான்
சுடர்நெ டுங்கிரி யெனப்பணைத் தெழுந்தபொற் றோளான். (44)

பொறுமை மாதவம் புண்ணியங் கருணைநற் போத
முறுதி நீதிபே ரின்பமெய் புகழறி வொழுக்க
மறுவில் சீலமிவ் வகையெலாந் திரண்டொரு வடிவாய்ச்
சிறுமை வானவர்க் ககற்றுவா னுதித்தெழில் சிறந்தோன். (45)

தளர்வி லொன்னலர் மணிமுடி யுரிஞ்சுபொற் றாளா
னளவ ரும்பல கலைக்குமோர் பெருங்கட லனையான்
வளர்செ ழுங்கயி லாசமால் வரையுறை வரத
னுளம கிழ்ந்திட நிறைந்தொளிர் யத்திபி னுயர்ந்தோன். (46)

இன்ன தன்மைய னினிதுவீற் றிருந்தவெம் மிறையோன்
பொன்ன டித்துணை பணிந்துசென் னியிற்கரம் பொருத்தி
முன்ன நின்றுள மகிழ்சிறந் தானந்த முதிருந்
தன்ன தன்பினோ டிசைந்துவாய் மலர்ந்திவை சாற்றும். (47)

பால லோசனு பழமறைக் கரியபொற் பாதா
சீல மாமுனி வரரரி யயன்பல தேவர்
கோல மார்தரு சராசர மனைத்துமுன் கொடுத்த
மூல காரண நிருவிகா ரத்தனி முதலே. (48)

பருவ மாமுகில் பொருகருங் குழலுமை பாகா
வொருவ ராயினு முணர்வதற் கரியபே ரொளியே
யிருளு ருவகை யெனையரு ளாலெடுத் தாண்ட
குருப ராவுயிர் தொறுநிறை குணப்பெருங் குன்றே (49)

மனைமு தற்பல மயலிடைச் சுழன்றுபுன் மாயை
வினையி ருட்கடல் படிந்தவர் தமக்கெதிர் மேவா
வுனைய டுத்துநின் னுளத்தொடு கலந்தினி துறையு
மெனைநி னைத்துவே றழைத்தகா ரணமெவ னெந்தாய் (50)

அடுத்த பஞ்சபூ தங்களாற் சமைந்தவிவ் வாக
மெடுத்த லைந்துமூ தறிவினைத் துறந்துபே ரின்பந்
தடுத்து நொந்திடர்க் கடற்படிந் திடமனஞ் சகியேன்
றொடுத்த செஞ்சுடர் மணியர வணிபுனை தூயோய். (51)

என்ற மாமுனி முகமல ரினிதுற நோக்கி
யன்று தேவல னெனும்பெய ரன்னவற் கருளி
மன்றல் கூர்மது வுண்டுவண் டிமிர்செழு மலர்ப்பூங்
கொன்றை வேணியன் கருணைசெய் தினையன கூறும். (52)

நிலவு மெய்ப்புகழ் படைத்துயர் தேவல நின்னை
யுலகி னுக்கெலாஞ் செயுமுப காரமொன் றுளதா
லலைவின் மற்றதற் காகவுன் றனையினி தழைத்தாம்
பலவ கைப்பட நினைந்துவீண் பருவரல் கொள்ளேல். (53)

மூவி ரண்டாவ தாரநீ புரிந்துசீர் முயங்கித்
தாவ ரும்புகழ் மருவியே மூரம்பவந் தன்னிற்
பூவ யன்திரு மால்பல விபுதரும் போற்ற
மேவு மின்பசா யுச்சியவீ டடைதியான் மேலோய். (54)

குலவு தண்கதிர் வெண்மணி துறைதொறுங் கொழிக்கு
மலைநெ டுந்திருப் பாற்கட லிடைப்பணி யதன்மேன்
மலர்ம டந்தைபூ வனிதையுஞ் சேவடி வருட
உலக மெண்டிசை யடங்கலும் புரக்குமா லுறங்கும். (55)

அனைய மாமணி நிறத்துமா லிடத்துநீ யணுகிப்
புனையு நாபியங் கமலநூல் வாங்கியிப் பொழுதி
னனைய தானைபு மியற்றிவா னவர்முனோர்க் கீந்து
வினையு ருதவர் மானமோம் புதிதவ விறலோய். (56)

உம்பர் தங்கிய தேவர்பொன் னங்கநன் குறவே
யம்ப ரம்புரிந் தலங்கரித் திடுதலா லவனி
யிம்ப ரெங்கணும் பரவுதே வாங்கனென் றினிநீ
செம்பெ ரும்பெய ரும்புனை குவையுயர் சிறப்பால். (57)

வன்றி றற்கொடு முடித்தடங் கனகமால் வரைக்குத்
தென்றி சைத்தலைப் பரதகண் டத்தினிற் சிறந்து
நன்று பெற்றுடைச் சகரநாட் டலர்மக ணயப்பா
லொன்று பொற்பினு மோதமா நகரமொன் றுளதால். (58)

தனத னன்புறு தனியளா காபுரி தனினு
மனக வும்பர்கட் கிறையம ராவதி யதினுங்
கனவ ளம்புனைந் தலைகடற் கலையுடைக் கவின்பூ
வனிதை தன்திரு வருண்முக மெனும்படி வயங்கும். (59)

புகழு மந்நகர்க் கதிபதி யாய்முடி புனைந்து
சகல மன்னருந் திறைகொணர்ந் தடிமுறை தாழ
விகலி மொன்னலார் பகைகடந் தினியகோல் செலுத்தித்
திகழு நன்னலத் திருத்தியென் றரனருள் செய்தான். (60)

அருள்பு ரிந்தவெம் பிரானடி மலர்முடிக் கணிந்து
தருவெ னுங்கரங் குவித்தவன் விடைகொடு தவத்தால்
பொருவி கந்ததே வாங்கமா முனிநெடும் புகழ்மான்
மருவு தண்டிரைப் பாற்கடற் கேகுவான் மதித்தான். (61)

**கருத்து :—** கைலயங்கிரியில் சிவபெருமான் பார்வதி தேவியுடன் கொலுவீற்று இருக்கையில் படைப்புத் திருவிளையாடலை எண்ணி இதயத்தில் சங்கற்பம்செய்து கொண்டார். உடனே பராசக்தி சோதியுருவம் தாயகி முக்குணங்களுடன் தோன்றினாள். அப்போது நான்முகன், திருமால், காலருத்திரன் என்ற மும்மூர்த்திகள் தோன்றினார்கள். இறைவன் அவர்களுக்குப் படைப்பு, காப்பு, அழிப்பு என்ற முத்தொழில்களை அளித்தார். நான்முகன் உலகம் முதலியவைகளைப் படைத்தான். பிறகு மனு என்ற புண்ணிய சீலனையும் படைத்தான். அம்மனு எல்லாவுயிர்களும் உடுக்கும் பொருட்டு காம்பிலிநகரில் அமர்ந்து ஆடைகளை உண்டாக்கினான். வெகு நாள் சேவைசெய்து நற்பெயர் பெற்று அம்மனு இறைவனிடம் இரண்டறக் கலந்தான். பிறகு உலகில் ஆடைகள் நெய்வார் இன்றி, தேவர் மக்கள் முதலியோர்கள் இலைகள் மரவுரிகள் முதலியவைகளை உடுத்திக்கொண்டு வருந்தினார்கள். தங்கள் குறைகளை நீக்கிக் கொள்ளும் பொருட்டுத் தேவர்கள் நான்முகனிடம் முறையிட்டுப் பிறகு அவரோடு கயிலை சென்றார்கள். குறைகளை வினவிய இறைவன் ஒரு கணம் மௌனமாக இருந்தார். அப்போது அவர் இதயத்திலிருந்து ஒரு புனித முனிவன் தோன்றினான். அவனை நோக்கி, "உனக்கு தேவலன் என்ற பெயர் தந்தோம். நீ உலகிற்குச் சேவைசெய்ய ஆடைகளை நெய்து வழங்கவேண்டும். அதற்காக திருமாலிடம் சென்று நாபிக்கமல நூலை வாங்கி ஆடை ஆக்குவாய். தேவர்களுடைய அங்கங்களை அலங்கரிப்பதினால் உனக்கு தேவாங்கன் என்ற பெயர் ஏற்படும். நீ ஆமோத நகரத்தில் ஆட்சி புரிவாய்" என்று அருளினார். அந்த ஆணையை சிரமேற்கொண்டு தேவலன் உலகிற்கு வந்தான். தேவலன் என்றால் தெய்வத் தன்மையில் வல்லவன் என்பது பொருள்.

உ

ஐந்தாவது

## சவுடநாயகி வரந்தந்த சருக்கம்.

[இச் சருக்கத்தில் சௌடநாயகியம்மை தேவலனுக்கு வரந்தந்த செய்தி கூறப்பட்டுள்ளது.]

*கலிநிலைத்துறை.*

என்று சூதனங் கியம்பலு மிருகரங் கூப்பிக்
குன்று ருதமெய்த் தவத்தின ரரும்பெருங் குணத்தோய்
அன்று தேவலன் பயோததி யிடைத்துயி லரிபாற்
சென்று நூல்கொணர் திறமுநீ யருள்கெனச்செப்பும். (1)

முனம்ப ரம்பொரு ளருளிய தேவல முனிவன்
மனங்கொ ளன்பினோ டெழுந்துநீள் வழிபல கடந்து
அனந்த னின்புறு சுதைப்பெருஞ் சலநிதி யணுகிக்
கனம்பொ ருந்திய கருடனச் சிரமமுன் கண்டான். (2)

தொடர்ந்து பானுவின் கதிர்சிறி தேனுமுட் டோன்ற
தடர்ந்து கோரகந் துணர்பசுந் தீவிளி யமுது
படர்ந்த பூங்கனி நிறைந்துகற் பகத்தையும் பழித்துக்
கடந்து வானளா யளப்பருந் தருத்திரள் கவினும். (3)

தடம்பெ றுங்கடற் பிறந்ததெள் ளமுதினுந் தழைத்துத்
திடம்பெ றுஞ்சுவைத் தேறலந் துளிமழை சிதறி
யிடங்கொ ளுந்திசை தொறும்பரி மளங்கொழித் தெழிற்பூ
மடந்தை யின்புற வலர்வகை யெண்ணில மலியும். (4)

அறுப தப்பொறிச் சிறையளி யினமது வருந்தி
நறும லர்த்தொடை புனைந்தகந் தருவரு நாண
வெறிதி ரைப்பெருங் கடலெழு மமுதினு மினிதாய்
வெறிம னத்தொடு விளரிமா லுவப்புற மிழற்றும். (5)

பலவ ளம்படைத் தனையவாச் சிரமமிப் பரிசாற்
குலவு கின்றது கண்டுதே வலன்மகிழ் கூர்ந்து
மலர்ம ணங்கமழ் தென்றலால் வழித்தகை மாறி
யலர்த டந்தருத் தண்ணிழ லிடையினி தமர்ந்தே. (6)

சந்த வெண்மணித் திரைப்பெருந் தடங்கட றன்னி
லந்த மில்லவ னிருப்பையா மறிகுவ தரிதா

விந்த நல்வனத் தருந்தவம் புரிகுவ மென்றே
சிந்தை யுன்னியத் திறன்முனி யின்னன செய்யும். (7)

அரிய வைம்புல னலைவுறு வகையமைத் தடக்கித்
திரித ருங்கருத் தின்றிமேல் வழிமனஞ் சேர்த்துப்
பரிதி வெங்கதி ராழியம் பரமனைப் பரவிப்
புரிவ ரும்பெரு மாதவம் பலபகல் புரிந்தான். (8)

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

தேவதுந் துபிமு ழங்கச் சித்தர்மா முனிவர் போற்ற
மேவுகந் தருவர் பாட விரைமலர் மாரி தூவ
மூவரும் பரிதி யேய்ப்ப முதிர்கதிர் மகுட மின்னப்
பூவருந் திருமு யங்கும் புயவரை பொலிந்து தோன்ற. (9)

தடவரை யெனவி ரிந்த தனிநெடு மருமந் தன்னில்
விடுகதிர் பரப்புஞ் செங்கேழ் வியன்கவுத் துவம்வாள் வீச
மடலவிழ் பங்க யச்செம் மலர்த்திரு வடிவ யங்க
வடல்கெழு வயின தேய னணிபிட ரதனிற் றோன்றி. (10)

செக்கரம் பரிதி வாளாற் றினங்கரிந் துலர்ப யிர்க்கு
மிக்கதண் புனற்சூற் கொண்ட வியன்புய லெதிர்த்த தென்னப்
புக்கருந் தவத்தா லெய்த்துப் பொருந்துதே வலனே ராக
மைக்கருங் குவளை யொண்கண் மலர்மகள் கொழுநன் வந்தான். (11)

பன்னக வயிரி மீது பழமறை தொழும்பொற் பாத
முன்னவ னெதிர்த லோடு முதிர்தவ முனிவர் கோமான்
றன்னக மகிழ்வு பொங்கித் தழைத்தெழத் தாழ்ந்து செங்கை
பொன்னவிர் சடைசூழ் சென்னி பொருத்தினன் புகழுலூற்
(றுன் (12)

ஆரணு திபர்கொண் டாடு மமலவற் புதசொ ரூப
காரணு மவுணு னந்தக் கருணையங் கடலாய் நின்ற
பூரணு புவிவா ணுதிப் புவனமு மினிது போற்று
நாரணு தேவர் நாளு நாடுபே ரின்ப வாழ்வே. (13)

வடங்கொடு சுணங்கு பூத்து வாரணிந் தெழுந்து விம்மி
யடர்ந்துகுங் குமப டீர மளைந்தமிர் தார்ந்த வின்பக்
குடம்பொரு மிளமு லைப்பூங் குழற்றிரு மடந்தை வாழு
மிடங்கொளு மார்பா போற்றி யென்றனை னவர்க்கு மிக்கான். (14)

போற்றுமம் முனியை நோக்கிப் புனிதநீ புவியின் மீதிங்
காற்றுநோன் பிணைம கிழ்ந்தா மாதலா லுனக்கு வேண்டுந்
தேற்றுறு வரம்யா தென்பாற் செப்புதி தருது மென்றான்
காற்றினுங் கடுமை வாய்ந்த கலுழனூர்ந் தெதிர்ந்த கண்ணன். (15)

அப்பொழு தினிற்றே வாங்க வையகே ளரவு சூழுந்
துப்புறழ் சடில ஞானச் சுடரருட் படிவான் றன்னு
மெப்பெருஞ் சுரர்க்கு மியார்க்கு மேடக மினிதி யற்ற
மொப்பரு பனுவல் வேண்டு முளத்துறு விருப்ப மீதே. (16)

எனமகிழ் சிறந்து மாறன் னிலஞ்சியங் கமலத் துற்ற
பனுவறந் திதனு னீயப் பண்ணவ ரேனோர் யார்க்கும்
புனைபல வம்ப ரங்கள் புரிந்துநாண் புரத்தி யென்றே
கனிவுறு கருணை செய்து கலுழனூர்ந் தினிது சென்றான். (17)

ஆயதற் பின்னர் ஞானத் தருந்தவ னங்க னீங்கி
மேயபற் பலகா னோடு வேலைநால் கடந்து சம்புத்
தூயநற் றீவு நண்ணிச் சூழுவர்க் கடலின் ஞாங்கர்
மாயமிக் குறும ரக்கர் வஞ்சவாச் சிரமம் வந்தான். (18)

கலிவிருத்தம்.

மலையசம் பாடலம் வகுளங் கோங்ககில்
பலவுபுன் னுகமாப் பனைப ராய்வடம்
இலவுசெங் கோடுதேக் கிதழி யிந்துள
முலவையஞ் சனிதிமில் சோமை காஞ்சனம் (19)

அரிதகி கூவிள மாம்பி ரங்கவிர்
கருவிளை சிவனி கதலி யாசினி
முருகுசம் பகவுதேன் முதிர்ந்த பூகநீள்
மருதசோ கங்குமிள் மதுக நாகரி. (20)

சல்லகி கேதகை சாதி மாலதி
குல்லைமந் தாரைபூங் குராவ லம்புரி
யெல்லைதிர் தருத்திர ளினைய வெங்கணு
மல்லல்கூர்ந் தெழுந்துமேல் வான ளாவுமால். (21)

இமிழ்திரைக் கடலயின் றிருந்த மாமுனி
தமிழொடு கிளைத்துமென் றடம டுப்படிந்
துமிழ்மலர் நறைகவர்ந் தொளிருந் தாதுறத்
திமிர்நறுந் தென்றலெத் திசையும் வீசுமால் (22)

மண்ணிய பலவகை வளமுற் றோங்குமத்
தண்ணிய பொழிலிடைச் சார்ந்து தேவலன்
புண்ணிய ரெவர்தவம் புரிவ தோவிதென்
றெண்ணியுட் புறத்தினு மினிது சென்றரோ. (23)

கவடநெஞ் சகத்தொரு கனநி சாசரன்
பவமகன் றவரெனப் பரம வேடமுற்
றுவகையன் பினர்பல ருவந்து சூழ்தரத்
தவமுயன் றிருந்தவச் சாலை மேவினன். (24)

முன்படர் தேவலன் முகத்தை நோக்கியே
யன்பநீ யார்பெயர் யாது மற்றிவண்
இன்புற வந்ததென் னியம்பு வாயெனத்
தன்படிற் றுயபொய்த் தவன்வி னாவினன். (25)

வினவலுந் தூயநான் மெய்ப்ப ரம்பொருண்
மனமதி லுதித்தவன் வழங்கு மென்பெயர்
புனைவுறு தேவலன் புலவ ரேனையோ
ரினைவுறு வகைப்படா மியற்ற வேண்டியே. (26)

பரனருட் படிநெடும் பாற்க டற்றுயில்
வரனிடத் தணுகிநான் மகிழ்வி னன்னவன்
தரநயந் தேற்றுவந் தனனென் றோதலும்
விரதமற் றவனிது விளம்பு வானரோ. (27)

நிறைந்தபே ரறிவினோய் நீயின் றிவ்விடத்
துறைந்துபல் கனிநுகர்ந் தோங்கற் போக்கியே
சிறந்தவான் கதிர்வரச் சேறி யென்னனு
மறந்தரா யனத்தவன் றென்று வைகினன். (28)

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

பரம னருட்டே வலனமது பகையா ரிருதர் படையையின்ப
மருவு முமையான் முருக்கிநந்த மானம் புறக்க வந்தனனென்
றுரவ ரெனும்வா னவர்மகிழ வுரைப்பான் கடிதி னேடினன்போ
லிரவி தனது கதிர்சுருக்கி யிமிழ்மேற் கடல்சென் றினிதடைந்
தான் (29)

தரும நினையார் பிறருயர்வு சகியார் சிறிதுந் தமிழ்வளமை
யருமை யுணரார் கிளைவறுமை யகற்றார் பெரியோர்க் கன்புசெயார்
குருவை யிகழ்வார் புகழாரக் கொடியர் மனத்துட் குடியிருந்த
பொருவி லிருள்போற் கங்குல்பெரும் புடவி முழுதும் பொலிந்த
தன்றே. (30)

காலை யதனிற் றவம்புரிந்த கவட முனிவன் கருதுசெப
மாலை கரக முதல்வேட மறைத்துக் கணைவில் வாளேந்தி
வேலை யெழுகூன் பிறையெயிறு மிளிர்கா ருடலு மிகத்தோன்றப்
பாலை நிகரு மனநிருதப் படைக்கெ லாமோர் பதியானான். (31)

அடிய ரெனச்சூ ழரக்கரெலா மனைய வேட மகன்றுதனுக்
கொடிய கதிரம் பரசுதண்டங் குடாரங் குளிரங் குசமுசலங்
கடிய திகிரி கணையமயில் கட்கம் பலவுங் கரத்தேந்திப்
படியு மதிர வரைதுளங்கப் படையா யெங்கும் பரந்தனரால். (32)

உருமு நேர்வச் சிரபலனென் றுரைக்கும் பதியு முலகிலெங்கும்
பொருவி லாத புகைமுகன்சூழ் புகைநேத் திரன்சித் திரசேனன்
செருவி னேரார் வெருவுபஞ்ச சேன னெனுஞ்சே னாதிபரு
மருவு தானை புடைமலிய வரமா முனியை வளைந்தடர்ந்தார். (33)

எழுசீர்க் கழிநெடிலடி யாசிரியச் சந்த விருத்தம்.

அடரு நெடும்படை வளைதலு மஞ்சிமு னானரு ளும்பெரி யோ
னிடர்புரி கண்டக ரிவர்கொல வந்தன ரெனவதி ருந்திரை சூழ்
மிடல்கெழு சிந்துவில் விடமுமி ழும்பணி மிசைதுயி லுந்திரு மான்
மடலவிழ் பங்கய மலரடி யன்பக மலியநி னைந்தன னே. (34)

கதிய மாமுனி துயர்கெட மீதெழு கருணையி னெடு மா
லருணனை நேர்தரு திகிரியை யேவலு மதுகடல் சூழ்புவி வான்
வெருவுற வேழமுகில் வடவன லோடிட முகுசுடர் வீசி யரு
விருளென நீளுட னிருதர் குழாமன மிடைதர வேவிய தே. (35)

## கலிவிருத்தம்.

வந்ததிற லாழிதனை மாமுனி மகிழ்ந்து
வெந்தழ லெனுங்கொடியர் மீதுவிட லும்போ
யந்தமி னெடும்படைய டங்கலு மருண்டு
சிந்தைவெரு வும்படி செகுத்தது சினந்தே. (36)

மாயனுத வுந்திகிரி வந்தடர்த லோடுஞ்
சேயமரு டங்குலவு சென்னிவிழி கன்னம்
பாயமரு மந்தொடைகள் பாணியிடை பாத
மாயவை யிழந்துபல ரப்பொழு திறந்தார். (37)

அக்கிரணை சக்கர மறுத்திட மடிந்தோர்
செக்கருதி ரத்துளி தெறித்ததலை தோறும்
வக்கிர மனத்தினர் வரம்பில ரெழுந்து
மிக்கமுனி யச்சுற வெகுண்டன ரெதிர்ந்தே. (38)

கோடுற நெடுஞ்சிலை குனிததளவில் கோடி
சூடுகொ ளகன்கணை தொடுத்தனர் விடுப்ப
வாடரிய மாமுனி மயங்கவவை வந்தே
நீடுதிசை விண்புவி நிறைந்தமழை யேபோல். (39)

கோடிகதிர் போலொளிர் கொடுந்திகிரி பின்னு
மூடிய சரங்களை முடித்தமர் தொடங்கு
மாடல்புனை வச்சிரபல னம்பொருநர் நால்வ
ரோடமுடி யப்படைகள் யாவையு மொழிப்ப. (40)

அந்நிலை முடிந்தவ ருங்குருதி தன்னிற்
பின்னுமள வில்லவர் பிறந்தனர் நெருங்க
முன்னென வறுத்தது முளைத்தனர் மறித்துந்
தன்னிகரு மால்வளை சலித்தது திகைத்தே. (41)

ஆழியய ரப்படை யனைத்துமதிர் வேலை
யேழுமிக ரென்னவெதி ரெய்திமுனி மெய்யைச்
சூழுற வனற்கணை தொடுத்தனர் கடுத்தே
வாழிமுகில் போலவரு டித்தனர்கண் மன்னே. (42)

கொச்சகம்.

மறநிருதர் விடுத்தகணை மாரியினா லுடல்வெதும்பி
யறவுமன மதிமயங்கி யாழ்துயரா ழியின்மூழ்கி
நறவுகம ழிதழிபுனை நாதனரு ளாலுதித்த
துறவுமுனி கவுரிபதத் துணைபரவத் தொடங்கினனால். (43)

அந்தரியா ரணிமதங்கி யமலைதிரி புரைபரம
சுந்தரிகா ரணிவாலை சூலிசுமங் கலைநீல
கந்தரிபூ ரணிவீரி கமலைபை ரவிகௌரி
நந்தரிதா கியமவுன ஞானகுண கல்யாணி. (44)

யாமளைசண் டிகைசடங்கி யமரிபக வதிசூரி
கோமளைசங் கரிசமரி குமரிபுரா தனிநடனி
தாமமணி கொந்தளகத் தருணிசரா சரமீன்ற
வாமதயா பரிநளின வதனிநய சர்வாணி (45)

நிருதகுல சம்மாரி நிமலபிர ணவமுடிவின்
மருவுதிரி யம்பிகைநின் வனசபத மலர்சரணங்
கருதலர்கள் படைமுரியக் கடிதினில்வந் தருணல்கத்
தருணமிது தருணமிது தயவுபுரி கெனத்துதித்தான். (46)

கலி விருத்தம்.

ஓதி யன்ப னுருக வுணர்ந்தரி
மீதி னம்புய நாலு மிளிர்ந்திடச்
சோதி கொண்டசெங் கண்களுந் தோன்றவே
யாதி சண்டிகை யங்கெழுந் தாளரோ. (47)

தோன்று சண்டிகை தாண்முடி சூடிநின்
றூன்ற கேள்விய னம்மை கொடுங்கனல்
கான்ற செய்யகட் கண்டகர்க் காய்ந்தெனை
யீன்ற சேயி னிரட்சிக்க வேண்டுமால் (48)

என்று போற்றலு மெம்பெரு மாட்டிநீ
யொன்று மெண்ணலை யொன்னலர் யாரையும்
பொன்ற வோர்முகூர்த் தத்திற் பொறியுமிழ்
வென்றி மூவிலை வேல்கொடு வீசியே. (49)

சிந்து சோரி செழும்புவி தோய்வுறு
துந்து மூர்த்திக்கின் றாட்டுவன் காண்டியென்
றந்த வேலையி லாழி கழுக்கதை
முந்து வாளு முரண்கரத் தேந்தியே. (50)

செய்ய கண்ணுஞ் செழுங்கரு மேனியும்
வெய்ய வன்கதிர் வீசு மகுடமுந்
துய்ய திண்புய நாலுந் துலங்குறக்
கையர் நெஞ்சங் கலங்கிட நோக்கியே. (51)

மலைபெ ரும்புவி வானுல கெண்டிசை
யுலைய வங்க ணுறையு முயிரெலா
நிலைம யங்க நெடுந்தொனி காட்டிமூ
விலைபொ லிந்ததன் சூலத்தை யேவினாள். (52)

ஏவு மேல்லை யிவளை வெல்வாமெனத்
தாவி னார்பலர் சண்டிகை பொன்முடி
மேவு காந்தி விழியின் மழுக்கநின்
றேவி லன்னவ ளோசையின் மாழ்கினார். (53)

விட்ட மூவிலை வேல்சின மீறிநேர்ந்
தட்ட தாற்பதி னாயிரம் வீரரைப்
பட்ட சோரி படியி னாறுதனை
யிட்ட வூர்திதன் றுரைகொ டேந்தவே. (54)

பலரி றந்தனர் பட்ட களேபர
மலைய னும்படி யோங்கி மலிந்ததாற்
றலைவ னும்படர் நால்வருஞ் சாய்ந்தனர்
நிலம டந்தையு நீங்கினள் பாரமே. (55)

வாம வச்சிர பலன்புகை வார்கணன்
றாம வத்திரன் சூழ்பஞ்ச சேனனீள்
சேம சித்திர சேனனின் னோருடற்
றூமி ரத்தந் தனித்தனி மேழுற. (56)

மற்றை யோருடல் வார்ந்தசெந் நீரெலாங்
கற்ற யோகர் கருத்துறை கன்னிதன்
கொற்ற வூர்தி யெனுங்கொடுங் கோளரி
யுற்ற தாரைகொ ணடு களித்ததே. (57)

மேய்ந்த கோளரி வீறுறு காதிடைத்
தோய்ந்த சோரித் துளிக ளிரண்டுபோர்
வாய்ந்த பூமியில் வீழ்தலு மற்றதி
லேய்ந்த வீர ரிருவர்வந் தாரரோ. (58)

அவரை நோக்கி யமலை சினந்துயிர்
கவரு மூவிலைக் காள மெடுத்தலு
மிவரு மேனி யிராக்கத ரஞ்சிமா
தவம ருமுனி தாளடைந் தாரரோ. (59)

வேறு—கலிவிருத்தம்.

பவர்திருத் தேவலன் பதத்திற் புக்கலு
மவனுமை மகிழ்ந்தெனை தன்பற் சார்ந்ததாற்
கவலுற வுமதுயிர் கனோகி லோமினி
யிவனுடை மக்களா யிருத்தி ரென்னவே. (60)

அன்றுதொட் டமலைதன் னடிம லர்த்துணை
நன்றுறத் தொழுதரு ளயந்து நாடொறும்
வென்றிபெற் றுயரிரு வீற ரக்கரும்
வன்றிருத் தவற்குறு மைந்த ராகினர். (61)

அதிர்கொள்வச் சிரபல னாதி வீரர்த
முதிரமத் தலத்திலந் துருக்கொ டுற்றதின்
மதிபுகழ் தவத்தன்மால் வழங்கு நூல்பருந்
தெதிர்நனைத் தந்திற மிட்டிட் டானரோ. (62)

வருத்திய நிருதரை மடிக்க மாமுடி
தரித்தெழு பான்மையாற் சவுட தேவியென்
றுருக்கிளர் பெயருமுற் றொளிர்ப ராபரை
திருத்தகு தேவலற் கினைய செப்புவாள். (63)

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

செவ்விய குணத்தின் மேலோய் சிறிதுமஞ் சலையுன் னெஞ்சத்
தெவ்வழிச் செலவி ருப்ப மிருப்பினுஞ் செல்க மேலோர்
கவ்வைபற் றிடினீ யெம்மைக் கருதுதி யுடனே யாம்போந்
தவ்வகை தவிர்த்தாள் வோமற் றையுற லின்று மாதோ. (64)

நிகழுமா வாசைக் கங்கு ளிருதர்பா லகப்பட் டெம்மை
யகமுற நினைத்தா யாம்வந் தளித்தன மதனா னீயிச்
செகமதி லுற்ப வித்த தினமது தானே யாகு
மகாகே தனனை வென்ற மாதவ வெமக்கு மற்றே. (65)

ஆகையா லினியெஞ் ஞான்று மனையகாள் வரினன் றெல்லா
மோகையா லெனைத்தி யானித் துறைதிநீ யுறைந்தா யாகில்
வாகைசேர் திறலுஞ் சீரும் வளர்தரு குலமும் வாழ்வுஞ்
சோகமா றியபே ரின்பத் துணிவுமுண் டாகு மன்றே. (66)

அன்றிநின் குலத்துள் ளோரு மன்றுநெய் தொழிலை நீத்தேம்
பொன்றிக ழுடிபூ சித்துப் புகழ்வினா லிருப்பி னன்றும்
வன்றிறன் மயக்கந் தன்னான் மறந்துறிற் றுயர்வ லைக்குட்
கென்றுமுன் றலைவ னென்றே செப்பிவின் னிடைம றைந்தாள். (67)

சலமிகு மரக்கர் தம்மைச் சவுடநா யகிபால் வென்று
வலனுறு திறனு மின்ப வாழும்பெற் றுளம்பூ ரித்து
நலநிறை தருமா மோத நகர்தனை நோக்கிக் கன்னற்
சிலைமதன் கணைக்கஞ் சாத தேவல முனிசென் றனால் (68)

வேறு—அறுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

எனமா முனிவர் சூதனைநின் றேத்தி யிகல்கூர் வச்சிரபலன்
முனைசேர் புகைநேத் திரன் றுமமு கத்தி றேனுஞ்சித் திரசேன
னனனோர் பஞ்ச சேனனெனு மவர்யார் திருமா லாழியினால்
வினையூ டிறவாத் திறமெவனீ விளம்பு கெனத்தான் விளம்பலுற்றான்.(69)

தவத்தீர் கேண்மின் முனமொருநாற் சகல வுயிருந் தலையழிய
நிவப்போ டெழுந்த பிரளயத்தா னீராய் மலிந்த துலகமெங் [கமலத்
முவப்பாலதன்மத் தியின்மணிச்சூட் டுரக மிசைக்கொண் டொளிர்
துவர்ப்பூ வுறைந்த மடந்தைபுணர் தூயோன் யோகத் துயில்
புரிந்தான் (70)

எக்கா ரணத்தோ வந்நெடுமா லெழின்மே னியில்வேர் வெழுந்ததிற்
றிக்கா காசம் புவிபுமஞ்சுந் திறந்தோர் கருணை சிறிதுமில்லார்
புக்கார் வடவை குடியிருந்தாற் போலச் சிவந்த பொறிக்கண்ணார்
மைக்கார் வடிவத் தவர்மேற்சொல் வன்கண் டகரை வருமுதித்
தார். (71)

முனைந்தை வருமேய்த் துயில்புரிந்த முதல்வற் செகுப்ப முயலவவர்
நினைந்த நினைவை யுணர்ந்துதிரு நெடுமா லெழுந்து நிருதர்தம்மோ
டனந்த வகைத்திண் படைகள்கொண்டோ ராண்டு முழுது மமர்தொ
டங்கிக், கனங்கொள் புயங்கை சலித்திவரைக் கடப்ப தருமை
யெனக்கருதி. (72)

விருது படைத்து ளீர்நமக்கு வேண்டும் வரமென் விளம்புமவை
தருது மெனப்பண் ணவர்க்கமுதந் தந்தோன் வியந்து சாற்றவன்னோர்
கருணை மழைத்தண் பெரும்புயலே கமல தளமோ கனநயன
மருவு முயிர்பற் பலவுமுந்தி மலரா லுயிர்த்த வலியோனே. (73)

எந்தப் படைக்குங் கலங்கேநின் னிலங்கு நேமிக் கிரிவேமா
லந்தப் படையா லுடைந்தடியே மயரா வரநீ யருடியெனக்
கந்தப் பதும பதந்தொழலுங் கவட நிருதர் களிகூரச்
சந்தப் பணைத்தோட டிருமார்பன் றனப் படியே தயைபுரிந்
தான். (74)

அப்பா லரக்கர் நமக்குநிக ராரென் றகந்தை யடைந்தவராய்
வெப்பார் வடவை யெனத்தருக்கி மிளிர்பா தலம்போய் விரைந்தொருநா
ளெப்பா வலரும் புகழ்புகரோ னெழிலாச் சிரமந் தனிதனுகத்
துப்பார் மனத்தன் னவன்பயந்த சுதையம் மனைக்கட் டுலங்கின
ளால். (75)

பருவ முகிலும் பணிகுழலாள் பசுந்தண் பிறையைப் பழித்தொளி
மருணா திலக மணிநுதலா ளனங்கன் சிலைபோ லறவளைந்த [ரு
புருவ வடிவாள் யமனைவென்று பொலிந்த குழையிற் பொருவிழியாள்
மருவு செழுநா சிகையதனுன் மலர்பூங் குமிழை வாட்டியமான்.
(76)

வள்ளை யனைய செழுங்குழையாண் மவுனத் தவர்க்கு மயல்பெருக்
கள்ள மதனன் புளகமெனக் கருது முபய கபோலத்தாள் [குங்
வெள்ள வந்தித் துவரிதழாள் விளைந்த தாள வெண்ணகையாள்
கிள்ளை மொழியா ளமுதகதிர் கிளரு மதிபோல் வளர்முகத்தாள்.
(77)

கன்னிக் கமுகின் மணிமிடற்றாள் கன்னற் புயத்தாள் காந்தளென
மின்னிச் சிறந்த செழுங்கரத்தாள் விரவு கெளிறு பொருவிரலாள்
வன்னப் பசும்பூங் கிளியலகு மானு முகிராள் வடகனவெற்
பென்னத் திரண்டு பணைத்திறுமாந் தெழுந்த களப விளமுலை
யாள். (77)

ஒளிர்பூ வடமென் றளிர்வயிற்றா ளூறுநீர்ச் சுழிநே ருந்தியினா
டெளிவா ரிதியின் மூழ்கியெழு திரைபோன் மடிப்பிற் சிறந்தமின்
குளிர்தா மரைநன் னாளமெனக் கூறு ரோம பந்தியினாள் [னாள்
களிகூர் வஞ்சித் துவளிடையாள் காமன் மனையாங் கடிதடத்தாள். (78)

முளைத்த கதலிச் செழுந்துடையாண் முதிர்ந்த நளிர்போன் முழந்தாளாள், கனைத்தண் புனலூ டுறைந்தவரார் கன்று பொருவுங் கணைக்காலா, டிளைத்த மணிக்கந் துகமுமஞ்சத் திரண்டு வயங்குஞ் சிறு குதியாள், கிளைத்த தராசு நிகர்பரட்டாள் கிளர்பொற் பதுமத் தளர்பதத்தாள். (79)

அரிய தூவி யனனடையா ளனக வமுத மெனுமியலாள்
பரிவு கூர்நன் னவமணிகள் பதித்துக் கதிர்கால் பலபணியாள்
வரிகொ ணீல மலர்நெடுங்கண் மலர்மங் கையினும் வடிவுமிக்காள்
கரிய கூந்தல் வடமீனுங் கன்னி பரவுங் கற்புடையாள். (80)

இவ்வா றெழில்கொண் டொளிர்சோமை யெனுந்தோகையையவ் விகலரக்கர், வெவ்வாள் விழியாற் கண்டுமயன் மீறி மதன்வேள் விடுக்குமெழி, லவ்வா ளிகளா லுடைந்து தம்மாலாற்றா தவள்பா லடுத்தெதிர்நின், றெவ்வா விடம்போற் கொடியபுன்சொ லுணரா மையினா லோதினரால். (81)

திருவே யமுதே கனியேசெந் தேனே நிருதா திபர்நாங்க
ளிருவா னுலக மெவ்விடத்து மெமக்கு நிகரின் றிகலில்வல்லேம்
வருசீ ருடையே மெங்களிலுன் மனத்துக் கிசைந்த வரையுடனே
முருகூர் மாலை சூடிமண முடித்து வாழ்தி முறையினென்றார். (82)

வெய்யர் கொடுஞ்சொல் வினவிமிக வெகுண்டு மூர்ச்சித் தெழுந்திருந்து, செய்ய குருவின் புதல்வியெனச் சிறிதென் னினுந்தே ராமலென்பாற், பைய வணுகிப் பகராத பகர்ந்தி ரதனாற் பலமிழந்து, துய்ய வகிலத் தென்போலோர் தோகை பொர நீர் தொலைதிரென்றாள். (83)

உசனன் பயந்த சோர்மையிவ்வா றுரைப்பப் பலமற் றுடன்மெலிந்
விசனம் பெருகி நிருதர்தவம் விளைத்தா ரரனை மிகப்பரவி [து
யசைவின் றியவன் பினையுணர்ந்தன் றமலன் விடைமீ தெழுந்தரு
யிசையுஞ் சிறியீ ருமக்குவர மீதுங் குறித்த தியம்பு மென்றான் [ளி
(84)

இறைவ கேளெங் குருதிதனை யிமையோ ரேனோ ரெவருமணிந்
துறைய வேண்டு மெனவரனு முதவி னேமென் றுரைத்தகன்று
னிறைவு றவை வருமனந்த நிருத ரோடு நெருங்கி யெய்திக்
குறைவி லாத தேவலனைக் கோறல் புரியக் குறித்தடர்ந்தார். (85)

இலங்குஞ் சவுட நாயகியங் கெழுந்தன் னவரை யெற்றுதலு
மலங்க லணிவச் சிரபலனே டைவர் களையும் வெவ்வேறாய்
நலங்கொ ணிறம்பெற் றிருப்பவதி னற்றே வலனா னயந்துபங்கிக்
கலந்தைந் துருவேற் றினனரன்சொற் கடவா தெவருங் களித்த
ணிந்தார். (86)

**கருத்து:** சிவபெருமான் ஆணைப்படி தேவலன் திருமாலிடம்சென்று தவஞ் செய்யத் திருமால் காட்சிதந்து தனது உந்திக் கமல நூலை எடுத்து ஆடைகளை நெய்வதற்காகக் கொடுத்தார். பின்னர் தேவலன் உலகுக்குத் திரும் புகையில் ஒரு முனிவன் ஒரு பன்னசாலையில் தவஞ்செய்வதைக் கண்டு அங்கு சென்றான். அம் முனிவன் விருப்பப்படி அங்கே இரவில் தங்க, அப்போது இருளில் அம் முனிவனும் அவனுடைய ஆட்களும் அரக்கர்கள் ஆக மாறித் தேவலனை துன்புறுத்த வந்தார்கள். தேவலன் திருமாலைத் துதிக்கத் திருமால் சக்கராயுதத்தை ஏவினார். சக்கரத்தால் அறுபட்ட அசுரர்களின் இரத்தத்திலிருந்து புது அசுரர்கள் தோன்றினார்கள். சக்கராயுதம் இளைத்தது. தேவலன் பார்வதி தேவியாரைத் துதித்தான். தேவி சிங்க வாகனத்தின்மீது காட்சியளித்தாள். தேவியின் கிரீடம் பேரொளியோடு விளங்கிச் சொலித்து அசுரர்களின் கண்களை மயக்கிற்று. அத்திருமுடியின் ஒளிப்பெருமையால் அம்மைக்கு சவுடநாயகி என்ற பெயர் ஏற்பட்டது. அம்மையின் கருணையினால் அசுரர்கள் கொல்லப்பட்டார்கள். இரத்தம் நிலத்தில் விழாமல் சிங்கம் குடித்து விட்டது. இரண்டு திவலைகள் மட்டும் சிங்கத்தின் காதுகளில் மறைந்திருந்து இரண்டு உருவங்கள் ஆயின. அவர்களுக்குத் தேவலன் அடைக்கலம் கொடுத்துத் தன் குலப்பிள்ளைகள் ஆக்கிக்கொண்டான். அவர்கள் சிங்க குலத்தார் ஆயினர். தேவலன் அரக்கர்களுடைய இரத்தத்தில் நூலைத் தோய்த்து ஐந்து நிறங்கள் ஆக்கிக்கொண்டான். சௌடநாயகி தேவலனுக்கு வரந்தந்து "நீ நினைத்தபோது நான் உதவிசெய்ய வருவேன்" என்று அபயம் கொடுத்து "நான் தோன்றின அமாவாசையன்று நீ ஓய்வு எடுத்துக்கொள்" என்றுசொல்லி மறைந்தாள். இவ்வரத்தைப் பெற்று ஆமோத நகரம் சென்றான்.

## ஆறாவது

## சுடர்நவ மணிமுடிசூட்டிய சருக்கம்.

[இந்தச் சருக்கத்தில் தேவலனுக்கு ஆமோத நகரத்தில் முடிசூட்டு விழா நடந்த செய்தி கூறப்பட்டுள்ளது.]

எழுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

இனிது சுருதி புணார்சூத னிவ்வா றுரைப்ப விடர்கடந்த
முனிவர் தொழுது நிறைகேள்வி முதியோய் வளரா மோத நகர்
புனித முறவத் தேவலன்பின் பொன்மா மகுடம் புனைசிருங்
கனிவி னொடுகூ றுதியெனமற் றவனுங் கடிது கழறலுற்றான். (1)

சென்ற திருத்தே வலமுனிவன் செறிந்து பரந்த திறலடவி
குன்ற நதியெண் ணிலகடந்து குமுறுங் கடல்சூழ் குவலயமான்
மன்றல் வதன திலதமென வயங்கா மோத வளநகரைக்
கன்ற லுறாத கருணையினாற் கண்டா னிதயங் களிகூர. (2)

சாத குணதே வலமுனிவன் றானிவ் வுளிவந் தனனென்னப்
பரவு செழுமென் பொழிலனைத்தும் பசுந்தே னிறைத்துப் பாட்ட
விரவு நறும்பூ மாரிசிந்தி விளைந்த கனிகண் மிகவேந்தி [ளிகள்
வரம துடைய வடியரென வணங்கி பெங்கு மலிந்தனவே. (3)

குலவு சுரும்பர் சுருதிசெயக் குயில்பண் பாடக் குளிர்கானத்
துலவு சுகங்க ளரன்புகழ்ப்பாட் டோத மலர்க ளுள்ளுருகி
மலியு மதுர மதுவுகுப்ப மைவார் வரிக்கண் மகளிரென
நலிவு றாத பசுந்தோகை நன்மா மயில்க ணடஞ்செயுமால். (4)

புனைந்த நகரத் துறைமாந்தர் புகழ்வெண் பொன்னாற் பூரியினா
லனந்த மணிக ளாற்பல்வு மமைத்தார் நமைவேண் டாரதனா
வினங்கொள் பொழில்வாய்ப் பொருந்துவமென் றிருத்தல்போலு
மிளங்க தலி, வனங்கொள் பூக தங்கழைகள் வளர்வுற் றெழுந்து
மலிதோற்றம். (5)

நடவு புரியுங் கடைசியர்க ணயனம் புறந்தா ணகைமுழந்தாள்
சுடருங் கிரீப மிவற்றினுக்குத் தோற்றுச் செழுஞ்சேல் சொலுங்க
மடருங் கிரண வெண்டாள மலவன் வளைபு மனுதினமும் [மட
படரு நளின மலர்வாவி பழனந் தோறும் பயம்படுமால். (6)

மதுர கீத வரிச்சுரும்பர் மலர்வாய்ச் சிதறு மதுப்பெருகிக்
கதிர்கள் வளர்ந்து களிற்றடக்குங் கழனி தோறுங் களைகளைய
வெதிரு மாதர் நயனநிழ லெங்கும் புனலூ டிலங்கவது
முதிரு மீன மெனவுழவர் முடுகித் தேட முறுவலிப்பார். (7)

அலர்மென் முலைப்பூங் கடைசியர்தம் மரிய நடைபேட்ட டனம்பழ
மலர்தண் சோலைக் கிள்ளையவர் மதுர மொழியான் மனமறுகு [கு
மிலகுங் குழற்கு நாணிவன மெல்லாம் பொறிவண் டினம்புலம்புங்
கலவ மயிலின் றெருகுதியவர் களிகூர் சாயல் கற்றிடுமால். (8)

மலர்மா துறைந்த வந்நகர்வாய் மணிப்பொற் சிகரி மிசைப்பொலிந்
பலகே தனங்கள் சிறுகாலா லசையும் பான்மை பரனளித்த [த
நலமா தவிந் நாளேநன் னாளா தலினா னகுமுடிவேய்ந்
தலர்பார் புரப்ப வந்தருளென் றழைக்குங் கருணை யதுபோலும். (9)

வளமை பலகண் டுளங்களித்து வருதே வாங்கன் வரவுணர்ந்தே
தளர்வு றுவந் நகர்புரக்குந் தக்க சுனாபன் றனதமச்ச
ரளவில் பொருநர் புரோகிதர்மற் றுருஞ் சூழ வணிகமொய்ப்ப
விளமென் மகளிர் நடஞ்செயப்பல் லியமார்த் தெழச்சென்
றெதிர்போந்து. (10)

திறல்கூர் சுனாபன் முதற்பலருந் திருத்தே வலன்சே வடிதாழ்ந்து
நறவார் மலர் தூய்க் கரங்குவித்து நலமெய்த் துதிபற் பலபுரிந்து
மறமூ விலைவே ருங்குபரன் மகிழ்வி னளித்த மதிக்கடலே
குறைதீர் செல்வச் செழுஞ்சுடரே குலவு ஞானக் குணக்குன்றே. (11)

எமது கவலை யிருளகற்ற வெழுந்த கதிரோ யிந்நகர்
விமல முறநீ யேமவுவி வேய்ந்து செங்கோல் விதிகைக்கொண்
டமர ருரகர் நரர்முதன்மற் றனைவோ ரையுங்காத் தருடியெனக்
கமல முகம்பூத் தறவியந்து கலைதேர் முனிவன் களிகூர்ந்தான். (12)

அறத்திற் றிரியாச் சுனாபனெனு மரசன் பின்னு மடிவணங்கி
நிறத்திற் சிறந்த மதிவல்லோய் நிறைகண் கருணை நீகூர்ந்து
திறத்திற் பொலிந்த கரடமதச் சினவிக் களிற்றின் செழியசிறு
புறதுற் றெழுக வெனவழுத்திப் புகல்முனியும் பொருந்தினனால் (13)

குணமா தவத்தோன் மதவேழக் கொழுந்திண் பிடர்மேற் கொளலோடும்
பணைவால் வளைதுந் துபிமுரசம் பாண்டின் முழவம் பகர்காளங்
கணைபே ரிகைகோ டுடுமிதுடி கரடி தவிலேழ் கடலுமஞ்ச
மணமூ வுலகெண் டிசையதிர்ந்து மயங்க முழங்கி மலிந்தனவே. (14)

கலிவிருத்தம்.

ஆடினர் வனிதைய ரமுத கீதங்கள்
பாடினர் வயிரியர் பரவி வந்தியர்
கூடின ரனைவருங் குலவு பேரின்ப
நீடினர் பூசுரர் நிறைந்து போற்றினர். (15)

வானவர் தருமலர் மழைபொ ழிந்தனர்
மோனவ ராசிகண் மொழிந்து சூழ்ந்தனர்
தானவ ரறவருந் தவத்தற் கன்னதே
ரானவ ரனந்தரா லத்தி சுற்றினர். (16)

உலகுறை பவரெலா முவப்பக் கங்கைநீர்
குலவிய பலமணிக் கும்ப நேர்வரத்
தொலைவறு சீர்புனை சுபன் மாளிகைத்
தலைமைகொண் மவுனமா தவத்தன் மேவினன். (17)

சேர்ந்துழி யனைவருந் திரண்டு கங்கைநீ
ரார்ந்துள மஞ்சன மாட்டி யன்புளங்
கூர்ந்தரி தாங்கிய கொழும்பொற் பீடமேற்
சார்ந்திட விருத்தினர் தவக்கொ ழுந்தையே. (18)

வலனுறு மமைச்சர்கண் மகிழ்பு ரோகிதர்
பலகலை தெளிந்தவிற் பன்னர் பண்டித
ருலைவறு சோதிட ரொற்றர் வீரர்க
ளிலகுகா விதிகண்மற் றெவரும் போற்றவே. (19)

கலைமதி நிலவுமிழ் கவிகை சாமரை
மலைவரு கால்புரி மட்ட மேமுத
லலகில்பற் பலவிரு தனைத்து மோங்கமென்
மலர்வனி தையர்சிலர் வாரி வீசவே. (20)

மங்கல சோபன மதுர வோசையுந்
துங்கமா தவர்புகல் சுருதி யோசையும்
பொங்குவந் தியர்பலர் புகழு மோசையு
மெங்கணு மிடைவிடா தினிதி னோங்கவே. (21)

பூவணி தையுமலர்ப் பொகுட்டின் மீதுறை
மாவணி தைந்தமிழ் வாணர் போற்றிடு
நாவணி தையுமிக நாளு மின்புறந்
தூவக முனிக்கொளிர் சுடிகை சூட்டினார். (22)

மடங்கலா தனத்திடை வயங்கு மாமுனி
திடங்கொள்சே வடிமலர் சென்னி மேற்கொடு
தடங்கரங் குவித்துளந் தளர்வு றுவகை
தொடங்குறு நற்குணச் சுறுபன் கூறுவான். (23)

மூதுண ரிராசமா முனிவ கேட்டியிம்
மேதினி முழுவதும் விழைவி னோம்புதி
தீதினை மருவிய சிறிய னேன்செலக்
கோதிலா வருள்விடை கொடுக்க வேண்டுமால். (24)

என்னலு முனிவியந் தினிய சொற்பகர்ந்
தன்னவன் றனைத்தன தருகி ருத்தியே
துன்னலர் தொழுவரு சுறுப வென்றொடு
மன்னுக நீயென மன்னன் கூறுவான். (25)

இனியிவ ணுறைகுவ தியல்பன் றென்னையாள்
புனிதவுன் னருளினாற் புணரி சூழ்புவி
தனிலியான் றுண்டுறுச் சாபந் தாண்டினேன்
பனிகதிர் வரவகல் பான்மை போலென்றான். (26)

அரசனிம் மொழிசொல வருந்த வத்தினோன்
புரவல சாபமார் பொருததி னாதா
தரவரு நிமித்தமென் சாற்று வாயென
வரமிகு களாவதி மணாளன் கூறுவான். (27)

சாமிகே ளுருக்கும தரனே னுந்திரு
நாமமே புனைந்தகின் னரர்க டம்பிரான்
வாமநீள் புதல்வன்யான் மருவு மென்மனை
நேமயார் சித்திர ரேகை யென்பவள். (28)

அன்னவ ளொடுமியா னணிவி மானமேன்
மன்னுபு கயிலைமால் வரையைச் சார்ந்தரன்
றன்னிய லுமையொடு தனித்தி ருந்தருள்
பொன்னிற மலர்நறும் பொழிலை மேவினேன். (29)

மேவலு மரனெனை வெகுண்டு மூடநீ
யாவலோ டிவ்வனத் தடைதற் கேதுவென்
பூவரு மாந்தர்த முதரம் புக்குதித்
தேவரு நெடுங்கடற் படிந்தி ருத்தியால். (30)

உன்னுடை மனைவியு முலகிற் றோன்றியே
மன்னுமுன் புயமணம் பெறுவள் போதிநீ
யென்னலு மவற்பணிந் தேத்தி மற்றிது
தன்னிகர் நாயக தவிர்வ தென்றென்றேன். (31)

இசைகொடே வாங்கனேன் றிராச மாமுனி
வசையற நமதுள மலரிற் றோன்றியே
திசைதொழு நின்பதி சேர்வ னன்னவ
லொசியுமிச் சாபமென் றுரைத்த கன்றனன். (32)

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

பிற்றைநாபிங் நகர்பு ரக்கும் பிரானெனும் பத்திர வாகு
முற்றுள மகிழ வன்னோன் முதிர்பெருங் கற்பின் மிக்காள்
வற்றன வரிநோக் கிந்து மதிவயிற் றுதித்தே னென்றன்
பொறறொருடி மனையாள் காசிப் புரவலன் புதல்வி யானாள். (33)

அவடனை யெளியேற் கெந்தை யருண்மணம் புரிவித் தான்மற்
றிவைகளென் சரித மைய வென்றுதே வலனைப் போற்றித்
துவளிடை மனைவி யோடுஞ் சுனைபன்மெய் துறந்து தெய்வ
நவவுருக் கொடுவி மான நண்ணரிவின் னாடு புக்கான். (34)

*புவிபுகழ் சுனாப மன்னன் பொன்னகர் புகுந்த பின்னை*
*யவருடற் கியற்றத் தக்க வருங்கட னனைத்துஞ் செய்வித்*
*துவகையின் புறுதே வாங்க னொன்னலர் பணிந்து தாழச்*
*சிவனருள் வழாமற் செங்கோல் செலுத்தியீற் றிருந்தான் மன்னோ*
(35)

**கருத்து:** தேவலன் சகரநாட்டுத் தலைநகரான ஆமோத நகரம் போய்ச் சேர்ந்தான். அந்நகரத்து அரசன் சுனாபன் தேவலனை வரவேற்றுத் தன் அரண்மனைக்கு அழைத்துச சென்று சிங்காசனத்தில் அமர்த்தினான். நகரம் அலங்கரிக்கப்பட்டது. தேவலனுக்கு முடிசூட்டு விழா நடந்தது. தேவலன் அரசனானான். பிறகு சுனாப மன்னன் தேவலனிடம் தான் புறப்படுவதாக விடைகேட்டான். தேவலன் வியப்புற்று "நீயேன் செல்லவேண்டும்" என்று கேட்கச் சுனாபன் தன் முந்திய சரிதத்தைக் கூறினான். தான் கின்னரருடய அரசனாய் இருந்தபோது தன் மனைவியுடன் கயிலைசென்று அழகிய ஒரு சோலைக்குள் அதன் நிலை அறியாது புகுந்தபோது, இறைவன் அதுகண்டு சிவந்து அவனை மனிதன் ஆகும்படி சபித்ததாகவும் அதனால்தான் ஆமோத நகரத்து அரசனாக உதித்ததாகவும் தற்போது தேவலனால் அச்சாபம் நீங்கப் பெற்றிருப்பதாகவும் கூறிவிட்டு அவனும் அவன் மனைவியும் தேவ உருவம்பெற்று மறைந்தனர். தேவலன் ஆச்சரியப்பட்டு அவ்விருவருடைய தூல உடல்களுக்குச் சமர கிரியைகள் செய்துவிட்டு ஆமோத நகர அரசனாக ஆட்சி செய்தான்.

ஏழாவது

## கபிஞ்சலன் சாபங்களைந்த சருக்கம்.

[இச்சருக்கத்தில் நெசவுத் தொழிலுக்காக கருவிகளைப்பெற வேண்டி தேவலன் மயனிடம் செல்லும்போது எதிரே வந்த ஒரு சிங்கத்தை வதைத்த செய்திக் கூறப்பட்டுள்ளது.]

*அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.*

திருந்தியபற் பலகலையின் றிறமுமினி துணர்ந்துபுகழ்
சிறந்த மேலோய்
பருந்துழல்வேற் படையொன்னார் பணிந்திடவா மோதவளம்
பதியிற் சீயம்
பொருந்துமணிப் பீடிகைமீ திருந்தருடே வலமுனிபின்
புரிந்த வாறு
மொருங்குறநீ யோதெனமா தவர்வினவச் சூதனிசைந்
துரைப்ப தானன். (1)

தருமவங்கார் திருமலைப்போ டயதுரைபோற் புவிபுரக்குந்
தளத்தே வாங்க
திருபனெங்கும் புகழ்சுபுத்தி மானொடுகா ரியதக்க
னீதி வந்தன்
வருமுறைதேர் தீர்க்கதரி சனனெனுமந் திரரொருநால்
வரையு நோக்கித்
திருவனச முகமலர்ந்து கருணைமகிழ் பெருகியிவை
செப்பி னானல் (2)

வருவனவெ லாந்தெரிந்து வழுவாது பகர்சுருதி
வல்லீர் கேண்மின்
விரிகிரண முமிழ்குழவி வெண்ணிலவு தவழ்சடில
விமல மூர்த்தி
தருமமுறை தவறுதிங் ககரிலா சிருந்தமரா
தரணி யோர்க்கு
மருமைபெறு கலையியற்றி யளித்திடுதி யெனவரமெற்
கருளி னானல். (3)

சுருதிபுகழ் பரமனருட் படிநாமிவ் வயினுறைந்து
துகில்க ளாற்றக்
கருவிபல வேண்டுமவை தரற்குரிய கருத்தனெந்தக்
கடவு ளோர்க்கும்
பெருமைபுரி திறலாளன் பிறங்குபுகழ் பெருந்துவட்டப்
பிரம னீன்ற
தருணநய விச்சுவவி யாபகனு மயன்கனக
சயிலத் துற்றான். (4)

வடவரையி னுறையுமயன் மாட்டணுகித துகிற்கருவி
வரைகண் முற்று
மடல்கெழுமன் னவனருளாற் கொணர்துமியா ரீவிரிந்த
வவனி போற்றி
யிடர்களைதி ரெனவுரைசெய் தெழுந்துமுனி தூணிபுயத்
திலங்க வீக்கிப்
படர்கிரணப் பிறைநிகர்விற் கரத்தேந்திப் படைக்கலங்கள்
பலவுந் தாங்கி. (5)

சிகரதட வடகனகச் செழுஞ்சிலம்பு தனைநோக்கித்
திறல்கூர் மேலோன்
ககனமுத லொருவரின்றித் தனிநடந்து பலவடவி
கடந்து பாவ
விகடமறு கார்கேய மாமுனியாச் சிரமமதின்
மேவ லோடும்
புகரிருள்சீத் தெழுந்தகதிர்ப் புத்தேள்வா ருணகடலுட்
புகுந்தான் மன்னோ. (6)

அன்றரிய தவமுனிவ னச்சிரமத் திடைவதிந்தவ்
வல்கல் போக்கிக்
குன்றரிய கதிரிரவி குணதிசையி னெழுதலுஞ்சற்
குணத்தின் மிக்கான்
சென்றளவில் சிகரவரை செழுந்தரள மணிகொழித்துத்
திரைகொண் டார்த்த
மன்றனதி பலகடந்து வருங்காலை யொருகொடிய
வனங்கண் ணுற்றான். (7)

கரடதட விகடமத களிறுவய மடங்கல்கொடுங்
  காடி யாளி
திரள்வடவை யனையபெருஞ் சினவேங்கை கவரிபிணை
  திண்கோட் டேனம்
வரைபொருது கவயமுண்மா மலிந்துபல தருவெழுந்து
  வான ளாவி
யுரவுகட லிடையெழுந்து பரிதிகதிர் செலாதுசெறிந்
  தோங்கு மாதோ. (8)

இருள்குடிகொண் டிருந்தவந்த வனத்திடைத்தே வல
  முனிவனிவர்த லோடும்
வருசயிலப் பொருமுடலும் வடவையென வெரிந்துபொறி
  வளர்செங் கண்ணும்
பரிதி மருள் கூரெயிறு நிமிழ்ந்தெழுதோ கையுந்தோன்ற
  பருவ காலக்
கருமுகிலு மிடியுமஞ்சக் குமுறியொரு மடங்கல்வரக்
  கண்ணுற் றானல். (9)

அம்மடங்கல் வரவையுணர்ந் தருந்தவத்தோன் சிலையை
  வளைத் தனந்த வாளி
கொம்மெனவுய்த் திடவவையிற் குலைந்தகலா தடர்தலும்பின்
  கொதிக்குந் தீயின்
மும்மடங்கு விறல்படைத்த பிறைமுக்கோ லொன்
  றெடுத்து முனிவிற் பூட்டி
வெம்மைபொங்க நுதலழுந்த விடலுமது கலங்கிமண்மேல்
  வீழ்ந்த தம்மா. (10)

விழுந்தகண்டு ரவத்தினது சிரத்தையொரு சரத்தறுத்து
  மேவு மேல்லை
யழுந்துமதி லிருந்தொருவ னவிர்கனகாம் பரமருங்கி
  லணிந்து வாசக்
கொழுந்தருமென் மலர்சூடிப் பணிதாங்கி நறுந்தேய்வை
  குளிரப் பூசிச்
செழுந்தருணத் தெய்வவுருக் கொண்டுவிமா னத்தினெழில்
  சிறந்தெ ழுந்தான். 11)

கனகமெனக் கதிர்பரப்புங் கடவுளுருத் தாங்கியெழு
கலைவ லோனை
மனமுவந்து முனிவியந்து நீயாருன் சரிதமெவன்
வழுத்து கென்ன
வுனதுதிரு வருளதனா லொருவரிய கொடுஞ்சாப
மொருவப் பெற்றேன்
எனதுவினை தவிர்ந்தனன்யா னெவர்க்குமிக்கோ யென்று
பின்னு மிசைப்ப தானான். (12)

அளகைவளம் பதிக்கதிபற் கன்புமிக்க வியக்கனியா
னணிந்த வென்பேர்
வளமைபெறு கபிஞ்சலனோர் பகல்வேட்டை கருதியெண்
ணில் வானோர் சூழ
வுளமகிழ்வி னெழுந்துதெய்வ வனத்தடைந்து விலங்கினங்க
ளொருங்கு வீட்டித்
தளமலிய வரும்பொழுது தாவுபிணை யொன்றுவந்து
தனித்த தன்றே. (13)

புள்ளிசெறி யுழையதனை முருக்கவெண்ணிக் காதளவும்
பொருவில் வாங்கி
யொள்ளியவெங் கருணைகள்பல வுலப்பவதிற் றப்பிவிரைந்
தோடப் பின்சென்
றள்ளியழ லுமிழ்விசிக மொன்றதன்மே லழுத்தினன்மற்
றதனி னோடுந்
துள்ளியெழுந் தடைந்ததருந் தூயதவக் கவுதமன்சார்
சூழ றன்னில். (14)

வரவறியாச் சிறியேனு மற்றதனைத் தொடர்ந்துசென்
றேன் மயங்கி வாளி
விரவுமுட லொடுபுகுந்த சாரங்கத் தையுமெனையும்
விழித்து நோக்கிக்
கருணையதன் மேற்புரிந்தென் மேற்சினங்கொண் டிடர்க்
கடலைக் கடந்த ஞான
குருபரனுங் கொடியதவக் கவுதமமா முனிபினைய
கூறி னானல். (15)

பாதகநீ நமதுதவ வனமானைக் கொலைநினைந்த
பான்மை தன்னா
லோதரிய பலவுயிருண் டுழலியல்பி னொடுமடங்க
லுருவந் தாங்கி

யேதமுற வுறைதியென வெளியேனுட் கலங்கிவந்தித்
தெழுந்து நின்று
மாதவவிக் கடுஞ்சாப மாறுவதென் றடியேற்கு
வழங்கென் றேனல். (16)

ஆதிசிவ னிதயபங்கே ருகத்துதித்த தேவாங்க
னருளா லிந்தத்
தீதகலு மென்றுகவு தமனியம்ப வன்றுமுதற்
சிய மானேன்
மேதகுநின் வரவதனல் வினைதவிர்ந்தே னழியாத
மேன்மை பெற்றேன்
சாதமிது தவக்கொழுந்தே தனிஞானச் செழுஞ்சுடரே
தரும வாழ்வே. (17)

இக்கன வழிக்குவட பாரிசத்தில் யோசனைமூன்
றெல்லைக் கப்பாற்
றக்கபுகழ் வாலகில்ய மாமுனிதா பதமுளதத்
தலத்தி னூடு
புக்கவனைத் தரிசித்துப் போந்தருளென் றுயர்முனியைப்
புகழ்ந்து போற்றி
மிக்கமணி விமானமிவர்ந் தவ்வியக்கன் பொன்னகரின்
மேவி னனல். (18)

**கருத்து:** தேவலன் ஆட்சி புரிகையில் நான்கு அமைச்சர்கள் ஆலோசனை சொல்ல ஏற்படுத்தி இருந்தான். இறைவன் சொன்னபடி தன்னுடைய கடமையைச் செய்வதற்காக மயனிடம் செல்லவேண்டி வந்தது. மந்திரிகளைத் தனக்குப் பிரதிநிதியாக நியமித்துவிட்டுத் தேவலன் மயனிடம் சென்றான். ஒரு கொடிய காட்டின் வழியாக செல்லும்போது ஒரு சிங்கம் அவனை விழுங்க வந்தது. அதனை எதிர்த்து அம்புகளை எறியவே அச்சிங்கம் அடிபட்டு விழுந்தது. அப்போது ஒரு புனித உடலுடன் ஒருவன் விமானத்தில் ஏறினன். தேவலன் வியப்புற்று அவன் வரலாற்றைக் கூறும்படி கேட்டான். அவனேதான் அழகாபுரி அரசன் குபேரனுடைய பெரிய அலுவலார்களின் ஒருவன் என்றும் தன் பெயர் கபிஞ்சலன் என்றும் ஒருநாள் வேட்டையாடுகையில் ஒரு பெண் மானைத் துறத்திச்சென்று அம்பு எய்தபோது அப்பெண் மான் கௌதம முனிவரது ஆசிரமத்திற்குக் காயத்துடன் ஓட அது கண்டு சினந்து அவனை ஒரு சிங்கமாகும்படி சபிக்க அதனல் தான் சிங்கமானதாகவும் தற்போது தேவலனல் சாபம் நீங்கப்பெற்றதாகவும் கூறி வணங்கினன். பிறகு அவன்மேல் உலகம் சென்றான்.

எட்டாவது

## உக்கிரதனுவன் உவணைசேர் சருக்கம்.

*[இச்சருக்கத்தில் தேவலன் மீண்டும் போகும் காலத்தில் அங்கே முனிவர்களைத் துன்புறுத்திக் கொண்டிருந்த உக்கிரதனுவன் என்ற அரக்கனுடைய வதம் கூறப்படுகிறது. உவணை-தேவலோகம்.]*

*அறுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.*

*பவநெடுங் கடல்க டந்து பரம்பொரு ளுணர்ந்த சூத*
*னவைதவிர் சிறப்பு வாய்ந்த நைமிசா ரணிய மேவுந்*
*தவமுனி வரர்கட் கின்ன சாற்றலு மவர்க டாழ்ந்து*
*குவவுறு குணத்தோய் மற்றுங் கூறெனக் கூறுகின்றான்.* (1)

*திரண்டவெற் பனைய திண்டோட் டேவல முனிவன் பின்னர்*
*முரண்டரு கொடுங்காந் தார முழுவதுங் கடந்து சென்று*
*பரந்ததன் புகழ்போ லோங்கிப் பனிக்கதிர் வளைவெண் முத்தம்*
*வரன்றிய திரைத்தண் கங்கை மாநதி மருங்கு வந்தான்.* (2)

*கதிருமிழ் கணைபோ லோடிக் கவின்குழை கிழித்து நீண்டு*
*முதிர்வரி படர்ந்து மையின் மூழ்கியன் பினர்கட் கெல்லாந்*
*துதிபெருங் கருணை யென்றுஞ் சுரந்தகட் குமரி பாகன்*
*மதிதவழ் சடையி னூற்று வருவதக் கங்கை யாறே.* (3)

*பகலவன் குலத்து தித்த பகீரத னெனும்பேர் வள்ளல்*
*புகலருந் திவசமன்று புரிந்தமா தவத்தின் சீராற்*
*சகரரென் பவர்பே ரின்பத் தனிப்பர கதியிற் சாரச்*
*செகதல முழுதும் போற்ற வெழுந்ததத் தெய்வ தீர்த்தம்.* (4)

*ஆடுவோ ரனைய பாவ ராயினு மனையர் தம்மை*
*மூடுதீ வினையி னீக்கி முடிவறு போரா னந்த*
*நீடுசா யுச்சிய வீட்டி னிலைபெற வுய்க்கு மந்தப்*
*பீடுசா லறிஞர் போற்றும் பெரும்புனற் கங்கை யம்மா.* (5)

*பாதல வரையுந் தாழ்ந்து படர்திரி பதகை யூடம்*
*மாதவ விருடி தோய்ந்து வான்முறை கடன்க ளாற்றி*
*காதலி னிசியோர் மூன்று கழித்தபின் கடிது சென்று*
*மூதுணர் வால கில்ய முனிவனாச் சிரமம் புக்கான்.* (6)

சந்திர திலக நாகஞ் சண்பகங் காக துண்டங்
கொந்தவி ழிலஞ்சி தாழை குங்குமந் தேவ தாரஞ்
சிந்துக மாழை பூகஞ் செயலையா டலம்புன் காலி
மந்திபு மறிவு ருத தருக்கள் பற்பலவு மன்னும். (7)

மாலதி தளவு சாதி மலிதம னகங்க வீரங்
கோலமென் செருந்தி பீதங் குருகுமுன் டகம னங்க
நீலமம் புயஞ்சே தாம்ப னெய்தல்பட் டிகைகல் லார
மேலிவை யன்றித் தெய்வ மென்மலர் பலவு மல்கும். (8)

கானலர் கமல வேதக் கடவுடன் காமர் நாட்டு
மானத வாவி யிங்கும் வந்ததோ வெனவ யிர்ப்பத்
தூநிற வெகினம் போதாத் தொடர்ந்தெழு குரண்டஞ் சூழத்
தேனலர் பலம லிந்த செழுந்தட மனந்த மாதோ. (9)

கலிநிலைத்துறை.

பரம னூர்தியுங் கலைபுமங் கொருபுடை பயிலுஞ்
சரத யோகினி தனதுவா கனமுமந் தரத்திந்
திரன தூர்தியு மிடைவிடா தொன்றெனத் திரியும்
வரத மாலம ரியுங்குக னூர்தியு மகிழும். (10)

திருந்து கிள்ளையும் பருந்துமோர் பஞ்சரஞ் சேரும்
பொருந்து பாந்தளுஞ் சிகரியு மோரளை புகுது
மிருந்த போதனர் மகப்புகை கரும்புய லேய்க்கும்
வருந்து ருதுநான் மறைசெழும் பூவைகள் வழுத்தும். (11)

திரிபு ருதபல் வளம்புனை தெய்வமா வனத்து
டரிய தாபதத் தணிகிளர் தேவல னணுகிப்
பொருவில் வாலகில் லியமுனி மலரடி போற்றி
யிருகை கூப்பிமற் றவனரு ளாசிபெற் றிருந்தே. (12)

அய்ய விவ்வுழி யடிகண்மற் றனைவருஞ் சுகமே
செய்ய மந்திர வேள்விகள் சிறப்பினுற் றனவே
தூய்ய மாதவ நாடோறுந் துலங்குகின் றனவே
மையல் கூரிடர் யாதுமிவ் வனத்திடந் திலையே. (13)

எனவி எம்பனும் வாலகில் லியமுனி யென்பான்
மனம கிழ்ந்துல களித்திட வந்ததே வலகேள்
பனக சங்கர ரருளினுற் சுகங்கொடு பலகா
லனக வின்பமா தவமகம் புரிந்திருந் தனமால். (14)

இன்று துன்பமொன் றெய்திய தஃதெவ னென்னிற்
றன்று மிவ்வனத் திரண்டுயோ சனைத்தலை தனிலோர்
குன்றி ருங்குகை யுண்டதிற் கனவினுங் கொடிய
வன்றி றம்புனை யொருபெரு நிசாசரன் வதிந்தான். (15)

வளர்க ரும்பெரு வரையென நிமிர்புய வலியான்
இளமை வெண்பிறை போல்வளைந் திலங்குகூ ரெயிற்றன்
தளர்வு றம்பசி வரிற்பல வுயிரையுஞ் சதிப்போன்
அளவில் வெம்பவ மனைத்துமோர் வடிவெடுத் தனையான். (16)

காத மூவிரண் டெண்டிசை தொறுமுடை கமழும்
பூத வாயினன் கனற்பொறி யுமிழ்விழிப் புகையான்
மாத போதனர் யாரையும் வருத்துபுன் மனத்தான்
ஓது மூவுல குடனடு சூலமொன் றுடையான். (17)

அனைய பாதக னெவிட ருறுபய மடைந்தே
மெனைய மாதவப் பெருந்திறல் வலியினு லேனு
முனைய ருவெயிற் றவனைவென் றிடமுடி யாதால்
வினையி னேரலர் வெந்ிடத் திகழ்கதிர் வேலோய். (18)

முனிவ ருக்கிடர் களைவது நிருபர்தம் முறையே
யினியி வற்றினு மேற்படு தருமமொன் றில்லைத்
துனித மைழந்தவந் நிருதனைக் கனையினுற் றுணித்துக்
கனித வப்பயிர் விளைத்தெமைக் காப்பதுன் கடனல். (19)

எழில்பெ ருந்தவ வாலகில் லியமுனி யினைய
மொழிய வன்பொடு தேவல னெழுந்துகை முகிழ்த்துத்
தொழுது நந்துயர் கெடவவற் றுணிப்பல்யா னென்றே
பழுத றந்திரு விடைகொடு படர்தன்மே யினனுல். (20)

தருண வச்சிர சடாரிபொன் மார்பிடைத் தரித்து
விருது பெற்றபல் கணைநிறை தூணிதோள் வீக்கி
யிரும திப்பிறை பொருவுகார் முகங்கரத் தேந்தித்
திருகு டைச்சின நிருதனுற் றிடுதிசை சென்றான். (21)

கான கத்தத ரிரண்டுடெனு மியோசனை கடந்து
வான ளக்குமால் வரையிடை வடவைவான் கனனே
ரான வங்கிர நிசாசரன் முழைக்கெதி ரடைந்தான்
மோன மெய்த்தவ முழுதுணர் தேவல முதல்வன். (22)

எண்ணி லாதபல் லுயிர்செகுத் தனுதின மெறிந்த
புண்ணி லாவுறு களேபரந் தோறலை புனைவான்
மண்ணி ஞுடிசின் மயிர்விடா ணம்பல வரைபோற்
கண்ணி னோர்குவித் திருப்பன வியப்பொடு கண்டான். (23)

உணர்வி லாதவின் னிசாசர னெத்துணை யுயிரை
யணவு திப்பசி யான்முடித் தனன்கொலிங் கந்தோ
கணம தாம்பொழு தினிலிவற் செகுப்பதே கடனென்
றிணையி லாததே வலமுனி திருவுளத் தெண்ணி. (24)

மண்ட லந்திசை விசும்பதிர்ந் திடச்சுரர் மயங்கக்
கொண்ட லஞ்சவெண் பணியுமெண் கயமுவெண் குவடும்
விண்ட லைந்துளங் கலங்கவான் மீன்குல முதிரத்
திண்ட டஞ்சிலை குனித்துறு குணத்தொனி செய்தான். (25)

அக்கு ணத்தொனி கேட்டலு மிகச்சினந் தரக்கன்
றிக்கு றும்பணி நெளிந்திட வெழுந்துசெஞ் சோரி
கக்கு திண்டிறன் மூவிலை வேல்கரத் தேந்தி
யிக்கு வெஞ்சிலை மதனிகர் நிருபனை யெதிர்ந்தான். (26)

கருவ ரைப்பெருந் தேகமும் புகையெழு கண்ணு
முருவு டைப்பிறை மூரலுந் தோன்றநேர்ந் தொலித்த
தரும மற்றவந் நிசாசரன் மேற்பல சரந்தூய்க்
குருதி கக்குற வருத்தினன் புவிபுகழ் கோமான். (27)

அரச மாமுனி வருத்தனு மிகச்சினந் தரக்கன்
பரவு மூவிலை வேலில்வீட் டுவனெனப் படரச்
சரம தானவை மூன்றினா லன்னதைத் தகர்த்து
விரைவி னோடுபின் மூன்றுகோ லால்வெதுப் பினனால். (28)

பிறையெ யிற்றினன் பின்னரு மடர்ந்தனன் பெரியோன்
கறைதி ளைத்தவோர் கணையினால் வலப்புயங் கண்டித்
துறையெ னப்பல கங்கபத் திரங்கொடுத் துய்த்து
முறைமை யற்றவன் மெய்யெலாந் துளைத்தனன் முனிந்தே. (29)

தோள கற்றின னிவனைவச் சிரமெனச் சூழ்ந்து
வாளெ யிற்றினான் மடிப்பனென் றறிவிலி வந்தான்
காள முற்றெழு கனலுமிழ் பிறைமுகக் கணையொன்
றுளி யொத்ததே வலன்றொடுத் தவன்சிர மறுத்தான். (30)

அலைவி னும்பருந் தொழுவருந் தேவல னம்பாற்
றலையி ழந்துமண் மிசைநிசா சரன்படுந் தன்மை
சிலைவ லம்புனை மகபதி கிரணவச் சிரத்தான்
மலைநெ டுஞ்சிறை யற்றுமுன் கீழ்விழுன் மானும். (31)

மாண்ட பாதகத் தேகத்தி னின்றொரு வலியோ
னீண்ட மாமணி விமானமேற் கொண்டெதிர் நேர்ந்தான்
பூண்ட சீர்புனை தேவலன் வியந்தருள் புரிந்தே
யாண்ட காய்புகல் யாவனீ யெனவவ னறையும். (32)

மகிப கேளிக்கு வாகுவின் குலத்தினில் வந்த
விகல்வி சாலபூ பதிதரு புதல்வன்யா னென்பேர்
புகலி னுக்கிர தனுவனீள் விசாலமா புரியை
மிகமு றைப்படி யாண்டிருந் தனனந்த வேலை. (33)

விகட னென்றொரு கொடுந்தொழி னிசாசரன் மேவி
நகரி ருந்தவர் தமைவருத் தினனந்த நாளிற்
பகர்த ளங்கொடு நானவ னுறைவனம் படர்ந்து
துகளெ ழும்படி துருவிப் பாதகற் றணித்தேன். (34)

துடித னிற்பத கன்பட வவற்குமுன் ரோன்றிக்
கொடிய கற்கட கன்பயந் துயிர்த்துளங் கொதித்தே
முடித ரித்தமற் றிவனேர்ந் தமர்பொர முடியா
தடிமை யிற்புகுந் தடுவல்யா னெனத்திர மானுன். (35)

மாய மங்கது குறித்தொரு மானுட வடிவாய்த்
தீய வெம்பகை நிசாசர னடைந்தெனைச் சேவித்
தேய வின்சுவை யமுதென வடுதொழி லினன்யா
னேய வன்பொடு நீபுரந் தருளென நேர்ந்தான். (36)

பழிநி னைந்தவப் பதகனைப் பாகசா லையினுட்
டொழில்பு ரிந்திட விருத்தினேன் வருவிதி சூழேன்
கழிவு றும்பல பகற்பினேன் மாளிகை கருதி
யழிவ றுந்துரு வாசமா முனிவர னடைந்தான். (37)

அன்று மாதவன் றனைப்பணிந் தடியனேன் மனைபி
லின்று நீயமு தயின்றரு ளெனவிசைந் திருந்தான்
நன்று றுதவக் கண்டகப் பாவியோர் நரனைக்
கொன்று தான்சமைத் தம்முனிக் கிட்டனன் குணத்தால். (38)

இணங்கு மாமுனி யன்னதை யின்னதென் றுணர்ந்து
பிணங்கு கோபமேற் கொண்டனல் கண்டொறும் பிறங்க
வணங்கி மேவிய வென்றனை நோக்கியே மனித
னிணங்கொ டூவெனக் கிட்டனை பாதக நீயே. (39)

ஆன தாலினி நீநரன் றசைகவர்ந் தலையு
மீன மேதகு கண்டக னுகுக வென்று
ஞான தான்மிக நடுங்கியே பணிந்துள நலிய
வூன சாபமிஃ தொழிவதெந் நாளென வுரைத்தேன். (40)

துங்க வெம்பிரா னிதயபங் கயத்திடைத் தோன்றி
யெங்க ணும்புரந் திடவருந் தேவல னென்பா
னங்க வன்றிரு வருளினு லகனுமீ தெனவே
புங்க வன்புகன் றெழுந்துதன் சூழலிற் போனுன். (41)

அதுமு தற்றொடர்ந் தரக்கனா யளவிலா வுயிர்கொன்
றிதுவ ரைப்பெரும் பவக்கட லழுந்தின னின்று
முதிர்த வத்துநின் னருளினுய்ந் தனனென மொழிந்தே
துதிப லப்பல புரிந்துவா னடைந்தனன் றூயோன். (42)

பெரிது வந்துதே வலமுனி வியந்ததற் பின்னர்
திரிப றுந்தவ வாலகில் லியமுனி திருமுன்
பரிவில் வந்தடி பணிந்தினி வெருவலிர் பாவி
யிரிவு றும்படித் துணித்தன னென்றெலா மிசைத்தான். (43)

**கருத்து:-** மயனிடம் சென்றுகொண்டிருந்த தேவலன் கங்கைக் கரை அடைந்து நீராடிவிட்டு வாலகில்லிய முனிவர் ஆசிரமம் சென்று அவரை வணங்கினான். அப்போது அம்முனிவர் ஒரு குகையில் ஒரு அரக்கன் இருப்பதாகவும் அவன் கணக்கற்ற மக்களைத் துன்புறுத்துவதாகவும் கூறி அவனை வதைக்கும்படிக் கேட்டுக்கொண்டார். உடனே தேவலன் போர்க் கருவிகளை எடுத்துக்கொண்டு அக்குகைச் சென்று வில்லில் நாணேற்றி ஒலி செய்தான். அவ்வரக்கன் வெளிவந்து நெடு நேரம் போர் புரிந்தான். தேவலன் அவனை வதைத்தான். அரக்கன் நிலத்தில் சாயும்போது, ஒரு புனித மகனாகி விமானத்தில் சென்றான். "யார்" என்று கேட்க அவன் தன் விவரத்தைச் சொன்னான். தான் விசாலமாபுரி அரசன் என்றும் தன் பெயர் உக்கிரதனுவன் என்றும், தான் விகடன் என்ற அரக்கனைக் கொன்றதாகவும் பழி வாங்குவதற்காக அவன் தமையன் தன்னிடம் சமையல் ஆளாகச்சேர்ந்து துருவாச முனிவர் அங்கு வந்தபோது மானுட மாமிசத்தைம் படைத்ததாகவும் அது கண்ட முனிவர் தன்னை அரக்கனாகும்படி சபித்தாகவும் தற்போது தேவலனால் சாபம் நீங்கிற்று என்று சொன்னான். அவ்வாறு சொல்லி மேலுலகம் சென்றான்.

## ஒன்பதாவது

# பற்பல கலையும் படைத்த சருக்கம்.

[இந்த சருக்கத்தில் தேவலன் தேவதச்சனைக் கண்டு நெய்தல் தொழில் கருவிகளைப்பெற்று வந்ததும் பலவித ஆடைகளை இயற்றியதும் ஆன செய்திகள் கூறப்பட்டுள்ளன.]

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

துகளறு தவத்தின் மிக்க சூதமா முனியைப் போற்றிப்
பகர்மறைப் பொருளு ணர்ந்த பண்ணவ ரைய செம்பொற்
சிகரியிற் புவிபுரக்குந் தேவலன் சென்று மீண்டு
புகழ்துகில் புரிந்த சீலம் புகல்கெனப் புகல லுற்றான். (1)

முன்னுற வால லில்ய முனிபத முடிமேற் சூடிப்
பின்னரங் ககன்று செம்பொற் பிறங்கல்சார்ந் துலகம் போற்று
மின்னவிர் சமர வைவேல் விறன்மய னினிது வாழும்
பொன்னணி மந்தி ரத்துட் புகுந்தனன் புகழின் மிக்கான். (2)

வீரனைக் காண்ட லோடும் விச்சுவ வியாவ கன்றன்
சீரரு கிருத்தி யிங்கு வந்தென் செப்பு கென்னக்
காரண வல்லோ யீசன் கருணையாற் கலைக ளாற்ற
வேரணி கருவி வேண்டற் குன்னிடத் தெய்தி னேனால். (3)

உரிமையி னுடைக ளாற்றற் குளவுப கரண மெல்லா
மருளுதி யெனத்தே வாங்க னன்பினுற் பரவ லோடும்
விரிதரு புவனங் காக்கும் விச்சுவ கன்ம னெல்லாக்
கருவிபு மனத்தி லுன்னிக் கணத்தினிற் படைத்தல் செய்தான். (4)

பயில்கதிர் வச்சி ரப்பொற் படமரம் வால வாய
மயலறு பலகை செய்ய மணிப்புறக் கேட கங்கள்
வெயிலுமிழ்ந் திலங்கு கோமே தகமிகு பன்னை மேலு
நயனுறு புருட ராகத் தண்டமு நயந்து நல்கி. (5)

மரகத நிறநா ளுழி வண்டுகி ரெந்தி ரஞ்சீர்
திரடரு மிந்த்ர நீலத் திருவடம் விடுவாய் செய்ய
தரவ மணியாற் பொன்னுற் சமைந்தகூர் வாளுந் தந்து
டிரவலன் வதன நோக்கிப் புகழ்மயன் புகல லுற்றான். (6)

பற்றினை முனிந்தோய் கேளிப் படமர மெண்ணி லாடை
சுற்றினு நிரம்பு றாது சூழ்வினிற் குறுகி நீளும்
பொற்றிருப் பல்கை தண்டம் பன்னையு மதுவே போலு
மற்றுரை தருநா ளூழி மகிமையைப் பகரு வேனால். (7)

தினமுறை வருண நாலுஞ் செறித்தெப்போ தெந்நால் வேண்டு
மெனநினைப் பினுமவ் வேலை யிசைந்தந்நா லினிது நல்கும்
புனைதிரு வடஞ்செஞ் சோதி பொலியுமெந் திரமி ரண்டு
மனையது தானே போலு மென்றன னருளின் மிக்கான். (8)

மூவுல கெதிருற் றாலு முடிப்பது கனல்வெங் காள
மேவுமிழ்ந் திடுவ தோரெட் டிசைபெறுங் கண்டை பூண்டு
தோவறு மணியாற் பொன்னா லமைந்ததோ ருவணி நல்கித்
தேவல நிருபன் கையிற் கொடுத்தனன் றேவர் போற்ற. (9)

மயனருள் விடைகொண் டந்த மால்வரை தணந்து போந்து
புயல்வளர் பொழிலா மோத புரத்தடைந் தினிது வைகிச்
செயமுறு பரம னன்பு செறிதரு திறத்தாற் றானே
யியல்புனை கயிறு மச்சு மியற்றின னெவர்க்கு மிக்கான். (10)

செற்றவர் வணங்கு சீர்த்தித் தேவல முனிவன் பின்னுங்
கற்றவ ரேந்து செங்கைக் கடவுளின் னருளி னாலே
நற்றவ மயன்கொ டுத்த நவையிலாக் கருவி யோடு
மற்றைய வறுபந் தங்கள் யாவையும் வகுத்தல் செய்தான். (11)

என்றுசொல் சூத மேலோ னிணையடிப் பதுமம் போற்றித்
துன்றிய முனிவர் யாருஞ் சுருதிக ளுணர்ந்த தூயோய்
மென்றுகி லாற்றற் கேற்ற வறுபந்தம் விருப்பி னாற்றும்.
வன்றிறன் முனிவ னேனைக் கருவியும் வகுக்க லாமே. (12)

கனகமால் வரையின் வைகு மயனிடங் கருவி வேண்டிப்
பனகவா பாணன் பாத பங்கயம் பணிதே வாங்க
முனிவரன் சென்ற தென்னே முந்துமந் தணங்க ளெல்லா
மினிதுணர் குரவ வெங்கட் கையமீ தொழித்தி யென்றார். (13)

மாதவர் வதன நோக்கி மலவிரு ளகன்ற சூத
னோதுவா னநுபந் தங்க ளுஞற்றுறு வலிமை யீசன்
றீதிலா வருளி னுலுஞ் சீர்த்தநல் லொழுக்கத் தானு
நீதியார் தேவாங் கற்கு நிலவுற நிரம்பிற் றன்றே. (14)

சாதனம் பலவு மேற்பச் சமைத்திட வல்லோன் வேண்டிக்
கோதிலா மயன்பாற் சென்ற கொள்கையா தென்னிற் கேண்
மேனதமார் சாபத்தாழ்வுற் றிருந்துய் வில்லாத் [மி
தீதுறு நிருத னுக்குந் திறலுறு சீயத் திற்கும். (15)

சொல்லுமச் சாப நீக்கந் தூயதே வாங்கன் றன்னாற்
புல்லுமென் றறவோர் மாற்றம் பொருந்திய வதனுன் மேருக்
கல்லிடைக் கருவி பெற்று வந்திடு கரும முன்னி
யொல்லையின் வழிக்கொண் டந்த வும்பர்கம் மியன்பாற்
சென்றான். (16)

மடலுறு கமல மேவு வானவன் றனைநி கர்க்குந்
திடமுறு கலைக ளாய்ந்த செயமுறு தேவாங்க கற்குக்
கடலுடைப் புவிமுன் னுகக் கருதுமே வுலகத் துள்ளு
மடலொடு மாற்றெரு ணாத வினையிலே யாயி னென்றான். (17)

நெய்தொழின் முயன்ற கோமான் சவுடதே வியைத்தன் னெ
மெய்வர நினைத்த லோடும் விறல்புனை மடங்க லூர்ந்து [ஞ்சின்
கைவளர் சூல மின்னக் கவின்முடி காந்தி வீச
மைவிழி யருள்சு ரந்து வந்தன ளவளு மன்னே. (18)

மைந்தநீ யெமைநி னைத்த வகையெவன் பகர்தி யென்னச்
சிந்தையின் மகிழ்வு பொங்கத் தேவலன் சென்னி தாழ்ந்து
வந்தனை புரிந்து நின்று மலர்க்கரங் குவித்து வாழ்த்தி
யெந்தனை யீன்ற வாதி யெம்பெரு மாட்டி கேண்மோ. (19)

பரமனு ரருளா லாடை பாரிக்கும் படிமு யன்றேன்
சரதமா தலினு லொன்று தான்பல வாக வேண்டு
மிரதவா னவர்முன் யாவ ரெவ்வகை விரும்பி னாலு
மருமைகூர் கலிங்கமெல்லா மந்திறம் பொருந்தல் வேண்டும்(20)

வரமிது தருக வென்ன மலரடி வணங்கி நின்ற
நிருபனை நோக்கி யன்னை நிறைதிரு வருள் புரிந்து
கரதல கமலம் பூண்ட கனககங் கணத்தை நல்கிச்
சரமுத லெவையு மீன்ற தற்பரை யினைய செப்பும். (21)

புதல்வநின் கரத்தி லிந்தப் பொற்றொடி யணிந்த கோடி
மதனுறு கலைக ளெண்ணு மனப்படி வடிவு வாய்க்கும்
பதமிக வொன்று தானே பற்பல வாமென் றோதிச்
சதுமறை முடிவு தேடுஞ் சவுடநா யகிசென் றளால். (22)

மற்றதன் பின்னர் மேன்மை வளர்சுப முகுர்த்தந் தன்னிற்
கொற்றவன் கவுரி தந்த குருமணிக் கடகஞ் செங்கோல்
பெற்றதன் கரத்த ணிந்து பிறங்கு வெண் கயிலை வெற்பி
லுற்றருள் பரனை யுன்னி நெய்திற முனுற்றி னுனல். (23)

வானதுந் துபிமு ழங்க வரர்மலர் மாரி தூவக்
கானவிஞ் சையர்கொண் டாடக் கதிபெறு முனிவோர் வாழ்த்
வீனமின் றகன்றோ மின்ப மெய்தின மினிநா மென்று [த
பூநலம் புனைந்த மாந்தர் யாவரும் புகழ்ந்து போற்ற. (24)

மங்கைய ரேனோர் தத்த மானமாம் பயிர்செ ழிப்பப்
பொங்கருள் வளர்சூற் கொண்ட புயலெனப் பொலிந்து தோ
வங்கன மயனுற் பெற்ற வருமுப கரணங் கொண்டு [ன்ற
பங்கயக் கரத்தா லாடை பற்பல படைத்தான் மாதோ. (25)

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

வன்னநன்கார் நேத்திரபந்தர் வழியமிர்த சந்திரபந்தர்
வழிபொற் றூவி
யன்னபந்தர் வழியொடுமற் றன்னபுஞ்சர் வழியுசித
வநேக சித்திர
மென்னறுந்தா ருவளிமே காவளியின் னனபிறவும்
விதித்தான் யாவு
முன்னமன்பா லளித்தபரன் கருணையக லாததிரு
முதல்வன் மாதோ. (26)

**கருத்து** :- வாலகில்லியர் ஆசிரமத்தைவிட்டு தேவலன் வடக்கே சென்று மேருமலையை அடைந்தான். அங்கே தேவதச்சனுகிய விசுவ வியாபகனுடைய அரண்மனையடைந்து அவனிடம் தான் வந்த செய்தி யை அறிவித்தான். அவனும் எல்லாவிதமான கருவிகளையும் உண்டாக் கித் தேவலனுக்குத் தந்தான். அவ்வாறு தந்த பொருள்கள் படமரங்கள் பலகைகள், தோற்கேடயங்கள், பண்ணையங்கள், தண்டங்கள், நாடாக்கள், திரிகைகள், திருவட்டம், விடுவாய் முதலியன. மேலும் ஒரு உடை வாளையும் கொடுத்தான். தவிர படைமரம், முதலியவைகள் நீ நினைக்கும் வண்ணம் நீண்டும் குறுகியும் வரும் என்று சொல்லி, எட்டு பாணங்களை யும், கைவாள், முதலியவைகளையும் வழங்கினுன். தேவலன் நன்றி செலுத்திவிட்டுத் தன் நகரம் சென்றான். பிறகு தேவலன் வடம், கயிறு முதலியவைகளைத் தானே செய்து தன் தொழிலைச் செய்யும் முன்னம் தன் குலத்தாயாகிய சவுடாம்பிகையைத் துதித்தான். அம்பிகை காட்சி அளித்து ஒரு பொன் வளையைக் கொடுத்து இதை அணிந்துகொண்டு தொழில் செய்தால் நினைத்தபடி ஆகும் என்றான். அவ்வாறு தேவலன் செய்த ஆடைகளின் பெயர் (1) நேத்திரபந்தர், (2) அமிர்த சந்திரபந்தர், (3) அன்னபந்தர், (4) அன்னபுஞ்சர், (5) பலவகைத் தாராவளிகள், (6) மேகாவளிகள் என்பன.

## பத்தாவது

# அமரர்கட் கம்பரமளித்த சருக்கம்.

[இச் சருக்கத்தில் தான் இயற்றிய ஆடைகளைத் தேவலன் தேவர்களுக்கு வழங்கிய செய்தி கூறப்பட்டுள்ளது.]

### கலிவிருத்தம்.

மாமருவு சூதமுனி வன்றனை வணங்கி
நேமிவன மீதுறையு நீடுறு தவத்தோ
ரேமமொடு வானவ ரெவர்க்குமெழில் வேந்தன்
சோமனுடை தந்தவகை சொல்லென விளம்பும். (1)

ஆடையுயர் தேவல னநேகவகை செய்தே
கோடவிர வேவளர்வை குந்தநக ரெய்தி
வாடரிய சீர்குலவு மாலடி வணங்கி
நாடுகன காம்பரம வற்கினிது நல்கி. (2)

### கலிநிலைத்துறை.

திரும கட்குவெண் ணோத்திரந் தந்துபூ தேவிக்
கருணை முற்றமென் கோசிக மருளியத் தலத்தின்
மருவு முத்தர்க ளெவர்க்கும்பல் காழகம் வழங்கிப்
பெருமணிப்பணி யூர்திதா னைகடரப் பெற்றே. (3)

பின்பு சத்திய லோகத்தின் மேவியப் பிரமற்
கன்பு றச்செழுஞ் செந்நிறச் சம்பட மருளி
மென்ப ணித்தன நாமகட் கினியவெண் டுகிறந்
தின்பு டைப்பசுந் தானைசா வித்திரிக் கீந்தே. (4)

உறுப சப்புடை யோங்குகா யத்திரிக் குதவித்
தெறுபு லப்பெரும் புலத்தியப் பிரமதே வற்கு
மறுவ றச்சிவப் பொடுசெழும் பிங்கல வடிவும்
பெறுது கிற்கொடுத் தனன்புவி புரந்திடும் பெரியோன். (5)

செஞ்ச டாடவிப் பரனரு டேவலன் பின்ன
ரஞ்ச வாகன னடிமலர் தன்முடிக் கணிந்து
தஞ்ச நாயக வென்குலத் துற்றவர் தமக்கு
விஞ்சு தூவினிக் கிடைப்பதெவ் வாறென விரித்தான். (6)

குணவி வேகநின் போல்வருந் தாமனுன் குலத்தோர்
புணரி சூழ்தலத் தினிதுறப் புரிகுது முன்னர்
இணர்கொள் பைந்துழா யெந்தையுந் தித்தடத் திருந்தே
வுணரு மானியோ டுயரபி மானிவந் துதித்தார். (7)

அனைய நங்கையர் தம்மையிவ் வவனியி னனுப்பிப்
புனைய நூறரும் பூடெனத் திகழ்வுறப் புரிந்துன்
னினைவு முற்றுற வளிக்குது மினையனீ யென்றே
நனைய லம்புயங் கயத்துறை மறையவ னவின்றான். (8)

புனித னீதருள் புரிதலு மவனடி போற்றி
யினிய வானபல் படைகன வரிசையு மேற்றுத்
தனிவி மானநா டடைந்தே வலன்புரந் தரற்குக்
கனிவு கூர்தர வளித்தன னழகிய கமலம். (9)

சசிக்கி லங்குபீ தாம்பரந் தந்துபின் சயந்தன்
வசுக்க ளெண்மரா தித்தரோ டுருத்திரர் மகிழ்வுற்
றசைப்ப வேண்டுகி வருளியே பிரமவந் தனற்கு
மிசைப்பெ ருஞ்சுரர்க் குந்தரும் பலகலை யீந்தே. (10)

வரிசை பற்பல பெற்றுமா மேருவில் வந்தாங்
கிருடி கட்குடை யவ்வவர் மனப்படிக் கீந்து
குரும ணித்துகின் மயன்றனக் களவில கொடுத்துத்
திருநி றப்பணி படைத்தொகை யவன்றரச் சிறந்தே. (11)

கின்ன ராதியர் கருடர்க ளமரர்கிம் புருட
ரின்னர் யார்க்குமவ் வவர்மனப் படிதுகி லீந்து
பின்னர் நீள்பொதி யாசல முதற்பல பிறங்கன்
மன்னு மாதவர் சித்தர்கட் கருங்கலை வழங்கி. (12)

அக்கி னிக்கட வுட்கிரு ணிறப்படா மருளி
மிக்க வத்திர முதற்பல வவன்றர வியந்து
தெக்க ணத்திசைக் கதிபற்கு நீலவொண் சிரை
பக்க முற்றளித் தவன்றரு படைகளைப் பெற்றே. (13)

புனற்கி றைக்குவெண் சாழகந் தந்துபூ டணங்கள்
சினக்கொ டும்படை பெற்றுயர் வாயுவின் றேவு
தனக்குப் பிங்கல நிறம்புனை யம்பரந் தந்து
கனத்த வெங்கணை முதற்பல வவன்றரக் களித்தே. (14)

தனத னன்னவன் றருநலா கூபரன் றனக்குங்
கனக சித்திர வாடைக ணல்கிவெங் கணைகண்
முனைசி னப்படை மணிப்பணி முதற்பல பெற்றுப்
புனைபு மெய்த்தவ முனிவட கிட்டிசை புக்கான். (15)

களிப்பு மிக்கவீ சானதே வற்குவெண் கலிங்க
மளித்து மற்றுள பூதசே னதிபர் யார்க்குந்
துளித்த தேங்குழற் கயல்விழிச் சுரமடந் தையர்க்குந்
தெளித்த பன்மணிக் கலைவிருப் புணர்ந்தருள் செய்தே. (16)

கதிர்வி டும்படை கணைமணி முடிதொடி கடக
முதல ணிந்திடு பணிகொடி முழுமதிக் கவிகை
யிதமி கும்பல வாகன மினையபெற் றெவர்க்கு
மதர்வு றும்படி தேவலன் காசினி வந்தான். (17)

**கருத்து :—** தேவலன் மேலே கூறியபடி உயர்ந்த ஆடைகளை உண்டாக்கியதும் அவைகள் எடுத்துக்கொண்டு முதலில் தேவர்களுக்கு வழங்குவதற்காக அவர்களுடைய உலகிற்குச் சென்றான். வைகுண்டம் சென்று திருமால், சீதேவி, பூதேவி என்பவர்களுக்கு அவரவர்களுக்குத் தக்க ஆடைகளைக் கொடுத்து வெகுமதிகளைப் பெற்றுக்கொண்டான். பிறகு சத்தியலோகம் சென்று நான்முகனுக்கும் அவன் தேவிமார்களுக்கும் உடைகளைத் தந்தான். அப்போது நான்முகன், இனிமேலும் நூல் கிடைப்பதற்காக திருமாலின் உந்திக்கமலத்தில் உதித்த மாணி, அபிமானி என்ற தெய்வப் பெண்களை உலகத்திற்கு அனுப்பிப் பருத்தி செடிகளாக முளைக்கும்படி செய்வதாக வரம்தந்தான். பிறகு தேவலன் இந்திரலோகம், எட்டுதிக்கு பாலகர்களுடைய உலகங்கள், முதலிய பல உலகங்களுக்கும் சென்று எல்லா தேவர்களுக்கும் அவரவர்களுக்கு ஏற்றபடி ஆடைகளைத் தந்து அவைகளுக்குப் பதிலாக அவர்கள் தந்த வெகுமதிகளைப் பெற்றுக்கொண்டு திரும்பினான். இவ்விதமாக தேவர்களுடைய அங்கங்களை அலங்கரித்ததினால் தேவாங்கன் என்ற பெயர் வந்தது.

## பதினொன்றாவது

# மக்கட்கு அம்பரம் வழங்கிய சருக்கம்.

[இச்சருக்கத்தில் தேவலன் தான் இயற்றிய ஆடைகளை நிலவுலகத்தார்களுக்கு வழங்கின செய்தி கூறப்பட்டுள்ளது.]

கலிநிலைத்துறை.

மோக மற்றுயர் சூதனைத் தொழுதுமா முனிவோர்
ஆக மப்பொருள் அனைத்துணர் தேவல வரதன்
மாக னப்புவி வாழ்வுறு மானவர் யார்க்கும்
நாக மற்புடன் அளித்தவை நவியென நவிலும். (1)

தரணி நாவலந் தீவுறை இருதுவேந் தனுக்கும்
வாமு லாவுபஃ றேயமன் னவர்க்குமற் றெவர்க்குங்
கரத லாம்புயத் தெடுத்தளப் பரியவொண் கலைதந்
திரத மாப்பணி யாதிபெற் றுயர்ந்தனன் இறையோன் (2)

இறலி யம்பெருந் தீவினில் இனிதுவீற் றிருந்த
வறந லம்புனை சூரசே னனுக்குமேல் யார்க்கும்
நிறமி கும்பல துகில்குறிப் புணர்ந்துதா னீட்டி
மறமு றுங்கயஞ் சிவிகைமுற் பெற்றுள மகிழ்ந்தே (3)

குசைநெ டும்பெருந் தீவுறை குசனெனுங் குரிசிற்
கிசைவு றுங்கலை யருளியவ் வயினுளோர் எவர்க்கும்
வசைய றும்பல வாவர ணத்தொகை வழங்கி
யசைவ றுங்கன வரிசைபெற் றனன்புவிக் கரசன் (4)

இருநி லம்புகழ் கவுஞ்சதீ வுறையுமே மாட்ச
நிருப னங்குளோர் யார்க்கும்பற் பலகலை நீட்டிப்
பரிக யம்படை சிவிகையா தவங்கொடி பணிகள்
வருண மங்கையர் அவன்றரப் பெற்றனன் வலியோன் (5)

சாக நற்பெருந்தீவபி ராமவேந் தனுக்கும்
வாகு மிக்குறு மமைச்சரா தியர்க்குமா னவர்க்கும்
மோக னப்பல கலைகடந் தவர்களான் மகுட
நாக மற்பணி படைதரப் பெற்றனன் நாதன் (6)

இலவத் தீவில்வீற் றிருந்தருள் சாலிகேத் திரற்குங்
குலவச் சூழுமத் தயத்தவர் யார்க்குமோர் கொண்ட
பலபொற் காழகந் தந்தவர் தரக்கயம் பரிமா
வலிமைத் தேர்படை பெற்றனன் மகிழ்ந்துதேவாங்
[கன். (7)

பதிக்கெ லாமுயர் புட்கரந் தீவுறை பானு
மதிக்கு மேனைய தலத்தர சிருந்தமன் னவர்க்குந்
துதிக்கு மெக்குலத் தவர்க்கும் பற்பல துகில் வழங்கி
நிதிப்பெ ருங்குவை யநேகமன் னவர்தர நேர்ந்தான். (8)

அண்டர் மாணவர் அளித்த வெம்படைகளை யணிகள்
எண்ட குங்கரி பரிதன மாதரே னையவும்
கொண்டு தன்பதி சென்றிட உய்த்துநற் குணத்தோன்
றண்ட ரும்பெரும் பாதல நாட்டிடைச் சார்ந்தான். (9)

**கருத்து:—** பின்னர் தேவல முனிவன் நாவலந்தீவிற்கு வந்து அங்கு ஆண்டு கொண்டிருந்த இருது சக்ரவர்த்திக்கும் அவனுடைய பரிவாரங்களுக்கும் குடிகளுக்கும் ஆடைகளை வழங்கி பரிசுகளைப் பெற்றான். அதன் பிறகு மற்றத் தீவுகளாகிய இறலித்தீவு, கிரௌஞ்சத்தீவு, சாகத்தீவு, புட்கரத்தீவு, முதலியவைகளுக்குச் சென்று அங்குள்ளவர்களுக்கெல்லாம் ஆடைகளை வழங்கினான்.

பன்னிரண்டாவது

## நாகர்க்கு அம்பரம் நல்கிய சருக்கம்.

[இச் சருக்கத்தில் பாதாளலோக வாசிகளுக்கு கலைவழங்கிய வரலாறு கூறப்படுகிறது.]

கலிநிலைத்துறை.

தழற்சி னந்தவிர் சூதனை வணங்கிமா தவத்தோர்
முழக்கு திண்டிறன் முரசுடைத் தேவல முதல்வன்
உழப்பு றும்பெரும் பாதல நாடுறை வோர்க்கும்
பழிப்ப றுங்கலை தந்தவை பகரெனப் பகரும். (1)

தக்கன் வாசுகி பதுமன்கார்க் கோடகன் சங்கன்
திக்கு லாவுப தக்ககன் சித்திர சேனன்
மிக்க மாபது மன்குளி கன்சௌர வேயன்
தொக்க சீரயி ராவதன் ஆதிமா சுணர்க்கும். (2)

உளப்ப டிக்குகற் காழகம் பற்பல வுதவி
வளப்ப ருங்கதிர் மாணிக்க முதனவ மணிகள்
அளப்ப ரும்பணி சரம்படை யவர்தரப் பெற்றான்
துளக்கு றுந்துயர் எவர்க்குந்தீர்த் திடவரும் தூயோன். (3)

அகிலந் தாங்கிய அனந்தனூர் மந்திரத் தணுகி
திகழுங் காழக மவன்மனப் படிக் கருள் செய்து
வகிரும் பூங்குழல் வடிவமங் கையர்க்கு மற் றெவர்க்கும்
துகிலன் போடுதந் தனன்சுரர் புகழுமுத் துங்கன். (4)

ஆன காலையில் தேவலன் தனைவியந் தனந்தன்
நான மார்குழற் சந்திர ரேகைநன் னாம
மான மேவுதன் மகளையும் புனலொடு வழங்கித்
தான மாமணிப் பணிப்படை யேனவும் தந்தான். (5)

அனந்தன் பாவையை மணந்தக மலர்ந்துதே வாங்கன்
புனைந்த காசினி மருவியா மோதமா புரம்புக்
கினங்கொண் மானவர் யார்க்கும்பற் பலகலை யீந்து
மனங்கு லாவிய மானங்காந் திருந்தனன் மாதோ. (6)

**கருத்து:—** பிறகு தேவாங்கன் பாதாளலோகம் சென்று அங்குள்ள தக்கன் முதலிய நாகர்களுக்கெல்லாம் தக்க ஆடைகளைத்தந்தும் நாக கன்னிகைகளுக்குத்தக்க உடைகளைத் தந்தும் மாணிக்கங்களையும் மற்ற அநேக பரிசுகளையும் பெற்றுக்கொண்டான். அப்போது நாகராசனாகிய அனந்தன் தன் குமாரியான சித்திரரேகையை தாரை வார்த்துக் கொடுத்து அவளோடு சீதனமாக பல பொருள்களையும் தந்தான். சித்திரரேகையை மணம் செய்துகொண்டு சகல பொருள்களோடும் தேவாங்கன் ஆமோத நகரம் அடைந்தான்.



பதின்மூன்றுவது

## அரன் விடைக் கொடிவாள் அருளிய சருக்கம்.

[இச் சருக்கத்தில் தேவலன் கயிலைக்குச் சென்று இறைவனுக்கு கலைகள் வழங்கியதும் சௌடாம்பிகை அம்மையை வணங்கின பிறகு இறைவனிடம் இடபக்கொடி பெற்றதும் கூறப்பட்டுள்ளன.]

கலிவிருத்தம்

முந்து சூத முனிவனைப் போற்றியே
யந்த மாதவர் அன்போடு தேவலற்
கெந்தை வாளு மிடபத் துவசமுந்
தந்த மாக்கதை சாற்றெனச் சாற்றுவான். (1)

சீர்வ ளம்புனை தேவல பூபதி
யார்வ னம்ப னடி தொழ வுன்னியே
நேர்வ ரும்பன் னிறக் கலிங் கங்கொடு
கார்வ ழங்கு கயிலையை நண்ணினன். (2)

வேத வோதை விரும்பிடு விஞ் சையர்
கீத வோதை கிளர்முனி வோர் தொழும்
போத வோதை பொருவரு மாக்களி
னாத வோதை யெங்காளு மறுவரோ. (3)

பாட்டு வண்டினம் பாடப் பசுஞ்செழுந்
தோட்டு றுஞ்சுரை தூற்றிய பூம்பொழில்
கூட்டி யுண்ட குணத்தினர் கேளென
நீட்டி யெங்கு நிமிர்ந்து பிறங்குமால். (4)

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

அருணகண கிரணபண உரகமணி
முதல வற்றால் அமைந்த செம்பொன்
கருணை நிறை மந்திரத்துள் காந்தருவர்
சுரர் இயக்கர் கமன சித்தர்
தரு நிழலில் வளர் அமரர் வசுக்கள் உருத்
திரர் சுரர்கள் தணவா அன்புற்
றிரு ஙளின காஞ்சிரத்தின் முகிழ்த்திறைஞ்சி
மறைக ளினேத் தெடுப்ப மாதோ. (5)

நறவுசெறி கமலமலர்ப் பீடிகையின், மருவுமய
னலிவு றாத
விறல்குலவு திகிரிவளை வாள்கதைகோ தண்டமணி
மிளிர்கைக் கொண்ட
னிறவிமல குணவரத நிமிர்தருகற் பகதருவி
னீழல் வைகு
மறமுலவு குலிசவதி பதியுமணி முடிதாழ்த்து
வணங்கிப் போற்ற. (6)

பொதியமுனி கவுதமன்மார்க் கண்டேயன் சுகன்வசிட்டன்
பொருவில் கூர்மன்
மதிகுலவு காசிபனார் வாசனுயர் பராசரனல்
வாம தேவன்
முதிர்புகழ்கூர் பதஞ்சலிவி யாக்கிரபதன் சனகன்முதன்
முடிவு றாத
வதிகதவ விருடிகள்பற் பலர்சுருதி முறைவணங்கி
யன்பிற் சூழ. (7)

தவளமதி நதிகுலவு சடிலமின்ன மழுமான்கைத்
தலத்தி லோங்கப்
புவனசரா சரமுழுது மீன்றவிளம் பாவையொரு
புறத்தின் மேவக்
கவளமத கரடதிடக் கயங்கலங்கு மடங்கலுடைக்
கவின்பீ டத்திற்
சிவபரன்வீற் றிருந்தசெழுந் திருவவைக்கட் டேவாங்கன்
சென்றா னன்றே. (8)

துன்பமுறு பொறிவழியிற் சுழன்றலைபா துனதுபுகழ்
துதித்து வாழு
மன்பர்மனத் திருளகல வருஞானச் செழுஞ்சுடரே
யளவி லாத
வின்பநெடுந் திரைக்கடலே யினியருளாந் தெள்ளமுதே
யெழில்கொண் டோங்கிப்

பொன்பொதிந்த களபமுலைப் புனல்வனிதை தனைமுடிமேற்
புனைகோ மானே. (9)

புகலரிய வைம்பூத வுருவாகி யருவாகிப்
புலன்க ளாகிச்
சுகமவுனப் பொருளாகிச் சுருதிமுடி வுறைந்தபரஞ்
சோதி யாகிப்
பகலிரவாய் முப்பொருளின் பண்பாகி முதன்மூலப்
பகுதி யாகிச்
சகலமுந்தா னாகிநின்ற தற்பரமே யுற்பனமாந்
தவத்தின் வாழ்வே. (10)

என்றுபல துதிகளொடுந் தினிதியம்பி வணங்கியெழுந்
திருகை கூப்பி
நின்றுனது திருவருளா லிவைநிருமித் தனனெனப்பன்
னிறவி சித்ர
நன்றுபுனை கலையனந்த நல்கினன்றே வலனவற்றை
நயப்பி னேற்று
மன்றுலவு நடனபத வரதனுந்தே வியுமுவந்து
வனைந்தார் மாதோ. (11)

துங்கமதிப் பிறைமருப்புக் கடகளிற்று முகற்கணிவெண்
டுகிலுஞ் சோதிச்
செங்களப வரைப்புயவே லவற்கொளிர்சந் திரகாவிச்
செழும்பொற் றுாசு
மங்கரிய திறல்வீர பத்திரற்குச் சேவுடையும்
வளர்நந் திக்குப்
பொங்கமிகு நீனிறவம் பரமுமளித் தவர்கருணை
புனிதன் பெற்றான். (12)

பிருங்கிமுத லுளசிவக ணாதிபரெவ் வெவர்க்குமனப்
பிரிய மோங்கத்
திருந்துபல நிறம்படைத்த சீரைகடந் தழகியபத்
திரகா ளிக்குச்

சுருங்கலில்செந் துகிலளித்துச் சண்டன்பிர சண்டனெனுந்
துவார பாலர்க்
கிருந்தவபூ பதிசிவந்த வேடகமும் வெண்கலையு
மீந்தா னன்றே. (13)

சகலசரா சரவகையுந் தருசவுட நாயகியைத்
தனது நெஞ்சின்
மிகமகிழ்வி னெடுமகுட வேந்தனினைத் தனுமவன்முன்
விரைந்து மேவப்
பகரரிய மறைப்பொருளே பரஞ்சுடரே யமுதனைய
பருவ மானே
சிகரதன புராதனியே சிற்பரையே யென்றுதுதி
செய்து நின்றான். (14)

வழுத்திநின்ற தேவாங்கன் மலர்முகத்தை நோக்கியருள்
வழங்கி யம்மை
முழுத்தவநீயெமைநினைந்த முறையெவனென்னலுமவன்கை
முகிழ்த்துப் போற்றிப்
பழுத்தசுவைத் தெள்ளமுதே யுனதுவரத் தாலெளியேன்
பரிவி னுற்றும்
விழுத்தகுமென் றுகிலதனைத் தரித்தருள்க வெனவளித்து
வேண்டி னனால். (15)

பணிந்துதரு செழுந்துகிலைச் சவுடநா யகிமகிழ்ந்து
பரிவு கூர்ந்தேற்
றணிந்துதிரு வருள்வழங்கி யாசிபகர்ந் தகன்றனள்பின்
னமல னோர்போய்
வணங்கியெதிர் தொழுதிடவெம் பரனுமணி முடிபுனைதே
வலனை நோக்கி
யிணங்கியநன் மொழியாலிங் கிருந்தியென வவ்வவைக்கண்
ணிருந்தா னன்றே. (16)

அச்சமயத் தரம்பையுருப் பசிநெடுங்கட் புலோத்தமைமா
தடர்ந்து விம்மிக்

கச்சணிபொற் பயோதரமே னகைமுதன்மங் கையர்முழவங்
கஞ்ச மார்ப்ப
மச்சமணிக் கொடிமதனு மயல்பெருகப் பரதநன்னூல்
வகைவ ழாமற்
செச்சைமலர்த் தொடைதுவள வபிநயமோ கனநடனஞ்
செய்தார் மன்னோ. (17)

அரமகளிர் நடனமகிழ்ந் தமலனழி யாதபுக
ழுனிதே வாங்க
வரமுனிவன் றிருவதன நோக்குதனு மக்குறிப்பை
மதித்துச் சித்ர
பரணமுத லிலகுபல படாமெதிர்வைத் திடவவற்றைப்
பரமன் வாங்கிச்
சுரர்சகல விருடிகட்கு மபிநயமங் கையர்க்குமின்பந்
தோன்றத் தந்தான். (18)

சாலகடங் கடர்வெருவத் தாக்கியதே தேவாங்கமுனி
தனக்கவ் வேலை
நீலநிறம் புனைமிடற்றுக் கடவுள்சுசந் திரகமெனு
நிகரில் வாளுங்
கோலமிலங் கிடபநெடுங் கொடியுமளித் திவைகளினாற்
கொதிக்குந் தெவ்வர்
காலமுடிந் திடச்செய்த்தெக் காலமுநீ வாழியெனக்
கருணை செய்தான். (19)

குழவிமதி முடித்தபிரான் பரிதிதிரு முகத்தையருள்
கூர்ந்து நோக்கித்
தழல்பொருவுங் கதிரோயநின் றங்கையென வருதேவ
தத்தை தன்னை
யழகுபெறு மித்தேவாங் கற்குமண முடித்தியென
வமலை வானோர்
பழமறைமா தவருநன்றென் றனரவனுஞ் சம்மதச்சொற்
பகர்ந்தா னன்றே. (20)

அவ்வேலை யரன்றனித யாம்புயத்தி லுதித்தவனை
யருளா னோக்கி
யொவ்வாத வவுணரொழித் தனைவருக்குங் கலைகடந்தா
யோவென் றோதச்
செவ்வாய்மை தவறாத தேவலனுமையவெனத்
திரும்ப வன்னோன்
வெவ்வாசை கடந்தமுனி வரரிமையோர் யாவருக்கும்
விடைதந் தானால். (21)

அண்ணலருள் பெற்றயன்மா லமரர்பதி காந்தருவ
ராதி யாய
விண்ணர்மா முனிவர்தந் தானமுடைந் திருந்தனர்பின்
விறல்கூர் வானு
மெண்ணரிய புகழிடபத் துவசமுங்கொண் டுயர்ந்ததவ
மிசைதே வாங்கன்
வண்ணமணி மாளிகையா மோதநகர் தனைநோக்கி
வழிக்கொண் டானால். (22)

**கருத்து :—** அதன் பிறகு தேவலன் விலைமதிக்க முடியாத கலைகளை எடுத்துக்கொண்டு பரமசிவனைப் பார்ப்பதற்காக கயிலாயம் சென்றான். அங்கே இறைவனைப் பலவாறு புகழ்ந்து தான் கொண்டுசென்ற திவ்ய ஆடைகளை வழங்கினான். பிறகு தன் தாயாகிய சவுடாம்பிகை அம்மையை வணங்கி தான் கொண்டுவந்த ஆடைகளை ஏற்றுங்கொள்ள வேண்டுமென்று விண்ணப்பிக்க அவ்வாறே அம்மனும் மகிழ்ந்து உடைகளை அணிந்துகொண்டாள். பிறகு இறைவன் தேவலனைப் பார்த்து, "உனது செயலை மெச்சினோம்; உனக்கு நந்தியம்பெருமான் திருவுருவம் அமைத்த இடபக்கொடியைத் தருகிறோம். இத் திவ்யக்கொடி உன்னிடம் இருக்கும் மட்டும் உனக்குத் தோல்வியும் அச்சமும் இல்லை" என்று கூறி அக் கொடியைக் கொடுத்தார். தேவலனும் பெருமானைச் சேவித்துவிட்டு ஆமோத நகரம் திரும்பினான்.

## பதினான்காவது

# அரம்பைசாப மளித்தசருக்கம்

*[இச்சருக்கத்தில் அரம்பை தேவலனுக்கு சாபம் அளித்த செய்தி கூறப்பட்டுள்ளது.]*

*கலிவிருத்தம்.*

*மாசறு சூதனை வணங்கி மாதவ*
*ரீசன தருள்சிறந் தெழுந்த தேவலன்*
*பூசுரர் பரவுதன் பதிபு குந்தமை*
*பேசென வவனது பேசன் மேயினன்.* (1)

*இனிதொடு தேவல னேகு நன்னெறி*
*தனிலுயர் கற்பகத் தருக்கு லம்புகழ்*
*பனிமலர்க் காவிலோர் பங்க யத்தடங்*
*கனிதிரு வருள்பொழி கண்ணுற் றனரோ.* (2)

*கமலவா னனம்வளைக் களமென் சேல்விழி*
*குமுதவா யறற்குழல் குமிழி மாமுலை*
*தமரவால் சங்குவெண் டரள வாணகை*
*யமர்தலான் மாதர்நே ராய தத்தடம்.* (3)

*அடல்புனை தேவல னணைந்து ளானெனத்*
*தடமெனு மாதுபாற் சாற்றல் போலுமான்*
*மடலவிழ் பற்பல மலர்தொ றுந்தொறு*
*மிடைவிடா தளிக்குல மிசைத்த கீதமே.* (4)

*திசைத்திசை மணங்கமழ் தென்றல் வந்துவந்*
*தசைத்திட வூசல்போன் றசைந்த கஞ்சமேற்*
*பசப்புறு சிறையனம் பரந்த சோலைவண்*
*டிசைத்தபண் விளரியா லினிது றங்குமால்.* (5)

*தோய்ந்திடு வாவியுட் டுய வாளைகள்*
*வாய்ந்திடு பூகமென் மடல்கி ழித்தெழூஉ*
*வேய்ந்திடு சூற்புயன் மீது நாடொறும்*
*பாய்ந்திழி துளியொடு படிந்து ழக்குமால்.* (6)

தணிவரு நறைகமழ் சலச மெங்கணும்
பணிலம தேறியுட் பரிந்து யிர்த்தவெண்
மணிகடங் கருவென மயங்கி னாடொறு
மணிசிறைக் குருகின மடைகி டக்குமால். (7)

இத்தகை வளம்புனைந் திலங்கு வாவியை
மத்தகக் கடகரி மன்னர் தம்பிரான்
சித்தம தின்புறச் சேர்ந்து மற்றதிற்
சுத்தநன் னூல்வழித் தோய்வுற் றனரோ. (8)

ஆடியம் மடுத்தடந் தணுகி யீசனைப்
பாடியன் புளங்கொடு பரவிப் போற்றியே
தேடிய விதியெலாஞ் செய்து தேவல
னீடிய பொழிலிடை நிற்கு மேல்லையில். (9)

கரும்புய வினங்களைக் கடிந்து பண்பகர்
சுரும்பினைச் சிறைப்படுத் திருண்டு சூழ்ந்தகி
றரும்புகை கமழ்ந்துபூந் தகர நீவிவார்ந்
தரும்பணி புனைந்தநெய் யளக மின்னவே. (10)

திங்களங் குழவிவா ளொளிப்பச் செங்கதிர்
தங்கிய சிந்துரந் தரித்த பாலமு
மங்கசன் குனித்தவில் லாமெ னும்படிப்
பொங்கிய நுதல்களும் பொலிவு காட்டவே. (11)

கூற்றினுக் குங்கொடுங் கொலைப யிற்றிவேல்
போற்றிடக் கயல்களைப் புறந்த ரச்சினந்
தாற்றிய தவத்தினோ ரறிவு ஞானமு
மாற்றிய வஞ்சனை வரிக்கண் காட்டியே. (12)

திருத்தகு குமிழெனச் சிறந்து நெஞ்சினை
யுருக்கிய நாசிகை யொளிர யோகர்தங்
கருத்திருந் தாடிய கனக வூசல்போற்
குருத்தழை கலனிடு குழைகு லுங்கவே. (13)

சித்தச னயனவா டீட்டு சாணையை
பொத்தொளிர் கபோலமு முசித விம்பநே
ரத்தகு மதரமு மார்ந்த கோவைவெண்
முத்தணி முறுவலு முன்னர்த் தோன்றவே (14)

முழுமதி தொழுதிரு முகமும் வாரணச்
செழுமணி மிடறுநீ டிகிரித் தோள்களு
மெழுமிசை மகரயா ழிகளு முன்கையுங்
கொழுநறுந் தளிருளங் கையுங்கு லாவவே. (15)

செங்நிறத் துகிரினுந் திரண்டு தெள்ளமு
தின்னிசைத் திவவியா ழினிது நீவிய
மன்னிய விரல்களும் வன்னி நாசிகை
தன்னிலு மிலங்குகிர் தாமுந் தோன்றவே. (16)

மருப்பெனக் குவிந்துவெண் மகுடம் போன்மினிப்
பொருப்பென வளர்ந்துகச் சடர்ந்து பூண்பொலிந்
துருக்கிளர் சுணங்குபூத் திடையொ சிந்திடப்
பருத்தெழு கனதன பார மோங்கவே. (17)

வடவிளந் தளிரென வயங்கு பண்டியு
மடருநீர்ச் சுழிநிக ராய வுந்தியுந்
தடநெடுங் கடற்றிரை தகும டிப்புநேர்
படரெறும் பொழுக்கெனு முரோம பந்தியும். (18)

நூலினு நுடங்கிய நுண்ம ருங்குலும்
பாலினி மதுச்சுனை பணிநி தம்பமும்
வாலிய தளிர்பனி வாழை போலெழில்
சாலிணை வாமமு மினிது தாங்கியே. (19)

சினையுடை யலவனைச் சினந்த சானுவும்
வினைமதன் றூணியை மருட்டு சங்கமும்
புனைமலர்ப் பந்துநேர் குதியும் பொன்பகர்
வினையினர் துலைபுரை பரடு மின்னவே. (20)

வன்னவின் மதனநூல் வரைந்த புத்தக
மன்னமேல் விபுற வடியுங் காஞ்சினி
மின்னவி ரங்குர விரலும் வெண்மணி
யின்னக வரிசையு மினிது தோன்றவே. (21)

அனிச்சமென் மலரித ழமைத்த பூவணை
தனிற்சிறு பஞ்சமெத் தையின டப்பினும்.
பணிப்பொடு வருந்திமென் பதுமம் போலொளிர்
புனிற்றுளத் தாளினை பொலிந்து தோன்றவே. (22)

சுரும்பிமிர் குழலணி சுடிகை தோடுசீர்
தரும்பல மேகலை தரள மாலிகை
விரும்பிய வளைதொடி வீகம் பட்டிகை
வரும்பரி புரஞ்சிறு மணிவ யங்கவே. (23)

வெயில்விரி மணியணி வேய்ந்த மேனியிற்
பயில்செழுங் கள்பவான் பரிம ளங்களு
மயில்வளர் கற்பகத் தலர்செ றிந்தளி
துயிலணி மணமுமோர் காதஞ் சூழவே. (24)

பன்மணிக் கோவைசூழ் பசும்பொற் காழக
மின்மிகத் திசைதொறும் வீசப் பூங்கணை
மன்மதற் குடைவுறு மா தவத்தினோர்
கன்மனத் துறுதியுங் கலங்கிச் சோரவே. (25)

அன்னமோ மின்னலோ வமுத மோவலாற்
சொன்னமோ மலர்ச்செழுந் தோகை யோமதன்
வன்னமோ விரதியோ வரன்ம யங்கிய
முன்னமோ கினிகொலோ முயங்கு கிள்ளையோ. (26)

தோகையோ குயில்கொலோ சுடர தோவென
வாகையோ கேசரு மதிம யங்குற
வீகையோ வெழிலியோ வெனும்பி ரான்முன
மோகையோ டரம்பைமா லுறவந் தாளரோ. (27)

முரண்டகு கயிலையின் முன்க ணுற்றதால்
வரம்பெறு கடலென் மையன் மீறிவேள்
சரம்பட மனமதி தளர்ந்து வந்தவ
வரம்பைதே வாங்கன தருமின் மேவியே. (28)

நலத்தகு நாணோடு நயனப் பார்வைபூ
தலத்துற வளர்மயல் சகிக்க லாமையான்
மலைக்குல மெனும்படி வயங்கு வாகையஞ்
சிலைப்புயன் செவிபொருச் சிலசொற் கூறுவாள். (29)

காவல கேட்டிமுன் கயிலை மால்வரை
மேவவை தனிவியா னடஞ்செய் வேலையிற்
றேவரும் புகழுநின் சீர்கண் டன்றுதொட்
டாவலி னிடாக்கட லழுந்தி னேனரோ. (30)

கலையிடை தளர்ந்திடக் காம வேள்கணை
முலைமிசைப் படவவை முதிர்ப சுங்கன
மலையென வளர்ந்தணி வார்கி ழித்ததா
லலைகடற் றுரும்புபோன் றழுங்கி னேனரோ. (31)

பட்டன மதன்கணை பனிம லர்க்கரம்
விட்டன வளைதொடி மெய்யிற் சந்தனஞ்
சுட்டன வென்மனஞ் சூழ்ந்த நாணெலாங்
கெட்டன நின்மயல் கிளர்ந்த தாலரோ. (32)

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

இனியெனது மயல்சிறிதா யினுஞ்சகியா தாதலினு
 ளிப்பூங் காவிற்
பனிமலர்மென் பாப்பினிடைப் பவளவிதழ் சுவைத்தமுத
 பானந் தேங்கிக்
குனிசிலைமன் மதனபோற் கொஞ்சியுன்மார் பினிற்களபக்
 கொங்கை தாக்கக்
கனிவுபெறு கலவிநன் னூற் படிமுயங்க விசைதேற்ற
 கால மன்னோ. (33)

*சமயமிது தயவுபுரி தாமதங்கூ டாதுமைய*
*ருழா தென்னச்*
*சிமயவரை யனையதிடாட் டேவலவேந் துளங்கலங்கிச்*
*சிவசி வாவென்*
*றமையுமிரு செவிபுதைத்து நிருவிடயா னந்தசுக*
*வறிவின் பண்பா*
*லிமையவர்மார் புறமுயங்கு மரம்பைமலர் முகநோக்கி*
*யிசைப்ப தானன்.* (34)

வே று.

*அணங்கு கேட்டி யென்போல்வார்க் கமையா தென்று மவ்வினைக*
*ளிணங்கு காம முயக்கவிருப் பில்லேன் சிறிது மினியவறந்*
*தணந்த நீதா னெனைப்பிரம சாரி யெனவிங் கறிந்திலையோ*
*மணந்த மகவான் முதலியோர் தம்பாற் புரிநின் மனப்படியே* (35)

*கருந்தார்க் குழலா யுணர்ந்தவர்க்குக் கணிகை மடவார் கலவிநலம்*
*பொருந்தாதொருபோதேனுமது பொருந்திற்புகழும் புண்ணியமு*
*வருந்தா மதியு மனவலியும் வரமுங் குணமு மாதவமுந் [ம்*
*திருந்தா தொழிவ தன்றியென்றுந் தீராப் பவநோய் செறிந்திடுமால்.* (36)

*போதி போதி யெனலுமந்தப் பொன்னாட் டுறையும்புகழ்வனிதை*
*நீதியோய்பற் பலமகஙன் னெறியான் முடித்த வறிவினர்க்கே*
*கோதி லாவென் போகவின்பங் கூடும் பிறர்க்குக் கூடாதென்*
*றோதி நூல்க ளனைத்துமெடுத் தடைவே பகர்வ தறியாயோ.* (37)

*மற்ற மடவார்போலெனையு மதித்துள்வெறுக்கும்வகைமுறையோ*
*கற்ற வறந்தின் மிக்கவரே கனிவோ டெனது கலவிதுய்ப்பா*
*ரற்ற சுகிர்தத் தவர்கடுய்யா ரவையெ லாநீ யறிந்திருந்துங்*
*குற்ற மிதனு லடையுமெனக்கூறுந் திறமென் குணமேலோய்.*(38)

*துஞ்சு ருவத் திரிமுதலாந் துறவோர் களுமென் சுகம் வேட்டு*
*மிஞ்சு மோனத் தொடுதவத்தை விடுத்தா ரன்றி மேவினரே*
*மஞ்சு நேருங் கரத்தோய்நீ மட்டு மிணங்கா வகையாதுன்*
*னெஞ்சு தான்வல் லிரும்புருவோ நெடுந்திண்சிலையோ நெகிழாதோ.*(39)

நளகூ பரன்சித் தசன்சயந்த னலங்கூர் வசந்த னல்வர்களும்
வளமா முருவ முடையோரிற் சிறந்தா ரென்ப மற்றவர்த
மிளமே னியின்பொற் பனைத்துமுன திலங்கு மொழிந்தீ ரெட்டினிலோ
ரளவா மதனு லெனதுமனத் தடங்கா மயல்கொண் டலைந்தேனல். (39)

எவ்வா றுரைத்த போதினுஞ்சற் றெனினு மிரக்க மில்லையந்தோ
வெவ்வாய் வேலோ யெனதுமொழி வீணே பழுதாய் விடுதனன்றே
வவ்வா நின்ற தறிவுமுற்று மதன சரங்க ளாதலினுன்
செவ்வா யமுத மருந்தினன்றிச் சிறிதும் விரகந் தீராதே. (40)

வாச மருவு மலர்முடித்து மதுரைக் கனிவாய் மதுவருந்திக்
காசு குலவு களபமுலை கையா னெருடிக் களிகூர்ந்து
நேச மதனகரணவகை நெறியே புரிந்து நெடிதாமென்
னுசை முழுது நிறைவேற வன்புற் றெனைச்சேர்ந் தருளென்றாள். (41)

ஒருக்கான் முன்னரே மொழிந்த வுரை போதாதோ வதனையுனக்
கிருக்கான் மொழிய வேண்டுவதென் னெனவேந் திணங்கா திசைதன [னம்
மருக்கா ரோதி துயருழந்து மனத்திற் சிறந்து வாய்புலர்ந்து
தருக்கார் குருதி வேற்குரிசி றனைப்பார்த் தினைய சாற்றினளால். (42)

பாவி நீயென் மொழிக்கிணங்காப் பரிசா லுனது பகைவர்கையா
லாவி வருந்த வுழந்துகட்டுண் டமரென் றுரைத்தங் கரம்பை சென்றாள்
காவி லரச னெருகணப்போ தெண்ணிக் கடவுள் கருணையென
மேவி மதிதேர்ந் தினிதேகி விரைந்தா மோத புரஞ்சார்ந்தான். (43)

**கருத்து:—** தேவலன் ஆமோத நகரத்திற்குத் திரும்புகிற வழியில் ஒரு அழகிய சோலையிலே ஒரு தாமரைத் தடாகத்தைக் கண்டான். அங்கே அரம்பை தோன்றினுள். முன்னே கயிலையங்கிரியில் தேவலனைப் பார்த்தது முதற்கொண்டு அவன் மீது அவள் காமம் உற்று அவனை அடையவேண்டும் என்று எண்ணி வந்தாள். அவள் தன் விருப்பத்தை தேவலனுக்குச் சொல்ல தேவலன் மறுத்துப்பல நீதி மொழிகளைக் கூறினுன். அவன் இணங்காததைக் கண்டு நீ பகைவரிடம் துன்புறுவாய் என்று சபித்துவிட்டுச் சென்றாள்.

பதினைந்தாவது

## தேவதத்தையைமணஞ் செய்த சருக்கம்.

[இச்சருக்கத்தில் இறைவன் திருவருளால் தேவலனுக்கும் தேவதத்தைக்கும் திருமணம் நடந்த செய்தி கூறப்பட்டுள்ளது.]

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

தனிப்பொரு ளுணர்ந்த சூதன் றனையெதிர் தொழுது போற்றிப்
பனிப்பக லாத சென்மப் பவக்கடல் கடந்த மேலோர்
கனப்பணி புனைதே வாங்கன் கடிமணப் பெருமை யெல்லா
மினிப்பகர்ந் தருள வேண்டு மெனவவ னிசைப்ப தானுன். (1)

புனிததே வலனு மோத புரத்தடைந் திருந்த பின்னர்த்
தனிதமா முகில்கு லாவு தடமுடிக் கயிலை வாழும்
வனிதையோர் பாக னுள்ள மகிழ்சிறந் தாதி ஞான
முனிவரோ ரெழுவர் தம்மை முன்னினன் சிறிது மன்றே. (2)

மனத்தரன் றனைநி னைத்த வகைபுணர்ந் தருங்கா வேரிப்
புனற்றரு கும்ப யோனி புலத்திய னங்கி ராதன்
கனக்கவு தமன்வ சிட்டன் காசிபன் மார்க்கண் டேயன்
எனப்பகர் முனிவர் தாமோ ரெழுவரு மினிது வந்தார். (3)

எழுமுனி வரரு மன்புற் றிறைஞ்சினின் றிருகை கூப்பித்
தொழுதெமை நினைத்த தென்னைத் தூயநீ யருளு கென்ன
மழுவுழை தாங்கி யாதி வனிதையோ டுளம கிழ்ந்து
விழுமிதி னமர்ந்த வெந்தை விளம்புதன் மேயி னுனல். (4)

மாதவ முனிவீர் கேண்மின் வருகதிர்ப் பின்னை தன்னைத்
தீதறு தேவாங் கற்குத் திருமண முடித்தல் வேண்டு
மாதலி னின்று நீவி ரக்கதி ரிடத்திற் சென்று
மேதகு முகூர்த்த காலம் விரித்திவண் வருதி ரென்றான். (5)

மின்றிகழ் பவள வேணி விமலனீ துரைத்த லோடு
நன்றுநன் றெனவ ணங்கி நலனுறத் தொழுது போற்றி
யின்றிரு வருள்பெற் றேகி யெழுமுனி வரரு மெங்குந்
துன்றிரு ளகற்றுஞ் செங்கேழ்ச் சுடரவ னகரம் புக்கார். (6)

வந்தவம் முனிவர் தம்மை மகிழ்சிறந் தெதிர்கொண் டாடிச்
சிந்தையி னன்பு கூர்ந்து தேன்புரை முகமன் கூறிச்
சந்தவின் மணிசூழ் செம்பொற் றவிசவ ரவர்க்கு நல்கி
யந்தமி லுலகம் போற்று மாயிரங் கிரணன் சொல்வான். (7)

இந்தநா ளெளியேற் றேடி யிணையிலா முனிவீர் நீவிர்
வந்தகா ரணமே தென்ன மாயவெம் பிறவி மாற்றித்
தொந்தமா முலக பாசத் தொடரெனு மிருளை வாட்டி
முந்துபே ரின்பந் துய்க்கு மிருடிகண் மொழிய லுற்றார். (8)

வருமொரு திகிரித் தேரோய் வளருநின் றங்கை தன்னைத்
தருநிகர் கரத்தான் மிக்க தவமுடைத் தேவாங் கற்குத்
திருமணஞ் செய்மு கூர்த்த தினமிய மிக்க வேண்டி
யருளுரு வாகு மண்ணா லனுப்பின னெம்மை யென்றார். (9)

பண்ணவ ரிணைய செப்பப் பரிதியுண் மகிழ்ச்சி பொங்க
வண்ணலம் புயங்கள் விம்ம வவரொடு மெழுந்து போந்து
தண்ணர விந்த மேவுந் தலைவனை யடைந்து போற்றி
யெண்ணருந் துதிகள் செய்தே யியம்புதன் மேயி னானல். (10)

வானவர முதுவ கேண்மோ வளர்சிவ னருளாற் றிங்க
ளானன வழுதென் றங்கை யாந்தேவ தத்தை தன்னைப்
பூநறுந் துகில்க ணல்கிப் புவிமுத லுலகம் போற்று
மூனமில் குணத்தே வாங்கற் களித்திட வுளங்கொண் டேனால். (11)

அத்திரு மணமு டித்தற் கானநன் முகூர்த்த கால
மித்தின மினிய தென்றெற் கியம்பென விரவி கேட்ப
நித்தில முறுவற் செவ்வாய் நெடுமதர் வரிவி ழிப்பூங்
கொத்திரு ளோதி வாணி கொழுநனங் கிணைய கூறும். (12)

இந்தவை காசித் திங்க ளிசைகெழு பூர்வ பக்கம்
வந்தசத் தமியிற் புந்தி வாரநற் பகலி லாறு
விந்தைகொள் கடிகை யின்மேன் மிதுனமு மகமுங் கூடி
முந்துமத் தினமே நல்ல முகூர்த்தமா மணத்திற் கென்றான். (13)

பங்கய னினைய கூறப் பகலவ னவனைப் போற்றி
மங்கல மகிழ்வு கூர்ந்து வந்துதன் மனையிற் சார்ந்து
புங்கவர் வதன நோக்கிப் புகுந்தமை யனைத்து நீவிர்
சங்கரற் குரைமி னென்று வன்னவர் தமையங் குய்த்தான். (14)

விழைந்தெழு முனிவர் தாமும் வெள்ளியே தண்ட னண்ணித்
தழைந்தெழு மன்பி னோடு சங்கரற் பரவி நின்று
குழைந்தநன் மனத்த ரிங்கு நிகழ்ந்தமை முழுதுங் கூறிச்
செழுந்திரு வருள்பெற் றன்னோர் சென்றுதம் மிருக்கை சார்ந்தார். (15)

தினகரப் புத்தேள் பின்னர்த் தேர்தன தமைச்ச னென்னும்
வனைமணிக் கழற்கால் வீர மார்த்தாண்டன் வதன நோக்கித்
தனதடக் கருங்கட் டேவ தத்தைதன் மணத்திற் கேற்ப
முனமலர்க் கடவுள் வைத்த முகுர்த்தம தனைத்துங் கூறி. (16)

நவையுறு வெழிலா மோத நகர்புரந் தருடே வாங்க
னவையைநீ நன்னி யேமற் றவற்கியை யனைத்துங் கூறி
மவுலிசூ டரசர் சூழ வந்தரு ளெனவே வாழ்த்திக்
கவலைதீர் மதிவல் லோயிக் கணத்தினில் வருதி யென்றான். (17)

வீரமார்த் தாண்டன் பானு மென்மலர்ப் பதங்கள் போற்றிப்
பாரெலாம் புகழா மோத பதிதனில் விரைந்து போந்து
தீரமா மடங்க ருங்கு செழுமணிப் பீடத் துற்ற
போராறு வாட்டே வாங்க பூபதி சமுகம் புக்கான். (18)

கதிர்புக ழமைச்ச னென்னுங் கலைவலான் கனதே வாங்க
னெதிர்படர்ந் தினிது வாழ்த்தி யிறைவகே ளெங்கோன் செல்வ
மதிபெறு தங்கைக் குன்றன் மணம்புணர்ந் திடுதற் கேற்ப
விதிபகர் முகுர்த்த மின்றென் றவையெலா விளம்பிப் பின்னர். (19)

எந்தனீ யுறவி னோடு மெழுந்தவன் வருக வென்றே
வேந்தருள் விடைபெற் றேகி வீரமார்த் தாண்ட னென்பான்
போந்தகல் விசும்பி னண்ணிப் புகழ்கதிர்ப் பொற்றாள் போற்றிச்
சாந்தநன் மொழியாற் செய்தி சகலமு முரைத்துச் சார்ந்தான். (20)

மிக்கசெங் கதிரோ னாதி விச்சுவ கன்மன் கோயில்
புக்கவன் றனைவந் தித்துப் புவிமுதற் புவன மெங்குந்
தக்கதன் னளியாற் காக்குந் தலைவவெத் தொழிலும் வல்லோ
யெக்கட வுளர்க்கு மேலோ மிறைவவொப் பிகலி லாதோய். (21)

என்றிருத் தங்கை யாகு மெழிற்றேவ தத்தை தன்னை
வன்றிறற் றேவாங் கற்கு மணமுடித் திடம தித்தேன்
றென்றமு வியலி வாக தெய்வமண் டபமி லாச
மொன்றுன தருளா லிப்போ துதவிடல் வேண்டு மென்றான். (22)

பிறங்குசீர் புனைது வட்டப் பிரமனங் கதனைக் கோளா
வறங்குல வலரிப் புத்தே ளமர்தரு நகரி னுப்ப
ணிறங்கிளர் கனகத் தாலு நிறைபல மணியி னாலுஞ்
சிறந்தமண் டபமுண் டாகச் சிந்தனை சிறிது செய்தான். (23)

எழுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

பிதிரமய மொன்றினிற் பாதபிந் தம்பதும
 பிந்தமொடு பதுமா லயம்
பதுமசிரை யம்பதும புட்கல மொழுங்கிற்
 படிந்திலகு பிருதி பிந்த
நிதிகொள்பிரு திக்கிரம நிமிர்பிருதி சுந்தர
 நெடும்பிரதம பால கூப
முதிர்செகதி குமுதங்க தம்பபட் டிகைபிந்திர
 முழுநீல மதின்மொய்ப் பவே. (24)

மீதுகோ மேதக மணித்தொகைக ளாலளவில்
 வேதிகை சிறந்து மின்னச்
சோதிசூழ் பவளவண் டூண்களோங் கிடவவை
 தொறுந்தொறும் வீர கண்டங்
கோதறு வயிடூரி யத்தினா லிசைபெறக்
 குடதாரி புரக மணியா
லோதுசீ ரணியொட்டு மதலைதர ளங்களா
 லுற்றெழுங் கொடிசெ றியவே. (25)

வயிரவண் போதிகை வயங்கமர கதகோல
மணியுத் திரங்கண் மலிய
வயல்பொருந் திபகொடுங் கைமீயா ளங்களு
மகாரசா லையிலொ ழுங்கும்
வியனுறும் பதுமரா கங்களால் வரிசைபெற
மீதரிய கர்ன கூடங்
கயமில்பஞ் சரமந்த ராளமும் புருடரா
கங்களா லோங்க மாதோ. (26)

தேவகூ டந்தேவ பந்திகள் பந்திசுத
திறனுசி மாநா சிமேற்
பாவுசீர் பெறுவன்னி மாலைகிர ணாங்குலவு
பதுமதள மொடுநா லியு
மேவுகாஞ் சனநவ மணித்தொகைக ளான்மிக
விளங்கவிமை யவர்வி யப்ப
மாவிமா கப்பிரபல மண்டப விலாசமிவ்
வகைபடைத் தருளி னனரோ. (27)

கொச்சகம்.

கலைமுனிவ னினிதமர்ந்த கனவரையி னிடைப்பிறந்து
மலைவருபைந் தமிழ்மணமு மலர்மணமு மளைந்துசெழுந்
தலைகெழுசந் தனவடவி தவழ்ந்தெழுதென் காலுலவ
நிலைபெறுசா ளரங்கள்பல நித்தியவிச் சுவனளித்தான். (28)

மகவரசன் முதற்சகல வானவர்க்கு மழியாத
சுகமுனிவர் பலர்க்குமங்கட் சூழ்மணிப்பீ டிகைகணல்கிச்
செகதலமெங் கணும்பரவு தேவலவேந் துடனடைந்த
விகல்படைமன் னவர்க்கிசைந்த விருக்கைகளு மருளினனால். (29)

பருவமழை முகில்களெனப் பல்லியங்க டொனிப்பவர்க்குங்
கருதுமபி நயநடனக் கலைகவிழி வனிதையர்க்கு
மருவுமணி யரங்குபல வகையுமினி தருள்புரிந்தான்
பெருவியவந் தொழிற்குரிய பெருந்துவட்டப் பிரமனரோ. (30)

கம்பலங்க டிருத்தியெங்குங் கதிர்த்தரள வடந்தூக்கி
வம்பவிழு நறுந்தருவின் மதுமலர்மஞ் சரிநிறைத்து
பம்புமணித் தூண்டொறும்பொற் பாவைகள்பற் பலநிறுவி
யும்பருளங் களிகூர வோவியமெண் ணிலபுரிந்தான். (31)

விரும்புபல மணியாலு மிளிர்பசுஞ்காஞ் சனத்தாலுங்
கரும்புநறு மடற்பூகங் கதலிகடோ ரணமைத்துத்
தரும்புதிய மலரிதழிச் சரமருணச் செழுங்கனிக
ளரும்புமிள நீர்முதன்மற் றனைத்துமங்கங் கருளினனால். (32)

கதிர்குலவு கனகமணிக் கலசங்கள் பலவமைத்துப்
புதியமுளைப் பாலிகைகள் பொலிவுறவவ் வயினிறைத்து
மதிதருபொற் கொழுந்தீப வகைதிசைக டொறுநிறுவி
யெதிர்தருமென் காதமிவ்வா றெழில்புனைந்தா னெவர்க்கு மிக்கான்.(33)

வேண்டுவன முழுதுகொடிப் பொழுதினில்விச் சுவப்பிரம
னாண்டுதன துளத்திலுன்னி யருளினளித் தெதிர்காட்டத்
தூண்டுசுட ரிரவியவன் றுணைமலர்த்தா டொழுதிறைஞ்சிப்
பூண்டுதிக ழன்பினொடு புகழ்ந்துமிக வியந்திருந்தான். (34)

இருந்தபின்பா யிரகிரண விரவிபல சாரணரைத்
திருந்தருளி னொடுநோக்கிச் சென்றுவிரை வினினீவி
ரருந்திறல்கூர் விபுதர்கட்கு மதிகதவ முனிவர்கட்கும்
பொருந்துமிந்த மணமுகுர்த்தம் புகன்றழைத்து வருதிரென்றான். (35)

சாரணரப் பகலவன்சொற் றலைமிசைக்கொண் டடிவணங்கிச்
சீரணவு மனவிரைவிற் சென்றுமுதற் கயிலைநண்ணிக்
காரணநா யகன்றிருமுன் கழறியதன் பின்னிமையோ
ராரணன்மால் புரந்தரன்மற் றருந்தவர்க்கு முணர்த்தினரால்.(36)

கலிநிலைத்துறை.

அந்த வேலையிற் கயிலைமால் வரைதனி லமரு
மெந்தை யாதியம் பிகையொடுந் திறல்விடை யிவர்ந்து
தொந்த பாசமு ருதபல் கணம்புடை சூழ
வந்து மேவினன் மணமணி மண்டப மாதோ. (37)

அண்ட மாதிமற் றுலகெலா முந்தியா லளித்த
கொண்ட னேர்தரு மேனிமா தவன்கரங் குவித்த
தொண்டர் சூழ்வரத் திருவொடுங் கலுழன்மேற் றோன்றி
மண்டு சீர்புனை விவாகமண் டபத்திடை வந்தான். (38)

பழும றைத்திரண் முழங்கவிண் ணவரடி பணிய
வழகு டைச்செழும் பவளவா யோதிம மதிற்கார்
தொழுவ ரத்திகழ் குழற்கலை மகளொடுந் தோன்றி
முழுவ திர்த்தமண் டபத்தடைந் தனன்சதுர் முகத்தோன். (39)

புகழ்ந்து சூழ்ந்தரம் பையரபி நயநடம் புரியத்
திகழ்ந்த நான்மருப் புடைமதக் களிற்றினிற் சிலையை
யிகழ்ந்த வாணுதற் கருங்குழற் சசியினோ டிவர்ந்து
மகிழ்ந்து வானவர் தொழுதிட வலாரியும் வந்தான். (40)

கூனி ளம்பிறை போலழ கியதனிக் கோடு
மேனி வந்தொளி ரருட்கய வதனமும் விளங்கக்
கானி றைந்ததார் துயல்வர வாகுவா கனமூர்ந்
தானி வர்ந்தவ னளித்தவே ரம்பனு மடைந்தான். (41)

பூரி யந்தர துந்துபி கடலென முழங்க
வேரி யந்தொடைப் புயவரைக் குலமிக விளங்கச்
சீரி யங்குவெம் பூதவீ ரியர்துதி செய்யத்
தாரி சைந்தமண் டபத்திடைக் குரோதனுஞ் சார்ந்தான். (42)

கற்ப கத்திமை யவர்துதி புரிந்துளங் களிப்ப
வெற்ப னைத்திகழ் பன்னிரு வாகுவும் விளங்க
நற்ப சுஞ்சிறைக் கேகய துரகத நடத்திப்
பொற்ப மைந்தமண் டபத்திடைக் குமரனும் புக்கான். (43)

மதிக்கு மெண்டிசைக் கதிரோ ருருத்திரர் வசுக்கள்
கதிக்கு மேனைய விமையவ ருரகரா காசர்
விதிக்கு மாதவர் சித்தர்மற் றெனையரும் விரைந்து
துதிக்கு மேமகல் பாமைமண் டபத்திடைத் தொக்கார். (44)

ஈண்டு மற்றிவை நிகழ்தரு மேல்வைபா ரிடமுற்
றுண்டு வாழ்வுயர் தேவல பூபதி யருளாற்
றாண்டு சாரண ருரைப்பவெவ் வரசருந் துறமித்
தேண்டு சீர்கொளா மோதமா நகரிடைச் சேர்ந்தார். (45)

அங்கர் கோரளர் பப்பரர் கேகயர் யவனர்
வங்கர் மாளவர் குச்சரர் கன்னடர் மாரடர்
கொங்கர் சினர்பாஞ் சாலர்மத் திரர்குரு நாடர்
சிங்கள ளாதிபர் முதற்பல தேசருஞ் செறிந்தார். (46)

சேர்ந்த மன்னவர் தம்மொடுந் தேவல நிருபன்
தேர்ந்த மந்திரர் சேனைபற் பலபுடை செறிய
வார்ந்த வாயிரங் கதிரவன் பதிசெல மதித்துக்
கூர்ந்த சீர்மணிக் கொடிஞ்யந் தேர்மிசைக் கொண்டான். (47)

கடலெ னும்படி கடகளி றெழுந்தன கடலிற்
படர்செ ழுந்திரை யெனவெழுந் தனகடும் பரிகள்
தடநெ டுங்கிரி யெனவெழுந் தனசயந் தனங்க
ளடல்செ ழும்பதா திகள்வரம் பிலவெழுந் தனவே. (48)

கவினி லங்கிய கதிருமிழ் பலமணிக் கவிகை
துவசம் பீலிசாந் தாற்றிமற் றேனவுந் துவன்றித்
தவனன் றீவிர மறைத்திருள் செயத்தர ணிபர்தந்
திவள்பைம் பொற்றட மகுடகாந் திகளைச் சிதைக்கும். (49)

முன்ன டந்திடு படைகளா னிலத்தெழு முதிர்தூண்
மின்ன ரும்புயல் குலவிய விசும்பெலா மறைத்துப்
பின்ன டர்ந்தலை கடற்குழி திடர்படப் பெருக்கித்
துன்னு மெண்டிசைத் கயக்கவுட் பள்ளமுந் தூர்க்கும். (50)

வயிர வெண்பிறை மருப்புடைக் கயம்பொழி மதமும்
பயில்க டுங்கதிக் கவினவெம் பரிவிலா ழிகளுங்
கயில்செ றிந்தபொற் கலனணி யரசர்தோள் கமழு
மயிலு ழும்பனி நீருமம் மறுகள ழுக்கும். (51)

கோடு சல்லரி காகளந் தகில்குட முழவம்
பாடு வெள்வளை துந்துபி தடாரிபொற் பணவம்
பீடு சால்பணை கிணிகுளிர் தண்ணுமை பிறவு
நீடு வேலையே முடைந்தென வியம்பின நெருங்கி. (52)

வேந்தர் பன்மணி மகுடமு மகுடமு மிடைந்த
காந்தி கொண்ட பொன் னிரதமு மிரமுங் கடிது
போந்தெ ரிர்ந்திட வவைதொறு முதிர்பொடி போர்த்துப்
பாந்த ளேந்திய பார்சுர ருலகையும் பழிக்கும். (53)

அணங்க னூர்பல ரணிமணிக் கவரிகா லசைப்ப
வணங்கு நூலெனு மருங்குலா ரிசைந்திரு மருங்கு
மிணங்கு கீதமு மபிநய நடன்மு மியற்ற
குணங்கு லாவுறு வந்தியர் புகழ்வளங் கூற. (54)

மகர குண்டல மகுடமுங் கதிர்கள்போல் வயங்கச்
சிகர வண்கிரி பொருதடந் தேர்மிசைச் சிறந்து
புகழ்பெ றுஞ்சிலை மதனனும் புறமிடப் புனித
வகம கிழ்ந்துதே வலன்மணிச் செழுமறு கடைந்தான். (55)

மறுகி டைத்தடந் தேர்மிசைத் தேவலன் வரலும்
நறும லர்க்குழற் பிறைநுதற் கயல்வரி நயனத்
துறுமு பொற்பொறிக் கனதனத் தோகையர் பலரும்
உறும துப்பெருக் கெதிர்ந்தவண் டொப்பென வளர்ந்தார். (56)

அனங்க வேள்விடுத் திடுமரு மலர்க்கணை யடரத்
தனங்கள் விம்முற விடையொசிந் திடவுடை தளரத்
கனம்ப யின்றபொற் கையினன் புயவெழில் கண்டு
மனங்கு லாமய லொடுதொட ருவர்பல மாதர். (57)

இந்த வென்றிமன் னவர்பிரான் புயந்திளைத் திணங்க
முந்து றுந்தவம் புரிகிலீர் நீரென முனிந்து
சந்த னம்புனு கணிந்தடி படர்ந்தெருந் தமது
மந்த ரம்பபாரு கொங்கையை வைவர்பன் மாதர். (58)

இவன்க லந்தமு தயின்றிடப் பெறுதநம் மிதழ்கள்
சிவந்தி ருந்ததாற் பயனெவ னென்பாரற் சிலபேர்
அவம்பி றந்தன மினியிவன் மார்பினு டணையத்
தவம்பு ரிந்திடு வோமெனச் சிலர்மனந் தளர்வார். (59)

தோற்று மத்தடந் தேர்த்துர கதங்களைத் தொடர்ந்து
போற்றி யன்பொடு பணிந்தினி நீவிரிப் பொழுது
மாற்ற ருந்திறல் வேந்தெழில் கண்டுநா மகிழ
வாற்றி மெல்லெனச் செல்லுமென் றொருசில ரறைவார். (60)

நொய்ய காந்தளங் கரத்துறை சுகங்களை நோக்கிப்
பைய நீவிர்சென் றளவிலா மணிக்கதிர் பரப்புஞ்
செய்ய தேரிடை வருமிவன் செவியினு டெமது
மையல் யாவையும் வருத்துமி னென்பர்பன் மாதர். (61)

சிங்க வேறனன் றிருவெழில் கண்டுளந் திகைத்துக்
கொங்கை மீதெலாம் பசலைபோர்த் திடக்கொழுங் காந்த
ளங்கை சூழ்வளை கலையிழந் தரிவைய ரனந்தர்
தங்க ளாசையாற் கனவுகொ லிவையெனத் தளர்வார். (62)

மாத ரார்பல வகைமயல் பெருகவேன் மன்னன்
வேத பாரகர் பரவவே ளையரொடும் விரைந்து
கோதை சூழ்புயப் பரிதிவா னவனெதிர் கொளப்போய்ப்
போத ருதகல் யாணமா மண்டபம் புக்கான். (63)

ஆய காலையி லமலையோர் பாகனு ரருளாற்
சேய மாமணி முடியிமை யவர்பலர் திரண்டு
சாயல் கூர்தடம் புயவரைத் தேவலன் றனக்குத்
தூய தாமண வொப்பனை செய்திடச் சூழ்ந்தார். (64)

வான ருநதிப் புனிதநீர் கொணர்ந்துள மகிழ்கூர்ந்
தான நான்மறை யார்த்தெழ மஞ்சன மாட்டி
மேனி லாவுறு புகழினன் மருங்குலில் விளங்கக்
கான ருமணிக் கனகமென் றுகிலலங் கரித்தார். (65)

துங்க மாமணிக் கதிருமிழ் தடமுடி சூட்டிப்
பொங்க மேவுறு பொலங்குழை கொழுஞ்செவி புனைந்து
திங்கள் சூழ்வட கிரிப்புயத் தங்கதஞ் சேர்த்தித்
தங்க வாபர ணம்பல கரத்திடைத் தரித்தார். (66)

சிலம்பெ னும்படி பரந்தொளிர் செழுந்தட மார்பி
லலங்கு பன்மணி யாரம தெண்ணில வணிந்து
வலங்கொ ளுங்கழல் வலப்பத மீமிசை வனைந்தே
இலங்கு பொற்கல மேனவு முறைமுறை யிசைத்தார். (67)

அண்டர் பற்பல வெழில்புரிந் தைங்கணைக் கரசுங்
கண்ட கத்துவெள் குறவர னளித்தகா வலனை
மண்ட பத்திடை வயங்குபொற் பீடிகை மீதி
லெண்டி சைத்தலை வருந்துதி செயவிருத் தினரால். (68)

ஆத னத்தெழுந் தருளிய தேவல வரசை
காத லுற்றிரு கண்களாற் கண்டுளங் களித்து
மாதர் பற்பலர்க் கூவிநீர் நந்திரு மாதை
மேத கக்கொண ருதிரிவ ணென்றனன் வெய்யோன். (69)

பானு மற்றிது பகரலு நன்றெனப் பரவி
நீனி றக்குழற் பைந்தொடி வனிதையர் நெடிய
வேனி கர்த்தகட் டேவதத் தைப்பெயர் மேவு
மானி ருக்குமக் கன்னிமா டத்திடை வந்தார். (70)

எழுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

கரும்புயல் வரைக டொறுந்திரிக் தலையக்
காத்தலை பயப்படக் கடுக்கை
யரும்பெருங் கானத் தடையவண் டினங்க
ளலமரக் கடிந்தற மறியார்
வருந்துறு மனம்போ லிருள்குடி யிருந்து
மான்மதங் காசறை நீவித்
தரும்புகை கமழ்ந்து சினைமலர்ப் படலை
தரித்தறச் செறிந்தபூங் குழலாள். (71)

திங்களங் குழவி சங்கரன் சடையுட்
சென்றடைக் கலம்புகச் சீறிப்
பொங்குறு திலதம் புனைந்துமாற் றுயர்ந்த
பொன்னிறம் படைத்தன ணுதலாள்
வெங்கணை மதனு மிரதியுங் குனித்த
வேழமென் சிலைகள்போல் விளங்கி
மங்குறு முனிவோர் மனத்தையுங் கவர்ந்து
வடிவுதங் கியபுரு வத்தாள். (72)

நடக்கட லலைத்துக் கயல்கருங் குவளை
சலத்திடைப் படிந்திடத் தள்ளி
மடற்குழை கிழித்துக் குமிழ்மிசை மறிந்து
வாள்கணை கடைப்பட வாட்டி
விடத்தினுங் கறுப்புற் றமுதினும் விளர்த்து
வேலினுங் கூர்ந்தரி பரந்து
திடக்கொலைத் தொழிலின் மறலியைப் பயிற்றிச்
செயங்குடி யிருந்தமை விழியாள். (73)

மருக்கமழ் குமிழ மலரினை வாட்டி
வடிவுவீற் றிருந்தநா சிகையாள்
திருக்கிளர் செழுநா ளிகந்தினைக் கடிந்து
திகழ்கல னணிந்துமா முனிவோர்
கருத்திருந் தாடு மூசல்போன் றுலவு
கனமணிக் குழையினுள் காமன்
உருத்தகு விழிவா ளட்டிய சாணைக்
கொப்பென வொளிர்கபோ லத்தாள். (74)

குமுதமு முருக்குங் கமலமுஞ் சிவந்த
கோவ்வையுங் கோபமும் வெள்க
வமுதிருந் தெழுந்த மதுரமெல் லிதழா
ளருந்தள வரும்பினை யலர்த்தி
நிமிர்கதிர்த் தரள மணிகளைத் துளைத்து
நிறைசெழு முருந்தினை மறைத்துத்

திமிர்தரு வளமை யரசுவீற் றிருந்து
சிறந்தொளிர் தந்தபந் தியினர். (75)

கலைகளெண் ணிரண்டுங் குறைவற நிறைந்த
களங்கமின் மதியெனக் கவின்கொண்
டிலங்கிய கருணை முகத்தினண் முகுந்த
னேந்திய வளைபுற மிடவே
றலைவரு மிளம்பூங் கமுகினைத் துறந்த
வணிமணிக் கழுத்தனு ளமுத
நிலைகெழு கரும்புங் கழையுமஞ் சலிப்ப
நிமிர்ந்தெழு மென்றடம் புயத்தாள். (76)

கறங்கிசை மகர வீணைவெந் கொடுப்பக்
கதிர்வளை புனைந்த முன் கரத்தாள்
மறந்திரை நரையுந் தவிர்தர வமுத
மகிழ்ந்தருள் காந்தளங் கையினாள்
திறந்தரும் பவளக் கடிகையிற் சிறந்து
திரண்டழ கொழுகுமங் குலியாள்
நிறங்கிளர் கிள்ளை யலகினுஞ் சிவந்து
நிரைநிரை நிலவுகூ ருகிராள். (77)

குடங்களைப் பழித்துத் தடமுடிக் கனகக்
குவட்டினை முனிந்துவெண் டரள
வடங்கொடு திரண்டு திடமலை மதனன்
மனத்தையுங் கவர்ந்துமார் பனைத்தும்
படர்ந்திறு மாந்து சுணங்குபூத் திளகிப்
பரிமளங் குடியிருந் தணிகச்
சடர்ந்துபூ ரித்துப் புளகமுற் றெழுந்த
வமுதபூ ரணவிள முலையாள். (78)

மாலினி துறைந்த வடவிளந் தளிர்போல்
வயங்கிய சிறியபண் டியினள்
கோலமென் மகிழ மலர்வனம் புகுதக்
குலவுறு மிலஞ்சியஞ் சுழியாள்
மேலுயர் களப விளமுலைக் குவட்டில்
வேண்மனஞ் சென்றுசென் றேறப்

பாலுரை வாணி கொழுநனன் றமைத்த
படியெனு மணிமடிப் புடையாள். (79)

களபமென் முலையாங் கடகளிற் றினத்தைக்
கட்டிய மணித்தொடர் கடுப்ப
வளர்தரு முரோம பந்தியா ளுலோபர்
வாழ்வெனத் தேய்ந்தசிற் றிடையாள்
தளமத னிரதத் திகிரிபோற் சிறந்து
தழைமணங் கமழ்கடி தடத்தா
ளிளநறுங் கதலி தளிர்பிடிக் கரம்பின்
னிடும்படி யிலங்குபொற் றொடையாள். (80)

மலிசிலை யலவ னளைபுக முனிந்த
மணிமுழந் தாளினுன் மதவேண்
நலிவுறு வெற்றி குறித்திட விதிமுன்
னல்குபொற் காகள நடுங்க
வொலிமலர்க் கணைபெய் தூணிவெந் நிடைச்சென்
றுறுவரால் புனலிடத் தொளிப்பக்
கலிகதிர் பரப்புங் கலன்பல வணிந்து
கவின்கெழு மிருகணைக் காலாள். (81)

மாரனு மிரதி வனிதையுங் கரத்தான்
மகிழ்ந்தெடுத் தாடுபந் திரண்டு
நேரெனத் திரண்ட குதியினன் மதன
நிறைசுக நிறுத்திடு நிறைபோற்
சீரழ கிமைக்குஞ் செழும்பா டுடையாள்
சிறந்தகோக் கோகநூ றீட்டும்
பூரண வின்பப் புத்தக மெனவே
பொலிவுறு பொற்புறந் தாளாள். (82)

அரிசனுங் குரங்போ லணிவிர லுடையா
ளருங்கழு நீரித ழனைய
வரிசைவா ளுகிரா ளனிச்சமென் மலரை
வாட்டியம் புயத்தினை யோட்டிப்

பரியுமோ திமத்தின் றாவியைப் பழித்துப்
பருவரைச் செயலையைக் கறுவித்
திரிபுரு வருண வலத்தகக் குழம்பிற்
செறிந்தசீ ருள்ளடி சிறந்தாள். (83)

பெருங்களித் தடக்கைப் பிடியையு மெகினப்
பெடையையும் பயிற்றிய நடையாள்
வருங்குயி லுவக்கு மரகத கலாப
மயிலெனு மியலினள் வரிவிற்
பொருங்கணை யனங்கன் மதித்தகெதள் வழுதும்
பொன்றிடா மின்னனும் பொருத்தி
யொருங்குறத் திரட்டி மலரய னமைத்த
தொத்தொளிர் திருவடி வுடையாள். (84)

களிக்குயி லுடைந்து கறுத்திட வெறுத்துக்
கரும்பினை யாலையாற் கசக்கிக்
கிளிக்குலங் கிரிபுக் கொளித்திட முடுக்கிக்
கின்னரஞ் சிறிதுறப் பற்றி
முளிக்குமெத் தருவுந் தழைந்திட விளித்து
முதிருமென் புயிர்பெற முழுத்தேன்
துளிக்குழக் கனிதெள் ளமுதினுங் கனிந்த
சுவைகுடி யிருந்தமென் மொழியாள். (85)

தக்கவிவ் வனப்பான் மிக்கவத் தேவ
தத்தையென் பவளைச் சார்ந்து
மைக்கரு நெடுங்கட் சிலதியர் பலரு
மலர்த்திரு முதல்வனி தையருஞ்
செக்கர்வின் மணிப்பொற் றசிம்பினிற் கங்கைச்
செழுநதி நறும்புனல் கொணர்ந்து
பக்கமுற் றிடச்சூழ்ந் தருமறை பகரும்
படித்திரு மஞ்சன மாட்டி. (86)

விலைவரம் பறியா நவமணிக் கேகவை
விளிம்புசூழ் கிரணமென் கனகக்

கலையிடைக் கணிந்துத் தரியமேற் புனைந்து
கருமுகிற் செழுங்குழன் முடித்து
மலர்நறுந் தெரியல் சூட்டிமுன் வகிர்ந்து
வயங்கிய சுடிகைநேர் தூக்கித்
திலதநன் னுதற்கீ ழரிபடர் நெடிய
சேல்விழிக் கஞ்சனந் தீட்டி. (87)

நித்திலந் தூங்கும் பணிமணித் தளுக்கு
நிறங்கிளர் குமிழிடை நிறுவி
யொத்திரு குழைக்கு மதனுளங் குழைக்கு
முருவுடைக் கலன்பல வணிந்து
நத்தினுந் திரண்ட கந்தர நிறைய
நவைதவிர் சரங்களும் பூட்டிச்
சித்திர முபய முலைக்குந்தோட் டுணைக்குந்
திகழ்தர வினிதெழு தினரால். (88)

புளகித களப விளமுலை சிறப்பப்
பொலிதரு தூயகச் சணிந்து
வளர்கதிர்த் தரள மணிவடஞ் சூட்டி
மான்மதம் புனுகுமட் டித்துத்
தளநறுங் கமலக் கரங்களிற் கடகஞ்
சரிவளை தொடிபல தரித்து
விளர்விசும் பனைய சிற்றிடைக் கிணங்க
விலைதவி ரிரதன மிட்டார். (89)

அனிச்சமென் மலரிற் பணிப்புறு பதத்திற்
கலத்தக நறுங்குழம் பெழுதிக்
தொனித்தெழு கனக நூபுரஞ் சதங்கை
சுடர்மணிப் பாடகஞ் சூழ்வித்
தினிப்பிற வணிக ளெனவுந் தரித்திட்
டிரதியுந் தொழுநின் றேத்தத்
தனிப்பெரு மதனுந் தளர்ந்துளங் கலங்கத்
தையலை யலங்கரித் தனரே. (90)

இடங்கொள்பாற் கடலி னெறிதிரை பொருவு
மெழிற்கவ ரிகளிரு மருங்கு
நுடங்கிடை மடவார் சிலர்களின் றிரட்ட
நுவன்மதிக் கவிகைமே னிழற்ற
வடர்ந்தெழு முலையார் சிலர்நறை குலவு
மடப்பைக டாங்கியங் கணைய
விடந்திகழ் விழியா ரளப்பிலர் களப
மென்மலர்க் கோடிக மேந்த. (91)

சில்லரிச் சிலம்புஞ் சிறுமணிக் குலமுஞ்
சிற்றிடைக் கிரங்கிய திறம்போற்
கல்லென வொலிப்பத் தாளமா மணிகள்
கலைமதிச் செழுநில வுமிழ
வல்லணி முலைக டாம்பமே கலைகள்
வயங்கவால் வளைதொடி கடகம்
வில்லெறி சரிவாய் விடுத்தெழுந் தார்ப்ப
மென்மலர் பரிமளம் வீச. (92)

பல்லியங் கறங்கப் புலோமிசை வாணி
பங்கயத் திருமுதற் பலருஞ்
சொல்லிய தேவ ததைதமா மயிலைத்
துதித்தழைத் திருபுடை சூழ்ந்து
மெல்லிய மலரி னிதழ்விரித் திருந்த
விழுத்தகு நிலத்திடை நடத்தி
வல்லிய மெனுந்தே வலன்மகிழ் வுறமுன்
மணித்தவி சிருத்தினர் மாதோ. (95)

கலிவிருத்தம்.

வரிவளை காகள மதங்கந் தண்ணுமை
யரியதுந் துபிதுடி யாம்பல் சல்லரி
பரிமுர சொடுதவில் பணவ மேனவும்
விரிகடல் வெருவுற மீறி யார்ப்பவே. (94)

அனகடை யரம்பைய ரபிந யத்தொடு
மனமகிழ் பரதநூல் வகைந டித்திடக்
கனவரு நாரதன் கருதா தும்புரு
வினமலி விஞ்சைய ரிசையெ ழுப்பவே. (95)

மலைமகள் பூமகள் வனச மீதுறை
கலைமகள் புலோமிசை கரும்பு போன்றசொ
லலைமக ளேனையர் யாரு மன்பொடு
நிலைகெழு சோபன நிறைந்து பாடவே. (96)

அம்புய மலரய னாதி வேதியர்
பம்பிய நான்மறை பகரு மவ்வழி
நம்புயர் கபிலையி னறுநெய் யதிதூய்
வம்புறு தெய்வமா மகம்வ ளர்க்கவே. (97)

சங்கரன் மாதவன் றனிம ருப்புடை
யைங்கரன் முருகவே ளநங்கன் கோபதி
யெங்கணு நிறைசுர ரெவரு மின்பமேற்
பொங்கமெய் முனிவரர் புகழ்ந்து வாழ்த்தவே. (98)

கனலொளிர் கரத்தினன் கருணை யாணிதி
யெனவரு தேவல னின்ப முற்றுயர்
தினகரன் சோதரி திருக்க ழுத்தினில்
வனமணி மங்கல மகிழ்விற் சூட்டினன். (99)

துதித்தன ரிமையவர் சூழ்ந்து கற்பக
மதுப்பொழி நறுமலர் மாரி தூற்றினர்
கதிர்ப்பக லவனிரு கண்க ளித்தனன்
புதுப்புனு கணிபுயம் புளகம் பூப்பவே. (100)

கதிரவன் மகிழ்ந்துபின் காம தேனுவான்
முதிர்நவ மணிசெறி முடிவின் ஞோர்க்குநீ
டதிர்திரைக் கடற்புவி யரசர் மாதவர்
வதிபிற ரெவர்க்கும்வேண் டுவவ ழங்கியே. (101)

கள்ளறு மாலிகை களபம் பாளிதம்
வெள்ளடை பாகணி விளங்கு பூணுநூல்
தள்ளரு மவரவர் தமக்குத் தக்கவை
யொள்ளிய மணிக்கலத் துதவி னாரரோ. (102)

தேவலன் பின்கொணர்ந் துளசெ ழுங்கலை
மூவர்மா தவம்புரி முனிவர் மங்கையர்
தாவரும் விண்ணவர் தரணி மன்னவர்
யாவரு முவப்பவவ் வவர்க்கு நல்கியே. (103)

வித்தகன் றனக்கொரு மிளிர்ம ணித்துகி
லத்தலை யளித்தலு மவன்பி ணங்கிநீ
யித்தலை சுரர்க்குமே லையர்க்கு மீந்தபின்
வைத்துள கலையையாம் வாங்க லேமரோ. (104)

முதலுற நீயவண் முறையி னெய்ததொன்
றுதவிடிற் கொள்வமென் றுரைப்ப மன்னவன்
பதனறுங் கலைதரப் பயனின் றாயினும்
இதமிது வென்னவேற் றேத்தி னாரரோ. (105)

ஈரிரு தினமண வியல்பி யன்றபின்
யாருமன் னவர்ப்புகழ்ந் தாசி கூறியே
தேரிடை தொறுந்தொறுஞ் சென்று நண்ணினர்
சூரிய வானவன் றொழுத னுப்பவே. (106)

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

அவ்வயி னமர்ந்து சின்னா ளரிவையோ டின்பந் துய்த்துத்
தெவ்வமர் கடந்த வைவேற் றேவல நிருபன் பின்னர்
கவ்வையங் கடல்சூழ் பூமி காவல ருடனெ ழுந்தே
யெவ்வமில் புகழா மோத வெழினகர் செலநி னைந்தான். (107)

வெய்யவ னெழுந்தே வாங்கன் விளம்பமற் றவனவ் வேலை
மையலங் களிறு பாய்மா மணிநெடுங் கொடிஞ்சித் திண்டேர்
மெய்யடர் பதாதி தானை முடிமுத லணிய நேகந்
தையலர் பலரு மேனை வரிசைசிந் தந்து பின்னர். (108)

*கந்துகங் கழகம் மானை கதிர்மணிச் சிவிகை செம்பொற்*
*சுந்தர மஞ்ச மற்றுஞ் சோதரி தனக்கு நல்கிச்*
*செந்திரு வனைய சாயா தேவிசே ரிரவிப் புத்தேள்*
*அந்தமி லுவகை பூப்பத் தழுவியங் கனுப்பி னானால்.* (109)

*பகலவன் விடைபெற் றந்தப் பைந்தொடி யொடுதே வாங்கன்*
*நகைமணித் தேர்மேற் கொண்டு நாற்பெருஞ் சேனை சூழச்*
*சகலவேந் தருநெ ருங்கத் தரளவெண் குடைநி ழற்ற*
*வகலிரு விசும்பு நீங்கி யவனியிற் படர்ந்தா னன்றே.* (110)

*மணிநிறை குடங்க ளாதி வழங்குநன் னிமித்தந் தோன்றப்*
*பணியர வல்குன் மாதர் பலர்களா லாத்தி சுற்றத்*
*திணிபுயா சலனா மோதத் திருநகர் விரைவி னெய்தி*
*யணிகொடே ரிழிந்து மாதோ டம்பொன்மா ளிகையிற்*
*[புக்கான்.* (111)

*பற்பல வரசர் கட்கும் மதிசெலக் கருணை நல்கித்*
*தற்பர னளித்தோன் றேவ தத்தையோ டின்பந் துய்த்துச்*
*சொற்படி மறையோர் வாழ்த்தச் சுடர்மணி தவிசி னேறிப்*
*பொற்பமை யமைச்சர் போற்றப் புவிபுரந் திருந்தான்*
*[மன்னோ.* (112)

**கருத்து :—** கயிலையங்கிரியில் இறைவனார் ஒரு நாள் தேவலன் திருமணம் செய்து கொள்ள வேண்டுமென்று திருவுளங்கொண்டு முனிவர்களை நினைத்தார். முனிவர்கள் வந்து அடி பணிந்தார்கள். முனிவர்களைப் பார்த்து சூரியனிடம் சென்று அவன் தங்கை தேவதத்தையை தேவலனுக்கு மணம் செய்வதற்காக ஒரு நல்ல முகூர்த்தம் பார்க்கும்படி கேட்கச்சொன்னார். முனிவர்கள் சூரியனிடம் சொல்ல சூரியன் நான்முகனிடம் கூற நான்முகன் வைகாசித்திங்கள் பூர்வபட்சம் சத்தமி நாள் புதன் கிழமையன்று ஆறு நாழிகைக்குமேல் நல்ல நாள் என்று குறித்துக் கொடுக்கஅதை இறைவனிடம் சமர்ப்பித்தனர். பிறகு சூரியன் விசுவகர்மாவை அழைத்துத் திருமண மண்டபம் ஒன்றைத் தக்கபடி அமைக்கச் சொன்னான். திருமண அழைப்பும் தேவர்கள் மக்கள் எல்லாருக்கும் அனுப்பப் பட்டது. குறித்த காலத்திற்கு முன்பே இறைவன் இறைவி உட்பட தேவர்கள் மன்னர்கள் முதலியோர் எல்லாரும் வந்தார்கள். தேவலன் திருமணக் கோலத்தோடு சூரியலோகம் சென்றான். மணமக்கள் இருவருக்கும் எல்லாத் திருமணக் கோலங்களும் செய்யப்பட்டன. இன்னிசை ஒலிகளுக்கு இடையே திருமறைகள் ஒலிக்க தேவதத்தைக்கு தேவலன் திருமங்கல நாணைச் சூட்டினான். மணமக்களை எல்லோரும் வாழ்த்தினார்கள். பரிசுகள் சீதனங்கள் வழங்கப்பட்டன. தேவதத்தையோடு தேவலன் தன்னகரம் வந்து சேர்ந்தான்.

## பதினாறுவது

# பெருமான்புதல்வரைப் பெற்றசருக்கம்.

[இச்சருக்கத்தில் தேவலனுக்குப் புதல்வர்கள் தோன்றிய செய்திகள் கூறப்பட்டுள்ளன ]

கலிவிருத்தம்.

பழுது றுவருட் பண்ணவர் சூதனைத்
தொழுது தேவலன் றாயசெங் கோன்முறை
வழுவில் சீர்புனை மைந்தர் வரவினை
முழுது நீமொழி கென்ன மொழிகுவான். (1)

ஒன்ன லார்வந் துவந்து தொழுந்திறன்
மன்ன னண்மணி மாமுடித் தேவலன்
றன்ன தானை தனைப்புவி மீதினி
வின்ன வாறென் றிசைப்பவர் யாவரே. (2)

நாற்கு லங்க ளடைபிற ழாதுற
நூற்கு லங்க ளுவல்பொரு ளெங்கணு
மேற்க முப்பத் திரண்டற மும்புவி
மேற்க லந்து விளங்கிநின் றோங்குமால். (3)

புலியு மானும் பொருந்தி யொருதுறை
மலியு நீருண்டு வாழ்ந்து சிநேகமாம்
எலியி யாள மிரண்டுமொன் றென்றிட
நலிவு றுமமிலங் நாளு நயக்குமே. (4)

வருத வக்குறை மற்று மலடலி
யிருதி னைக்குறு மில்லையந் நாட்டினி
லருமை சற்குண மன்பு நலந்திடங்
கருணை மெய்ப்பொருள் கல்வி தழைக்குமே. (5)

வஞ்ச மென்பது வாட்பெய ரேயலால்
நெஞ்ச மொன்ற நினைப்பதங் கில்லையாற்
பஞ்ச மென்பது பன்னுந் தொகையலால்
அஞ்ச வந்த வருமிடி யன்றரோ. (6)

மதமெ னுஞ்சொல் வளர்கயத் தன்றியெவ்
விதமு மைந்தர்தம் மெய்புளத் தில்லையா
லதமு னுஞ்சொலத் திப்பெய ரல்லது
கதமு றுங்தொழில் காட்டுவ தில்லையே. (7)

இலையெ னுஞ்சொ லிருந்தமைப் பேரலான்
மலைவு கொண்டவின் மைப்பொரு ளோத்தரா
தலையெ னுஞ்சொ லருந்தடத் தன்றிமுன்
னிலைவி ளம்பு நெடுமொழி யன்றரோ. (8)

இன்ன சீர்பெற் றிலங்குஞ் சகரநாட்
டன்ன தேவல னண்டர் பிரானென
மின்னல் கூர்முடி வேந்தர் திறைதர
நன்னர் நீதி நடத்துமங் நாளிலே. (9)

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

சிலம்பென வளர்ந்த திண்டோட் டேவலா திபன்ம ணந்த
தலம்புகழ் கற்பிற் றேவ தத்தைமா மயில்சூன் முற்றி
வலம்புரி வருந்தி முத்த மணியுயிர்த் ததுபோன் மாறு
நலம்புனை புதல்வர் மூவர் தம்மைநற் றவத்தாற் பெற்றாள். (10)

தந்தையும் பயந்த தாயும் தனயர்க டம்மை நோக்கிச்
சிந்தையின் மகிழ்வு கூர்ந்து செனித்திடு மவ்வவ் வேளை
வந்திடு பதினொன் றுநாள் வாய்ந்தசா தகம்வ ரைந்து
முந்திய சுருதி தேர்ந்த முனிவரர் பெயரு மிட்டார். (11)

திருந்துதிவ் வியாங்கனென்றுந் திகழ்விம லாங்க னென்றும்
வருந்தவ ளாங்க னென்று மதித்தபேர் தரிந்த பின்னர்
இருந்ததொன் மறையொ ழுங்கி னியல்வழா தினிதொ ராண்டுள்
அருந்தவர் முனிவர் வாழ்த்த வமுதமு நுகர்வித் தாரால். (12)

சார்ந்திடும் மவ்வவ் வேளை சவுளநற் கன்ன வேதை
யார்ந்தநூ லியல்பி னுற்செய் தாயபி னைன்பா னுண்டி
லோர்ந்துவா னவர்கொண் டாட வுபநய னம்பு ரிந்து
சேர்ந்தவா கமநால் வேதப் பயிற்சியுந் திருத்தி னாரால் (13)

பெற்றினி தெடுத்த தாயும் பிதாவுமுண் மகிழ்வு கூர
முற்றிய வெழில்கொண் மைந்தர் மூவரு முறைவ ழாமற்
கற்றிடு மறையோ டெந்தக் கலைகளும் பலப யின்று
மற்றிரு மதனு நாண வளர்மதி யெனவ ளர்ந்தார். (14)

சிறுவர்தம் பருவ நோக்கித் தேவல னிரவிப் புத்தேள்
பெறுதிரு வனைய திஞ்சொற் பிரபைதிவ் வியாங்க னுக்கும்
உறுபது மாட்சி யின்ப முயர்விம லாங்க னுக்கும்
மறுவறு சபலாட் சிப்பேர் மான்றவ ளாங்கனுக்கும். (15)

மன்றலந் தெரியல் சூட்டி வானவ ரேனோர் வாழ்த்த
நன்றணி மணஞ்செய் வித்து நலனுறு திவ்வியாங்கற்குப்
பொன்றிகழ் முடிநன் னுளிற் புனைந்துமந் திரிகள் போற்றத்
தன்றிரு வரசு நல்கித் தடம்புயம் புளகம் பூத்தான். (16)

சயந்தனை யினிதி னீன்ற சசியுங்கோ பதியு மென்ன
வயங்குறு தேவ தத்தை மயிலுந்தே வலனு மின்புற்
றியங்குள மகிழ்வு பூப்ப விசைவழா திருந்திவ் வியாங்கன்
செயங்கெழு செங்கோ லோச்சிச் செகதலம் புரந்தா
[னன்றே. (17)

மால்பொரு தேவாங் கற்கு வயங்கெழு மனந்த னன்று
சால்புறு மன்பிற் றந்த சந்திர ரேகை யென்னும்
வேல்பணி தடங்கட் செவ்வாய் மெல்லியல் கருப்ப முற்றிப்
பால்பொருந் தியதிக் கெங்கும் பரவவோர் சுதனை யீன்றாள். (18)

மதலைவந் துதித்தா னென்ன மன்னர்கோன் மனங்க ளித்து
விதமுறு வேத நூலின் விதிமுறை வழாமற் போற்றிச்
சுதர்மனென் றொருபே ரிட்டுத் தூயபல் கலைய னைத்தும்
கதழ்வுறப் பயிற்றி னுற்றான் காசினி புகழ மாதோ. (19)

இசைகொடே வாங்க னிவ்வா றினிதுவீற் றிருக்கு நாளிற்
குசைநெடுந் நிலைய யாளுங் கொடுஞ்சூர சேன னென்பான்
கசரத துரங்க மொய்ப்பக் கடும்படை கொடுபோ ருன்னி
வசையறு புகழா மோத வளநகர் தனைவ ளைத்தான். (20)

மாண்டகு சூர சேனன் வரவுணர்ந் தரசர் கோமான்
சேண்டொடு தேர்மேற் கொண்டு சேனைகண் மருங்கு சூழ
வாண்டணைந் தயத்தின் கூட்டத் தரும்புலி யடர்ந்தா லென்னப்
பூண்டவிற் கணைக ளேவிப் பொருதினன் புகழ்நின் றோங்க. (21)

திருக்கிளர் மார்பன் சூர சேனனைப் படையி னோடும்
முருக்கியந் தகனா டேற்றி முடிவிலா வாகை தாங்கித்
தருக்குறு மவன்முன் னாண்ட தனிக்குசைத் தீவுக் கெல்லாம்
வருத்தமில் சுதர்மன் றனை யரசென மௌலி சூட்டி. (22)

அவந்திநாட் டரச னீன்ற வரியபுட் கலைய ணங்கைச்
சிவந்தழ லுமிழுங் கூர்வேற் சிறுவனுஞ் சுதர்ம னென்பாற்
குவந்திட வதுவை சூட்டி யுலகெலாங் களிப்புற் றோங்கத்
தவம்புரி மறையோர் வாழ்த்தத் தனதனொத் திருந்தா னன்றே. (23)

**கருத்து:**—தேவல மன்னன் ஆட்சி செய்கையில் முப்பத்திரண்டு அறங்களும் நாட்டில் விளங்கின. மேலும் நீதி நூல் முறைப்படி ஆட்சி நடைபெற்றது. எல்லாவுயிர்களும் நன்மையும் செழிப்பும் பெற்றார்கள். இப்படியிருக்கையில் தேவதத்தை கருவுற்று நல்ல வேளைகளில் மூன்று புதல்வர்களைப் பெற்றாள். மன்னன் மகிழ்ந்து அவர்களுக்கு திவயாங்கன், விமலாங்கன், தவளாங்கன் என்னும் பெயர்களை இட்டான். புதல்வர்களும் நன்றாக வளர்ந்து எல்லா சடங்குகளும் செய்யப்பெற்றனர். தக்க வயதில் பூணூலும் திருமறைப் பயிற்சியும் கல்வியும் தரப்பட்டன. பிள்ளைகளுக்கு மணப்பருவம் வந்ததும் திருமணங்கள் நடந்தன. சூரியன் புதல்விகளான பிரபை, பத்மாட்சி, சபலாட்சி என்ற பெண்களை மூன்று அரச குமாரர்களுக்கும் மணஞ் செய்தார்கள். பின்பு, திவ்யாங்கனுக்கு திருமுடிசூட்டப்பட்டது. தேவலனின் மற்றொரு மனைவியும் அனந்தன் மகளுமான சந்திரரேகைக்கு சுதர்மன் என்ற புதல்வன் பிறந்தான். அப்போது குசைத் தீவின் அரசன் சூரசேனன் என்பான் ஆமோத நகரின் மீது படையெடுத்தான். அதுகண்டு தேவலன் போர்க்கோலங் கொண்டு சூரசேனனைக் கொன்று தன்னுடைய மகன் சுதர்மனுக்கு அந்நாட்டு அரசைத் தந்தான். சுதர்மனும் அவந்தி நாட்டுப் புட்கலையை மணந்து செங்கோலை நடத்தினான்.

பதினேழாவது

## நிருதர்போர்க்கேக நினைத்தசருக்கம்.

*[இச்சருக்கத்தில் அரக்கர்கள் அழுக்காறு உற்றுப்போருக்கு ஆயத்தம் ஆதல் கூறப்பட்டுள்ளது.]*

*அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.*

செவிக்கமு தெனவி ளுவித் திருந்திய தவத்தோர் செங்கை
குவித்தனர் தொழுது போற்றிக் கோதறு குணத்தின் மிக்கோய்
புவித்தலம் புகழ்தே வாங்கன் புண்ணிய சரித மின்னு
நவிற்றுதி யெங்கட் கென்ன நான்மறைச் சூதன் சொல்வான் (1)

அமைதிபெற் றிவ்வா றந்த வரசன்வீற் றிருக்கு நாளிற்
கமைதவிர் நிருதர் யாருங் கலையில ராகி மாந்த
ரிமையவர் தமக்கு நாணி யெரிதரு மனத்தோ டேகித்
தமையினி தாளும் வச்ர தந்தனை யடைந்து சொல்வார். (2)

அண்ணல்கே ளிமையோ ரேனோ ரியாவரு மளவி லாத
வண்ணமென் கலைகள் வேய்ந்து வருமன மதத்தார் நம்மை
யெண்ணலர் சிறிது நாண மிகுநிரு வாண ரென்ன
வுண்ணகை முறுவல் காட்டி யுயர்வற விகழ்ந்தா ரென்றார். (3)

வச்சிர தந்த னென்னு மன்னனங் கதனைக் கேளா
வுச்சிகம் பிதஞ்செய் தேதன் னுடனவ தரித்த வீர
ரச்சுறு புலிமு கனபோ ரடிசர்ப்ப னாவ னென்ன
மெச்சுமிவ் விருவர் தம்மை விரைவினில் விளித்துச் சொல்வான்.
(4)

கேட்டிரா லனுசர் காள்பொற் கிளர்முடி விபுதர் யாரும்
நாட்டிருங் கலைகள் வேய்ந்து நமைமிக வெள்ளி னாராம்
நீட்டிய புகழ்தே வாங்க நிருபனு மவர்கட் கீந்தான்
வாட்டிற னமக்குத்தானே வழங்கிலன் மதியான்போலும். (5)

வேதமா முனிவர் போற்றும் வெள்ளியங் கிரியி னுற்ற
நாதனு கிலுந மக்கு நல்குகென் றுரைத்தா னல்லன்
ஆதலால் விண்ணு டெய்தி யண்டர்கோன் றளேமு ருக்கிச்
சீதவா ரிசநீங் காத தேவையுஞ் சிதற வாட்டி. (6)

கேசவன் றனையும் வென்று கேழ்கிளர் மகுட வானோர்
தேசுறுந் திறமை முற்றுஞ் சிதைந்தவர் கருவ நீங்க
வீசனுங் கலக்க மெய்த வின்றுநா மெதிர்போர் முற்றி
மாசறும் புகழ்கூர் வாகை வனைந்திடல் வேண்டு மென்றான். (7)

தம்முனோ னினைய கூறத் தம்பிய ரவனைப் போற்றி
யெம்மையா ளிறைவ கேட்டி யிமையவ ரிரிய வாட்டி
யம்மக பதியை வெல்வ தருமையன் றனையாற் காகத்
தெம்முனோர் வருமா யோனைச் செயங்கொள முடியா தென்றார். (8)

இளையவ ரிருவர் தாமு மிவ்வகை யியம்ப லோடும்
வளமலி வச்ர தந்தன் மற்றவர் தம்மை நோக்கி
யுளமிக மருண்டீர் போலு மொன்னலர் தமக்கு நாணிக்
களவரோத் கியிர்சு மந்து காப்பதிற் பயன தென்னே. (9)

இதற்கினி யாலோ சிப்ப தெவனியா மெவரும் பொன்னா
டிற்புகுந் திமையோர் வேந்தை யலைக்குது மந்த வேளை
மதுத்துள வணிந்த மார்பன் வரினவன் றனக்குஞ் சாமற்
கொதித்தமர் புரிது நம்மாற் கூடின வரையு மென்றான். (10)

மன்னிது சொலவன் னோன்பின் வந்தவர் வணங்கி யைய
முன்னர்யாம் பல்கால் வானோர் முதல்வனோ டமர்தொ டங்கி
யன்னவன் றனைமு ருக்கு மமயத்தி லங்க ணேற்ற
மின்னகு திகிரி யாற்கு வெருவியே வெங்கிட் டேமால். (11)

இன்றுமச் சுதனுக் காற்ற திரிந்துவெங் கிடுதல் வீர
மன்றுநா மரனை யுன்னி யருந்தவம் புரிந்தன் னோனால்
வன்றிறல் வரம்பெற் றப்பான் மணிமுடி விபுதர் கோன்மேற்
சென்றிடி லெவரு நம்மைச் செயங்கொள வரிய தென்றார். (12)

தகுமிது வெனவே வச்ர தந்தனவ் விருவ ரோடும்
மிகுமகிழ் சிறந்தெ ழுந்து விரைவினோர் வனத்தி னெய்தி
நகுகறை மணிமி டற்று நாதனைக் கருத்தி லுன்னித்
தொகுதிகொண் மகத்தி னோடு நாய்த்தவம் புரிதான் மன்னோ. (13)

கூருகி ரனைத்து நீண்டு குவலயத் திடைவே ரூன்றச்
சீருறு விகங்கங் கோடி சிகையிற்பஞ் சரங்கள் செய்யப்
பேருரு விளைப்புற் றென்பு பிறங்கவெண் ணரம்பு தோன்றப்
போருட னிருத ரெண்ணில் பொழுதருந் தவம்பு ரிந்தார். (14)

நோற்றிடு நிருதர் தம்முன் னுவலருங் கயிலை வெற்பின்
மேற்றிகழ் பரமன் ஞான விமலையோ டிடப மூர்ந்து
கீற்றிளம் பிறையூர் வேணி கிளர்செழுங் கதிர்ப ரப்பத்
தோற்றிநன் றுமக்கு வேண்டும் வரமெவன் சொன்மி னென்
[றான். (15)

மூர்த்திமற் றிதுவி ளம்ப மூவரும் பணிந்து போற்றிச்
சீர்த்திரு மறையுங் காணுச் செல்வவிவ் வுலக மெங்கும்
பார்த்தொளிர் பரிதி யின்றிப் படாதுணங் கறலென் றென்றும்
போர்த்திடல் வேண்டு மிந்த வரமருள் புரிதி யென்றார். (16)

கையரிவ் வாறு வேண்டக் கண்ணுதன் மைந்தர் காளவ்
வெய்யவ னுதய மின்றேல் விண்ணவ ரேனை ரியாரு
முய்வகை யரிது வேத வொழுக்கமும் பிறவு நீங்கி
யையுறு மதனு லன்ன தன்றிமற் றதுகேண் மென்றான். (17)

கண்டகர் பின்னுந் தாழ்ந்து கைதொழு தினிது போற்றி
யண்டர்தம் பெரும வெங்கட் கவ்வகை யளியா யேனும்
மண்டல வுதய பானு வருடமொன் றுதியா வண்ணந்
திண்டகு முருள்ப ரப்பும் படியருள் செய்தி யென்றார். (18)

அவ்வகை தந்தோ மென்ன வமலனங் கருளிவார்ந்த
மவ்வலங் குழலி யோடு மறைதலு மளவி லாத
வெவ்விருட் பிழம்பு தோன்றி மேலெழுந் தோங்கி விண்பார்
செவ்விடை யின்றி யோரெண் டிசைதொறு மலிந்த மாதோ. (19)

திமிரமெங்க னும்படர்ந்து செறிதல்கண் டுவந்து தீயோர்
மமதையோ டெழுந்து வீர மயேந்திர மெனப்பேர் பெற்ற
தமதுநன் னகர்வந் தெய்திச் சார்ந்தபின் வச்ர தந்தன்
நமனையு முறுக்குந் தூது நடையரை விளித்துச் சொல்வான். (20)

வேயர்கா ணீகி ரின்று விரைவினிற் படர்ந்து வெவ்வே
றுயபஃ றிசையி னுற்ற வரக்கர்யா வரையு நம்பா
லேயவிங் கழைத்து வம்மினெனவவ ரினிது போற்றி
வாயுவு மனமு நாண மறலியு மொழிப்பச் சென்றார். (21)

சாரணர் திசைக டோறுஞ் சார்ந்தினி தழைத்த லோடுங்
காருடற் பிறைமெ யிற்றுக் கண்டகர் பலருங் கூடிக்
கூருடைப் படைக டாங்கிக் கொடியபோர்க் கோல ராகி
யேருறு வச்ர தந்த னிடத்தில்வந் தடைந்தா ரன்றே. (22)

அம்பரந் தொறுநி றைந்த வரக்கர்யா வரையு நோக்கி
வம்பட ரடிம னத்து வச்சிர தந்த னென்பான்
வெம்பகை வரைநா மின்று வெல்வது திண்ண மென்றே
யும்பர்தம் பெருமா னுற்ற வுலகின்மேற் செலம தித்தான். (23)

**கருத்து:—** அந்த நாளில் அரக்கர்கள் ஒன்று கூடித் தேவலன் கலைகளை வழங்காததை எண்ணி நாணமுற்றார்கள். தங்கள் தலைவனாகிய வச்சிர தந்தனிடம் சென்று தாங்கள் புறக்கணிக்கப்பட்டதைக் கூறினார்கள். அவனும் தனக்குத் தம்பிகளான புலிமுகன், சர்ப்பநாகன், என்பவர்களோடு ஆலோசனை செய்தான். "தேவர்களே இதற்குக் காரணம், அவர்களோடு போர்புரிய வேண்டும்." என்று யோசித்தார்கள். இந்திரனை வென்றுவிடலாமென்றும் திருமால் உதவிக்கு வருவான் என்றும் அப்போது என்ன செய்வது என்றும் யோசித்தார்கள். சிவபெருமானிடம் தவம் செய்து தக்க வரம் பெறவேண்டுமென்று தீர்மானித்தார்கள். அதன்படியே அரக்கர்கள் மூவரும் கொடிய தவம் செய்தார்கள். அதற்கு பெருமான் மகிழ அவர்கள் உலகம் இருட்டாயிருக்கவேண்டுமென்று வரம் கேட்டார்கள். அது தகாத வரம் என்று இறைவன் மறுக்க ஒரு ஆண்டாவது உலகம் இருள் அடைய வேண்டும் என்று கேட்டார்கள். சிவபெருமான் அவ்வரத்தைத் தரவே உலகம் முழுவதும் இருண்டுவிட்டது. அரக்கர் தலைவன் தூதர்களை அனுப்பி எல்லா உலக அரக்கர்களையும் வரவழைத்தான். வீரமயேந்தரபுரத்தில் அரக்கர்கள் எல்லாம் கூடி ஆயுதபாணிகளாகிப் போர்க்கோலம் கொண்டார்கள்.

## பதினெட்டாவது

# அரக்கர்தேவலனமர்க் கஞ்சியசருக்கம்.

[இச்சருக்கத்தில் அரக்கர்கள் தேவர்களின்மீது போர்செய்து துறத்தியதும் இறைவன் ஆணையால் தேவலன் தேவர்களுக்கு உதவியாகச் சென்று அரக்கர்களை தோல்வியடித்ததும் கூறப்பட்டுள்ளது.

எழுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

போத முற்ற வியாச னோதுபு ராணம் யாவுமொ ருங்குதேர்
சூத னிப்படி மொழிய வேணி துளக்கி யன்பொடு தொழுதுபின்
மாத வத்தின ரும்ப ரோடடல் வலிய வச்சிர தந்தனன்
றேத முற்றமர் செய்த வாறு மியம்பு கென்ன வியம்புவான். (1)

கனக வச்சிர கவச மிட்டடு கணைநி றைத்துவ தூணிநீள்
வனவ ரைப்புய மிசைத ரித்தயில் வாள்கொ டுஞ்சிலை தாங்கியே
வினைகள் பற்பல விளைம னப்பொரு விறல ரக்கர்க டம்பிரான்
சினம தத்தரி யெனவ கைத்தொரு தேரின் மீதினி லேறினன். (2)

அனுச ராய்வரு புலிமு கத்திற லாள னும்பணி நாவனுங்
குனிபி றைச்சிலை மைந்தர் சூரிய கோப னக்கினி கோபனுங்
கனல்கொ திக்கபு கைக்க ணன்பொரு கடக நாவனெ னும்பெயர்
புனையு மற்புத மருக ரும்பல பொருவில் கூவிர மேறினர். (3)

கடக ரித்தொகை துரக தத்திரள் கடலெ னப்புடை செறியவெள்
ளிடைய றக்குவ டனைய பற்பல விரத மொய்த்திட வெண்ணரும்
படைய ரக்கர் கணமது டற்படு பசியொ ளிக்குது மினியெனுத்
தொடைக டட்டினர் படரமட்டுக டுய வானிடை மூடவே. (4)

பரசு சக்கர மயிலு லக்கைகள் பகழி கொக்கரை கண்டகம்
விரவு வச்சிர மழுவெ ழுக்கதை வீறு மேதகு தோமரம்
கரள முற்றுமிழ் குளிர்க ணிச்சிகள் கால மேனைய தானையுந்
தரமு றப்பர வியவ ளப்பரு சகட மும்படர் தரவரோ. (5)

பேரி துந்துபி காக ளம்பணை பீலி பம்பைக ளானகந்
தூரி யந்துடி கோடு சல்லரி தூய நாகசு ரந்தவில்
வாரி யங்கிய முரசு சங்கமி குங்க மின்னவ கைப்பெருஞ்
சீரி யங்கட லொலியெ னும்படி திசைகளெங்கணு மதிரவே. (6)

திர வச்சிர தந்த னிவ்வகை தேர்க டாவிவி ரைந்து சென்
றூர மொத்த நகைப்பு லோமிசை யார்வ லன்பதி யருகுறு
வார ணாந்துநி றத்த ரக்கரை மாதி ரந்தொறு நிறுவியே
சூர முற்றிய சமர பேரிதொ னித்தி டும்படி யருளினான். (7)

தமர வேலையெ னக்க திந்தெழு சமர பேரி தனைந்தெரிந்
தமரர் யாவரு மஞ்சி யோடிய லங்கல் வச்சர பாணிதன்
கமல பாத மிறைஞ்சி யைய கடுங்கொ லைத்தொழி னிருதர்க
ணமது நாடு வளைந்து போர்செய நண்ணி னாரென வோதினார். (8)

நிறையு மும்பர்க ளமர்பு ரிந்திட நிருதர் வந்தன ரென்னலு
மிறைவ னங்கது வினவி யொலலையெ ழுந்து பேரிய திர்ந்திட
முறைபெ ருஞ்சது ரங்க சேனைகண் முழுவ துங்கடை யுகமலிந்
தறைநெ டுங்கட லெனந டுங்கிட வணிகொ டேர்மிசை யேறி
[னான். (9)

மகர குண்டல மணிகொள் கண்டிகைமகுட முங்கதிர் திகழவே
சிகர வண்கிரி யெனவ ளர்ந்தெழு தேர்க டாவிவி ரைந்துபோய்
நகர்வளைந்துள நிருதர் வெம்படை நடுந டுங்கிட விற்குனித்
துகள்கொ டுங்கணை பலபொ ழிந்தன னேல மாமழை போல
[வே. (10)

அண்டர் மன்பிர சண்ட வெங்கன லம்பு சிந்தவளைந்துளோர்
கண்ட துண்டம தென்று லைந்திடல் கண்டு கண்டகர் தம்பிரான்
மண்டு கின்றசி னந்த தும்பிவளர்ந்தெ ழும்பவெ திர்ந்துபோர்
கொண்ட னன்புவி யண்ட ரண்டமெ னுர்த லங்கள்கு லுங்கவே. (11)

விண்டு வானவர் தங்கு ழாமுமி குங்கு ரூரர்க ளுங்கலந்
தெண்டி சாமுக முஞ்ச ராசர மென்ற யாவுந டுங்கநீள்
பிண்டி பாலமி லங்கு மாழிபி றங்கு சூலமெ றிந்துபோர்
கொண்டு லாவினர் துங்க மேனிகு லைந்தசோரிகள் பொங்கவே
(12)

இருபெ ரும்படை களுமெ திர்ந்தம ரினில டர்ந்திடு பொழுதுவெண்
முருடெ னுங்கட லுறுதி மிங்கில முதன்மி தந்தன முகிலெலா
மருவி சும்பிடை வெருவி யொண்டின வலரி திங்களும் மறுகியே
வருப யம்பெரி தொடுசு ழன்றன மனம யங்கினர் முனிவரே.
(13)

தரைபி ளந்தன வடவையஞ்சின தலைம யங்கின திசையெலாம்
வரையு மெண்கிரி களுந டுங்கின வளர ணந்தனு மறுகினன்
திரைபெ றும்பல கணமு திர்ந்தன நிமிர்செ ழுஞ்சடை முடியுளோன்
உரைபொ ருந்திய கரத லந்திக ழுமையு மொரந்து பதறியே. (14)

கலிவிருத்தம்.

இன்ன வாறம ரெய்ய போழ்தினி
லன்ன தானை யரக்கர்பல் லோர்மக
மன்ன னேமுதல் வானவர் போர்வெரீஇப்
பின்ன மோடு வெந் நிட்டனர் பிந்தியே. (15)

தலைமை வச்சிர தந்தன தைத்தெரிந்
துலைய ரக்கரை யோடன்மி னென்றுகூய்ச்
சிலைகு னித்தெதிர் தேவர் தளர்ந்திட
மலைதி றத்தை மதித்து நெருங்கினன். (16)

கொடிய கண்டகர் யாருங் குழுமிவேல்
கடிய வம்பொடு காளங் கழுக்கடை
தடியெ றிந்து தருவரை வீசியே
முடுகி யும்பர்க டம்மைமொய்த் தாரரோ. (17)

உம்ப ரப்பொழு தொண்மகு டம்பணி
சம்ப முற்படு தானை யுமிழ்கதிர்
பம்ப லுற்ற படரிருள் சீத்திட
வெம்ப லத்தினர் மேற்கலந் தாரரோ. (18)

மூரி வேலை முரச மதிர்ந்தெழுக்
காரு லாவுறு காளத்தி னூடமு
தாரு நீரென வண்டர்வெய் யோரொடு
போரு னேர்ந்து பொருபடை தூவினர். (19

தாம வச்சிர தந்தன் சினந்து பின்
காமர் பொற்சிலை கோட்டிக் கணைகடு
யேம முற்றவி லேகர் விடுத்தபன்
மாமிடற்படை யாவையும் வாட்டியே. (20)

மற்று மெண்ணில வடிக்கணை தூண்டிநே
ருற்று டன்றிடு மும்பர்கண் மெய்யெலா
மற்ற மொன்றத் துளைத்தன னாறுபோற்
பற்று செங்குரு தித்திரள் பாயவே. (21)

அந்த வேலை யரக்கன் சமர்க்குடைந்
திந்தி ராதி யிமையவர் யாவரும்
புந்தி சோர்ந்து புறங்கொடுத் தோடியே
முந்து வான முகட்டொழித் தாரரோ (22)

புறமிட் டோடினர் புங்கவ ரென்றுள
மறமுற் றோங்கிய வச்சிர தந்தனும்
திறமிக் கானபல் சேனையுஞ் சூழ்தர
வரமற் ருடன் னணிநகர் நண்ணினான் (23)

அனனி கர்த்தவ ரக்கர கன்றனை
ரெனவோ ளித்தவி மையவர் யாவரு
மனப யத்தொடு வாசவற் சூழ்ந்துபோய்க்
கனமு டித்தன் கைலையின் மேவினார். (24)

பொன்மு தற்கடை போற்றுறு நந்திக
டன்ம லர்ப்பதந் தாழ்ந்தவ னுய்த்திட
மின்ம லைப்புய விண்ணவ ரெம்பிரான்
மன்ம ணித்திரு மந்திரத் தெய்தியே. (25)

அமலையோடரி யாதன மீதுறும்
விமல நாதனை மேவிப் பணிந்துவில்
லுமிழு மாமுடி யுபரெல் லோர்களு
மிமிழு நான்மறை யாலினி தேத்தினார். (26)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

மேவிநின் றினிது போற்று மேதகு மிமையோர் தம்மை
யாவியெங் கணுநி றைந்த வரன்றனை விழியா னோக்கி
நீவிரிங் கடைந்த தென்னை நிகழ்த்துமி னென்ன லோடும்
பூவிரு கரங்கு வித்துப் புகழ்ந்தவர் புகல்வ தானார். (27)

பதந்தரு மவுன முக்கட் பரமகேட் டருடி பாவ
மதங்குடி யிருந்த சிந்தை வச்சிர தந்த னென்னுங்
கதந்திக முரக்க னெண்ணில் கடும்படை யொடுவந் தெய்தி
விதந்தவிர் செருமு யன்று வெருவுற வருத்தி னுனல் (28)

கடும்படை யுடைய சால கடங்கடன் சமருக் காற்று
துடைந்தற முதுகிட் டோடி யொளித்துளம் வெருவி யுன்பால்
அடைந்தன மெங்கட் குன்னை யலதொரு கதிவே றுண்டோ
விடும்பைமற் றிதனை நீக்கி யெமையளித் தருடி சென்றார். (29)

ஐயர்மற் றினைய கூற வவர்தமைக் கரம மைத்துச்
செய்யபொற் பவள வேணிச் செம்மறே லலனை யுன்ன
மையலற் றொளிரு மந்த மாதவ னதனைத் தேர்ந்து
நொய்தெனக் கயிலை மீதோர் நொடிக்குள்வந் தடைந்தா
னன்றே. (30)

ஆமோத நகர்பு ரக்கு மரியதே வாங்க னெந்தை
பூமோது மடிக டாழ்ந்து புகழுவு மவனை நோக்கி
மாமோன வள்ள லீயிவ் வானவர் தமைவ ருத்துந்
தீமோக நிருதர் தம்மைச் செற்றிவண் வருதி யென்றான். (31)

ஆலமர் கடவு ளிவ்வா றருள்செய வகிலங் காக்கு
மேலவ னன்றென் றன்னோன் விரைமலர்க் கழலிறைஞ்சி
மாலணி வரைகள் சாய்த்த வச்சிர பாணி வேந்தன்
கோலமா முகத்தை நோக்கிக் கூறுதன் மேயி னுனல் (32)

ஊனகு குலிச வேலோ யுளமினி யஞ்சே லுன்றன்
சேனையி னெடுது றக்கஞ் சேர்தியால் யானு மோத
மாநகர் குறுகி யெண்ணில் வன்படை திரட்டிக்கொண்டத்
தானம தொருக ணத்துட் டரமுறச் சார்வ லென்றான். (33)

பூதலத் தரச னின்ன புகலநன் றெனவி சைந்தங்
காதனத் தமர்ந்த வெந்தை யடிமலர் முடியிற் சூடிக்
காதலிற் கருணை பெற்றுக் கடவுள ரொடுவ லாரி
தீதறத் திகழ்த ருந்தன் றிருவளர் நகரம் புக்கான். (34)

மகபதி யகன்ற பின்னர் வயங்குல வியதே வாங்க
னகமகிழ் சிறப்ப வாதி யமலனம் புயந்தாள் போற்றித்
தகவுறு விடைபெற் றந்தத் தவளமால் வரைத ணந்து
செகதலம் புகழா மோதத் திருநகர் சேர்ந்தான் மன்னோ. (35)

அரசணி மண்ட பம்புக் கரிகொளா தனத்த மர்ந்து
திரள்புய நிருப னங்கட் சிலர்தமை விளித்துத் தத்த
மிரதகுஞ் சரது ரங்க மெழுபதா திகளை னத்துந்
தருதிரென் றுரைப்ப வன்னோர் தாழ்ந்துநன் றெனநடந் [தார் (36)

ஒற்றர் சென்றுரைத்த லோடு முறுபதா தினிகள் யாவு
மற்றமில் கடல்க ளேழு மடைந்தன மிடைந்து துள்ளிப்
பற்றல ருயிரை வவ்விப் பசுந்தசை நுகர்ந்த செவ்வேற்
கொற்றவ னெதிர்வந் தெய்திக் குழுமின தொழுது மா [தோ. (37)

குரிசிலங் கெழுந்து செம்பொற் கோயிலி னெய்திச் சோதி
விரிமணி மகுடஞ் சூட்டி மிளிர்பல கலனும் வேய்ந்து
புரிசெழுஞ் சடாரி மார்பிற் பூட்டிநுண் மருங்கி னூடு
வரிதரு கச்ச மைத்து மற்றதிற் சுரிகை மாட்டி. (38)

மாற்றலர் வருடும் பொற்றுண் மலரில்வார் கழல்வ னைந்து
மேற்றடம் புயத்தி னூடு வெஞ்சரத் தூணி வீக்கி
யாற்றல்கொ டனுவு மேந்தி யளப்பருங் கருவி தாங்கிக்
காற்றினும் விரைந்து செல்லுங் கடும்பரித் தேர்மேற் [கொண்டான். (39)

கருங்கட லுடைந்த தென்னக் கனகதுந் துபித வண்டை
யருங்கன வியங்கள் யாவு மதிர்ந்தவெண் டிசையு மஞ்சப்
பெருங்கொடி கவரி தொங்கல் பொருந்துசாந் தாற்றி யாதி
நெருங்குபல் விருது மெங்கு நிறைந்துற வெழுந்த வன்றே. (40)

நிழல்சுழித் தெழுந்து வீரர் நெஞ்சகங் கலங்கத் தாக்கி
யழல்கடை விழியாற் சிந்தி யண்டமுங் கிழிய வீரிட்
டுழலுமக் குலாலவாழி யொப்பென வுலவுஞ் சீற்ற
மழைமதப் பிறைகோட் டும்பல் வரம்பில மருங்கு செல்ல. (41)

வாழிருங் குவட்டு மேரு வரைபல நிகழ்வ தென்ன
வாழியங் கொடிஞ்சித் திண்டே ரளவில மருங்கு சுற்றச்
சூழுறு கடலிற் றுவித் தொடர்மன மெனநொ டிக்கு
ளேழுல குலாவி மீளு மிவுளிக ளனந்த மொய்ப்ப. (42)

நடுவனு முதுகிட் டோட நண்ணரு மமர்க்க ளம்புக்
கடுதொழில் விளைக்குந் தானை யதிபராங் கனந்தர் சூழ
விடுசுட ரணிக ளெண்ணில் வெய்யவ னினுமி லங்கத்
தொடுகணை மதன்கொ லென்னத் தோகையர் மோக மெய்த. (43)

அப்பெரும் படைக ளோடு மாழியந் தேர்க டாவிச்
செப்பருந் திறலான் மிக்க தேவல னவனி நீங்கி
யொப்பனை யமைந்த வந்த வும்பர்தன் றுறக்க மெய்தி
யெப்புக ழினுமு யர்ந்த விந்திரன் கோவில் புக்கான். (44)

நண்ணின னரசனென்று நலங்கிளர் குலிசப் புத்தேள்
எண்ணிரு களிப்பி னோடுங் கெதிர்தழீஇ முகமன் கூறித்
தண்ணிய கதிர்செய் சிங்கா தனத்தினி லிருத்தி நெஞ்சப்
புண்ணினி யகன்றே னுய்ந்தேன் யானெனப் புகழ்ந்தா
[னன்றே. (45)

தேவாங்க நிருப னந்தச் செம்மலை வியந்து நீயும்
பாவாங்க நிருதர்க் காகப் படையொடு மெழுக வென்னத்
தூவாங்க மிளிருந் தானைப் படைபல துவன்றிச் சூழ
மாவாங்க னேகம் பூண்ட வையமேற் பொலிந்தான் வா
[னோன். (46)

வானவர் பதியு மீசன் மதலையுந் தேர்க டாவித்
தானைகள் பலவு மொய்ப்ப தரணிமேல் விரைவி னெய்தித்
தேனகு மேம கூடச் செழுங்கிரிச் சாரல் போந்து
தூநவி சமர பேரி தொனித்தெழச் சூழ்ந்தார் மன்னோ. (47)

அம்புர சோதை கேளா வனல்பொரு வச்சிர தந்தன்
வெம்முனை யரக்கர் தானை மிடைந்திட விருது மொய்ப்பக்
கொம்மென வெழுந்து தேர்மேற் கொண்டுபல் லியங்க றங்கக்
கம்மிரு ளனவெ குண்டு கடிது போந்தமரி னேற்றான். (48)

சந்தக்கலிவிருத்தம்.

வந்நுவச்சிர தந்தனுக்கிர வலியவிற்கு னிந்துவா
னுந்தலுற்ற விடிநிகர்ப்ப வொலியெழுப்பி யளவிலா
வெந்தழற்ச ரங்கடொட்டு மெய்யர்தானை பதறியே
சிந்திடச்சி னந்துபூசல் செய்துலாவு மேல்வையில். (49)

நிருதவீரர் பலருமாழி நெடியசூல முவணிவேல்
பரிகமாசு கங்கள்பிண்டி பாலமீட்டி தோமரந்
தருவநேக வரைகள்கொண்டு சமரில்வீசி விபுதரும்
விருதுமேவு நரருமெத்த வெருவியோட முடுகினர். (50)

தந்திரங்க ளிடைமுறிந்த தகைமைகண்டு தேவல
னிந்தையின்றி யிந்திரற்பி னிறுவியேவி னைந்துதான்
முந்திநீடு தேர்கடாவி முறையிலாத கயவர்தம்
பந்தியாவு நெஞ்சகம்ப யந்தொதுங்க வந்தரோ. (51)

சிலைகுனித்து வெறியரக்கர் செவிபுதைப்ப நீடுபொன்
மலைவிதிர்ப்ப நிலைகொடிக்கு வாரணங்கள் வீறிட
வலைகடற்கு லங்கலங்க வண்டமும்ப டீரென
உலையவட்ட வரவுயிர்ப்ப வொலியெழுப்பி னனரோ. (52)

சாயகங்க ளளவிலாத தரணிபன்மெ ருடுத்துநேர்
மாயவஞ்சர் மீதுகால மழைகள்போலி றைத்தலுந்
தீயடைந்த பஞ்செனச்சி தைந்துவாகு சென்னிகை
மேயகண்ட மடிகளற்று வெருவியோடி யலறினர். (53)

தளமுறிந்த தென்றுவச்சிர தந்தனுந்து சினமிசைக்
கொளவெதிர்ந்து கணைகளெண்ணில் கோடிகோடி தூவலும்
வளமைதங்கு தேவலன்வ டிச்சரங்க ளாந்துதொட்
டளவுநின்ற வவையெலாம றுத்தடங்க வீட்டியே. (54)

மற்றிரண்டு வாளிதூவி வஞ்சகன்கை வார்சிலை
யற்றிடத்து ணித்துமார்பி லணிசடாரி தனையறுத்
தற்றபொற்கொ டிஞ்சிமேவு முகள்பரிக்கு ழாமெலா
மிற்றிடச்சி தைந்துரூத னிடைதரக்க லக்கியே. (55)

சிலசரங்கள் பின்னருஞ்செ லுத்திவெய்யர் திரளெலாங்
குலைகுலைந்து விழவெழுந்த குருதிபொங்க வழன்மர
மலைகளெங்கு மெதிர்குவிந்து வளரவோரி வளையவே
யலகைபுண்டு தசைதெவிட்ட வமர்முருக்கி னானரோ. (56)

எஞ்சுறாத கருணையாள னிணையலாறு சமர்செயத்
துஞ்சினார நேகர்பின்சு டுஞ்சரங்க ளாற்றிடா
தஞ்சி நீடு வச்ர தந்த னாதி வீரர் யாவரு
மிஞ்சு வீற ழிந்து துன்ப மேவி யோடி னாரரோ. (56)

**கருத்து:—** மேலே கூறியபடி போர்க்கோலம் கொண்ட அரக்கர்கள் இந்திரலோகத்தின் மீது படையெடுத்துச் சென்றார்கள். அவர்கள் தலைவன் வசசிரதந்தனும் உடன் பிறந்தார்களாகிய புலிமுகனும் சர்ப்பநாவனும் மைந்தர்களாகிய சூரியகோபனும் அக்னிகோபனும் மருகர்களாகிய புகைக் கண்ணனும் கடகநாவனும் அவரவர்கள் தேர்கள்மீது ஏறி நால்வகை சேனைகளும் புடைசூழ அமராவதிப் பட்டணத்தை வளைத்துக்கொண்டார்கள். பெரும்போர் நடந்தது. தேவர்கள் புறங்கொடுத்து ஓடினார்கள். அரக்கர்கள் வெற்றியுடன் மகேந்திரபுரியடைந்தார்கள். தோல்வியுற்ற இந்திரன் கயிலையடைந்து இறைவனிடம் முறையிட்டான். இறைவன் தேவலனை நினைக்க தேவலன் ஒரு நொடியில் கயிலை சென்றான். தேவலனை நோக்கி இறைவன் இந்திரன் உதவிக்காகச்சென்று அசுரர்களை வெல்லும்படி ஆணையிட்டார். அவவாணையைச் சிரமேற்கொண்டு தேவலன் சேனைதிரட்டி அரக்கர்களோடு போர் செய்து அவர்களைத் தோற்கடித்தான். அரக்கர்களும் ஓடினார்கள்.

## பத்தொன்பதாவது

# வியாக்கிரமுகத்தனை வீட்டியசருக்கம்.

[இச்சருக்கத்தில் தோல்வியுற்ற அரக்கர்கள் சேனையைத் திரட்டிக் கொண்டு வியாக்ரமுகன் தலைமையில் போர் தொடுத்தார்கள், தேவலன் அவனை வதைசெய்தான் என்பவைகள் கூறப்பட்டுள்ளன.]

*எழுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.*

துறவு கொண்ட முனிவ ரன்ன சூத னைத்து நித்துமா
சறவு ணர்ந்து ளோய ரக்க ரமரி னன்று தேவலன்
றெறுச ரங்கள் சுடமு றிந்து சிந்தை நொந்த கன்றபின்
னுறுதி றங்க ளவைரி மன்பி னோது கென்ன வோதுவான்.
(1)

விதிர்ம னங்கொ ணிருத ரன்று வீர மாம கேந்திரப்
பதிய டைந்த பின்னர் வெம்ப டைத்த ரக்கு முகனெழுந்
ததிக வஞ்ச வச்சிர தந்த னடிப ணிந்து கைகுவித்
தெதிரி னின்று தலைவ கேளெ னவெ டுத்தி யம்புவான். (2)

அவனி தங்கு தேவ லன்கை யம்பி னால கன்றுநா
மிவண டைந்த தழகு தேவ ரிகழ்வ ராத லாலினிக்
கவர்த ளங்கொ டவனை வென்று கடிது வந்து சேர்வல்யா
னுவகை பொங்க விடைவ ழங்கு கெனலு மண்ண லுரைசெய்
[வான். (3)

மாலி னுங்கு லாவு தேவ லன்க னத்த வலியினேன்
போலு மங்க வன்க ணைக்கு வெருவி டாது பொருதுநீ
மேலு மும்பர் பலரு மஞ்ச விறல்பு னைந்து மீடியென்
றேலு மன்பின் விடைவ ழங்க விளவ லின்ன புரிகுவான். (4)

முன்சி தைந்த கவச மாதி முழுத கற்றி வேறுபூண்
டின்சொ லென்ப தறிவு றுத விகல ரக்க ரளவிலார்
கொன்செ றிந்த படையி னோடு குழுமி யோதை புரியவே
மின்செய் தேரி னேறி வீரன் மிகவி ரைந்து கடவினான். (5)

ஒலிக டல்க லங்க மீன முதிர ஞால மதிரவே
புலிமு கத்த ரக்க னீடு பொருவில் சேனை செறிதரக்
கலிக திர்ப்பொ ருப்பை யன்ன கடிய தேர்க டாவிவாள்
வலிப டைத்த தேவ லன்முன் வந்து போர்தொ டங்கினன். (6)

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

அறிவிலி கொடுமர மதுகோட்டி யளவறு கனலுமிழ் கணை பூட்டி, நெறிபெறு சுரர்குழு விடையோட்டி நிறைதரு சினமொடு மிகவாட்டிச், செறிபொழு தினிலுயர் தேவர்கள் றெறுசர மிருபது செலவுய்த்து, முறிபட வெதிர்பவை தமை நீக்கி முதிர் சிறு துகளெனு முறை செய்தான். (7)

இயல்பறு கொடியவ னெதிர்பின்னு மிருசத கணைமழை யென வெய்யப், புயல்பொரு கரதல வலியோனும் புகழொரு கணைகொடு பொடிசெய்தான், மயலுறு மனநிரு தன்சிறி வாளிக ளாயிர நேர்தூவக், கயதுர கதநள பதிநூறு கணைதனி லவை துகள் கண்டானே. (8)

கலிவிருத்தம்.

வவ்லியமு கத்தவன் மனங்கொதி கொதித்தே
வில்லிலொரு வெங்கனல் விறற்கணை தொடுக்கச்
சொல்லரிய வன்னது சுராதிபர் கலங்க
வெல்லைதவிர் கோபமொ டெழுந்தெதி ரன்றே. (9)

விட்டகனல் வாளிவரு வேகம துணர்ந்து
மட்டமையு மாலைபுனை மார்பவரை மன்னன்
றட்டரிய சூர்வருண சாயகம் விடுப்பப்
பட்டதது பானுவெதிர் பம்புபனி யொத்தே. (10)

மீட்டுமெழு கோபவனன் மிறிமத வெய்யோன்
வாட்டுதிறல் கூர்வருண வாளிதனை வார்வில்
பூட்டிவிட மற்றது பொருந்துலக னைத்தும்
பாட்டொடு முடிப்பதென வந்தது படர்ந்தே. (11)

மீண்டுதிறல் கூர்வருண வெம்பகழி சார்தல்
கண்டுமலை யாதுசுரர் காவலன் வியப்பச்
சண்டகன மாருத சரந்தனை விடுத்து
மண்டவது வென்றனன் மயக்கறுத வத்தோன். (12)

இருவரு மமர்த்தலையி னிவ்வகை யடர்ந்து
பொருபொழுது மன்னனொரு புங்கமதை யுய்ப்பத்
திருகுறு மரக்கனுயர் தேரினை யெடுத்து
வருதிகிரி யாமென மருக்கியது மாமேதா. (13)

வேறொரு சயந்தன் மிசைக்கொடியன் மேவிச்
சீறுகணை யொன்றன லெனும்படி செலுத்த
மாறில்புக ழாளனெதிர் வாளிதனை யேவி
நூறின னரக்கர்தள நொந்துழல வன்றே. (14)

கற்பக மெனப்பொலி கரத்திறலி னோனும்
வெற்பினை நிகர்த்தபுய வெய்யனு மெதிர்ந்து
சொற்படு திசைத்தலை தொறுந்திரிவர் சுற்றிப்
பற்பல வனத்தொகை படர்ந்திடுவ ரன்றே. (15)

அட்டகுல வெற்பினு மடுத்தமர் விளைப்பார்
மட்டறு தரங்கநெடு வாரிதொறு நேர்வார்
விட்டொளிரு மின்குலவு மேகமிசை பாய்வார்
நெட்டிலலை மார்வளையு நேமிவரை செல்வார். (16)

வேலையத னிற்கொடிய வெங்கைவத னத்தோன்
காலவன னோர்பல கணைத்திர டொடுத்தே
சீலமக லாதகுண தேவல னிலங்கும்
பாலமதி னூடவை படும்படி விடுத்தான். (17)

அச்சர மனைத்தையு மறுதொறு நொடிக்கு
ணச்சனைய வாளியொரு மூன்றினை நடாவி
வச்சிர மெனப்படு மனப்புலி முகத்தோ
னுச்சிநு தற்றலை யழுத்தின னுயர்ந்தோன். (18)

பூபதி தொடுத்துவிடு புங்கமொரு மூன்றுங்
கோபநிரு தன்கொடு நுகற்றலை குலாவ
நீபநிகர் பொற்சிகர மூன்றொரு செழுங்கார்
மாபரு வதத்திடை வயங்குமெழில் போலும். (19)

மங்கரிய சீரிறைவன் வாளிபட வெய்யோ
னங்கமுழு துங்குருதி யங்கொழுகு தோன்றுங்
கங்கைபடர் வானளவு கார்வரைய தொன்றிற்
பொங்குபல செவ்வருவி யூடிழிதல் போலும். (20)

நொந்துநிரு தன்பினு நடங்குகொடி நீடே
ருந்துபுவி நைந்துபல வொண்கணைகள் சிந்திச்
செந்திரு மடந்தைவளர் தேவல னுடம்பிற்
புந்திவெரு வுங்குருதி பொங்கவமர் செய்தான். (21)

பாவியெதிர் தூவிவிடு பாணநெடு மாரி
மேவிடலு நாதனுடன் மீதுகறை சோர்தல்
பூவினுயர் வாசவெழு பொற்கிரியில் வெய்யோன்
றீவிர மளப்பில திகழ்ந்தசெயல் போலும். (22)

மாழ்கறவிர் நெஞ்சினன் மறுத்தளவில் வாளி
சூழ்கன லெனப்பெரிது தூவிநிரு தன்றேர்
தாழ்புரவி யின்றொழுதி தள்ளிவல வன்மெய்
பாழ்பட முருக்கியெழு பஞ்சென வடித்தான். (23)

தேர்குலைத லுங்கொடிய தீவினை யரக்கன்
றூர்க்கலவு மோர்கதை தனைக்கையி லெடுத்துப்
போர்கெழு மிலேகர்கள் புலம்புற நொடிக்குட்
கார்முகி லெனும்படி களத்திடை குதித்தான். (24)

கொடுவரி முகத்தனது கொள்கையை யுணர்ந்து
வடுவறு மனத்தினன் வணங்குமொரு தண்டங்
கடிதினி லெடுத்தடர் களத்திடை குதித்து
நெடுநெடென வோடியெதிர் நேர்ந்தன னழன்றே. (25)

மற்றிருவ ருஞ்சின மனந்தனி லெழும்ப
வெற்றின ரெதிர்ந்துவல சாரியிட சாரி
சுற்றினர் குதித்தனர் சுழற்றினர் கரத்திற்
பற்றிய மணிக்கதைக ளிற்கனல் பறக்க. (26)

தண்டம திரண்டுமிழ் தருங்கனலி தன்னான்
மண்டம ரிடைச்சிலர் மடிந்தனர் வெதும்பி
யண்டரி தெனச்சில ரகன்றன ரொளித்துக்
கொண்டன ரநேகர் பலர் குற்றுயிரி னுற்றார். (27)

விண்ணினி லிருந்ததவ மெய்ம்முனிவர் யாருங்
கண்ணிலது கண்டுகைய வன்றலை கலங்கி
மண்ணிலினி வீழ்கவுயர் மன்னவர்கள் கோமான்
றிண்ணிய பலங்கொடு செயித்தருள்க வென்றார். (28)

வேறு.

பாழியம் புயவரைப் பரமன் மைந்தனும்
ஊழிவெங் கனற்சினத் துளத்த ரக்கனுங்
காழிருங் கதைகளாற் கடிது மோதிமால்
ஆழியை நிகர்சொல வலமந் தாரரோ. (29)

செருவிடை விலகுதல் சிறிது மின்மையாற்
பொருபெருங் கதைகளும் பொடிக ளாயின
நிருதரு மமரரு நெருங்கி யார்ப்பவவ்
விருவரு மயலுள விரத மேறினார். (30)

சயந்தனை மேறிய தரக்கு மாமுகன்
இயங்குறு சிலைகுனித் தெண்ணில் சாயகம்
வயங்கெழு வடவையு மழுங்கத் தூவிநின்
றுயங்கலில் சுரர்நர ருருக வாட்டினான். (31)

உணர்வின னதைத்தெரிந் தோங்கு விற்குனித்
திணரெரி வாளிக ளிலக்கம் பூட்டியக்
கணமிகு நிருதர்கள் கலங்கி விம்முறப்
புணர்கரு முகிலெனப் பொழிந்திட் டானரோ. (32)

நீடின கணைமழை நிருபன் றாவலும்
வீடினர் சிலர்மனம் வெருவி னார்சிலர்
ஓடினர் சிலர்மனந் துயங்கி னார்சிலர்
வாடினர் சிலர்கன வலிய ரக்கரே. (33)

பருந்தினம் வாயசம் பவனை ஞாளிகள்
வருந்தின வோரியிவ் வகைக்கு ழாமெலாம்
விருந்தினி திட்டனன் வேந்தர் வேந்தனென்
றருந்தின நிணந்தசை யறத்தெ விட்டவே. (34)

வீந்தவந் நிருதருண் மிசைந்து சோணிதஞ்
சாந்தெனத் திமிர்ந்துநீ டரணி தாங்கிய
பாந்தளு நெளித்திட பலவெங் கூளிகள்
காந்தழல் விழியொடு களிப்புற் றாடின. (35)

நெறுநெறென் றெழுந்ததேர் நேமி யோதையுந்
தறுகணத் திகள்பல சாயு மோதையு
முறுபரித் திரள்படு மொலியுங் கண்டகர்
மறுகிய கலகமு மலிந்து விம்முமால். (36)

தோன்றல்கைச் சிலைக்குணத் தொனியும் வானவர்
சான்றவுட் களிப்பொடு தருக்கு மோதையும்
ஊன்றுபன் முரசதி ரொலியு மோங்கியோர்
மூன்றுல கச்சுற முழங்கி நின்றவே. (37)

வழுவுறா நிருதர்கள் வரம்பி லார்பட
வெழுகுரு திகள்கட லெனநி றைந்ததால்
ஒழுகுமக் கடலிடத் துலவு மம்பிபோற்
பழிதரு களேபரம் பலமி தந்தவே. (38)

தன்படை யிவ்வகை சாய்த னோக்கியவ்
வன்படை நிசாசரன் மனங்கொ திக்கவிர்
மின்பக ழிகள்பல வில்லிற் பூட்டியே
தென்பொலி யரசுபாற் செலவுய்த் தானரோ. (39)

பல்லமன் னவன்விடு பான்மை காண்டலுஞ்
சொல்லரும் புகழினன் னுடர்க்க னற்கணை
யெல்லையில் லனதொடுத் தேவி யங்கவை
வல்லையிற் பொடிபட மாற்றிப் பின்னரும். (40)

ஒருகணை யாற்குய வுலைய வாட்டிமற்
றிருகணை யாற்சிலை யிறுத்து வெம்பொறி
தருகணை யுடைநிசா சரன்சி ரத்தையும்
அருகணை தரக்கணத் தகற்றி னனரோ. (41)

நீலமால் வரையென நிருதன் சாயலும்
ஓலமார் திறல்வளை யும்ப ரூதினர்
கோலவார் குலிசவேற் குரிசில் பூபனைச்
சாலமார் பிறுகுறத் தழுவிப் போற்றினன். (42)

வென்றனன் றேவலன் விறனி சாசரன்
பொன்றினன் றேவர்தம் புலம்பு நீங்கினு
ரென்றதிர் மணிமுர சதிர்ந்த தாற்சிலர்
சென்றனர் வச்சிரதந் தனுக்குச் செப்பவே. (43)

**கருத்து:—** மேலே சொன்னபடி தோல்வியடைந்த அரக்கர்களை வியாக்ரமுகன் உற்சாகம் தந்து ஒரு பெரும் சேனையாகச் சேர்த்தி அழைத்துக்கொண்டு தேவலனோடு சண்டைக்குச் சென்றான். வியாக்ர முகன் கடுமையாகப் போர் செய்தான். ஆனால் தேவலன் அவனைக் கூரிய அம்புகளால் எய்து கொன்றான். அரக்கர்கள் ஓடினார்கள். இந்திரன் மகிழ்ந்து தன்னகரமும் தேவலன் தன்னகரமும் அடைந்தார்கள்.

## இருபதாவது

## விடைக்கொடிக்கரக்கர் வெந்நிடுசருக்கம்.

[இச்சருக்கத்தில் தோல்வியுற்ற அரக்கர்கள் மீண்டும் போருக்கு வர தேவவலன் விடைக்கொடியை ஏவி வெற்றிபெற்ற செய்தி கூறப்பட்டுள்ளது.]

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

பொய்யறு சூத னின்ன புகறலு முனிவர் போற்றி
யய்யவெம் புலிமு கத்தோ னமர்க்களத் தன்று வீந்த
செய்தியை வச்ர தந்தன் றெரிந்துமற் றவனும் போருக்
கெய்திய திறனு மெங்கட் கியம்புகென் னலுமி யம்பும். (1)

ஏகிய தூதர் சில்லோ ரிமைப்பொழு தினில்வி ரைந்து
மாகநீண் மதில்சூழ் வீர மயேந்திர புரத்துள் வந்து
சேகுறு மனத்த ரக்கர் செறியவீற் றிருக்கு மந்த
மேகநேர் வச்ர தந்த வேந்தனை விழியாற் கண்டார். (2)

பூட்கையா தனத்த மர்ந்த பொருவறு நிருதர் கோமான்
றாட்கம லங்கள் போற்றித் தலைவநின் றுணைவ னின்று
தோட்கிரி பதைப தைப்பச் சூழ்பெருந் தானை யோடும்
வாட்கரத் தேவ லன்றன் வாளியான் மடிந்தா னென்றார். (3)

கொடுவரி முகத்து வீரன் கொடுங்களத் திறந்தா னென்னுங்
கடுவுறழ் தூதர் வாய்ச்சொற் காதிடை யுருக்கிச் சாய்ந்த
வடுவெனப் புகுத லோடும் வச்சிர தந்தன் செல்லுப்
படுதரு வெனவே நெஞ்சம் பதைபதைத் தலறி வீழ்ந்தான். (4)

பார்த்தலத் திடையே வீழ்ந்த பதகனங் கயர்ந்து மேனி
வேர்த்தனன் மனங்க லங்கி வெதும்பின னிளையோன் வெய்ய
போர்த்தலத் திறந்தா னென்னும் புன்பரு வரலால் வாய்விட்
டார்த்தன னுலகி னூடெவ் வண்டமு நடுங்கிற் றம்மா. (5)

அத்தகை யரக்கன் றற்சூ ழமைச்சர்தந் துணிவாற் றேறி
யொத்தவென் னிளையோ னாவி யுண்டவெஞ் சரத்தே வாங்கன்
கொத்தல ரலங்கல் வானோர் குலிசன்மற் றிவரை யெல்லாம்
இத்தலை முடித்து மீள்வ னெனவெழுந் திணைய செய்வான். (6)

ஞாங்கரிற் றெழுது நின்ற நலங்கிளர் வேயர் தம்மை
யாங்கழைத் திடனே நீவி ரலகினம் படைய ணைத்து
மீங்குறத் தருதி யென்ன வினையடி யிறைஞ்சி யேத்திப்
பாங்கர்க டொறுஞ்சூழ் சேனை பதிகளுக்கு குணர்த்தி னால். (7)

கோமக னழைத்தா னென்னக் குலவிய வேயர் கூறத்
தூமவத் திரர்தீக் கண்ணோர் துலங்குபல் சிரத்தார் சிந்தா
காமரு விசும்பு தோயுங் காத்திர ரேக பாதர்
பாமெழு கடலு நீறு படும்படி கலக்கு நீரார். (8)

வல்லிய மடங்கல் கோல மதகயந் துரங்கம் பாண்டில்
சல்லியங் குரங்க நாகந் தகர்குடா வடிவா லேபம்
புல்லிய நெடுங்க ழுத்தல் புரோகதி விலாள மின்ன
பல்லியல் வதன முள்ளார் பருப்பத மனைய பண்பார். (9)

வடவனல் குடியி ருந்த வயிற்றினர் மழைசூற் கொண்ட
கடமுகி லினைப்பி ழிந்து கடியநீர் வேட்கை தீர்வா
ருடலசின வசனி யஞ்சு முழையினர் கரிய கூற்றும்
படபட வெனந டுங்கும் பண்பினர் பரந்த வாயார். (10)

இளம்பிறை யென வளைந்த வெயிற்றின ரினையர் யாருந்
துளங்குபல் படைக ளேந்தித் தொடரிருட் பிழம்புற் றென்ன
வளங்கெழு புவிபொ றுது மலிந்துவச் சிரதந் தன்பால்
உளங்களி சிறப்ப வெய்தி யுருமென வழுந்திச் சூழ்ந்தார். (11)

கறையடிச் சிறுக ணற்கட் கவுண்மத முறநேர் கன்னப்
பிறைமருப் பொருத்த லோங்கும் பிறங்கனேர் கொடிஞ்சித் திண்
அறைதிரைக் கவரி நெற்றி யணிகடுங் கலினப் பாய்மா [டேர்
நிறைகட லெழுந்த தென்னத் திசைதொறு நெருங்கிச் சூழ்ந்த. (12)

செவ்வியங் கதனி னேங்கற் றிண்புய வரக்கர் கோமா
னவ்விகொள் பணிக டாங்கி நவமணிக் கவசம் வீக்கி
ஒவ்விய சிலைகை யேந்தி யொன்னல ருயிரை முற்றும்
வவ்விய கணைபெய் தூணி வளர்நிக லத்தின் மாட்டி. (13)

வலக்கழ லதனிற் செம்பொன் மணிக்கழல் வயங்க வீக்கி
யலைக்கட லுடைந்த தென்ன வதிர்குரன் முரசம் விம்மப்
பலத்தினிற் சிறந்த நான்கு படைகளுந் திரண்டு மொய்ப்பக்
குலக்கிரி களிறென் றன்ன கொடிஞ்சியந் தேர்மேற் கொண்
[டான். (14)

நஞ்சுமிழ் கொடிய சர்ப்ப நாவன்சூ ரியகோ பன்போர்
விஞ்சுமக் கினிகோ பன்றீ மிளிர்புகைக் கண்ணன் கூற்று
மஞ்சிய கடக நாவ னுதிமற் றெவருந் தத்தஞ்
செஞ்சுடர் மணிக்கொ டிஞ்சித் தேர்மிசைப் பொலிந்து
[சூழ்ந்தார். (15)

பொதுளுமித் தளங்கள் சூழப் புணரிபோற் பேரி யார்ப்ப
மதுகைகூர் வச்ர தந்தன் மணிநெடுந் தேர்க டாவி
முதுகுவட் டேம கூட மொய்வரைச் சார்பில் வானோர்
பதியொடு முறைதே வாங்கன் பாங்கர்வந் தணுகி னுனல். (16)

பாதக னடைத லோடும் பண்ணவர் பலருஞ் சூழப்
பூதர முழுதுஞ் சாய்த்த பொருகதிர்க் குலிச வேந்துஞ்
சீதள களபத் திண்டோட் டேவல னெனுங்கோ மானு
மோதமர்க் கோலந் தாங்கி முடுக்கிவெங் களத்தி லேற்றார். (17)

உயர்நிலை யமர வீர ரொலித்ததுந் துபிமு ழக்குங்
கயவர்பல் லியமு ழக்குங் கடும்பரி கனைமு ழக்குந்
துயல்வரு கொடிக்கொ டிஞ்சிச் சுடர்நெடுந் தேர்மு ழக்கும்
அயர்வரு கரிமு ழக்கு மண்டமு நடுங்க வார்த்த. (18)

கனைகழ லரக்கர் கோமான் கடிதுதே வலனை நோக்கித்
தினையொரு வலியோய் நீதான் சிறுவனைச்செயித் தோமென்ன
நினைவினிற் களித்தாய் போது நின்னுயிரின்னே வவ்விப்
புனைமுடி விபுதர் தம்மைப் பொடிபட குடிப்பல் காண்டி (19)

என்றுகார் முகத்தை வாங்கி யேழிரு தலமு மஞ்சக்
குன்றுரு வுருமு நாணக் குணத்தொனி யெழுப்பிப் பின்ன
ரொன்றுநீக் கணைகள் கோடி யுரத்தொடு கடிது பூட்டித்
துன்றுமா முகிற்கு லங்கள் சொரிந்தெனத் தூவி யார்த்தான். (20)

திக்கொரு பதினுள் ளோருஞ் செவிடுறத் தொடைக டட்டிக்
கொக்கரித் தரக்க ரெல்லாங் கொடும்படை பலவும் வீசி
மைக்கட லெழுந்து பொங்கி வயங்குபாற் கடலி னூடு
புக்கென விபுத ரோடு கலந்தனர் பொருக ளத்தே. (21)

அரக்கர்தம் பகைகட் காற்று தமரர்க ளிரிய நோக்கித்
தரக்கள வின்றிச் சூழ்ந்த தகர்க்குழாத் திடைபுக் கென்னப்
பரப்புறு தேர்க டாவிப் பரகசா தனன்வி யப்ப
நரர்க்கதி பதிவிற் கோட்டி நண்ணலர் நடுங்கச் சென்றான். (22)

புலிங்கவெங் கணைகள் சிந்திப் புயனிறத் தரக்கர் சென்னி
நலங்கிளர் புயங்கை மார்பு நடுவிரு பதங்கி ரீபந்
துலங்குறு செவிக ளுட்டந் துண்டமுந் துண்ட மாகி
நிலந்தனிற் சிதற வீழ்த்தி நெடுஞ்சமர் தொடங்கி னானால். (23)

குளித்தவெம் பகழி யாற்பல் கோடியர் வீழ்ந்தார் சில்லோர்
ஒளித்தன ரநேகர் வெந்நிட் டோடினர் சிலர்செஞ் சோரி
துளித்தனர் சிலர்ம யங்கிச் சுழன்றன ரவற்றை நோக்கிக்
களித்தனர் நரருந் தேவர் யாவருங் கடல்போ லார்த்தே. (24)

ஆடின கவந்த மெங்கு மலகைகள் கரங்கள் கொட்டிப்
பாடின சுணங்கோ டோரி பருந்துவா யசஞ்ச குந்தங்
கூடின வெழுந்த செய்ய குருதியா றிடங்க டோறு
மோடின குலிச வேந்த னுயர்புயம் பணைத்த வன்றே. (25)

உரியதன் படைக ளிவ்வா றுலைவுறு மிழிபு நோக்கி
வரிசிலைக் தடநெ டுங்கை வச்சிர தந்தன் சீறி
யெரிபுரை சிலீமு கங்க ளெண்ணில மழைபோற் றூவித்
தெரியல்வேய் விபுதர் மாந்தர் திரள்சிதைந் திடப்போர் செய்தான். (26)

அலர்தலை நிலம்பு ரக்கு மதிபதி யெனுந்தே வாங்கன்
பொலிகனற் கணைக ளைன்கு பூட்டிவிட் டரக்கன் றேரில்
வலிகெழு துரகஞ் சாய்த்து வலவனைத் தள்ளி மார்பின்
மெலிவுறு சடாரி போக்கி வில்லையு மிறுத்தா னன்றே. (27)

மற்றொரு தேரிற் றாவி வரிசிலை குனித்து வெய்யோன்
புற்றர வனைய வாளி யெண்ணில பொருந்தப் பூட்டி
முற்றழி யுகத்திற் றோன்று முகில்களோ ரேழு மென்னக்
கொற்றவ னிருந்த செம்பொற் கொடிஞ்சியங் குயலிற் றூர்த்தான். (28)

கறைகெழு பிறையெ யிற்றுக் கண்டகன் கரத்தாற் பூட்டி
முறைமுறை விடுத்த செந்தீ முதிர்கங்க பத்தி ரங்க
டறை நெடு விசும்பி னோடு சாற்றருந் திசையோ ரெட்டு
மறைபட விழுங்கி யெங்கு மலிந்தன செறிந்து மாதோ. (29)

மைந்தரங் கெவருந் தந்த மனம்பதை பதைத்தார் வானோர்
செந்தழன் முகத்திற்பட்ட செழுமெழு கெனவு டைந்தார்
கொந்தலர் தருமந் தாரக் கொழுநறும் படலை வேய்ந்த
சுந்தர மவுலி வேந்துந் துணுக்கெனத் துளங்கி னானல். (30)

குவடளா விலபோ லெங்குங் குவிந்துள தூலத் தூடு
தவழ்கனற் கங்க மொன்று சார்த்திய தகைமைத் தென்னப்
பலவினை யரக்க னுய்த்த பத்திர கணத்தி னுப்ப
வுவமையில் புகழ்த்தே வாங்க னொருசரந் தூண்டி னானல். (31)

எய்தவத் தொடைநொ டிக்கு ளிருட்கொரு பருதி யென்னக்
கைதவக் கொடிய னேவுங் கணையெலா மறுத்து வீட்டிப்
பொய்தவ வுடைய ரக்கர் புறமிடச் சாய்த்து மீண்டு
செய்தவ நிருபன் றூணி சேர்த்தினி துறைந்த தம்மா. (32)

கண்டன னிருதன் பின்னுங் கடுஞ்சின மிகுந்த நேக
மண்டழற் கணைக டண்ட மாதவ வலியி னோனுங்
கொண்டலிற் பகழி தூவிக் கொடியன்மே வியமு டித்து
விண்டுற ழியந்தி ரத்தை யுடைத்தனன் விண்ணோ ரார்ப்ப. (33)

வையமங் குடையச் சீறி வச்சிர தந்த னென்பான்
கையினி லெறுழொன் றேந்திக் களத்திடைக் குதித்தெ திர்த்தா
னெய்யுறை பரிதி வேலா னிகரறு கணையென் றேவி
மெய்யிலி கதைநி லத்தில் விழப்பொடி படுத்திப் பின்னும். (34)

ஓரிரு சரங்க டூண்டி புணர்விலி யுடல மெங்குஞ்
சோரிகள் சிதற வாட்டித் துயருறப் புரித லோடும்
வாருறு கழற்கால் விண்ணோர் மானவர் திரண்டு மொய்த்துப்
பாருல கதிர வீரம் பகர்ந்தொலி காட்டி நின்றார். (35)

கூற்றினுங் கொடிய வெய்யோன் குலைகுலைந் தெழுந்து சீறி
யாற்றிடற் கரிய வெற்பொன் றங்கையா லெடுத்து நின்று
பாற்றினஞ் சுழலும் வைவேற் படையதி பதியை நோக்கித்
தோற்றுரு மேறு மஞ்ச வினையன சொல்லுகின்றான். (36)

புற்பொரு தேவ லாவப் புலிமுக விளையோ னென்ன
வெற்படு வலியி லானென் றென்னையு மதித்தாய் போலு
மற்பவிண் ணவர்புன் மாந்தர் யாரையு நினையு மின்றிவ்
வெற்பினி லடுவ லோடி விடாதுநில் லெனவி டுத்தான். (37)

வீறுறு மரக்க னோங்கி வெற்பினை விடுத லோடுங்
கூறுயர் புகழான் மிக்க கோமகன் முறுவல் செய்து
மாறுடை நெடிய வாயு வாளியோன் றதன்மேற் றூண்டித்
தேறுவ தரிதெ னப்பல் சிறுதுகள் படச்சி தைத்தான். (38)

மூர்க்கனங் கதனைக் காணு முதிர்சினந் தழைப்ப மற்றோர்
தேர்த்தலை தனில்விரைந்து சென்றுகார் முகத்தை வாங்கி
யார்த்தனன் விபுத ரின்னே யனையரை முடிப்ப லென்னத்
தார்த்தனன் பகழி மாரி சுராதிபன் றுளக்க மெய்த. (39)

அமையமங் கதிற்றே வாங்க னமலனன் றருளி னீந்த
திமில்விடைக் கொடியைப் பூசை செய்தெடுத் தனுப்ப லோ
நிமிர்தரு மதில னந்த நிகரினந் திகழெ ழுந்து [டு
சமர்பொரு நிருதர் பல்லோர் சாய்ந்திடத் தடிந்த வன்றே.
(40)

அங்கதிற் பின்ன நேக வரிமத களிறு வேங்கை
வெங்கடுங் கரடி கோல மிளிர்கண்ட பேரண் டங்கள்
பங்கமில் சரபம் யாளி பாரிட மினைய தோன்றிச்
சங்கையி லரக்கர் சேனை சாய்த்தன நொடிக்குண மாதோ.
(41)

நந்தியந் துவச வாற்றல் காண்டலு நடுந டுங்கி
யந்தியி னிறத்த ரக்கர் யாருமங் கவர்கோ மானும்
புந்தியி னிடர லைப்பப் பொருகளத் திரிந்து சிந்தி
மந்திர நிறைந்த வீர மயேந்திர நகரம் புக்கார். (42)

காளம தனைய சால கடங்கட ரிரிய னோக்கித்
தோளிணை புளகம் பூப்பச் சுடர்நெடுங் குலிசப் புத்தேள்
வாளணி மகுட வேந்தை மார்புறத் தழுவி வாழ்த்திக்
கோளிடன்று தீர்ந்தே னென்றுகொண் டாடிப் பின்னும். (43)

உண்ணிறை யுவகை பூப்ப வும்பரோ டுயர்வ லாரி
விண்ணிடை மிளிர்தன் னூடு மேவின னிப்பாற் சேனை
யெண்ணில மலியத் தேரூர்ந் தெண்டிசை தொழத்தே வாங்க
னண்ணிய புகழா மோத நன்னகர் புக்கான் மாதோ. (44)

கருத்து:— மேலே கூறியபடி தோல்வியுற்ற அரக்கர்கள் மகேந்திரபுரிக்குச் சென்று வச்சிரதந்தனிடம் தம்பி வியாக்ரமுகன் வதைக்கப் பட்டதைத் தெரிவித்தார்கள். வச்சிரதந்தன் சினம்பொங்கி துடிதுடித்துத் தேவலனைக் கொல்வதாக வீரம்பேசிப் புறப்பட்டான். ஹேமகூட மலைச் சாரலில் போர் நடந்தது. கணக்கற்ற பேர் இறந்தார்கள். தேவலன் அரக்கர்களை மீண்டும் மீண்டும் அழித்தான். போர் பெருகிற்று. அது கண்டு தேவலன் தன்னிடம் இருந்த விடக்கொடியைப் பூஜித்து அதனை ஏவினான். அக்கொடியிலிருந்து கணக்கற்ற நந்திகள் தோன்றி அரக்கர்களை அழித்தன. விடக்கொடியின் வல்லமையைக் கண்டு வச்சிரதந்தன் நடுநடுங்கிப் போர்களத்தைவிட்டு ஓடினான். இந்திரன் தேவலனைப் புகழ்ந்து நன்றி செலுத்திவிட்டு அமராவதி அடைந்தான். தேவலனும் தன் சேனையை நடத்திக்கொண்டு அமோத நகரம் அடைந்தான்.

## இருபத்தோராவது

# மன்னவனிலிங்க வடிவுறுசருக்கம்.

[இச்சருக்கத்தில் மன்னவன் விடக்கொடியை அரக்கர்களுக்குப் பறிகொடுத்துத் தோல்வியடைந்ததும் பின்னர் அரக்கனுடைய மகள் அக்னிதத்தையை மணந்து பிள்ளைகள் பெற்றதும் அதன் பிறகு சிவபதம் அடைந்து இலிங்கவடிவம் அடைதலும் கூறப்படுகின்றன.]

எழுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

நீங்காத நெடியதவச் சூதனிவைய ருளமன
    நிறைபே ரன்பா
லாங்காசை தவிர்ந்தநைமி சாரணிய முனிவர்சென்னி
    யசைத்துப் போற்றித்
தீங்காரு மரக்கர்புற மிட்டகன்ற பின்புநிகழ்
    செய்தி முற்றும்
பாங்காகப் பகருகெனப் பணிந்திடவன் னவனுமவை
    பகர்வ தானன். (1)

குரோதவனற் கொழுந்தவித்த குணமுனிவீர் கேண்மி
    னன்று குலவி ராச
சிரோமணியா மெழுந்தவந்தத் தேவாங்கன் விடைக்கொடி
    யாற் சிதைந்து போந்த
விரோதமனத் தறிவிலிதன் றுணைவர்மைந்தர் மருகர்கிளை
    விளிவை யெண்ணி
யுரோதனமுற் றுடல்குழைய வுண்ணுறக்க மின்றிநெடி
    துருகி னனல். (2)

தருவனைய நெடியகர தலநிருப னமர்க்களத்திற்
    சாய்த்த செல்வ
மருகரிளை யவர்புதல்வர் மற்றையர்தந் தேவியரா
    மாதர் யாரும்
பெருகுமணி நாணிழந்து பெருந்துயரு டழுந்துமந்தப்
    பெற்றி நோக்கி

யுருகுவன்வாய் விடுத்தொலிப்ப னுயிர்ப்பனலை கடற்றுரும்
பொத் துழல்வா னன்றே. (3)

மூளரியிடைப் படுமெழுகி னுருகிவயி றலைத்துடைந்து
முகத்தின் மோதித்
தளர்வினொடு துயர்கடலுட் டாழ்ந்துளஞ்சற் றுறிவச்ர
தந்த னென்பான்
இளமைமுதற் பிரியாநட் பிசைந்தவித்தை யுத்தேச
னெனுமோர் பாவி
யுளமகிழ்வி னினிதிருந்த வுயர்செழும்பொன் மாளிகைவந்
துற்றுன் மன்னே. (4)

கோமகன்வந் தனனெனக்கை குவித்தேத்தி முகமனுரை
கூறிப் பின்னர்
மாமணிப்பீ டிகையளித்தவ் வயினிறுத்தி வச்ரதந்தன்
வதன நோக்கித்
தாமமணி மார்பவித்தை யுத்தேச னையவின்று
தமியேற் றேடி
நீமகிழ்வி னடைந்தவகை யருள்கெனவோர் முகுர்த்தமொன்று
நிகழ்ந்தா துற்றுன். (5)

கோனடத்துந் தேவாங்கக் குரிசில்விடுங் கணையலைப்பக்
குலைந்த மெய்யு
மானமுற்ற வுறவினர்பற் பலரையிழந் தருகுதுயர்
மனமுந் தோன்றக்
கானகக்கண் டீரவநேர் கயவனழற் சினத்தினொடு
கனசி நேக
னைவித்தை யுத்தேசன் முகநோக்கி யினையனபின்
னறைகு வானல். (6)

உயிரனைய வுரவோய்கே ளுயர்மகவான் றனைவேறற்
குன்னித் தீயேன்
பயில்கிளைபற்பலரளவில் படையொடுஞ்சென் றவனை யென்றன்
பலத்த..ி வாட்டிச்

செயமதுகொண் டிவணடைந்த செய்தியுநீ யறிவையன்றே
தேவர் தங்கட்
கயர்விலுப காரியன்னோன் றேவாங்கன் பின்னமரி
லடுத்தா னம்மா. (7)

தாலமுழு தளிக்குமந்தத் தேவலன்போர்த் திறத்தையின்ன
தகைமைத் தென்று
நூலறிவி னுயருரக பதியமுரைப் பரிதெனிற்பின்
னுவல்வ தென்னே
மால்வனு மலரயனு மகத்தரசு மறவியுமோர்
வடிவா யேற்ற
காலையினு மாங்கவனைக் கடக்கமுடி யாதுவெகு
குடின மம்மா. (8)

தோன்றுமவற் கரனளித்த விடக்கொடியோன் றுளததன்
சீர் சொல்வார் யாரே
யூன்றுதிரி புவனமுமோர் கணப்பொழுதின் முடிக்குமதை
யுய்த்தா னுங்கே
கான்றபொறிக் கட்குழற்பே யாளிகண்ட பேரண்டங்
கனவா ருண்ட
மான்றமத கயமடங்கல் புலியிடப முதலவதின்
மலிந்த வன்றே. (9)

பிறந்தபல விலங்குகுழற் பேய்பொருத வெண்ணரிய
பெரும்போர்த் தானை
யிறந்தனபின் சுரவயிரி பணிராவன் கனற்கோப
னிரவி கோபன்
மறங்கொள்கட னாவனெழு தீக்கண்ணன் புகைக்கண்ணன்
மகரக் கண்ணன்
சிறந்தவிவர் முதலனந்த வீரருந்துஞ் சினர்முறுவல்
செய்தார் வானோர். (10)

எனைநிகரும் புலிமுகனுந் தேவலன்கை யான்மடிந்தா
னினிவென் செய்வே
னனையவனை யெதிர்த்துவெல்வ தரிதுபயந் திருப்பினம்மை
யமரா ரெள்வா
ருனையலது துணையிலையெற் குதவியுன்ற லாவதொன்றிங்
குளதா லந்த
நினைவினொழு கிடல்வேண்டு நீயிதுநற் றருணமென்று
னிருதர் கோமான். (11)

கோனிவைய புகறலுமக் குணநண்ப னெழுந்துகரங்
குவித்துப் போற்றி
வானிமிருந் தடங்குவட்டு வரைப்புயத்தோ யவ்வுதவி
மறுமு வின்னே
நானினிது புரிவலது நவின்றருள்க வெனலுமிக
நயந்து கார்போன்
மேனியுடை யரக்கனந்த வித்தையுத்தே சனுக்கிதனை
விளம்பி னுனல். (12)

ஏடவொரு சுரருநமக் கெதிரலர்தே வலன்வலியா
லிகல்கூர் போகி
பீடுடைய னுகினனத் தேவலனை வெல்வதற்கோர்
பெற்றி யுண்டா
லாடல்விடைத் துவசமொன்றே யன்னவற்குச் செயந்தருவ
ததனை நீபோய்க்
கூடமதா லெவ்விதத்துங் கொணர்ந்திடில்யாங் குறித்தவகை
கூடு மென்றுன். (13)

தலைவனிவை புகலவது தமியனின்னே கொணர்வலெனத்
தாழ்ந்து போற்றி
மலையனைய மார்பவித்தை யுத்தேச னுருகவட
வடிவந் தாங்கி
யலைகெழுபே ரகழிசெறி யாமோத நகர்விரைவி
னடைந்து வெங்கூ

ரிலைகுலவு வேற்படைத்தே வலன்சமுகம் புக்கவனை
யிறைஞ்சிச் சொல்வான். (14)

மன்னவகேள் வலாரிவிடு தூதனியா னிணவடைந்த
வகையா தென்னின்
முன்னமுன தமர்குடைந்த மூடவச்சிர தந்தனின்று
முதிர்பல் சேனை
தன்னருகி லலைதரங்கத் தடங்கடற்போற் சூழவங்கட்
சார்ந்து நந்தம்
பொன்னகரை வளைந்துமிகப் பொருதினன்யா வருமவற்குப்
புறமிட் டாரால். (15)

வாய்மையிதா தலினந்த மகபதியெவ் விதத்தினுமுன்
வயினுற் றோங்குந்
தூயமிடல் விடைக்கொடிநீ வாங்கிவரு கென்னவென்னைத்
துரிதத் துய்த்தான்
வேய்மகுட விறலோயிப் பொழுதேமற் றதையருளல்
வேண்டு மென்றான்
காய்மனவஞ் சகவினைக்கோர் கடலனைய கொடியதொழிற்
கயவ னன்றே. (16)

குடிலவினைக் கயவனிது கூறவுண்மை யெனவுளத்துட்
குறித்துச் செம்பொன்
முடியரசர்க் கரசனந்த முரண்கொடியங் கருளியவன்
முகத்தை நோக்கிப்
படிபுகழு மிதனையெவர் பரவியர்ச்சிப் பினுமவர்சொற்
படியே நின்று
வடிகுலவு நெடியபடை மருவலர்க்கொன் றதிகதிறல்
வளர்க்கு மென்றான். (17)

வேந்தினைய விளம்பவவன் விரைமலர்ப்பொற் பதம்பணிந்து
விடைபெற் றந்தக்
காந்துமனத் தரக்கன்மிக களித்திடபக் கொடியினொடு
கடிது போந்து

பூந்துணர்மென் பொழில்வளஞ்சூழ் புகழ்வீர மயேந்திரமா
புரத்தி னுற்ற
சாந்தமறு கொடியவச்சிர தந்தநிசா சரன்கரத்திற்
றந்தான் மாதோ. (18)

ஆங்கவனு மந்தவிடை யருங்கொடிபெற் றுளங்களிப்புற்
றநேக பூசை
நீங்கலவ தற்கினிது செய்துபின்ன ரளப்பரிய
சேனை சூழ
வோங்குமணிக் கொடிஞ்சியந்தே ரொருகணத்துட் டேண்டியும்ப
ருறைநா டெய்திப்
பாங்கர்தொறும் வீரர்தமை நிறுவியவர் முரசறையப்
பணித்தா னன்றே. (19)

அண்டமுக டதிரவிற லரக்கர்முர சறைதலுமங்
கதைவி னவித்
தண்டாள மணிமுறுவற் சசிகொழுந னெழுந்துபல
தளங்கள் சூழ
வண்டணவு தெரியல்விண்ணோர் மலிதரப்பொற் குழைகவச
மகுட மின்ன
விண்டனைய தேர்கடவி விரைந்துசமர்க் களத்துவந்து
மேவி னனால். (20)

வலாரியந்த வல்லரக்கர் மலிவுசெருக் குணர்ந்துசற்றே
மனத்துட் சோர்ந்து
கலாவமர்செய் திவர்தமையாங் கடப்பரிதென் றெருதுதற்
கருதி நோக்கிக்
குலாவுமதித் தேவலன்பாற் குறுகியிங்கு நிகழ்பவெலாங்
கூறி நீமற்
றலாபமறு மவனையொரு கணத்தழைத்து வருதியென
வனுப்பிப் பின்னர். (21)

கோதண்டம் பிறைபொருவக் குலவுசெவிவரைவாங்கிக்
குனித்து நீண்ட

மூதண்ட மதிரவொலி முழக்கியநற் கணைகள்பல
முறையிற் பூட்டி
வேதண்ட மெனத்திரண்ட விறற்புயவல் லரக்கர்பிரான்
மீதுஞ் சூழ்ந்த
மாதண்ட வாரிதிமீ தினுந்தூவி நீங்காது
மலிபோர் செய்தான். (22)

புலோமிசைதன் கொழுநனிவ்வா றமர்தொடங்கிக் கணை
கள்பல பொலித லோடும்
விலோதமணி யிரதவச்சிர தந்தன்முத லரக்கரெலாம்
வெகுண்டு மாறுக்
கலோலமெழுந் தலைந்தகருங் கடலுடைந்த தெனநெருங்கிக்
கருவி வீசிக்
கொலோசைபுரிந் தமரருளந் திடுக்கிடவெஞ் சமர்க்
களத்திற் குழுமிச் சூழ்ந்தார். (23)

அங்கமரிவ் வாறியல வண்டர்பிரான் விடுந்தூத
னவனி தன்னிற்
பொங்கமிகு மாமோத புரமதனை விரைந்துகணப்
பொழுதிற் சார்ந்து
கங்கம்லி தரப்புலவு கமழ்வேற்றே வலனையுளங்
களிப்பக் கண்டு
செங்கமல மலரனைய கரங்குவித்துக் தொழுதினைய
செப்ப லுற்றான். (24)

ஆண்டகைகேள் யானமர ரடிதொழவிற் றிருந்தபிரா
னனுப்புந் தூத
னீண்டடைந்த காரணமற் றெவனெனினுன் றனக்காற்றா
ரிரிந்து போய
மாண்டவிகல் வச்சிரதந்த னின்றுமெண்ணில் படைகளொடு
வந்து சூழ்ந்து
மூண்டவமர் புரிந்தெவரு முதுகிடவெங் கணைகளினுன்
முடுக்கி னானல். (25)

ஆகலினுன் றனைவிரைவி னழைத்துவரு கெனச்சுரர்கட்
கதிப னென்னை
மாகருணை புரிந்தனுப்பி னனெனலுந் தேவாங்க
மகிப னேற்றே
யேகனருள் விடைக்கொடிதந் திருக்கவின்றுந் தூதுவிட்ட
தெவன்கொ லென்ன
யோகமுறு தனதுதிரு வுளஞ்சிறிதங் கயிர்த்திவைபின்
னுஞற்றி ஞனல். (26)

எழுந்துபல கலனுமணிந் தெண்ணில்படை தாங்கிமணி
யிரத மேற்கொண்
டொழுங்குறுநாவல் வகைப்படையு மொருங்குமொய்ப்ப
மதிக்கவிகை யும்ப ரோங்கச்
செழுங்கனக முரசதிரச் சென்றுகண மொன்றில்விண்
ணோர் செங்கை கூப்பித்
தொழுங்குரிசி லுங்கொடிய சூதரக்க ரும்பொருமச்
சூழல் சார்ந்தான். (27)

அப்பொழுது விடைக்கொடியங் கரக்கர்வசத் திருப்பது
மற்றதனு லஞ்சிச்
செப்பனைய களபமுலை யயிராணி துணைவன்முதற்
றேவர் யாரும்
வெப்பவன லணுகியபஞ் செனப்புறமிட் டோடுகின்ற
விதமுங் கண்டா
னொப்பரிய பரஞ்சுடரி னிதயபங்கே ருகமலரி
னுதித்த மேலோன். (28)

காணலுமிவ் வரக்கரன்றே கருதரிய முழுமாயக்
கபடந் தன்னால்
யாணர்பெறு நமதுவிடைக் கேதனத்தைக் கவர்ந்தனரென்
றகத்துட் கொண்டு
நாணமகல் வச்சிரதந்தற் கெதிரிர[illegible]ந் தனைநடத்தி
நகுவிற் கோட்டிப்
பாணமழை சொரிந்தனையான் படைபலவு நடுநடுங்கிப்
பாறச் செய்தான். (29)

அதிர்ந்தின வச்சிரதந்த னின்றிவன மிடத்தினில்வந்
தகப்பட் டானென்
றெதிர்ந்துவிரைந் திரதமடுத் திடநடத்தி வேணுவளைத்
திலங்கு செந்தி
யுதிர்ந்தபல பகழிதொடுத் துரத்திறெடு விடுத்திடலு
மொன்னு ரஞ்ச
விதிர்ந்தகதிர் வேலேந்து விறல்வேந்தன் சிறிதுகர
மெலிந்து சோர்ந்தான். (30)

அன்றரம்பை யளித்தகொடுஞ் சாபவினை யாலரச
னயர்ந்து நிற்ப
வென்றிதங்கு நிருதர்தள மிடைந்தமரர் நரரெவரும்
வெந்நிட் டோடச்
சென்றமர்செய் தகற்றியந்தத் தேவலன்கைப் படைமுழு
திறத்தால் வவ்விக் [துங்
குன்றனைய வவனிரதத் துறுவலவன் றனைப்பிணித்துக்
கொண்டு பின்னர். (31)

மவுலிதிரு பணையுமந்த வகைசிமிழ்த்து மற்றுமொரு
வலவன் றன்னு
லவனிரதந் தனைநடத்தி யலைகடல்போன் முழங்கிமுர
சதிரச் சூழ்ந்து
கவனமொடு கருதுமரைக் கணப்பொழுதில் வச்சிரதந்தன்
களிப்புற் றேங்கப்
புவனிதிசை புகழுவளர் வீரமயேந் திரபுரத்துட்
புக்கார் மன்னே. (32)

இரிந்தமக பதியமர ரெவருமதி தளர்ந்துபொன்னு
டெய்தி னர்மெய்
கரிந்துதுய ருழந்துபுவி காவலன்றன் படைமுழுதுங்
கருத்தின் மாழ்கிச்
சரிந்தகதி ரெறிந்துஇகழ் தடமதிலா மோதகர்
சார்ந்த விப்பால்
வரிந்திருந்த தேவாங்கன் வயினிகழ்ந்த திறமினி
வகுப்பா மன்றே. (33)

வலிமைகெழு வச்சிரதந்தன் மந்திரம்புக் கிருந்தெதிர்தே
வலனை நோக்கிப்
பொலியுமகிழ் சிறந்துகொலை புரிதொழிலாற் பயனிலையிப்
புனிதன் றன்று
லொலியல்பல பெறுகுவமென் றுன்னியுப சரித்தவனை
யுறவிற் போற்றி
யலியுமிழ்வா ளரக்கர்தொழ வந்நகருக் கரசனென
வமைத்தான் மாதோ. (34)

தீரவச்சிர தந்தனருள் செழுங்கனக முடிபுனைந்து
திருத்தே வாங்கன்
குரமைத்த சமுகமணி மண்டபத்துட் குலவுசிங்கா
தனமேற் கொண்டு
நேரமைச்சர் புடைசூழ நிகரில்பரம் பொருளைமன
நினைவிற் போற்றிப்
போரரக்கர் தொழுதேத்த வீரமயேந் திரபுரத்தைப்
புரந்தா னன்றே. (35)

பின்னொருநாள் வச்சிரதந்தன் பிரியமிக்க தேவலனைப்
பெரிது போற்றிக்
கன்னனெடுஞ் சிலைமதனுங் கைதொழவீற் றிருந்தவெழிற்
காவல் வேந்தே
யென்னருமைப் புதல்வியெனும் பதுமினியை வேட்டரு
றியம்ப வன்றோன் [ளென்
றன்னகம தொவ்வாத தன்மையினல் விதியை நொந்து
தளர்ந்து சோர்ந்தான். (36)

மயங்குறுமவ் வேலைதனிற் கனற்கடவு டேவலன்பால்
வந்து சார்ந்து
தயங்குகதிர் வேலாயித் தையலிராக் கதமினெனத்
தளரேல் சிந்தை
வியங்குமென்மா மகளாவ ளிவள்பெயரக் கினிதத்தை
யென்று தேற்றி
முயங்குமறை வழியேமன் முகூர்த்தமதிற் பல்வரிசை
முறைறின் றோங்க. (37)

தானேயம் மடந்தைதனைத் தருபுனலி னெடுமாசன்
றனக்கு நல்கி
வானேகி னெருண வாகனன்பின் னவனுமந்த
மருட வேந்துஞ்
சேனேரும் விழியிரதி சிலைமார னயிராணி
தேவர் கோமான்
கானேறு கமலமலர்த் திருமுகுந்த னெனவினிது
கலந்து வாழ்ந்தார். (38)

கலந்துபுணர் கயல்விழியக் கினிதத்தை யென்பவள்தன்
கருப்ப முற்றி
யுலம்பொருதிண் புயவரச னுவப்பசிசா சார்புகழ
வுரங்கூர் சால
னலன்பெலனென் றொருமூன்று புதல்வரைத்தந் தனள்
யனையர் நீங்கா [வருந்தி
வலங்குலவு கயஞ்சிறைய வருமடங்கற் குருளைகள்போல்
வளர்ந்தா ரன்றே. (39)

அச்சிறுவர் தமக்கு நெய்யு மருந்தொழிலை யினிதுகற்பித்
தாசர் கோமான்
வச்சிரதந்த னுக்குமற்றை வாளரக்கர் யாவருக்கு
மனம்பூ ரிப்பக்
கச்சமுறும் பலகலையு மன்னவரே தரும்படிக்குக்
கருணை செய்து
விச்சைசெறி யாமோத வளநகர்செல் வான்மனத்துள்
விருப்ப மிக்கான். (40)

மாதுலனு மந்தவச்சிர தந்தனிடத் தினிவிருந்த
வலிமை கூர்தன்
மோதுகொடி விடையுமவன் மொழிவிடையு மினிதுபெற்று
முனிவோர் வாழ்த்த
மீதுமணிக் குடைநிழற்ற மினிரிரத மூர்ந்துபுகழ்
மிகுதே வாங்கன்

போதுசெறி புனல்கழி புடைசூழ்ந்த வாமோத
புரத்துட் புக்கான். (41)

மன்னர்பிரா னங்கரின் மநுமுறைதப் பாதுசெங்கோல்
வளநடாத்தி
யின்னமுத நிகர்தேவ தத்தையெனு மயிலொடுவீற்
றிருந்தா னிப்பாற்
கன்னவிலுங் கனகபுய விஞ்சையர்யா வருந்திரண்டு
கயிலை நண்ணிப்
பன்னகவா பரணமணி பரமனிரு சரணமலர்
பணிந்து சொல்வார். (42)

வஞ்சரிடத் தணுகாத மாமணியே யருட்கடலே
வயங்குங் கங்கைச்
செஞ்சடையெம் பெருமானே தேடரிய சிவக்கொழுந்தே
சிறியேம் யாரு
மஞ்சரிய வறுபத்து நான்குகலை களிற்சிலநின்
னருளின் சீரால்
விஞ்சவுணர்ந் தனமுழுது மெமக்கறிவித் தளந்திருத்த
வேண்டு மென்றார். (43)

கேசரிவ் வகைபரவக் கிளர்நுதர்கட் பரனுவகை
கெழுமி நோக்கி
மாசறுநங் குலவேம வருணனமை நினைத்துவட
வரைத்தண் சார்பிற்
றேசுபெறு தவமுயன்று னவற்கொருநற் புதல்வனருள்
செய்வோ மந்த
வீசுபுகழ் மகனுமக்கு வேண்டுகலை முழுதுநன்கு
விரிக்கு மென்றான். (44)

ஆலமிடற் றமலனிவ்வா றருள்புரியக் களிப்பொடுகொண்
டாடி யன்னோன்
கோலமலர்ப் பதம்பணிந்து குலவுமறை மொழியினன்பு
கூர்ந்து போற்றி

நீலமுகிற் குலம்படியு நெடுமுடித்தண் கயிலைதனை
நீங்கிச் சோதி
சாலவிமைத் துளசேணி தனிலடைந்தார் புனிதவித்தியா
தரர்கண் மாதோ. (44)

இன்னரராங் கினிதகன்ற பின்னர்வரி மதர்நெடுங்கட்
கிளர்பொற் றாவி
யன்னநடைக் கவுரிபங்க னமோத வளம்பதிகாத
தளிக்குஞ் செங்கோன்
மன்னவனைக் கருந்திலுன்ன மற்றவனு மதைத்தெரிந்து
மகிழ்வு கூர்ந்து
துன்னரிய கயிலை வெற்போர் கணத்தடைந்து தாழ்ந்
தெழுந்து தொழுது நின்றான். (45)

எதிர்தொழுது பரவிநின்ற தேவலன்றன் றிருமுகத்தை
யினிது நோக்கி
மதிபுனையும் பரமனன்ப வடவசைச்சார் பினிலேம
வருண னென்பா
னதிகதவம் புரிந்தனன்மற் றவன்முன்னீ குழவியென
வடைந்து பின்னர்
விதிபெறுமெண் ணெண்கலையும் விஞ்சையர் கட்குணர்த்துகென
விடைதந் துய்த்தான். (46)

எமையாளு முமைபாக னிதுபகர விசைந்துதன்னா
ரெய்தி யொன்னார்க்
குமைவேற்கைக் கொற்றவன்பின் குமரர்கட்குக் கூறுவன
கூறி கற்பின்
கமைகூருந் தேவதத்தை காமர்சந்திர ரேகையிவர்
கருத்துந் தேற்றி
யமைதூல் தேகமதை யவ்வயிலே ரிலிங்கவடி
வாக்கி னனல். (47)

குருத்தெழுமவ் விலிங்கசொரூ பத்தினுக்கங் கிசைமணிக்
கோயி லாதிக்
திருப்பணிகள் பலபுரிந்து திவ்யாங்க னெனும்புதல்வன்
றினங்க டோறும்
விருப்புறுபூ சனையியற்றி வேதமறு நீதிசெங்கோல்
விதிவ ழாமல்
வருத்துபகை வரைத்துணித்து வளைகடற்பார் புரந்ததிக
வளங்கொண் டுற்றான். (48)

**கருத்து:—** முன்னே சொன்னபடி போரில் தோற்று ஓடிய வச்சிரதந்தன் உணவும் உறக்கமும் கொள்ளாமல் அதையெண்ணி எண்ணி நெஞ்சு உருகினான். மக்கள் தம்பியர் மருமக்கள் முதலியோர் இறந்ததினால் அவர்களுடைய மனைவியார் அழுகைக்கேட்டு துன்புற்றான். அப்போது இளமை நண்பன் வித்யுகத்சேனன் என்ற கொடியோன் வந்து தேர்தல் கூறினான். தலைவனே தேவேந்திரன்மீது படையெடுத்துச் சென்றபோது தேவலன் துணைக்கு வந்து நந்திக்கொடியால் வென்றதைக்கூறி அக்கொடியை அபகரித்தாலன்றி வெற்றி தனக்குக் கிடையாது என்று சொன்னான். அதைக்கேட்ட விக்யுகத்சேனன் வஞ்சனை செய்து அக்கொடியை அபகரித்து வருவதாகச் சொல்லிச் சென்றான். உடனே அவன் தேவேந்திரன் உடைய தூதனைப்போல் மாறுவேடம் பூண்டு தேவலனிடம் சென்று மீண்டும் போர் தொடங்கிற்று என்றும் நந்திக்கொடி அதற்காக வேண்டும் என்றும் இந்திரன் அதனை வாங்கி வரச் சொன்னான் என்றும் கபடமாகச் சொல்லி தேவலனிடம் கொடியைப் பெற்றுக்கொண்டு வச்சிரதந்தனிடம் கொடுத்தான். வச்சிரதந்தன் அக்கொடியை எடுத்துக்கொண்டு இந்திரன்மீது மீண்டும் போர்புரிய படையெடுத்தான். தேவலன் துணைக்குச் செல்லவேண்டி வந்தது. அங்குசென்று பார்த்ததில் அரக்கர் செய்த வஞ்சனை தெரிந்தது. அரம்பை சாபம் பலித்தது என்று தேவலன் கண்டான். அப்போது அரக்கர் தலைவன் வச்சிரதந்தன் தேவலனைப் பிடித்துக்கொண்டு வீர மகேந்திரம் சென்றான்.

## (2) தேவலன் அக்னிதத்தையை மணத்தல்.

சிறைப்பட்ட தேவலனை வச்சிரதந்தன் கொல்லாமல் அவன் மூலம் ஆடைகளைச் செய்விக்கவேண்டும் என்று எண்ணி அதற்காக தேவலனுக்கு ஒரு தலைமைத்தானம் கொடுத்துத் தன் மகள் பத்மினியை மணஞ்செய்துக்

கொள்ளும்படி வேண்டினன். தன் ஊழ்வினையை எண்ணி மனம் வருந்தி வேறுசெயல் ஒன்றுமின்றி அக்னிதத்தையென்ற அரக்கர் மகளைத் திருமணஞ் செய்யவேண்டி வந்தது. சில நாளில் அவளுக்கு சாலன், அலன், பெலன் என்ற மூன்று மக்கள் பிறந்தார்கள். அவர்களுக்கு நெய்யுந் தொழிலைக் கற்பிக்க அவர்கள் ஆடைகள் ஆக்கி அரக்கர்களுக்குத் தந்தார்கள். பிறகு தேவலன் விடைபெற்றுக் கொண்டு ஆமோத நகரம் அடைந்தான்.

## (3) மன்னன் இலிங்க வடிவு அடைதல்.

கயிலையில் சிவபெருமானிடம் வித்தியாதரர்கள் சென்று கலைகள் அறுபத்து நான்கையும் அறிந்துகொள்ள வேண்டுமென்று கேட்டார்கள். அதற்குப் பெருமான் மேருவின் சாரலில் ஏமவருணன் என்ற வித்தியாதரன் தவஞ்செய்து கொண்டிருக்கிறன். அவனுக்கு ஒரு மகனை அருள் செய்வோம். அவன் மூலம் எல்லாக் கலைகளையும் தெரிந்துக் கொள்ளலாம் என்று அருளினர். அதன் பொருட்டுச் சிவபெருமான் தேவலனை நினைக்க தேவலன் அங்கு சேர்ந்தான். இறைவன் அவனை நோக்கி வித்தியாதரன் ஆகும்படி ஆணையிட்டார். தேவலன் திவ்யாங்கனுக்குப் பட்டம் கட்டிவிட்டுத் தன் உடலை லிங்க வடிவமாகச்செய்து விட்டு மேலுலகை யடைந்தான்.

## இருபத்திரண்டாவது

# அருங்கலையுணர் வித்தி யாதரச்சருக்கம்.

*[இச்சருக்கத்தில் தேவலன் வித்யாதரன் ஆக அவதாரம் செய்தது கூறப்படுகிறது.]*

*அறுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.*

*புரைதவிர் சூத னின்ன புகறலுந் தொழுது போற்றி*
*வரைவறு வளங்கூர் நேமி வனமுனி வரர்க ளோய*
*தரைபுகழ் வேந்தன் வித்தியா தரவவ தாரஞ் செய்த*
*வுரைபெறு கதையு மெங்கட் குணர்த்தென வுணர்த்தி [னல்.]* (1)

*வல்லிருள் கடிந்த சிந்தை மாதவ முனிவர் கேண்மின்*
*றொல்லுட லினையி லிங்க சொரூபமா வமைத்துப் பின்னர்*
*வில்லுமிழ் மகுடவேந்தன் மேருவின் சாரல் புக்கோர்*
*சொல்லுறு குழவி யாகித் தோன்றினன் சுரர்கள் போற்ற.* (2)

*சார்பதிற் கயிலை வாழுந் தனிப்பரம் பொருளை யுன்னிச்*
*சீர்புனை மதலை வேண்டித் திருக்கற வெணணில் காலம்*
*பார்புகழ் தவம்பு ரிந்து பண்பினோ டமர்ந்த பூந்தார்*
*மார்பகே சரனு மேம வருணனங் கதனைக் கண்டான்* (3)

*காண்டலு மகிழ்வுற் றிந்தக் காரணங் கயிலையாதி*
*யாண்டவ னருளே யென்று வளப்பருந் துதிபு ரிந்து*
*மாண்டகு கரத்தா லந்த மதலையை யினிதெ டுத்து*
*நீண்டபொன் மணியாற் காந்தி நிறைந்ததன் மனைக்குச்*
*சென்றான்.* (4)

*மந்திர மதனிற் புக்கு வயங்குதன் மனைவியாய*
*சந்திடை மதர்நெ டுங்கட் சந்திர முகிக ரத்தி*
*லந்தநன் மதலை தன்னை யலையமு தெடுத்து மாலன்*
*றிந்திரன் முதலோர்க் கீந்த தெனத்தவ னினிது தந்தான்.* (5)

வாய்மைமா ருத வேம வருணனுந் திரும ணாளள்
சேய்மைமே ருவின்பாற் பெற்ற சிறுவனை யளித்த லோடும்
வேய்மலை புயம டந்தை விருப்புற வணுப்பக் குடும்பத்
தூய்முலை யிரண்டி லும்பால் சுரந்துமீ தெழுந்த தன்றே. (6)

முதிர்பெருங் கற்பிற் சந்திர முகிதுணை முலைத்த தும்பு
மதுரநல் லமுத மந்த மகவினுக் கினித ளித்துப்
புதுமணித் தொட்டி லேற்றிப் புந்தியி னுவகை பூப்பக்
கதிர்விழிக் கிமையே யென்னக் கருணையி னெடும்வ ளர்த்தாள் (7)

அத்திரு மகன்சொ ரூப வைங்கணை மதன னென்னச்
சித்திர கலாப மஞ்ஞைத் திறற்பெருங் குமர னென்னத்
தத்தொளி யுமிழ்வேல் வித்தியா தரர்சிரோ மகுட மென்ன
வெத்தனி யுலகும் போற்ற வினிதுற வளர்ந்தான் மன்னோ. (8)

அன்னையும் பிதாவு மன்புற் றமரர்மற் றெவரும் வாழ்த்த
நன்னய சுபமுகுர்த்த நாளிலத் திரும கற்கு
முன்னவர் தம்மாற் செல்வ முதிர்கம லாட்ச னென்னப்
பன்னருஞ் சிறப்பி னுமம் பகர்ந்தனர் பரிந்து மாதோ. (9)

விளம்பொரு பதினோ ராண்டில் வேதமா றங்க மேமுற்
களங்கணு காத வெண்ணெண் கலைக்குமோர்கடலே போன்று
வளங்கொளெப் புவன மீது மற்றிவற் கிணையின் றென்னத்
துளங்கரும் புகழும் பெற்றான் றுதிகம லாட்ச னென்பான் (10)

விட்புலத் தமர்ந்த சேடி மேவுகே சரர்கள் யாரு
முட்பொதி பசுந்தாட் கஞ்ச முககம லாட்சன் றன்னு
னட்புறு கலைகள் யாவு நவின்றுநம் மிருடீர் வாமென்
றுட்பொலி மகிழ்வாற் போற்றி யுற்றன ரவனை மாதோ.(11)

அடுத்ததங் குலத்து ளோர்தம் மகவிருட் செறிவு தீரத்
தொடுத்தபல் கலைய னைத்துந் துரிசற வுணர்த்தி னுனல்
உடுத்தவெண் டரங்க வேலை யுலகெலா முவப்பத் தோன்றும்
வடுத்தவிர் பரிதி யேபோல் வளர்கம லாட்ச னென்பான். (12)

வாழ்கம லாட்ச னென்னு மதிவலா னொருநா டன்னிற்
சூழ்கதிர் மணித்தண் கோட்டுத் தொல்பெருங் கயிலை நண்ணி
தாழ்கருங் குழலாள் பாகன் சரணபங் கயங்க டாழ்ந்தே [த்
யாழ்கட லிடைப்பி றந்த வமுதென விசைப்ப தானான்.(13)

முக்கனி கரும்பின் பாகு முதிர்ந்தகற் கண்டக் கார
மிக்கதேன் பிறவுங் கூட்டி வேட்டவர்க் களிப்ப தன்னச்
செக்கரஞ் சடிலத் தண்ணல் செவிவழிப் புகுந்து ளத்திற்
சொக்கரு மகிழ்வெ ழுப்பச் சுருதியாழ்த் துழனி செய்தான். (14)

மிடறொடு பேத மின்றி விஞ்சையர் பிரான்வா சிக்குஞ்
சுடர்மணித் திவவி யாழிற் றுவன்றுமின் னிசைவி ஞவிப்
படர்கதி ரலவன் றானும் பரிதியு மதிம யங்கி
யிடரறுங் களிப்பாற் றத்த மியல்பையு மறந்து ழன்றார்.(15)

அணங்குமென் மகளிர் யாரு மனையகாந் தாரங் கேட்டு
வணங்குநுண் ணிடைவ ருந்த வளர்ந்தெழு கொங்கை முற்
சுணங்கணி படர மாரன் றாவிய கணைகட் காற்றா [துஞ்
திணங்குதங் கொழுநர்த் தேடி யிடைவிடா துருகி நின்றார். (16)

ஓங்குமக் கயிலை வெற்பி னுறுபல விலங்கும் புள்ளு
மாங்குள வொருமை யாற்கேட் டரும்பெரு மகிழ்வு பூப்பத்
தூங்குநன் மலர்த்தேன் பெய்யத் துறுகலு முருகச் சோலைத்
தேங்கனி சிதற மோகஞ் செய்ததத் திவவி யாழே. (17)

காசிபன் மார்க்கண் டேயன் கவுதம னங்கி ராதன்
மாசிகு சனகனாதி மாமுனி வரர்கள் யாரும்
பேசருந் தவமு மோனப் பெற்றியு மறந்தா ரந்தக்
கேசரன் யாழின் பாணி கேட்டலு மால்கொண் டன்றே.(18)

அவிர்கம லாட்ச னிவ்வா றனகயா ழிசைப்ப தன்றிக்
கவிபுக ழநேக வின்பக் கலைகளு மினிது காட்டச்
செவிநிறை யமுத மென்னத் தேக்கியுட் களிப்பால் வேணி
மவுலியெம் பெருமா னெண்ணில் வரமவற் கருள்பு ரிந்தான். (19)

தினந்தோறுங் கயிலை நாதன் றிருமுன ரிவ்வா றெய்தி
யனங்கனு மினிது போற்ற வணிகொள்விஞ் சையர்தன் கோமான்
கனம்பொரு திருமால் வேலை கடைந்தெழு ளமுத சார
மெனும்படி நயவி பஞ்சி யிசைத்துவாழ்ந் திருந்தா னிப்பால் (20)

வனநெடுங் கடன்ஞா லத்துள் வயங்குகாந் தார நாட்டிற்
கனகமா புரமென் றொப்பில் கடிநக ரொன்றுண் டாங்கே
யினமலி சுருதி கீர்த்தி யென்னுமோர் மன்னர் மன்னன்
மனுமுறைப் படிகோ லோச்சி மகிழ்ந்துவீற் றிருந்தா னன்றே. (21)

அப்பதிக் கணித்தா யோங்கு மடவியின் சூழல் வைகுஞ்
செப்பரு கோர னென்னுந் திறனிசா சரனங் கெய்தி
யொப்பமை யளவி லாத வுயிர்தினந் தொறுஞ்செ குத்துத்
துப்பலர் மலிந்த தெய்வச் சோலைபற் பலவ ழித்தான். (22)

கோரனுன் மாந்தர் யாருங் குலைகுலைந் தயர்த றோர்ந்தவ்
வீரமார் சுருதி கீர்த்தி வேந்துபல படையோ டேகிக்
காரளா வியது ருக்கங் கருன்றகா னகத்தைச் சூழ்ந்து
வாரமோர் சிறிது மில்லா மற்றவன் றனையெ திர்ந்தான். (23)

எதிர்தலுஞ் சுருதி கீர்த்தி யிரிதர முடுகிச் சீறி
யதிர்த்தமாக் கயந்து ரங்க மவிர்சயந் தனம்ப தாதி
விதிர்த்திடக் கதையான் மோதி விழுங்கினன் விழியாற் செந்தீ
யுதிர்த்தெழு கோர னென்னு முணர்விலா வரக்க னம்மா. (24)

வாங்குவிற் சுருதி கீர்த்தி மனம்பதை பதைத்து வெங்கிட்
டீங்கிவற் செகுத்து வெல்வ தெளிதல வினிநாங் கங்கை
தாங்குதற் பரனை யுன்னித் தவம்புரிந் தருள்பெற் றப்பாற்
சோங்குடைக் கொடியன் றன்னைத் தடிப்பலென் றுளத்திற்
கொண்டு. (25)

றெய்வமென் சோலை யொன்றிற் சென்றுளந் திருத்திச் சின்றுட்
சைவந ளாலோ மூங்கிற் றவம்புரிந் திருப்பத் தேர்ந்து
மைவரு கண்டத் தண்ணல் மலைத்திரு மடந்தை யோடு
மெய்விடை மிசைப்பொ லிந்து விண்ணவர் தொழநேர் வந்தான். (26)

சேமிசைப் பொலிந்து தேவ தேவன்வந் தெதிர்த லோடும்
பூமிமுற் புவன மெங்கும் புகழ்பெறு சுருதி கீர்த்தி
மாமறைக் கரிய வன்னோன் வார்கழற் பதங்க டாழ்ந்து
கோமலர்க் கரஞ்சி ரத்திற் குவித்தனன் றுதித்து நின்றான். (27)

தொழுதெதிர் துதித்து நின்ற தூயவன் வதன நோக்கி
யெழுதரு கருணை பொங்கி யெந்தைபூ விறைவ நீயிச்
செழுமலர்ச் சோலை தன்னிற் செய்தவ மகிழ்ந்தாம் வேண்டும்
விழுமமில் வரங்கள் யாது விளம்பவை தருது மென்றான் (28)

முதல்வனீ தருள லோடு முறைவழாச் சுருதி கீர்த்தி
யிதயம துவந்து போற்றி யெந்தைகேள் கோர னென்றோர்
மதநிசா சரனிங் கெய்தி மன்னுயிர் பலசெ குத்துண்
டதமுற நினது பூசை யலர்வன மனந்தஞ் சாய்த்தான்.(29)

சொல்லுமங் கவனை மாற்றித் தொடர்தரு மிடர்க ளைந்து
பல்லுயிர்த் தொகையி னோடு பகவிர வுனது பாதம்
புல்லுறு மெளியேன் றன்னைப் புரந்தருள் புரிதி யென்னக்
கொல்புலி யுரித ரித்த குழகன்மற் றினைய கூறும் (30)

வேந்தகே ளவனை யாரும் வெல்லரி தாத லானுன்
காந்தைதன் வயிற்றின் மேலோர் காதலனுதிப்பா னன்னோ
சாந்தமில் கொடிய கோரன் றனைச்செறுத் துலகனைத்து [ன்
மேந்துசெங் கோல்செ லுத்து மென்றருள் புரிந்து சென்
றான் (31).

ஆதியம் பகவ னிவ்வா றருள்புரிந் தகன்ற பின்னர்
நீதிகொள் சுருதி கீர்த்தி நிறைதரு முவகை பூப்பத்
தாதிவர் பொழில்கள் சூழ்ந்த தன்னக ரினிது சார்ந்து
மேதினி முழுதும் போற்ற வீற்றிருந் தரசு செய்தான். (32)

கயிலையிற் பரமன் பின்பு கமலாட்சன் றனையு ளத்தி
னியல்புற நினைப்ப வன்னோ னினிதுணர்ந் தொருக ணத்தி
னயனொடு திருமுன் னெய்தி நளினமென் பதங்க டாழ்ந்து
மயிலியல் பங்க வென்னை மதித்ததென் னருள்க வென்றான்
(33)

*அனையவன் வதன நோக்கி யாதிகாந் தார நாட்டிற்*
*கனகமா புரம்பு ரக்குங் காவலன் சுருதி கீர்த்தி [தோன்றிச்*
*தனதுளங் களிப்ப வன்னோன் றலைவிபாற் செனித்துத்*
*சினமிகு கோர னென்னுந் திறலரக் கனையும் வீட்டி.* (34)

*மன்னுயிர்த் தொகைகள் யாவு மகிழ்வுற வருத்தம் போக்கி*
*யங்கில முழுது நீபோ யாள்கென வருள்வ ழங்கத் [றிப்*
*துன்னும்விஞ் சையர்பி ரானச் சொன்மறு திசைந்து போற்*
*பொன்னுறு தனது செம்பொற் புரிசைசூழ் நகரம் புக்கான்.*
(35)

**கருத்து :**—மேலே கூறியபடி சிவபெருமான் அருளிய ஆணையின் படி மேருவின் சாரலின் தவஞ் செய்துகொண்டு இருந்த ஏம வருணன் முன்னிலையில் ஒரு குழந்தை வடிவாக தேவலன் தோன்றினான். அது இறைவன் திரு அருள் என்று எண்ணி ஏம வர்ணன் தன் மனைவி சந்தரமுகியிடம் அக்குழந்தையைக் கொடுத்தான். அக்குழந்தைக்குக் கமலாட்சன் எனப்பெயர் வைத்து வளர்த்தினார்கள். அவன் அறுபத்தி நான்கு கலைகளையும் உணர்ந்து வித்தியாதரர்களுக்குக் கற்பித்தான். கயிலையங்கிரி சென்று இறைவன் மீது யாழ்மூலமாக துதிகள் சொல்லி வந்தான். இப்படி இருக்க கனகமாபுரியில் சுருதிகீர்த்தி என்ற ஒரு அரசனைச சோரன் என்ற ஒரு அரக்கன் துன்புறுத்தி வந்தான். அரசன் சிவபெருமானைத் துதிக்க அச்சோரனைவெல்ல வல்ல ஒரு குமாரனை அளிப்பதாக இறைவன் அருளினார். பிறகு இறைவன் கமலாட்சனை விளித்து சுருதிகீர்த்திக்கு மகனாய் பிறந்து சோரனை அழிக்கும்படி ஆணையிட்டார். கமலாட்சனும் அதனை சிறைமேற் கொண்டார்.

## இருபத்துமூன்ருவது.

## தருபுட்பதந்தாவ தாரச்சருக்கம்.

[இச்சருக்கத்தில் தேவலன் புட்பதந்தன் என்ற அவதாரம் எடுத்தது கூறப்படுகின்றது.]

கொச்சகம்.

எத்திறமு முணர்சூத னிவையருள வெதிர்போற்றி
முத்தருயர் கமலாட்சன் முன்சுருதி கீர்த்தியெனுஞ்
சுத்தமகி பதிமகவாய்த் தோன்றியரக் கனைமுருக்கி
யொத்தரசு புரிசீரு முரையெனவன் னவனுரைப்பான் (1)

வாவுறுமைம் புலன்களைந்த மாமுனிவிர் கேண்மினின்ப
மேவுகம லாட்சனுயர் விமலசிவ பரனருளாற்
பூவுலகெண் டிசைமுழுதும் புகழ்சுருதி கீர்த்திபுணர்
தேவியெனுஞ் சோமவதி திருவயிற்று டவதரித்தான். (2)

விதித்தமது முறைதவரு விறற்சுருதி கீர்த்திநெஞ்சங்
கதித்தமகிழ் பிறங்கவன்னோன் காதலிபாற் றிருமகளனங்
குதித்திடலும் புட்பதந்த னிவற்குரிய நாமமென
மதித்தவச ரீரிமொழி வானினிடத்தெழுந்த தன்றே. (3)

புயங்கமுடி தனிற்பொறுக்கும் பூவினிடைப் பொலிந்தவிட
மயங்கிருள்சீத் துயிரனைத்து மகிழவரு மிளங்கதிர்போ [ர்
னயங்குலவு கனகபுர நரபதிதோட் டுணைகுமிழ்ப்ப
வியன்புகழ்கூர் புட்பதந்தன் விண்ணவர்போற் றிடவளர்
[ந்தான். (4)

வயல்செறியா மோதநகர் வளர்தேவ தத்தையும்பின்
முயலகனை மிதித்தபொற்றாண் மூர்த்திசெழுந்திருவருளால்
வியல்குலவு சிந்துபதி விருபாட்சன் மகளாகத்
தயவினவன் மனைகீர்த்தி சாலிவயிற் றிடைப்பிறந்தாள். (5)

வேற்கரத்து விருபாட்சன் மிகவுமன மகிழநெடும்
பாற்கடலி னமுதமெனப் பந்தனைதோன் றியபொழுதே
மாற்குடின்மற் றிவட்குறுபேர் வளர்தேவ தத்தையென்றே
யேற்குமென வசரீரி யியம்பியதெண் டிசைவிளங்க. (6)

அடற்சுருதி கீர்த்தியின்று னளித்தபுட்ப தந்தனுக்கு
மிடற்சயில மனையபுய விருபாட்சன் வவத்தில்வந்த
மடற்செருந்தி மலராளக மாதேவ தத்தைதனைக்
கடற்சகமெங் கணும்புகழக் களித்துமண முடித்தனனே. (7)

புட்பதந்த நிருபனந்தப் பொற்றேவ தத்தையொடு
தட்பமல ரணையினின்பந் தரத்திளைத்து வருநாளி
லட்படையொன் னலர்பரவு மடற்சுருதி கீர்த்தியவன்
கட்பதும முகநோக்கி யருளினிவை கழறினனால். (8)

கலிவிருத்தம்.

மைந்த கேளினைய மாநக ரைச்சூ
ழுந்த மாவன மதிற்கண லேபோற்
கொந்து பாவியொரு கோர னெனும்பேர்
முந்து வாணிருதன் மொய்ம்புகொ டுற்றான். (9)

ஆல நேர்தரும வன்பசி தன்னாற்
பால மீதினுயர் பற்பல கொன்றுண்
டோல வாபரண னுண்மகிழ் பூசைச்
சீல மாமலர் வனங்கள் சிதைத்தான். (10)

அன்றி யுந்திற லவன்புரி துன்ப
மொன்றி ரண்டல வுரைப்ப மெனிற்போர்
துன்றி டுங்கனசு ராதிப ரும்பின்
சென்று ழன்றனர் திகைத்திட வெல்வான். (11)

பாவி யானகன பாதக னின்றே
ளாவி சோரவனை யாவெனதிர் நீசென்
றேவ நேகவகை யெய்து முடித்தே
வாவெ னவருள் வழங்கினன் மன்னன். (12)

தந்தை யிந்தமொழி சாற்றலு மைந்த
னந்த வெம்பகை யரக்கனை யின்னே
சிந்த வென்றினிது சேர்வ லெனப்பொற்
பந்த நன்குறு பதங்கள் பணிந்தே. (13)

பிதா வழங்குவிடை பெற்றுயர் செல்வன்
மதா சலம்புரவி வாட்படை திண்டேர்
விதான மெங்கணு மிடைந்திட விண்ணி
னிதான வொண்கவி கைமற்று நிரம்ப. (14)

கொந்து வாளுமிழ் கொடிஞ்சிக டாவி
நந்து சூழ்கனக நன்னகர் நீங்கி
விந்தை மேவுபுய வீறுறு புட்ப
தந்த னீளடவி தன்னை யடைந்தான். (15)

சேனை யங்கடல் செறிந்திட மேவி
யூன மின்றவ னுறைந்திடு கோரன்
தான முன்றெதிர் தலைப்பட வீர
ராக கந்திமிலை யாதிய திர்த்தார். (16)

தெவ்வி யத்தொனி செவிக்குள் விளுவி
யவ்வி டத்துறை யரக்க னழன்று
நவ்வி முற்பட நடுங்குற வாவும்
வெவ்வி றற்புலியின் மேவின னம்மா. (17)

கழுமு தற்படை கரத்தி னிலங்க
வெழுக னத்தினுரு மென்ன வதிர்ந்து
கெழுதி றற்சுருதி கீர்த்தி மகன்றன்
வழுவி லக்ககன மாழ்க வெதிர்த்தான். (18)

அரக்க னிந்தவளை யங்கடர் காலை
யுரத்த ளங்கள்பல வோடின முன்னு
ளிரைப்பெ ருங்கட லிடத்தெழு காளத்
திரட்கு டைந்தகல் செழுஞ்சுர ரேபோல். (19)

கவன நொந்திரிதல் கண்டு சினந்து
சிவன தன்பனுயர் தேரை நடத்தித்
தவ..ின் மின்பொரு சரம்பல பூட்டிக்
குவல யங்கழுமு கோரனை நேர்ந்தான். (20)

எரிபெ னக்குரிசி லேவிய கோலால்
வெருவி யக்கொடியன் மீட்டு மழன்று
முருளு டைத்தனது மூவிலை வேலை
யுருமி னிற்குமுறி யுய்த்தனன் மன்னே. (21)

மூவி லேப்படையை மூதுணர் வேந்தோ
ரேவி னிற்கடிதி றுத்தலு மன்னோன்
றீவி ழித்துணை சிவந்தொரு பாரக்
கோவெ டுத்தெதிர் கொதித்து விடுத்தான். (22)

எறித டங்கிரி யெதிர்த்திட லோடும்
வறித றுங்கனக மாநகர் மன்சேய்
பொறியு மிழ்ந்தவொரு புங்க மதிற்கா
னெறிப டும்பரி செனும்படி நீத்தான். (23)

பொறைத கர்ந்தசெயல் கண்டு புழுங்கி
முறைத விர்ந்துள மூரண்பெறு கோரன்
பிறைத வழ்ந்தவட மொன்று பிடுங்கி
யிறையெ னும்படி யெதிர்ந்தன னம்மா. (24)

தன்ம மற்றநிரு தன்செயல் கண்டு
பின்ம திக்கவிகை பெற்றருள் கோமான்
கொன்மு னைச்சுடுகொ டுஞ்சர மொன்றாற்
றென்ம ரத்தையெழு தூள்பட வெய்தான். (25)

மற்றி ரண்டுகனல் வாளிக டொண்டிக்
கற்றி றம்புனை கரங்க ளிரண்டு
மற்றி டும்படி யலைப்ப வவன்கோ
விற்றி டுந்தரு வெனத்தனி நின்றான். (26)

கையி ரண்டுமறு கார்நிரு தன்றூன்
மையு நொந்தகல வாயி னதிர்ந்தே
நொய்தி னிங்கிவனை நோன்மைகொ டாளாற்
பைய வென்றிடுவ லென்று படர்ந்தான். (27)

அங்கி சாசர னடுத்திட லோடும்
வின்னி லாவுவடு மேவுறு தோளான்
வன்னி சூழ்கொடிய வாளிய தொன்றாற்
சென்னி பூமியில் விழும்படி செய்தான். (28)

அசனியஞ்சுற வரக்க னதிர்த்தே
வசம ழிந்துபுவி வாய்விழ லோடு
மிசைபு கழ்ந்துசுர ரின்மலர் பெய்தார்
திசைக ளெங்குமிடர் தீர்ந்தன மாதோ. (29)

மந்த ரப்புய வலன்கெழு புட்ப
தந்த னக்களரி தன்னை யகன்று
நந்த லன்றொளிர்த னன்னக ரெய்திக்
கொந்த லர்த்தொடைகொள் கோயில் புகுந்தான் (30)

கோதை மாலைபுகு கோதின் மகன்றன்
றாதை பாதமலர் தாழ்ந்து பணிந்து
வாதை கூர்திருதன் மாய்ந்தன னென்ன
வோத வேயவ னுவந்திடர் தீர்ந்தான். (31)

கிருபை கூர்சுருதி கீர்த்திய தன்பின்
மருவு சீர்கொடன் மகற்கர சீந்தே
யுரிய தேவியோ டுவந்து தவந்தான்
புரிய வோரடவி புக்கனன் மன்னே. (32)

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

தாதையினுஞ் சுருதிமுறை தவறுமலை யபுட்ப
தந்த வேந்தன்
மேதைமதி யமைச்சர்புடை சூழவுல கனைத்துமின்ப
மிகக்கொண் டோங்க
வோதைநெடுங் கடற்படைக ளுடன்மலியத் திறைகொடு
வந்தொன்னார் தாழச்
சீதைபதி யெனக்கருணை திருந்துசெங்கோ லோச்சிநிறை
சிறப்பி னுற்றான். (33)

சந்தான நிகர்த்தபுட்ப தந்தநர பதிசிவபூ
சனைந டாத்த
மந்தாரை கரவீர மாலதிநா கரிதளவ்
மகிழ்புன் னைகஞ்

சிந்தூர மயிலைவலம் புரியிதழி கடம்புவில்வஞ்
செருந்தி சாதி
பைந்தாது கமழ்மலர்பற் பலவினைய செறிந்தவெண்ணில்
படப்பை செய்தே. (34)

அருளிலிங்கம் பதிஞேரா யிரநிறுவித் தினங்கடோறு
மருச்சித் தேத்தித்
தெருளிலங்கு மெய்ஞ்ஞானச் சிவசரிதத் தெள்ளமுதஞ்
செவிவாய்த் தேக்கி
மருளகன்ற வெண்ணுன்கு வகையறமும் புகழுமன்பு
மறுவில் சீரும்
பொருள்செறிந்த நயகுணமும் பொருந்தநெடு நிலவலயம்
புரக்க நாளில். (35)

வந்தவொரு சிவநிசியின் மாமறையா கமநூலின்
வழியாற் புட்ப
தந்தநர பதியாதி சங்காற்பூ சிப்பவன்ஞேன்
றயவு கூர்ந்து
பந்தநய களபவிளம் பயோதரமுக் கண்ணியிடப்
பாலுற் ரேங்க
வெந்தவுல கமும்புகழு மெழில்விடைமேற் கொண்டுமுன்ன
ரெதிர்ந்தா னன்றே. (36)

அண்டசரா சரமுழுது மளித்தபர னுமையொடுவந்
தருள லோடுங்
கண்டுபர வசனகிக் கருத்துருக மெய்பொடிப்பக்
கடிது தாழ்ந்து
பண்டுதிரு மாலுமலர்ப் பங்கயனுந் தேடரிய
பாதா நாளுந்
தொண்டுபுரி பவர்க்கதிக சுகந்தருகா ரணவெனமுற்
றொழுது நின்ருன். (37)

போற்றுபுட்ப தந்தன்முகாம் புயநோக்கி வேண்டியவை
புனித வீண்டுச்

சாற்றுதியன் னவைதருது மெனப்பரம னுரைப்பவன்ஞேன்
றலைவ நீதான்
வீற்றிருக்கும் கயிலாய வெற்பினுக்கி யானுமென்றே
வியுநா டோறுந்
தேற்றுமன்பி னடைந்துமின்னைத் தெரிசிக்கும் படிக்கருணை
செய்தி யென்ருன். (38)

பார்த்திபன்மற் றிதுவேண்டப் பரனுவகை கொடுவரமப்
படியே தந்து
சீர்த்திதிகழ் விடையொடுவிண் ணிடைமறைந்தான்பின்னரி
வன்றினங்க டோறு
மார்த்திதவிர் மனைவியுட னலர்பலகொண் டுயர்கயிலை
யணுகி யந்த
மூர்த்தியையு முலகளித்த முதல்வியையுந் தொழுதுவரு
முறையி னுற்ருன். (39)

பற்பகவிப் படிவரவோ ரிரவினிற்பூ மலரலங்கல்
பலவுங் கொண்டு
கற்பழகு புயவேந்தன் கயிலையிற்சென் றெம்பெருமான்
கவுரி யோடு
மற்பமரு முவளகத்து டிருப்பவது தெரிந்தொதுங்கி
யற்ற நோக்கி
நற்பசும்பொற் கிரணநவ மணிவாசற் செழும்படியி
னயந்து நின்ருன். (40)

பாணியதிற் கவுரிசிவன் பாதபங்கே ருகமலர்கள்
பணிந்து போற்றிக்
காணிருவர் காணரிய காரணயா வருமறியாக்
கதைநீ யொன்று
பேணியெனக் கருளுதியென் னலுமவனங் கதுசொலவப்
பெற்றி தன்னை
வாணிலவு கடையுறைந்த மன்னர்பிரான் கேட்டுமிக
மகிழ்ந்துட் கொண்டான். (41)

பின்னாரந்த மன்னனிது சமையமல வெனக்கயிலைப்
பிறங்க னீங்கிக்
கன்னல்வயல் செறிகனக மாபுரத்திற் புகுந்துதன்பொற்
காமர் மாடந்
தன்னிலணை தரத்தேவ தத்தைநெடு நேரமெங்குச்
சார்ந்து போந்தா
யென்னமிகப் பிணங்கியொன்று மியம்பாது சந்தேகித்
திருந்தா ளன்றே. (42)

எல்லைவய்திற் புட்பதந்த னேந்திழைநீ யையமுறே
லீச னூர்க்கு
மால்வளர்மென் மலர்கள்கொண்டு சென்றேனங் குவன்கந்த
வாரந் தன்னிற்
சேவரியஞ் சனநெடுங்கட் டேவிக்கோ ரரியகதை
செப்பி னன்யான்
மேல்வனைபொற் கடையிடைநின் றதைவினவி நெடுநேர
மேவி னேனால். (43)

சமையமிது வலவெனப்பின் னிவணடைந்தே னெனலுமத்
தத்தையல் கேளா
வுமையினொடு சிவபரம னுரைத்தவிரா சியத்தையெனக்
கோது கென்ன
வமைதிபெறு மதனையொழுங் காகவிரித் தெடுத்தவளுக்
கறிவித்தப்பா
லிமையளவு தனிலூட லினைத்தீர்த்தான் மதனினும்பொற்
பிலங்கு சீரான். (44)

மறுபகலி னிருவருமென் மலரினணி பலகொண்டு
வளர்பே ரின்பம்
பெறுகயிலை வரையடைந்து பெருமானுக் கரசனவை
பெரிதுந் தந்தே
நறுமளின பதம்பணிந்தா னவ்ன்றேவி யுமையாட்கு
நல்கிப் போற்றி

யுறுமறைக ளால்வழுத்திப் பெண்மதியா லயிர்ப்பற
வொன்றுரைப்ப தானுள். (45)

சுந்தரியோ ரரியகதை சொல்லுவல்யான் கேள்ளெனத்
தன்றுணைவ னென்னற்
பந்தவிர னினிலுணர்த்து மந்திரத்தை யுரைப்பவரை
பயந்த பாவை
கொந்தலொடு பரனைநண்ணித் தொழுதேவர்க்குந் தெரியாத
கொள்கைத் தென்றே
யந்தரணி நொறும்வழங்கு மதனையன்றெற் கோதினீ
யழுகி தென்றுள். (46)

தேவிசிந்தைச் சினந்தெரிந்து சிவபரனிக் கதைமினைவர்
செப்பக் கேட்டாய்
நீவிளம்பு கெனலுமுமை தேவதத்தை சொணுளெனவன்
னோரத் தெந்தை
பூவியந்து தருமவனை விளித்துனக்கியா ரிந்தவகை
புகன்று ரென்ன
மேவிவந்தித் தெழுந்துநின்று விதிவசியான் மற்றிதனை
விரித்தா ளன்றே. (47)

எத்தலமு மளித்தருள்வோ யெளியனண்ப னிடைத்தறிந்
தேனெனவே தேவ
தத்தைசொலப் பரமனந்தப் புட்பதந்தன் றனைவிளித்துன்
றனுக்கா ரிந்த
வித்தகம துரைத்தனரென் னலுமனையா னடிபணிந்து
மென்கை கூப்பி
நித்தவரு மறைகளினு னெடிதுதுதி புரிந்துநின்று
நிகழ்த்து கின்றுன். (48)

எம்பெருமா னினிதுபொற்று ளிணைபரவ மலர்பலகொண்
டெளிய னேன்முற்
பம்பிரவிங் க்டைந்தேனப் பொழுதிலந்தப் புரத்துமைக்குப்
பரிவு கூர்ந்து

வம்புறுமிக் கதைதனைநீ மகிழ்ந்துவிரி வுறக்கருணை
வழங்க மேலோர்
நம்புமணிக் கடையினின்று நயந்துகேட் டனனெனவே
நவிற்றி னுனல். (49)

பத்தனிது சொலச்சினந்து பரனீயிக் கதையைவெளிப்
பகர்ந்த நீரான்
மத்தமன வேதாள வடிவதுபெற் றிடுகவுன்றன்
மனையாந் தேவ
தத்தையுங்கத் தபவுருவந் தாங்குகவென் றேகடிது
சபித்த லோடும்
புத்திதடு மாறியன்னோற் போற்றியிந்த வினைதீரும்
பொழுதென் றென்றான். (50)

தொழும்பனங்கிவ் வாறுமனத் துயருழந்து வேண்டிநின்று
துதிப்ப வீச
னழுங்கலிது நீயுநின்ன யகியுமெதிர் பொழுதகலு
மதுவென் றென்னிற்
செழும்பொழிற்பா டலிபுரத்திற் றேவதத்தை போய்ப்
பகலத் திரியாய் மேவி
மழுங்கிரவெ லாமடந்தை வடிவுகொடு நமைப்பரவி
வதிகு வாளால். (51)

அனையசெழும் பாடலிமா புரத்திணுக்கோர் யோசனையா
மடவி தன்னிற்
சினைபரவு மொருவடமேற் றிறலலகை யுருக்கொடுநீ
திகழ்வாய் பின்னர்க்
கனைமுரச விக்கிரமா தித்தனவ ணடைந்துனைநின்
காமர்த் தேவி
முனமிசைவித் திடுவனன்று முடியுமிந்தச் சாபமென
மொழிந்தான் மாதோ. (52)

**கருத்து :—** சிவபெருமானுடைய திரு அருளின்படி கமலாட்சன் சுருதிகீர்த்தி அரசனுக்கும் சோமவதி என்ற அரசிக்கும் மகனாய்ப் பிறந்தான். அம்மகனுக்குப் புட்பதந்தன் என்ற பெயர் இட்டார்கள். ஆமோத நகரத்தில் இருந்த தேவதத்தை சிந்து அரசன் புதல்வியாகப் பிறந்தாள். இருவருக்கும் திருமணம் நடந்தது. அரசன் புட்பதந்தனை அழைத்துச் சோரனை அழிக்கும்படிக் கூறினான். புட்பதந்தனும் சோரனைக் கொன்றுவிட்டு தன்னூருக்குச் திரும்பினதும் அரசன் அவனுக்குப் பட்டங்கட்டிவிட்டுக் காட்டுக்குச் சென்றான். புட்பதந்தன் சிவபக்தியில் ஈடுபட்டவனாய் நந்தவனங்களை உண்டாக்கிச் சிவபூஜை செய்து வந்தான். இறைவன் மகிழ்ந்து புட்பதந்தன் தினந்தோறும் கயிலை செல்வதற்கு வரந்தந்தான். ஒருநாள் கயிலையில் இறைவனும் இறைவியும் எவரும் கேட்டறியாக் கதையைச் சொல்லிப் பேசிக்கொண்டிருந்தார்கள். அதைக்கேட்ட புட்பதந்தன் மனைவிக்கு சொன்னான். மனைவி இறைவிக்கு சொல்ல இறைவன் புட்பதந்தனை வேதாளம் ஆகும்படி சபித்து அவன் மனைவியைக் கழுதையாகும்படியும் சபித்தார்.

## இருபத்துநான்காவது

# உரங்கொள்வேதாள வுற்பவச்சருக்கம்.

[இச்சருக்கத்தில் புட்பதந்தன் வேதாளம் என்ற அவதாரம் எடுத்தது கூறப்படுகிறது]

*அறுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.*

அந்தண ரினைய கூறு மனகரு தனைவ ணங்கி
யெந்தம துளத்தஞ் ஞான விருள்கெட வருவோய் புட்ப
தந்தன்வெம் மயலா யன்னோன் றலைவியத் திரியாய்ப் பாரில்
வந்தது மினியெங் கட்கு வழங்குகென் னலும்வ ழங்கும். (1)

உட்பகை யாறு நீத்த வுணர்வினர் கேண்மி னந்தப்
புட்பதந் தனுக்கங் கீசன் புகன்றசொற் படிமற் றன்னோன்
கொட்பனல் விழிவே தாள வுருக்கொடக் கொடுங்கா னத்தில்
வட்பணை வடமே லெல்லா மயல்கட்கு மரசா யுற்றான். (2)

தத்தரி நெடுங்கட் டேவ தத்தையுங் கவுரி பங்க
னுத்தரப் படியே பின்பா டலிபுரத் துற்றென் முற்று
மத்திரி வடிவாய்க் கங்கு லதனிற்கந் தருவ மாதாய்
வித்தைகொள் விபஞ்சி வாசித் திம்முறை மேவு நாளில். (3)

உலகடங் கலுநின் றேத்த வுச்சினி புரத்தை யாளும்
விலகரு நீதிச் செங்கோல் விக்ரமா தித்த வேந்தன்
செலவுறு வனசஞ் சாரத் திறத்தினை விரும்பி யந்தப்
பலமணி மாட மோங்கும் பாடலி நகரிற் போந்தான். (4)

விழைவினோ டடைந்த வந்த விக்ரமா தித்த னென்பான்
கழைசெறி வேலி பண்ணைக் காமர்பா டலிபு ரத்தை [கோர்
மழைபொரு நிசியிற் சென்று வரன்முறை வரும்போ தங்
குழைதரு மலர்ப்பூஞ் சோலை யணித்தெனக் குறுகி னானல். (5)

அராமமங் கதிலெல்லெல்லா மத்திரி யாகு மந்தத்
தராதலம் பரவு தேவ தத்தைகந் தருவ மாதா
யிராகவின் னிசையாழ் கல்லு மிரும்புநெக் குருக வாசித்
துராவுநீர் முடியி னான்சீ ரோதுமவ் வோசை கேட்டான். (6)

வாருறு பொழில்வாய்க் கோட வதியிசை கேட்ட லோடு
மேருவி னுயர்தோ ளானிம் மிடைதரு கங்குற் போதில்
யார்கொலிங் கிவையி யற்று மவரறி குதுநா மென்றே
ஏர்கெழு மனைய பாவை யிருக்குமவ் விடத்திற் சென்றான் (7)

சவுரிய நிருபன் றேவ தத்தைநே ரெய்தி நின்று
கவிரிதழ் மடந்தாய் நீயார் கருதுநின் னகர்யா தன்பே
ரெவனிருட் போதி லிவ்வா றிங்குவந் திருப்ப தென்னை
நவிலுதி யெனலு மந்த நன்னுத லினைய சொன்னாள். (8)

வீரயான் சிந்து வேந்தாம் விருபாட்சன் புதல்வி யென்றன்
பேருயர் தேவ தத்தை பிறங்குசீர்ப் புட்ப தந்த
னூர்வல னரன்சா பத்தா லனையன்வே தாள மாகி
வார்விலங் கினம்பல் பேய்கள் வளரிருள் வனத்தி லுற்றான் (9)

யானுநீள் பகற்போ தெல்லா மத்திரி வடிவாய் மேவி
வானுலா மிரவிற் கன்னி யுருக்கொடு வருந்தி யுற்றேன்
பானுநேர் கதிர்வை வேலென் பண்புயர் பதியுந் தீயேன்
றானுமோ ரிடஞ்சேர் வேலைத் தவிருமிச் சாப மாதோ. (10)

இருவரு மவ்வா றோர்பா லெதிர்ந்திட வியற்று தற்கு
விருதினி லுயர்ந்த வாய்மை விக்ரமா தித்த னிங்கு
வருபொழு தென்றோ விந்த வல்வினை தவிர்வ தென்றோ
தெரிகில மிவையெ லாமச் சிவனருள் செய்தி யன்றே. (11)

என்றுதன் வரலா றெல்லா மினிதெடுத் துரைத்துப் பின்
கன்றுறு கரத்தா ளந்தக் காவலன் வதன நோக்கி [னர்
மன்றலந் தாரோய் நீயார் மன்னவர் மன்னன் போலு
முன்றல மெதுபேர் யாதிங் குற்றதென் னுரைத்தி யென் [றாள். (12)

மாதர சிவைவி ளம்ப மன்னர்கோ னிரும்பூ தெய்திச்
சீதள வளகத் தாயுச் சினிபுர மதனில் வாழு
மேதகு சதுரு பாய விக்ரமா தித்தன் யானின்
காதலன் றனைக்கண் டிங்கோர் கணத்தினிற் கொணர்வ லஞ்சேல். (13)

துயரினித் தவிரென் றந்தத் தோகைதன் மனத்தைத் தேற்றி
யயர்வறு திறல்கூர் வேலா னனையளால் வழிக்கொண் டப்
பயனுறு பழனஞ் சூழ்ந்த பாடலி புரத்தை நீங்கி [பாற்
யியல்பறு கொடுவே தாள மிருந்தவவ் விடத்தைச் சார்ந்தான். (14)

கருத்து :— முன் சொன்னபடி தேவலன் சிவபெருமான் இட்ட சாபத்தின்படி புட்பதந்தன் வேதாளமாகிப் பேய்களுக்குத் தலைவனாய் ஒரு கொடிய காட்டில் பெரிய ஆலமரத்தில் வசித்து வந்தான். தேவ தத்தையோ கழுதை வடிவுகொண்டு பாடலீபுரத்தில் பகல் முழுவதும் திரிந்துவிட்டு இரவில் தன் வடிவம்பெற்று யாழ் வாசித்துக் கொண்டிருப்பாள். பின்னொரு நாள் விக்ரமாதித்தன் ஆண்டு வருகையில் வன சஞ்சாரமாகப் பாடலீபுரம் வந்தான். அங்கே பூங்காவில் இருக்கும் போது இரவில் ஒரு கந்தருவப்பெண் எலும்புமுருகும்படியாக யாழ் வாசிப்பதைக் கேட்டான். மிகவும் வியப்புற்று அவளிடம் சென்று செய்தி அறிய விரும்பினான். அதற்கு அவள் தன் பெயர் தேவதத்தையென்றும் தன் கணவன் பெயர் புட்பதந்தன் என்றும் கூறித் தங்களுக்கு வந்த சாப வரலாற்றைக் கூறினாள். அவளும் அவ்வரசன் யார் என்று வினவ அதற்கு அவன் தான் விக்கிரமாதித்தன் என்றும் அவர்கள் சாப விமோசனம் அடைவிக்கும் பொருட்டு இருவரையும் இணைத்து வைப்பதாகவும் வாக்களித்துவிட்டுச் சென்றான்.

## இருபத்தைந்தாவது

# வேதாளசாப விமோசனச்சருக்கம்.

*[இச்சருக்கத்தில் வேதாளமும் தேவதத்தையும் விக்ரமாதித்தனால் சாப விமோசனம் அடைந்த செய்தி கூறப்படுகிறது.*

*என்னலு முனிவர் சூத விருடியைத் தொழுது போற்றி*
*வின்னகு மகுடச் செங்கோல் விக்ரமா தித்த னென்னு*
*மன்னவர் மன்ன னலவ் வல்வினை புட்ப தந்தன்*
*முன்னகல் கதையு நன்கு மொழிகென மொழிவ தானான்.* (1)

*மிடைதரு வடவி சார்ந்த வேந்தனத் திறல்வே தாள*
*முடைகெழு பெரும்பேழ் வாயு முடிவெழு வளிநேர் மூச்சுங்*
*கடையனல் விழியு நீண்ட கதிர்ப்பிறை யெயிறுந் தோன்றச்*
*சடையணை தொழுஞ்சி மிழ்த்தோர் தனிவடத் திருப்பக் கண்டான்.* (2)

*காண்டலுங் கலங்கா வீரன் கடிதினத் தருவி னேறி*
*யாண்டம ரலகை வேந்தை யதன்மவு லிகளால் வீக்கி*
*மீண்டதி னிழிந்து சென்னி மீதுறத் தாங்கிச் செம்பொற்*
*பூண்டகு முலையாள் வைகும் பொழிலினை நோக்கிச் சென்றான்.* (3)

*சுமந்துசெல் வேந்தை நோக்கிச் சுழல்விழிப் பேழ்வாய் மண்ணை*
*கமந்தரு திறலோ யானோர் காதைகூ றுவலக் காதைக்*
*கமைந்துள பொருணீ சொல்லா யாகிலுன் றலைசில் லாமென்*
*றிமம்படு திங்கட் டுண்ட வெயிற்றுவாய் திறந்தி சைக்கும்.* (4)

*மித்திர நிகர்வே லோய்முன் விசாலமா புரியை யாளுஞ்*
*சத்திய வாதி யென்னுந் தராபதி தவத்தின் சீரற்*
*பத்திரி நெடுங்கட் செவ்வாய்ப் பகர்பது மாவ திப்பேர்ப்*
*புத்திரி யொருத்தி தோன்றிப் புகழ்பெற வளர்ந்தா ளன்றே.* (5)

*புதல்விதன் பருவ நோக்கிப் புரவலன் முறைகள் யாவு*
*நிதமுரை யமச்ச னென்னு நீதிகோ விதனைக் கூவி*
*மதர்பெறு மதியோய் நீநம் மங்கைமா மணத்திற் கேற்கு*
*மிதமுறு தலைவற் றேடி யிவ்வயிற் றருதி யென்றான்.* (6)

அறிவுடை யமைச்சற் கிவ்வா றருளிய தன்றிப் பின்னர்
நெறிபெறு புரோகி தற்கு நெடுந்தவத் தினிற்ற வீன்ற
சிறியவர் தமக்கு மந்தச் செய்தியே செப்பி யுற்றான்
றறியடு மதமா தங்கச் சத்திய வாதி யென்றான். (6)

நினைதரு மதிவல் லோனு நிசபுரோ கிதனுந் தூய
தனையரும் வேறு வேறு தத்தம துளத்திற் கேற்ப
வனைவுறு மகுட வேந்தர் மைந்தரோர் மூவர் தம்மை
யனையபெண் மன்ற லோலை யனுப்பியங் கழைத்திட் டாரால். (7)

மகிழ்பது மாவ திப்பேர் மடந்தைதன் வதுவை வேட்டு
முகில்பொரு தடநெ டுங்கை மூவிளங் குமர ரும்பொன்
மிருக்கதிர் பரப்பு மாட விசாலமா புரியி லன்று
தகுபொரு ளனைத்து மீட்டித் தாமினி தடைந்தார் மாதோ.
(8)

தாவளர் சமர வைவேற் சத்திய வாதி நந்தம்
பூவலர் குழற்க ருங்கட் புதல்விதன் வதுவை வேட்டு
மூவரிங் கடைந்தார் யார்க்கு முறையினை மளிப்பதென்னு
வோவறு கலக்கத் தோடு முற்றன னுற்ற வேலை. (9)

ஆங்கவன் மனையா ளுந்த னண்ணன்மைந் தனையோர் தா
றேங்கம ழோதி நந்தஞ் சிறுமியை யுனக்கே யீது [தாற்
மீங்கிதி விரைவி னீவந் தெய்துகென் றழைப்ப வன்னோ
னோங்கணி மணக்கோ லத்தி னோடுமந் நகர்சென் றுற்றான். (10)

செய்திமற் றிவைய னைத்துந் தெரிந்துசத் தியவா திப்பே
ரெய்திய நிருபர் கோன்றன் னில்லவ டன்னை நோக்கி
மைதவழ் குழலாய் நந்த மடந்தைதன் மணத்தை நாடி
மொய்தரு வேந்த ரிங்கு மூவர்சார்ந் திருந்தா ரன்றே. (11)

அனையுமம் மூவர் தம்முள் யார்க்குநம் மடந்தை தன்னை
மணமுற வருள்வ தென்ன வருந்துமென் கருத்துணர்ந்துந்
துணைபெறு நினது தம்முன் சுதனையு மழைத்தா யீண்டு
குணமிலா விதற்கென் செய்வ தெனக்கொதி கொதித்து
[நொந்தான் (12)

கொண்கனிவ் வாறு சீற்றங் கோடலு மனைவி நந்தம்
பெண்கொடி தனையென் முன்னோன் பெற்றருள் காத லற்கே
கண்களி கூர வின்று கடிமணம் புரிவ தன்றி
யெண்கெழு பிறர்க்க ளிப்பி னெனதுயிர் விடுவ லென்றாள். (13)

காதல்கூர் மனைவி யின்ன கழறலுங் கலுழ்ந்து மன்னன்
மாதர்வா ணகையா யுன்றன் மனப்படி முடித்து நாமென்
றோதியாங் கவள்கு றிப்பி னுற்றன னவற்றை யெல்லா
மாதியே வதுவை வேட்டங் கடைந்தமூ வருமு ணர்ந்தார். (14)

மன்றலை விரும்பி முன்பு வந்தமூ வரும்போய்ச் சீறி
யன்றெமை வலிதி னிற்பெண் ணளித்துமென் றழைத்திருத்திப்
பின்றைமற் றொருவற் கீயப் பேசலாற் போரி லெம்மை
வென்றதற் பின்மு டித்தி யெனவவ்வேந் தொடுவிரித்தார். (15)

முற்படு மூவர் தாமு முரண்செய் வருதி யென்னுஞ்
சொற்பகர் தலுமவ் வேந்தன் றுணுக்கென நடுக்க மெய்திக்
கொற்பட ரகற்று நீதி கோவிதன் றனைய ழைத்துத்
தற்பது மச்செவ் வாய்பூத் திவையெலாஞ் சாற்றி னானேல். (16)

தண்ணளி தழைத்த செங்கோற் சத்திய வாதி யென்னு
மண்ணலு மயங்கி யன்ன தறைதலு மமச்ச னைய
வெண்ணலை யிதற்கோர் தந்துண் டெவனெனி லெவருங் காணக்
கண்ணகல் கொடுதீக் குண்டக் கடிதினொன் றமைத்து மாதோ. (17)

நங்குல வமுத மன்ன நாண்மலர்க் குழலி னாளைப்
பொங்குறு கனற்குண் டத்தின் புறத்தினி லினிதிருத்தி
யிங்கிதி னிழிந்து வந்தோ ரிவடனக் குரிய ரென்னி
லங்குறை நால்வர் தாமு மகமலைந் தகல்வ ரென்றான். (18)

ஆய்வுறு மமைச்ச னின்ன வறையவிஃ தமையு மென்றத்
தேய்வினற் புகழா னங்கட் சிலர்தமை விளித்து நீவி
ரேயெனு மளவை முன்ன ரிப்பெரும் பதியி னூடு
தீயழற் குண்ட மொன்று திறம்பெற வளர்த்து மென்றான். (19)

பரிசன ரரச னின்ன் பகரான் றெனவ ணங்கி
விரிதரு பொழில்சூ ழ்ந்த விசாலமா புரந்தி னூடு
வரியிடை யமர்ந்த சோதி வடவைகொ லெனவ யிர்ப்ப
வெரிகனற் குண்ட மொன்று வளர்த்தன ரிமைப்பின் மாதோ. (20)

வலிகெழுசத் தியவாதி மணங்குறித்தங் கடைந்துளநால் வரையு மின்பம், பொலியவினி தழைத்ததன்பின் புதல்விதனைச் சிகைவிசும்பு பொருந்த வோங்கு, மலிநெடுங்குண் டத்தினரு கிருத்தியிதி னிழிந்து வந்தோர் யாவரேனுங், குலிகமணிச் சிமிழ் முலையிக் கோதை தனக் குரியரெனக் கூறி ஞறல். (21)

எத்திசையும் புகழரச னிதுபகரச் சிகைபரப்பு மெரிக்குண் டத்தூ, டத்தகைய நால்வர்களு மகங்கலங்கா திழிந்துகரை யது சென்றேறித், தத்தைநிகர் மொழிக்களப தனப்பதுமா வதிமலர்க் கைத் தலங்கள் பற்றி, முத்தமணி முறுவலிவ ளெனக்குனக்கென் றீர்த்துமிக முரண்கொண்டாரால். (22)

பற்றியந்த நால்வருமிப் படிவருத்தஞ் செயப்பதுமா வதி யெண்ரோது, முற்றிழைமென் முலைவனிதை யாற்ருது மதி தளர்ந்து முடுகியோடி, யெற்றிகழு மனற்குண்டத் திடைவீழ்ந்தா ளவர்களினோ ரேந்தருனு, மற்றிவடுஞ் சியபினிருந் தெவன் பய னென் றுடன்குதித்து மாய்ந்தா னன்றே. (23)

அத்துயர்கண் டழுங்கிமற்றை மூவர்களி லொருவனெழுந் தனைத்து நீத்து, மெத்துபல தேயசஞ்சா ரத்தினடந் தனனொரு வன் மேலிங் கென்னெனன், றுத்தமமன் னுறுகாசித் தலநோக்கிச் சென்றனன் பின் னெருவ னுங்கே, சித்திமட மொன்றமைத்துச் செழுமலர்த்தண் டலையனந்தஞ் செய்து சார்ந்தான். (24)

காசிதனிற் சென்றடைந்த காளையொரு பகற்பசித்தீ கனற்ற வாடிப், பூசுரன்மா ளிகையதொன்றிற் புகுந்தடிசி லிரப்பவங்கட் பொலிந்த கற்பின், வீசுபுகழ் படைத்தபதி விரதையருக் கியமு தலவியந்து நல்கித், தேசுபெறு தவிசிருத்தி முகமலர்ந்து முகம னுரை செய்து பின்னர். (25)

*இவர்துறவு பூண்டடைந்தோ யித்தலத்தென் மணவாள ரிரப்பச் சென்று, ரவர்கணப்போ தினிலரிசி முதற்பலவுங் கொடுவருவ ரவற்றைப்பின்னர்ச், சுவைபெருக வட்டமுத மிடுவலிரு வெனமுகமன் சொலுமவ்வேலை, நவைதவிரன் னவட்குரிய நான்மறைவே தியனுமங்கு நண்ணி னுல்.* (26)

*தண்டுலமுற் படுபொருள்கள் சகலமுங்கொண் டினிதுவந்த தலைவன் கீத, வண்டுசெறி மலரளக மனைவிகரத் தினிலவற்றை வழங்கிப் பின்னுங், கொண்டுவரு திறங்குறித்துச் சென்றனன்மற் றவளெழுந்து குளிர்ந்த சொற்கள், விண்டுறு வின்பசிநோய் கண்டுகடி தமுதமடன் மேயி னுளால்.* (27)

*அடிசிலடு முனம்பசியா லழுங்கியவ டனைநோக்கி யரிவை வல்லே, யிடிவிடுதி யலதிலையென் றியம்புகெனத் துறவினன்கேட்டிடும்பை செய்ய, வடிசுடர்வே லனையவிழி வனிதைபெரி யோய் மனத்துண் மயங்குறேலோர், கடிகையெனு மளவைபொறு பொறுவெனவம் முயற்சிதனிற் கடுகி நின்றாள்.* (28)

*அவ்வயினோர் சேயவளை யடுத்துவறி துரோதனங்கொண் டலைப்ப நொந்து, செவ்வனசக் கரதலத்தாற் சினந்துறைய விளிந்தத்தைச் சிறிதுமெண்ணு, தெவ்வமற வடுதொழிலின் முயன்று முடிந் ததற்பினெழுந் தினிய சொல்லாற், கொவ்வையிதழ் திறந்தடைந்த கோமகனை வருகவெனக் கூறி னுளால்.* (29)

*அனமருந்த வருகவென வழைத்திடலுந் துறவினன்மற் றவளைச்சீறி, யுனதுமனை தனிற்கொலையோன் றுற்றதனு லொருக்காலு முண்ணலர்கா, தெனமொழிய நடுங்கியந்த வேந்திழைநீ மறுத்திடுவ தியல்பன் றென்று, மனமகிழ்வி னுபசரிக்கும் போதிலிரந் திடநடந்த மறையோன் வந்தான்.* (30)

*வந்தமறை யவனுமன்னோன் முகநோக்கி யின்னு முண்ணு வவையா தென்ன, நொந்தபசி யினனுனது மனைவியொரு குழவிதனை நொய்திற் கொன்று, ளந்தவகை யாலனம்வேண் டாதிருந் தேனெனலு மவ னறிவின் பண்பா, லெந்தமுனி வருந்துதிக்கு மந்திரத்தால் விளி சேயை யெழுப்பி னுல்.* (31)

*வீட்டியசேய் தனையெழுப்பி வேதியன்பின் புனிதவினி மேலா னாலு, நீடியவெம் பசிதணிய நீயருந்து கெனத்துறவி னிலைமேற் கொண்டோ. னோடியவ் னடிபணிந்திங் குயிர்தருமந் திரத்தை யெனக் குணர்த்து வாயேற், றேடியநின் மனைய முதுண் டிடு வல்லல திலையெனுஞ் சொற் செப்பி னனால்.* (32)

*கருணைமறை யவன்றுறவோன் காதிலந்த மந்திரத்தைக் கழ றிப் பின்ன, ரருமையினோ டமுதளிப்ப வயின்றுவிடை பெற்று மறு கவன்சார்போழ்தி, லெருவையதொன் றிறந்திருப்பக் கண்ட தன்மேற் பூசுரனங் கிசைத்த மோனப், பொருளியல்பாற் புன றெளிப்ப வன்னது முன் போலவுயிர் பொருந்திற் றன்றே.* (33)

*வாலேப மெழக்களித்து வாரணவா சியைக்கடந்து வயல்க டோறுஞ், சேலேறு விசாலபுரஞ் சேர்ந்துமுன்ன ரிருவர்விழுந் தீக்குண்டத்தின், மேலேயம் மனுவினொடு மிகுதுறவோன் புன றெளிப்ப மிளிர்பொற் கொம்பர், போலேசீர்ப்புனைபதுமா வதியு மிளங் கோவுமுயிர் பொருந்தி வந்தார்.* (34)

*போழ்ததனிற் பலதேய சஞ்சாரத் தினினடந்த பொருவி லானுந், தாழ்தருகொந் தளபதுமா வதியிறப்பிற் குறுகடன்க டானே யாற்றி, யாழ்திரைநன் னதிகடொறு மாடிவந்தான் கனற் குண்ட மதை நீங்காமற், சூழ்தடநந் தனவனங்கள் வளர்த்தவ னுற் றிருந்தவனுந் தோன்றி னனால்.* (35)

*புருடரொரு நால்வருமுன் போற்பதுமா வதிகரவம் புயங்கள் பற்றி, யிருடருசில் லோதியிவ ளெனக்குனக்கென் றீர்த்தடங்கா விகல்கொண் டுற்றார், வருடமுகி லெனவழங்கு மன்னவ்வட் குரிய ரவர் வகுப்பா யென்ன, வெருடகுபுன் மனக்கொடிய வெங்கனற் கட் பூத பதி வினவிற் றன்றே.* (36)

*வேதாள மிதுவினவ விக்கிரமா தித்தனெனும் வேந்தர் வேந்தன், றீதாரு மதைநோக்கித் தேய்சஞ்சா ரத்தையெண்ணிச் சென்று மீண்டோன், மாதரம வார்குழலாட் குரியகடன் கழித்த தனான் மைந்தருவான், ருதாவா மெழுப்பினவ னுடனெழுந்தோ னினியசகோ தரனா மன்றே.* (37)

ஆகையினிவ் வயினுறைந்த வன்பினனே யவட்குரிய ளுரு மென்ன, வாகைபுனை பிறையெயிற்று வஞ்சமனச் செஞ்சிகைப் புன் மதிவே தாள, மோகைபெறு மரசர்பிரா னுறுக்கியகட் டவிழ்த்துவிரைந் தோடி முன்போற், சாகைபல மலிந்தசெழுந் தண்ணிழற்கான் மரத்தின்மிசைச் சார்ந்த தன்றே. (38)

விகடமத கரடகய வேந்தர்பிரான் பின்னுமிக விரைந்து வானின், முகடளவு வடமிசைச்சென் றேறியதி னுறைந்தகொடு முரண்கூர் மேனித், துகடருபுன் மனத்தலகை தனைப்பிடித்து முன்போலே சுருங்க வீக்கி, யகடுறுபொன் மகுடமுடி தனிற் பொறுத்து மீண்டனனங் கனைய வேலை. (39)

கதத்தழற்கட் கடியவனை நோக்கி மன்ன வின்னமொரு கதை நான் சொல்வ, லதற்குரிய பொருளதனை யாய்ந்துமொழிந் திடல் வேண்டு மஃதியா தென்னின், மதர்த்தவங்க தேயமதில் வளங் கெழுமீ ரேழுலகு மதித்து நாளுந், துதித்திடுசக் கரபுரியென் றொருநகருண் டாங்குமிடி தோன்றிற் றன்றே. (40)

வேறு

துக்கவெங் கலிபல் காலஞ் சூழ்ந்தலைத் திடலா லந்தச்
சக்கர புரிவி டுத்தோர் தாசிதன் புதல்வி யோடுந்
திக்கெலாம் புகழும் வேறு செழுநக ரொன்று நோக்கி
யிக்கல ரடிகள் சேப்ப வெழுந்தினி தேகி னாளால். (41)

வீரமா புரம்பு ரக்கும் வேந்தனும் விதியின் பண்பா
னேரலா ரலைப்ப வெல்லா நிதியமு மிழந்து பின்றன்
சீரரு மருமா னோடுஞ் செழுநகர் நோக்கி முன்னவ்
வாரரு முலையார் சென்ற வழிதனி லினிது வந்தான். (42)

வந்தமன் னவன்முன் சென்ற மடந்தைய ரிருவர் பாதச்
சந்தமென் சுவடு மந்தத் தடத்திடை மிளிரக் கண்டு
சிந்தையில் வியப்புற் றோகை சிறந்துதன் றவத்து தித்த
நந்தனன் வதன நோக்கி யினையன நவில்வ தானான். (43)

கொச்சகம்.

தனையவிரு மடந்தையரித் தடத்திடைச்சென் றுளர்காண்டி
யினையபெருஞ் சுவடுடையா ளெனக்குரிய ளெழில்வாய்ந்த
வனையநறுஞ் சிறியசுவட் டடியரிவை தானுனது
மனைவியெனச் சொலியுறுதி வாய்மைகொடு விரைந்துபின்
[னர். (44)

முன்புசென்ற கணிகையர்சேர் முதிர்வளநன் னகமெய்திப்
பொன்பரவு பெருஞ்சுவட்டுப் பூவையைமன் னவன்வேட்டா
பின்பனைய சிறுசுவட்டுப் பேதையைமற் றவன்மகனுந் [ன்
தன்புயங்கள் புளகமுறத் தழுவியினி திருந்தினனால். (45)

காணுறுமப் பெருஞ்சுவட்டுக் கன்னிசுதை சீறடிகொண்
மாணிழையன் னவட்பயந்த மங்கையிரு வரும்விதியாற்
பேணுமர சனையுமன்னோன் பெற்றமக னையுமேவி
நீணிலமெங் கணுமுவப்ப நிறைகருப்ப மடைந்தனரால்.(46)

கருவிளைந்த விருவரும்பின் கருதுபல சிறுவர்களை
யருளினர்பந் தனைபுதல்வ ரனைசுதரை யழைப்பதற்கும்
வருமனைபுத் திரர்மகடன் மக்கடமை யழைப்பதற்கு
முரியமுறை யெவன்புகறி யொன்னலர்ச்செற் றுளிர் வேலோய்.
(47)

கைவலனை வினவுமுன மெவரினுமிக் குயர்ந்தமன்னன்
றனதுசவு ரியமதனுற் றருக்குலங்கள் பலமிடைந்த
வனமுழுதுங் கடந்துதிரு வளங்கெழுபா டலிபுரஞ்சூழ்
சினைமலர்க்கா வினிலுறுமத் தேவதத்தைக் கெதிரடைந்
[தான். (48)

வேந்தர்பிரான் சிரம்பொறுத்த வேதாள பதியுநறுஞ்
சாந்தணிமென் முலைத்தேவ தத்தையுமங் கெதிர்ந்தவுடன்
மாந்தளிர்க ளுவப்பமலர் மதுத்துளிக்குங் குழற்கவுரி
காந்தனன்று பகர்ந்தவினைக் கடுஞ்சாப மகன்றதம்மா. (49)

அவ்விருவர் களுங்களுட மகன்றுதெய்வ வுருவமெய்திச்
செவ்விதினங் கரனருளாற் சேர்ந்தவிமா னத்திவர்ந்து
வெவ்விகட மருவலர்தாழ் விக்கிரமா தித்தனெனு
மெவ்வியல்பு முணர்வேந்தை யினிதுபுகழ்ந் தேத்தினரால். (50)

மானமிசைப் பொலிந்தெதிர்ந்த மதிவலவன் பின்னுமந்தச்
சேனையுடைத் திறல்வேந்தன் றிருவதன மலர்நோக்கி
யீனமகற் றியவுனக்கியா னியற்றுதவி யெவனுளதே
நீநவிலப் படிநடப்ப லெனநிருப னிதுபகர்வான். (51)

பொன்னூர்தெய் வதவடிவம் பொலிந்தசெழும் புகழோய்கே
ளுன்னால்யான் பெறுபயனொன் றுளதஃதியா தெனினீயெற்
கென்னாளு மொருதுணைபோ னிருந்துநினைத் திடுபொழுதென்
முன்னாக வரல்வேண்டு மெனமுடிமன் னவன்மொழிந்தான். (52)

விக்கிரமா தித்தனிது வேண்டலுமப் புட்பதந்த
னுக்கிரமார் திறலலகை யொன்றையழைத் திவனினைக்கும்
பக்குவநீ தெரிந்துரைத்த படிநடவென் றருள்புரிந்து
மிக்குறுவான் கயிலைநண்ணி விமலனடிபணிந்திருந்தான்.(53)

ஆயதற்பி னெவ்விதத்தோ வருமறைக ளலைமயங்கித்
தீயடுத்த பொறியுமழ்கட் டிறற்பணிதாங் குலகனைத்து
நேயபத்தி குலநடைநன் னெறிமுறைமா தவநியமந்
தூயபுத்தி மழுங்கியிரு டுவன்றியறச் சுழன்றனவே. (54)

நன்குமுழு வதுமயங்கி நாடொறுந்தீ துயர்ந்ததனால்
வன்குவவு மணிப்புயத்து வானவர்யா வருமயங்கி
முன்கயிலை வரையடைந்து முதல்வியொடங் கமர்ந்தபிரான்
றன்கமல மலரடிக டாழ்ந்துதொழு திவைபகர்வார். (55)

கண்ணுதலெம் பரமவுமை காதலவெக் காரணத்தோ
மண்ணுலகின் மறைகடலை மயங்கினபன் மாந்தர்களும்
பண்ணுமுநன் னியமநெறி பத்திவங் குலநடைக
ளெண்ணுளபற் பலவொழுங்கு மிழந்துசுழன் றனைந்தன
[ரால். (56)

ஆதலினம் மறைதிருத்தி யவர்க்குணர்த்த வொருகருத்த
னீதருக வெனலுமந்த நிலகெழுவா னவர்மகிழப்
போதகம துரித்துமிசைப் போர்த்தரவப் பணிபூண்ட
நாதனருள் வழங்கியுள நயந்துதிரு வாய்மலர்ந்தான். (57)

பொன்னுலகி ராமோத புரத்துறைகங் காதரப்பேர்
மன்னுவகை பெறவவற்கோர் மைந்தினினி யுதிப்பனன் [ஞேன்
றன்னுணர்வின் முனஞ்சிறை தந்த சகலசுரு தியுந்திருத்தி
யுன்னுபல மாந்தர்கட்கு முளங்தெளியப் பயிற்றுமென்றான். (58)

புங்கவனிவ் வகையருளப் பொன்னகரத் தமரர்களித்
தங்கவன்மெய்க் கமலமல ரடிகடலை யுறவணங்கிச்
செங்கைகுவித் தினியதுதி செய்துவிடை கொடுநடந்து
தங்களிருப் பிடங்கடொறுஞ் சார்ந்தனர்மா தவத்தினரே. (59)

பொருந்துகறை மிடற்றினன்பின் புட்பதந்தன் றனைவிளித் [துப்
பருந்துழல்வேற் றேவலற்குப் பதினைந்தாங் தலைமுறையில்
வருந்திறற்கங் காதரப்பேர் மன்னவற்கு நீமகவா
யிருந்தரணி யிடைத்தோன்றி யெம்மறையுந் திரித்துதியால். (60)

தேவதத்தை காம்போச தேயமதிற் சிறந்திலங்கும்
பூவனத்தண் பொழில்விரத புரத்தரசு புரிந்துவளர்
தூவகற்றுங் கதிர்வடிவேற் சுசிலன்மக ளாய்வருவ
ளாவலிற்பின் னருமவளை யணிவதுவை சூட்டி மன்னே. (61)

மானவர்யா வருக்குமன மயக்கறநல் வழிபயிற்றிப்
பானல்வய லாமோத பதியிலர சிருந்துபின்னர்
மீனவரிக் கலகமதர் விழிமனைவி யொடுமிவணீ
தானடைதி யெனலுமன்னோன் சம்மதித்துத் தாள்பணிந்தான். (62)

கருத்து:— மேலே கூறியபடி தேவதத்தைக்கு விக்ரமாதித்தன் வாக்களித்தபடி அம் மன்னன் வேதாளத்தின் உறைவிடம் தேடிச் சென்று ஒரு காட்டில் ஒரு ஆலமரத்தில் இருக்கக் கண்டான். விக்கிர மாதித்தன் அம்மரத்தில் ஏறி அவ்வேதாளத்தைப் பிடித்துக்கட்டி அதனைச் சுமந்துகொண்டு தேவதத்தை வசிக்கிற சோலையை நோக்கிச் சென்றான். இவ்வாறு செல்லுகையில் அவ்வேதாளம் ஒரு கதையைச் சொல்லிற்று. அக்கதைக்கு விக்கிரமாதித்தன் தகுந்த விடையளித்தான். அவ்வாறு இருபத்து நான்கு கதைகள் சொல்லி இருபத்து ஐந்தாவது கதையாக முறை தெரியாக் கதை என்ற கதையைச் சொல்லி முடிக்கும் போது விக்கிரமாதித்தன் தேவதத்தை இருந்த சோலையை வந்தடைந் தான். வேதாளமும் தேவதத்தையும் சந்திக்கவே அவர்கள் பெற்றிருந்த சாபம் நீங்கியது. அவர்கள் இருவரும் பழைய காந்தருவ உருவம் அடைந் தார்கள். அவர்கள் விக்கிரமாதித்தனுக்கு நன்றிசெலுத்திவிட்டுச் சென் றார்கள். விக்கிரமாதித்தனும் நினைத்தபோது வந்து உதவுவதாக வரம் அளித்துவிட்டுச் சென்றான். புட்பதந்தனும் தேவதத்தையும் கயிலைக்குச் சென்று இறைவனை வணங்கினார்கள்.

## இருபத்தாறுவது

# மாமறைதிருத்திய வரமுனிச் சருக்கம்.

*[இச்சருக்கத்தில் தேவலன் வரருசி முனிவர் அவதாரம் எடுத்து கூறப்படுகிறது.]*

*அறுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.*

*எனத்தவத் துயர்ந்த சூத னியம்பலு முனிவர் போற்றிச்*
*சினக்கன லவித்த மேலோய் திகழ்புட்ப தந்தன் சிங்கா*
*தனத்தர சிருந்த கங்கா தரற்கொரு மகவாய்த் தோன்றி*
*மனத்திரு ளெவர்க்கு நீத்த வகையுஞ்சொல் கெனப்பின்*
*சொல்வான்.* (1)

*நம்புதே வலன்றிவ் வியாங்க னந்திநன் னீல கண்டன்*
*சம்புயர் தருமே மாங்கன் சந்திராங்கன் பத்திர வாகு*
*வெம்படை வீர பத்திரன் மிளிர்சூல பாணி சீமான்*
*செம்புன றோய்ந்த கூர்வேற் செயசேனன் சித்திர சேனன்.*
(2)

*தொலைவறத் திகழ்சீர் வாய்ந்த சுவிக்கிரம னெனுமீ ரேழு*
*தலைமுறைப் பின்னர்த் தோன்றுந் தவக்கங்கா தரன்றன்*
*சிலைநுதற் சுகுண வாணி திருவயிற் றினிற்பி றந்தான் [தேவி*
*கலைமதிச் சடிலத் தெந்தை களிப்புறு புட்ப தந்தன்.* (3)

*ஓதவார் கடல்சூழ் ஞாலத் துறைபவ ருளத்தூ டோங்கும்*
*பேதைமா விருளும் பாவப் பெருங்குளிர்ப் பனியு நீங்கத்*
*தாதையா மினைய கங்கா தரன்முக சலசம் பூப்ப*
*வாதைதீர் தருமெய்ஞ் ஞான மார்த்தாண்ட னுதித்தான்*
*மன்னோ.* (4)

*சேயினி துதித்த லோடுஞ் செகதல முழுதும் போற்ற*
*வாயுமெய்த் துறவோர் வாழ்த்த வசரீரி மொழியொன் றந்*
*மாயிரு விசும்பி னின்று வரமுனி யிணைய மைந்தற் [நாண்*
*கேபுநன் னாம தேய மெனவினி தெழுந்த தன்றே* (5)

நலங்கிள ரனைய மைந்த னவில்கங்கா தரன்க ளிப்ப
விலங்குநற் சுகுண வாணி யெனப்பெயர் படைத்த வன்னை
யலங்கணி செறிபொற் கொங்கை யமுதினி தருந்தி நாளும்
கலங்கறு மின்பச் செல்வக் கண்மணி போல்வ ளர்ந்தான் (6)

மாசுதீர் புகழான் மிக்க வரமுனி யெனுமச் சேய்க்குப்
பேசுசா தகமோ டன்னப் பிராசனஞ் சவுள மோங்கும்
தேசுகூர் கன்ன வேதை திகழுப நயன மாதி
பூசுரா திபர்கொண் டாடப் புரிந்தன னளித்த பூபன். (7)

பொழில்புடை செறியா மோத புரத்திலம் மருமா னிவ்வா
றெழில்பெற வளர்ந்தான் பின்ன ரிணையிலாத் தேவ தத்தை
வழிவுறு மதுர வேழ வசனவம் பிகையோர் பாகன்
செழியதண் ணருளின் சீராற் செகத்துதித் திடஙி னைந்
[தாள். (8)

மிக்ககாம் போச நாட்டில் விரதமா புரியை யாளுந்
தக்கசீர் புனைசு சீலன் றனதுளங் களிப்ப வன்னோன்
பக்கமே வுறுநற் றேவி பகர்குண வதிவ யிற்றிற்
புக்கவ தரித்தா ளந்தப் புகழ்பெறு தேவதத்தை. (9)

மன்னிய சுசில னென்னு மன்னர்கோன் களிப்ப வந்தக்
கன்னிவந் துதித்த லோடுங் கருதிவட் குரிய நாம
மென்னில வமிர்த சீலி யென்றசு ரீரி வாக்கொன்
றன்னிலை விசும்பிற் றோன்றிற் றனைவரும் வியப்ப வன்றே, (10)

தருகுண வதியென் றோதுந் தாய்தன திணைப்பொற் கொங்கை
பெருகமு தருந்தி நாளும் பிறங்குசீர் புனைசு சீலன்
றிருமடி தனினுஞ் செம்பொற் செழுமணித் தொட்டின் மீது
மிருளறு மமிர்த சீலி யெனுமயில் வளர்ந்தா ளன்றே. (11)

பரவுறு பொழிலா மோத பதிபுரந் தருளுஞ் செங்கோற்
றரளவெண் கவிகைக் கங்கா தரநா திபன்று னீன்ற
வரமுனிக் குயர்காம் போச மன்னனுஞ் சுசீலன் மாதந்
திரடன வமிர்த சீலி தனைத்திரு மணஞ்செய் வித்தான். (12)

இனியகற் பமிர்த சீலி யெனும்பெயர் தரித்த தெய்வ
வனிதையு முழுமெய்ஞ் ஞான வரமுனி வனும்பொற் கஞ்சந்
தனிலுறை திருவு மாலுந் தகவென வின்பந் துய்த்துப்
புனிதகங் காத ரப்பேர்ப் பூபதி களிப்ப வாழ்ந்தார். (13)

சுதநெடும் புகழ்கூர் கங்கா தரநர பதிதன் செல்வச்
சுதனெனும் வரமு னிக்குச் சுடர்முடி சூட்டிப் பின்ன
ரிதநிறை சுகுண வாணி யேந்திழை யொடுமெ ழுந்து
நதமுறு தவவ னத்தி னண்ணின னலனுற் றோங்க. (14)

சுகவர முனிவன் பின்பு சுருதியா வையுந்தி ருத்திப்
புகரற வனைவர் கட்கும் பொருந்தநன் குணர்த்தி நீதி
வகைகுல முறையொ ழுக்க மகம்பல விரத வாய்மை
நகைதரு சுகிர்த மாதி நடைநிலை நாட்டி னானால். (15)

வாரிணைக் களபக் கொங்கை வனிதையோர் பாக நாதன்
சீரியற் கருணை தன்னாற் றிறல்வர முனிவன் பின்னா
நேரிலெப் பொருளுந் தோன்ற நிலைகெழு தனது பேரா
லாரியத் தினில நேக வாகமம் புரிந்தா னன்றே. (16)

நதிவளந் திகழா மோத நன்னகர் புரக்கு மந்த
நிதிவர முனியு வப்ப நிகரிலா வமிர்த சீலி
மதிநெடுங் கவிகைப் பூவின் மாரனு மயங்க நெஞ்சத்
திதிகெழு வீர ருத்திர னென்னுமோர் சுதனை யீன்றாள். (17)

இணைதவிர் வீர ருத்திர னெனுந்திருப் புதல்வன் பின்னர்த்
திணைகெழு மறைக ளேமுற் செழுங்கலை யனந்தந் தேர்ந்து
கணைபல படையுங் கற்றுக் கருதுமூ வுலகி டத்துந்
துணைசொல வரிய தென்னத் துலங்கினன் சுரரும் போற்ற. (18)

சீர்வர முனிவன் பின்னத் திறல்வீர ருத்தி ரற்கு
நீர்வள ரவந்தி யாளு நித்திய விரத னீன்ற
போர்வரி மதர்நெ டுங்கட் புனிதகோ மளைத னைப்பூந்
தார்வனைந் தவனி போற்றத் தருமண முடித்தான் மன்னோ. (19)

சோபன முகூர்த்த மொன்றிற் சுதற்கொளிர் மகுடஞ் சூட்டிப்
பூபதி யெனுமெய்ஞ் ஞானப் புகழ்வர விருடி பின்பு
மாபதி விரதை யாந்தன் மனையொடுங் கயிலை நண்ணிச்
சீபதி பதந்தாழ்ந் தன்னோன் றிருப்பணி விடையி னுற்றான். (20)

வீரருத் திரன்பின் செல்வம் விளைவுறு சகரநாட்டை
யாரணத் தொழுங்கி னோம்பி யரிவையர் திலக மன்ன
பூரணக் களபக் கொங்கைப் புனிதகோ மளையென் றோங்கும்
பேருடைத் தைய லோடும் பெருநலந் துய்த்தி ருந்தான். (21)

சத்திய வீர ருத்திரன் றனதுளத் துவகை பூப்ப
நித்திய விரத னீன்ற நிகரிலா மடந்தை தன்பாற்
சுத்திகொள் சுகுண னென்றோர் சுகம்புனை புதல்வன் றோன்றி
யெத்திசை யரசர் தாமு மினிதுபோற் றிடவ ளர்ந்தான். (22)

வளர்தரு சுகுண னென்னு மாமகன் றனக்கம் மன்னன்
விளவல தேயங் காக்கும் வீரகே சரிய யந்த
தளவணி முறுவற் செவ்வாய்ச் சத்திய வதியெனும்பே
ருளதிரு மடந்தை தன்னை யுவப்புற மணஞ்செய் வித்தான். (23)

தைத்திடு கணைநெ டுங்கட் சத்திய வதிபே ரின்பந்
துய்த்திடு சுகுண னென்னுஞ் சுதற்கணி முடிபின் சூட்டிப்
பொய்த்துநண் மருங்குற் செவ்வாய்ப் புனிதகோ மளையோ டேகி
மெய்த்தவ வனம்புக் கானவ் வீரருத் திரனும் வேந்தன். (24)

சுகுணதங் கவனி யெங்குந் தொழவர சிருக்கு நாளின்
மிகுவர விருடி யன்று விரித்தநூ லனைத்துந் தேர்ந்து
தகுபொரு ளுணர்ந்த சில்லோர் தனிப்பர சிவயோ கத்தின்
பகுதியி னெழுபே ரின்பப் பலன்பெறக் கருத்தி லெண்ணி. (25)

திருத்து பேரின்ப ஞான தேசிக ரின்மை தன்னாற்
கருத்துற மயங்கி யாதிக் கயிலைவாழ் பரனை யுன்னி
யருத்தியி னொடும நேக வாலய மினிது போற்றி
விருத்திமிக் கருளு மெண்ணில் விரதத்தின் முயன்றா ரன்றே. (26)

முயன்றிடு மனையர் சிந்தை முதிருமன் பினைபு ணர்ந்து
வியன்றிகழ் கயிலை வாழும் விமலவே தாந்த மூர்த்தி
நயன்றரு தனைப்பூ சிக்கு நல்வர முனியை நோக்கி
யியன்றெழு கருணை தன்னா லின்னன வியம்பி னானால். (27)

பத்தகேண் ஞாலந் தன்னிற் பற்பலர் சிவயோ கத்தின்
முத்தரா மியல் விரும்பி முதிர்ந்தெழு மன்பி னம்மைத்
தத்துரு வுளத்தி னூடு தணிவற நினைந்துப் போற்றி
வித்தமா முனிவர் தேடும் விரதமெண் ணிலபு ரிந்தார். (28)

அடியர்வேட் டவைய ளிப்ப தறநெறி யதனா லின்னும்
வடிவுகூர் நினது மைந்தன் மைந்தற்கோர் மைந்த னாகக்
கடிதுநீ சென்று தோன்றிக் கருதுமூ தறிஞர் யார்க்கு
முடிவுறுச் சிவயோ கத்தின் முறைதனை யருடி யன்றே. (29)

அணிதிக ழுனது தேவி யமிர்தசீ லியும்பார் தன்னிற்
கணிகெழு நிடத நாட்டிற் கமலசா தனனென் றோது
மணிமுடி நிருப னுக்கோர் மகளென வருவள் பின்பு
தணிவறு கற்பி னன்னா டன்னையே வதுவை சூட்டி. (30)

திரைசெறி கடல்சூழ் ஞாலஞ் சிலபக லாண்டு பின்னிவ்
வரையிடை யினிது நீயுன் மனையொடும் வருவை போகென்
றுரைசெய விசைந்து மேன்மை யுயர்வர முனியவ் வீசன்
விரைமல ரடிக டாழ்ந்து விடைகொடு நடக்க லுற்றான். (31)

**கருத்து :—** ஒரு காலத்தில் உலகத்தில் யாதோ ஒரு காரணத்தால் அறம்கெட்டு மறம் நிறைந்தது. நன்மை தடுமாறித் தீமைப் பெருகியது. அதனைத் தேவர்கள் இறைவன் முன் தெரிவித்தனர். இறைவன் ஆமோத நகரத்தில் ஒரு மைந்தன் பிறப்பான், அவன் உலக வழக்கங்களை திருத்தி அமைப்பான் என்று அருளினார். பிறகு பெருமான் புட்பதந்தனை நோக்கி தேவலனுடைய பதினைந்தாவது தலைமுறையில் உள்ள கங்காதரனுக்குப் புதல்வனாய் அவதரித்து வேதங்களைத் திருத்தி நீதிகளை வழங்கும்படி ஆணை இட்டார். இறைவன் அருள்படியே புட்பதந்தன் கங்காதரனுக்கும் சுகுணவாணிக்கும் மகனாக பிறந்தான். அவன் வரமுனியெனப் பெயரிடப்பட்டான். சகல கலைகளும் உணர்ந்து தேவதத்தையின் அவதாரமாய் வந்த அமிர்த சீலியை மணந்து அரசு கட்டில் ஏறி நாட்டை ஆண்டான்- நான்கு வேதங்களையும் செவ்வைப்படுத்தி நீதி ஒழுக்கமும் இவைகளை நிலை நிறுத்தினான். வடமொழியில் அளவற்ற ஆகமநூல்களை இயற்றினான். அவனுக்குப் பிறந்த வீரருத்திரனுக்கு பட்டம் கட்டிவிட்டுக் கயிலை அடைந்தான்.

# இருபத்தேழாவது

## உயர்தேவசாலி யுற்பவச் சருக்கம்.

[இச்சருக்கத்தில் வரமுனி தேவசாலியாக உதித்த வரலாறு கூறப்படுகிறது.]

கலிவிருத்தம்.

பண்ணவ ரிணையன பகர்ந்த சூதனை
யெண்ணரு முவகையி னேத்தி மாதவ
தண்ணருள் வரமுனி தரணி மேல்வரு
வண்ணமு முணர்த்தென வழங்கு வானரோ. (1)

சுகம்புனை வரமுனி சுகுண பூபதி
மகிழ்ந்தருள் சத்திய வதிம டந்தைபா
லகங்கெழு மன்பினோ டவத ரித்தன
னெகிழ்ந்தமென் மலர்க்கணை நேச னென்னவே. (2)

நயந்தவா மோதநன் னகர்பு ரந்திடு
வயங்கெழு சுகுணனம் மகன்ற னக்குயர்
செயங்குடி யிருந்தமெய்த் தேவ சாலியென்
றியங்குறு திருப்பெய ரினிது சூட்டினன். (3)

துதிமணி முடிபுனை சுகுண பூபனு
மதிகிளர் சத்திய வதிம டந்தையு
மதிகநன் மகிழ்வுற வனைய மாமக
னிதியென வளர்ந்தன னிருபர் போற்றவே. (4)

அமலனு மருளினு லமிர்த சீலிபின்
னிமிரரா மஞ்செறி நிடத நாட்டிடைக்
கமலசா தனனுளங் களிப்ப வாங்கவன்
சுமுகமா மனைவிபாற் றோன்றி னளரோ. (5)

தனதனோர் கமலசா தனனென் பான்மிக
மனமரு வுவகைநீள் வாரி மூழ்குற
வனையமா மகடிரு வமிர்த மாமென
வினைவுதீ ரெழில்சிறந் தினிதி னோங்கினள். (6)

காமனுந் தொழவரு கமல சாதன
பூமனெஞ் சுவந்துபின் புதல்விக் கின்புறத்
தாமமென் குழற்சுக தருணி யென்றொரு
நாமமுஞ் சூட்டின னற்றி னத்தரோ. (7)

நிடதநன் னாட்டிலன் னிறைமலர்க்குழன்
மடவரல் வளர்ந்தனள் வையகம்புகழ்
திடனுறு நயகுணத் தேவ சாலிபின்
னடமறப் புரிசெய லறைகு வாமரோ. (8)

எழுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

கயல்வரி நெடுங்கட் கவுரியோர் பாகன் கருணையா லறிஞர் பற்பலர்க்குஞ், சயிலம தனைய தடம்புயத் தேவசாலிசற் குருபரனாகி, இயமநன் னியம மாதனம் பிராண யாமமெண் பிரத்தியாகார, முயர்வுறுந் தியானந் தாரணை சமாதி யோகம்யா வையுமுணர்த் தினனால். (9)

அயிர்ப்பற விவைபற் பலர்க்குறப் பயிற்று மறிவுடைத் தேவசாலிக்குச், செயிர்ப்பொரு கதிர்வேற் சுகுணனுந் தாதை செழும்பணை நிடதநா டளிக்கும், வியப்புயர் கமல சாதனன் பயந்த மிளிர்சுக தருணியென் பவளை, நயப்பினன் றமல னுரைத்தசொற் கிணங்க நலங்கிளர் திருமண முடித்தான். (10)

தனுநுதற் கயற்கட் கருங்குழற் செவ்வாய்த் தனிச்சுக தருணியோ டின்ப, மனுபவித் தருளுந் தேவசாலிக்கன் றணிகிளர் மகுடமுஞ் சூட்டிப், பனுவலிற் றுவண்ட சிற்றிடை மென்சொற் பன்னியினுடனுவந் தெழுந்து, மனுகுலச் சுகுண பூபதி மவுனமாதவ வனத்திடைப் புக்கான். (11)

தனைத்தருந் தந்தை தனினுமெய்த் தேவ சாலியா மோதமா நகரி, னனைப்பனி மலர்த்தார் மருவலர் வணங்க நயந்தர சிருக்குமந் நாளிற். புனைப்பரு வதத்திண் புயத்தவன் களிப்பப் புணர்சுக தருணியென் றோதுங், கனைப்புயற் கூந்தற் காதலி சசிசே கரனெனு மகனை யீன்றெடுத்தாள். (12)

கவினுறு சசிசே கரனெனு மகற்குக் கலிங்கநா டினிதுறக் காக்கு
மவிர்சுடர் வடிவே லணிகன காங்க னளித்தவுத் தமியெனுமணங்கை
நவமுமு துவப்ப மணமுடித் தரசு நல்கியில் லவளொடு நடந்து [க
சிவமுறு தேவ சாலிபின் கயிலை சேர்ந்தரன் பதம்பணிந் திருந்தான். (13)

வாசிபொன் னிரத மதகயம் பதாதி வளம்பல மலியவா ரிதிசூழ்
காசினி முழுதும் புரந்தருள் சசிசே கரநர பதியுளங் களிப்ப
மூசிவண் டிசைக்கு முகிற்குழற் களப முலைத்தட வுத்தமி யெனுமான்
றேசிக வாம தேவனென் றொருநற் சிறுவனை யளித்தனள் மாதோ. (14)

தோன்றிய வாம தேவனென் றுரைக்குஞ் சுதற்குயர் விதர்ப்ப நாடளிக்கும், வான்றிக ழமிர்த சாகர னெனும்வேன் மன்னர்கோன் வரத்தினுற் பயந்த, தேன்றரு செஞ்சொற் கமலலோ சனையைத் திருமண முடித்தர சீந்து, கான்றழை குழற்கா தலியுடன் சசிசே கரன்றவம் புரிவனத் தடைந்தான். (15)

திருக்கிளர் வாம தேவபூ பதிபின் றேவியி னொடுநலந் திளைத்து, வருக்கைமென் பொழில்சூழ்ந் திலங்குமா மோத வளநகர் புரக்குமந் நாளிற், பெருக்கமுற் றிடுபற் பலமத பேதப் பெருங்கிளை செறிந்தகா ரணத்தாற், றருக்குறு சைவப் பயிர்தலை மயங்கித் தரணியின் மருள் படர்ந்தனவே. (16)

நாரத னதனை யுணர்ந்துவே தண்ட நணுகிநம் பரமனை வணங்கித், தாரக வடிவா யுயிர்தொறு நிறைந்த தலைவகேள் பூதலந் தன்னிற், சீரில்புன் மதம்பற் பலசெறிந் ததனுற் செயல்விட விவையெனத் தெரியா, தாருமங் குழன்று ராதலாற் சைவ மவர்பெற வருள்புரி யென்றான். (17)

மாடக மகதி யாழ்முனி யிணைய வமுத்திநின் றேத்தவவ் வரதன்
கோடவிர் தேவ சாலியை விளித்துக் கோதிலோ யுனதுசே யளித்த
சேடணி வாம தேவபூ பதிக்கோர் திருமக னுகநீ செனித்தி
யேடலர் குழலின் றேவியுங் குருநாட் டிறையவன்மகளெனவருமால். (18)

நீயவ டனேயே பின்னரு மணந்து நிலமுழு வதுந்தனிப் புரந்து தீயபுன் மதத்தின் றிரிபெலாங் கடிந்து திடம்வினை வீரசைவத் தைத், தூய்வ ரெவருந் தொழநிலை நிறுத்தித் துணைவியினொடுமிவ ணெய்தி, மாயையில் பரம பதம்பெறு கெனவு மற்றவன் பணிக் எதிசைசந் தனனால்.

**கருத்து:—** மேலே கூறிய வீருத்திரன் சகர நாட்டையாண்டு வருகையில் அவனுக்குச் சுகுணன் என்ற புதல்வன் தோன்றினன். அச் சுகுணனுக்கும் அவன் மனைவி சத்தியவதிக்கும் ஆக வாமுனி தேவசாலி சன்ற மகனாக அவதரித்தான். தேவதத்தையும் விடத நாட்டில் சுகதருணி என்ற பெயருடன் வளர்ந்தாள். இருவருக்கும் திருமணம் நடந்தது. தேவ ரேலிக்குப் பட்டம் கட்டிவிட்டுச் சுகுணன் தவத்திற்குச் சென்றான் தேவசாலி சகர நாட்டை வெகு புகழுடன் ஆண்டான். அவனுக்கு சசி. சேகரன் என்ற மகன் பிறந்தான்.

## இருபத்தெட்டாவது

## அருட்டேவதாச மய்யன் சருக்கம்.

[இச் சருக்கத்தில் தேவதாசமையனுடைய அவதார வரலாறு கூறப்படுகிறது.]

தறுகட் பகைவர் தொழுதேவ சாலி சரித மிவையாமென்
றுறுதித் தவநற் சூதனெடுத் துரைப்ப முனிவ ருடன்போற்றி
தெறுமுப் பிணியு மவித்தகுணத் திறலோ யந்தச் சிலைவேந்தன்
மறுமைத் திறனு முணர்த்து கென மகிழ்வுற் றவனிவ் வகை
யருள்வான். (1)

வன்னி நுதற்கட் பரமனடி வணங்கி விடைபெற் றிசைந்துசென்ற
தென்னி னளிசூழ் மலரலங்கற் றேவ சாலி செழுங்கனகக்
கன்னி மதிலா மோதநகர் காக்கும் வாம தேவன் மகிழ்
பன்னி கமல லோசனைதன் பால்வந் தினிதுற் பவித்தனனே. (2)

வாம தேவ னிருபனுள மகிழ மகன்வந் துதித்தவுட
றேம ருத மலர்ப்படலைத் தேவதாச மையனெனு
நாம மேயிங் கிவற்கெவரு நவில்க வெனவோ ரசரீரி
தோமு றுவெண் டிசைமுழுதுந் துதிப்ப விசும்பிற் றொனித்ததன்றே. (3)

தாயும் பிதாவுங் களிப்பவின்பத் தழைக்குந் தேவ தாசமையன்
பாயுந் தரங்கத் தடங்கடல்சூழ் பாரி லெவரும் பணிந்துதொழத்
தோயுஞ் சுரும்ப ருவட்டுமதுத் துளிக்குந் துளபத் தாமனென
வாயுஞ் சுருதி முதற்கலைக ளனைத்துந் தேர்ந்துற் றனனன்றே. (4)

இறைவ னருளாற் சுகதருணி யெனுஞ்சுந் தரியு மினியதிரு
வுறையுங் குருநா டதுபுரக்கு முயர்வி ராங்க னுளங்களிப்ப
மறையி னெறிநீங் காதவன்றன் மனைவி சுமுக வல்லிதன்பாற்
குறைவி லன்பி னவதரித்தாள் குலவு மணிப்பொற் கொம்பனையே. (5)

துகடீர் குணவி ராங்கனுநற் சுமுக வல்லிதன்பாற்
மகமீ துவகை பூப்பவரு மனைய புதல்வி யகில மெல்லாம்
புகழ்கூர் திலதா வதியெனப்பேர் புனைந்து திருவும் புலோமிசையு
மிகழ்வி லாத விரதியுநின் றிறைஞ்சக் குருநாட் டிடைவளர்ந்
[தாள். (6)

அணிகூர் வாம தேவ னெனு மரசர் பிரான்பின் னவனிமுற்றும்
பணிவீ ராங்க னளித்த பாவை தனைத்தற் பரனருளாற்
றிணிபூ தாம்போற் றிரண்டபுயத் தேவ தாச மையனுக்கு
நணிமா முனிவோர் புகழவுள நயந்து மணநன் னுள்முடித்தான். (7)

திலதா வதிநன் னலந்திளைக்குந் தேவ தாச மையனெனுங்
குலமா மகற்கு மகுடமுடி குலவச் சூட்டிச் சிலபகற்பின்
வலனே குடிகொண் டிருந்தபுய வாம தேவன் மனைவியொடுந்
தலமீ ரேழும் புகழுமொரு தவமெய் வனத்தைச சார்ந்தனனே. (8)

மணங்கமழ் பொழிலா மோத வளநகர் தனின்ம டங்கற்
கணம்பல சுமந்த செம்பொற் காமர்பீ டிகையி னேறி
யுணங்கலி லரசு செய்யு முயர்தேவ தாச மையன்
பணங்கெழு பணிய ரன்சொற் படிமுயன் றிடங்க னைத்தான். (9)

திக்குபன் மதத்தின் பேதச் செறியிருள் சித்துச் செல்வ
மிக்குறு விமல வீர மயேச்சுர மெனவி ளம்பும்
பக்குவ சமய வாய்மைப் படிபடித் தலங்க றுத்தி
யெக்குலத் துதித்து ளோர்க்கு மிலிங்கதா ரணையுஞ் செய்தான். (10)

திருந்துநன் னெறியிவ் வாறு செலுத்துமச் செங்கோல் வேந்தன்
பொருந்தடம் புயங்கள் விம்மப் புகலரு முவகை பூப்ப
வருந்திமென் மலர்மா தென்ன வளர்தில தாவ திப்பேர்ப்
பெருந்தகை மடந்தை தானோர் பிறங்குசீர்ப் புதல்வற் பெற்றாள். (11)

மேவிய வனைய மைந்தன் விருபாட்சற் றெனப்பேர் பெற்று
மூவிரு திருமு கத்து முரண்பெறு சமர வைவேற்
றாவியங் தோகை வாகை துரகத முருக னேபோற்
றுவில்பல் கலையுந் தேர்ந்து தறுக்குற வளர்ந்தா னன்றே. (12)

வேந்தர்கோன் பின்ன ரந்த விருபாட்சற் கருண நாடாள்
காந்திசே கரனளித்த காஞ்சன மாலை நாமப்
பூந்தடங் கூந்தற் செய்வாய்ப் புளகிதக் களபக் கொங்கை
யேந்திழை மடந்தை தன்னை யியல்புற வதுவை சூட்டி. (13)

ஆதிமா மறையோர் வாழ்த்த வமரர்பூ மாரி தூவ
நீதிகூ ராசர் யாரு நின்றுகை குவித்துப் போற்றத்
தீதிலா முரச மார்பத் திகழ்சுப தினம தொன்றிற்
சோதிசூழ் நவம ணிப்பொற் சுடிகையுஞ்சூட்டி ஞனல். (14)

மகுடமுடி விருபாட்சன் மகிதலங்காத் திருப்பமன்னர் மன்ன ஞன
சிகாநிகர் புயத்தேவ தாசமைய னமரர்வலஞ் செய்யுஞ் செம்பொற்
பகருதிரி சயிலமிசைப் பகர்பவுராம் பிகையினெடு பரிந்து வைகுஞ்
சுகிர்த பிரணவ மல்லிகார்ச்சுன நாதரை த்தினமுந் தொழுது போந்
[தான். (15)

அங்காளி வீரா று முழம்படர்வுற் றறுபதுவார்ந் தழகான்
மிக்க, மின்னுருங் கலிங்கமொன்று புரிந்துநய திரிசயில மீது
வாழும், பன்னக பரணமல்லி கார்ச்சுனற்குச் சிவசிசியின் பண்பி
ஞெங்கும், பொன்னுன விரததுசா ரோகணத்திற் கணிந்திறைஞ்
சிப் புகழ்ந்து நின்றுன். (16)

துவசமணிக் கலையணிந்து தொழுந்திருவா மோ த நகர்த்
தோன்றன் முன்னே, யவனிபுகழ் திரிசயிலத் தமலசிவ பரனுயிர்
களனைத்து மீன்ற, குவவிளமென் முலைப்பவுராம் பிகையினெடு
கயிலையெனக் குலவுமேனிக், கவனவிடை மிசைத்தோன்றிக் கரு
தினவென் றருதுமவை கழறு கென்றுன். (17)

அரியபரம் பரனிவையங் கறையமுடி யரசர்பிரா னமல
நீமுன், புரிசமர நிருதரைவென் றருள்சவுட தேவியெனப் புகழ்
கொண் டோங்கு, முரியநின்று யகியினெடு மின்றெளியேன் செபு
நிலையத் தூடுதோன்றி, வரிசையினென் மரபினர்யா வரையுமிகப்
புரந்தியென வழுத்தி நின்றுன். (18)

அன்பினெடு வணங்கியிது வேண்டலுநன் றெனவருள்செய்
தமலன் சென்றுன், பின்புநர பதிதிருவா மோதநக ரெய்திமணி
பிறங்கு சோதிப், பொன்பரவு சினகரமொன் றியற்றிமுனி வர
ரெவரும் புகழ்ந்து போற்ற, விண்மலர்பல் வியங்களெழு கடலு
மெனத் திசைகடொறு மிசைப்ப மாதோ. (19)

விரிகிரணக் கனகமணிக் கரகமொன்று நிறுவிமறை விதிவ ழா
மற்பரிவினெடு பூசனைபற் பலவுமினி தியற்றிமிகப் பணிந்து தா
ழ்ந்து, திரிபுதவிர் தருமல்கு சேவைகொடு பரவலுமத் தேவ

தேவன், கரியமுகிற் முழுறச்வுட தேவியொடு மவனெழுந்து கருணை செய்தான். (20)

அழகுமிகக் கனகமணிச் சினகரத்தி னிடைப்பொலிந்த வந்த முக்கட், குழகனுக்கன் றிராமலிங்க நாதனெனத் திரு நாமங் குலவச் சூட்டி, மழவிளமென் முலைச்சவுட தேவியொடு மவற்பணிந்து வழுத்தி நின்று, தொழுதுசெழுங் கருணைபெற் முன் றூயபுகழ் வளம்படைத்த தோன்றன் மன்னே. (20)

மதனதில தாவதியா மனைவி யொடும் பின்னெழுந்து மன்னர், மன்னன் சிதமுனிவர் விபுதர்சித்தர் செறிந்த செழுங் கயிலாயச் சிலம்பினெய்திச், சுதரிசன நாதனுமவ் வேதனுந்தே டரியபதச் சோதி செம்பொற், பதமலர்கள் பணிந்துகரங் குவித்துமறை மொழிகளினுற் பரவி நின்றுன். (21)

போற்றலுந்தண் ணருள்சுரந்து புணரிநெடுங் கடல்புடை சூழ் புவிமுற் றுண்ட, சாற்றரிய குணத்தேவ தாசமையன் றனக்குமன்னேன் றலைவி யாய, வேற்றடங்கூர் விழித்திலதா வதிக்குமுயர் பரமபத விருப்பிற் றந்தான், கூற்றனைமுன் குமைத்த செழுங் கோகனக சரணமுக்கட் குழகன் மாதோ. (22)

**கருத்து:—** சிவபெருமானுடைய திருவருளைப் பெற்று தேவசாலி யானவன் ஆமோத நகரை ஆண்டுவந்த வாம தேவ அரசனுக்குக் கமல லோசனையிடம் மகனாக அவதரித்தான். அம்மைந்தனுக்கு தேவதாச மையன் என்ற பெயர் தந்தார்கள். அப்போது குரு நாட்டு அரசனிடம் சுமுகவல்லியின்பால் திலதாவல்லி என்ற பெயரோடு தேவதத்தை பிறந் தாள். தக்க வயதில் தேவதாசனுக்கும் திலதாவதிக்கும் திருமணம் நடந்தது. சில காலத்திற்குப் பிறகு தேவதாசமையனுக்குப் பட்டம் கட்டி விட்டுத் தகப்பன் தவத்திற்குச் சென்றுன். தேவதாசமையன் செங்கோல் செலுத்தும்போது சைவ ஆகமத்தின்படி ஒழுக்கம் கற்பித்து மக்களுக்கு லிங்க தாரணம் செய்து வைத்தான். அவனுக்கு விருபாட்சன் என்ற மகன் பிறந்தான். தருணம் வந்த பிறகு காஞ்சனமாலையைத் திருமணம் செய்து வைத்தான். பிறகு விருபாட்சன் பட்டத்திற்கு வந்தான். அப்போது தேவதாசமையன் ஸ்ரீ சைலம் சென்று பவுராம்பிகை சமேத மல்லிகார்ஜுனரை வணங்கி வந்தான். சிவராத்திரியின்போது பன் னிரண்டு முழ அகலமும் அறுபது முழம் நீளமுள்ள வஸ்திரம்ஒன்றுநெய்து அதனைக் கொடிமரத்திற்குக் கட்டி அதனை அலங்கரித்துத் துதித்தான். இறைவன் காட்சி யளித்து யாது வேண்டுமென்று கேட்க தேவதாச மையன் தான் கட்டுகிற ஆலயத்தில் முன் வரம் தந்து காப்பாற்றிய சௌடநாயகியோடு இறைவனும் எழுந்தருள வேண்டுமென்று பிரார்த் தித்தான். இறைவனும் ஒப்புக்கொள்ள தேவதாசமையன் கட்டிய கோ யிலிலே சவுடநாயகியுடன் இராமலிங்கம் என்ற பெயரில் சிவபெருமானை யும் தாபித்து வணங்கினன். பிறகு சிவ பூசையில் திகழ்ந்த தேவதாச மையன் மனைவியோடு முக்தி யடைந்தான்.

## இருபத்தொன்பதாவது

# வளர்தேவாங்கன் மரபுச்சருக்கம்.

[இச்சருக்கத்தில் தேவாங்க மரபு பத்தாயிரம் குலங்களாகப்பெருகிய வரலாறு கூறப்பட்டிருக்கிறது.]

*அறுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.*

அலகில்பல கலையுணர்ந்த வதிகதவச் சூதனிவை யருளலோடு
மலவிருள்சீத் துயர்ந்தநைமி சாரணிய முனிவர்மன மகிழ்ந்து போற்றி
புலகுபுகழ் தேவாங்க னுற்பவகா ரணமுழுது முரைத்தா யன்னோன்
குலவிருபர் சரிதகுநீ கூறுதியென் னலுமவன்பின் கூறு வானால். (1)

விடையமைந்து மலித்துயர்ந்த மெய்த்தவத்தீர் கேண்மினை திர் வேலைபோலும், படைகள்பல யுடைசெறியப் பகர்புகழா மோதவளம்பதியினூடு, கொடைமுகிலும் பழகவரு கோதில் விருபாட்சனெனுங் கொற்ற வேந்த, னடையலர்வந் தடிபணிய வகிலதல மினிது புரந்தருளு நாளில். (2)

கற்பினுயர் தருமவன்கா தலியெனுங்காஞ் சனமாலை கருப்ப மெய்திப், பொற்புமிகு முருத்திரனென் ஞெருருபுதல்வற் பெற்றனளப் புதல்வன் கல்வி, பற்பலவு மினிதுயர்ந்து பரராசர் புகழுவிளம் பருவ மாதர், மற்படைமன் மதனெனமா மயல் பெருகி மடலெழுத வளர்ந்தான் மன்னோ. (3)

உருத்திரனென் றுரைக்குமந்த மகற்குயர்கோ சலநாட் டை யுவந்து காக்கு, மருத்திகழ்பூ மஞ்சரிசூழ் மார்பகவுக் கிர சாப மன்ன னீன்ற, செருத்தடங்கட், களபமுலைத் துற்களா வதி யெனுநற் செல்வி தன்னைப், பொருத்த நய மிகுந்தசுப தினத்தரசர் துதிப்பமணம் பொருத்திப் பின்னர். (4)

மங்கலதுந் துபிமதங்க மணிமுரச மியம்பமுனி வரர் கொண்டாடத், துங்கமிகு மகுடமுடி சூட்டிவிரு பாட்சனெ னுஞ் சுடர்வை வேலான், எங்கணுமெய்ப் புகழ்பெறுகாஞ் சனமாலை யொடும்விரைவி னெழுந்து சென்று, சங்க நிறை தடம் பலசூழ் தவவனமொன் றினிலினிது சார்ந்தா னன்றே. (5)

கலிவிருத்தம்.

இயலு ருத்திர னென்றுல கெங்கணும்
பெயர்ப டைத்தவப் பேரெழில் வேந்துபின்
னுயர்வில் வெற்றி யுயர்ந்தசெங் கோன்முறைச்
செயந டத்திச் சிறந்துறை காலையில். (6)

துற்க ளாவதி யென்னத் துலங்கிய
பொற்க லாநிதி போன்முகக் காதலி
மற்க ராவடு மானிக ராகவோர்
நற்கு ணாகர மைந்தனை நல்கினாள். (7)

வாட்டி றம்புனை வன்மரு வார்செருக்
கோட்டு கின்ற வுருத்திர மன்னவன்
றேட்ட டம்புள கெய்திடத் தோன்றுமச்
சேட்டி ளஞ்சொற் சிறுவன் வளர்ந்தனன். (8)

ஆளி நேர்விரு பாட்சன் சுதன்பினவ்
வாளி னோங்கு மகற்குண் மகிழ்வினாற்
காள சேன னெனுங்கன நாமநன்
னாளில் யாரு நயப்புறச் சூட்டியே. (9)

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரியவிருத்தம்.

கடிகையுந் தரித்துப் பின்பு துற்களா வதியென் றோது
மடிதவிர் கற்பின் மிக்க மனைவியி னொடுமெ ழுந்து
வெடிமலர்த் தொடைசூழ் கூந்தன் மெல்லிய லுமையோர் பாக
னடியிணை விரும்பி யாங்கோ ரருந்தவ வனத்திற் புக்கான். (10)

வானுலாம் பொழிலா மோதவளநகர் புரக்குங் காள
சேனனுங் கதற்பி னெண்ணி றேயமன் னவர்க ளீன்ற
மீனநேர் நெடுங்கட் செவ்வாய் மின்னனா ரயுதர் தம்மைக்
கானமு லலங்கல் சூட்டிக் கடிமணம் புரிந்தான் மன்னோ. (11)

ஒருபெருஞ் செங்கோல் போற்று முயர்திறற் காள சேன
னருமணம் புரியு மீரை யாயிர மனைவி கட்கும்
வருசெழு மழலைத் தீஞ்சொன் மைந்தர்க ளின்மை தன்னாற்
பருவர லுழந்து நெஞ்சுட் பரமனைத் துதித்தி ருந்தான். (12)

உறுகணுற் றுழன்று வேந்த னுறைதரு மனைய வேலை
மறுவறக் சுருதி முற்று மதித்தினி துணர்ந்து வாய்மை
விறல்படைத் துயர்ந்த மோன மிகுதவக் கவுத மன்சீர்
பெறவிருப் புடனு மோதப் பெருநகர் வந்து சார்ந்தான். (13)

கவுதம் முனிவ னுங்குக் கருணையி னடைத லோடும்
புவிபுகழ் காள சேன பூபதி விரைந்து நேர்போய்
மவுலிகொண் முடியாற் றழ்ந்து வான்முறை தொழுது போற்றிச்
சவிமணி யிழைத்த செம்பொற் றவிசினி லிருத்திப் பின்னர். (14)

அருக்கிய முதல னைத்து மருமறையி னல்கிக்
கருத்தினி லுவகை பூப்பக் கனிபுரை முகமன் கூறி
மருக்கமழ் குமுத மன்ன வாய்மலர் திறந்து நேயம்
பெருக்கிய விருப்பி னேடு மினையன பேச லுற்றான். (15)

ஐயவிங் கடியே னீரை யாயிர மடவார் தம்மை
மையற வேட்டு மின்று வரையொரு மகவுங் காணேன்
செய்ய மெய்த் தவங்கூர் நின்றன் றிருவருள் சிறிதுண்
[டாயின்
வெய்யபுன் கவலை தீர்வ னெனமிக வேண்டி நின்றான். (16)

உருத்திர னளித்தோனிவ்வா றுரைத்துநின் றிறைஞ்ச லோடுங்
கருத்தினி லினிச்செல்லாத கவுதம னவனை நோக்கிப்
பருத்தொளிர் புயத்தோய் முக்கட்பரமனு ரருளாலிங்கோர்
வருத்தமில் வேள்வி யாற்றின் மக்கட்பே றுண்டாமன்றே. (17)

வழுத்துபுத் திரகா மேட்டி மகத்தினுக் குரிய வாய
விழுத்தகு பொருள்கண் முற்றும் விரைந்திவட் டருதி யெ
[ன்னச்
செழித்துயர் புகழ்கூர் காள சேனனங் கவைவ முமற்
பழிப்பற வொருக ணத்துட் பண்பினே டீட்டி னனல். (18)

அருள்வளர் கவுத மன்பின் னரசர்கோ னுவகை கூரப்
பொருள்செறி மறையொ ழுங்கிற் புவியெலா மினிது போற்று

மிருளில்புத் திரகா மேட்டி யெனும்பெரு மகத்தை யந்தப்
பருதிதோய் பொழிலா மோத பதிதனிற் புரிந்தான்
[மன்னே. (19)

புரிதரு மகத்தி னின்று புரவலன் கவலை நீங்க
வெரிகனற் கடவுள் கையி னினிதமு தறநி வைறந்த
சொரிசெழுங் கிரணப் பைம்பொற் றாயநற் கலனென் றேந்தி
வரிசைகொள் கவுத மன்முன் வந்தனன் மகிழ்வின் மாதோ. (20)

பாவகன்கைத் தலத்தேந்தும் பைம்பொன்மணிச் செழுங்கலனைப் பரிவின் வாங்கித், தேவர்புகழ் கவுதமா முனிவனருளொடுகாளசேன னென்னும், காவலன பதிமணந்த தேவியரோ ரயுதரையுங் கடிது கூவி, மேவமிர்த மதைப்பகிர்ந்தங் கனைவர்கட்கு முவ்வகைமன மிகத்தந் தானால், (21)

காமவன லவித்தவருட் கவுதமா முனிவனன்று கனிவி னல்குந், தேமமிர்த நுகர்ந்தவந்தச் சேல்விழிமங் கையரெவருஞ் செழுஞ்சூன் முற்றிக், தோமகலு மாமோத புரத்தரசன் கனகபுயத் துணைகள் விம்மத், தாமதிக தவப்பயனு லொருபதினு யிரப்புதல்வர் தம்மை யீன்றார். (22)

மைந்தர்கள்வந் துதித்தவுடன் மன்னர்பிரான் மருள்செறிந்த
சிந்தைநெடுங் கவலையெல்லாந் தீர்ந்துசெழும் பரிமளங்கூர்
சந்தனமென் களபமணி தடம்புயங்கள் புளகமெய்த
முந்தவெழு முவகையெனு முதிர்கடலி னிடைப்படிந்தான். (23)

ஐந்தருவி னீழல்வைகு மமரரனை வருந்திரண்டு
கொந்தவிழும் பரிமளமென் கொழுமலர்மா ரிகள்பொழிந்தார்
தொந்தவினைக் கடல்கடந்து சுருதிமுடிப் பொருளுணர்ந்த
தந்தலகு முனிவரெலா நயந்துதுதி பகர்ந்தனரால். (24)

மெல்லியமா மலர்வேரி விரிபொழிலா மோதநகர்
வல்லியிடை மடந்தையரு மதனனிக ராடவரு
நல்லியல்பி னெடுமுவகை நண்ணினரெண் டிசைகடோறும்
பல்லியங்க ளொழுதரங்கப் பரவையினு மதிர்ந்தனவே. (25)

செப்புபெருந் திறற்காள சேனனுளங் களிக்கவரு
மப்புதல்வ ரயுதருங்கோ ளரியினிளங் குருளைகள்போற்
றுப்புமிக ரிதழனையர் சுடர்முலைத்தெள் ளமுதருந்தி
யெப்புவன மும்புகழ வினிதுவளர்ந் தெழில்சிறந்தார். (26)

ஆர்வமிகு மனையமைந்த ரபுதர்கட்கு மறையொழுங்கிற்
பேர்வரிசை முதற்பலவும் பெட்பினொடு புரிந்துபின்ன
ரேர்வளரு மனுமுதலா மெழுநூறு முனிவர்களாற்
சீர்வளங்கூ ருபநயனஞ் செய்வித்தான் திறல்வேந்தன். (27)

ஓரெழுநூ றிருடிகளா லுபநயன முலகுவப்பப்
பாரரச னியற்றுவித்த பான்மையினு லன்றுமுதற்
கூரிசைபெற் றுயர்ந்திலங்குங் கோத்திரமு மவ்வாறே
பேரினிது படைத்தனவாற் பெருந்தவத்து முனிவீரே. (28)

திக்கனைத்தும் புகழ்காள சேனநர பதியதன்பின்
மக்கள்பதி னுயிரவர் தமக்குமண முடித்துவளர்
தக்கநய குணசுமுக தளரூப சேனனெனு
மிக்கசுதன் றனக்குமணி மிளிர்மகுட முடிசூட்டி. (29)

துடிமருங்குற் களபமுலைத் துற்களா வதியினொடுங்
கடிதெழுந்தா மோதநகர் கடந்துபர கதிவிரும்பிக்
கொடியவைந்து புலன்களைந்த குணமுனிவ ரினிதுவைகு
நெடிசெறிந்து பிறங்குதவ நெடுவனமொன் றடைந்தனனால். (30)

தீரவித ரணரூப சேனனெனு நரபதிபின்
வீரமிகு மடங்கலின மிடைமணியா தனமேற்கொண்
டாரணவந் தணர்புகழ வரசர்பல திறைகுவித்து
நேரடிவந் தனைபுரிய நெறியமைச்சர் முறைநிகழ்த்த. (31)

மகந்தவமெங் கணுமோங்க மடந்தையர்கற் பெனும்பயிர்கள்
சகந்தனிலோ ரிடருமின்றித் தழைத்தினிது வளர்ந்திலங்கச்
சுகம்பொறைபுண் ணியநியமந் தூயதிரு வருணீதி
மிகுந்துநிறைந் திடக்கொடிய வெங்கலிவல் லிருள்காப்ப. (32)

நிலவுமிழு மதிக்கவிகை நிழற்றமணிக் கவரிதுன்னப்
பலவணிகள் கிரணவிளம் பரிதியெனக் கதிர்பரப்ப
உலகுமகிழ் சுருதிவழி யொருசெழுஞ்செங் கோலோச்சிப்
புலவர்புக ழாமோத புரத்திலர சிருந்தனனே. (33)

சகரைதனி லிவ்வாறு தளரூப சேனனென்பான்
புகழரசு புரிநாளிற் பொலிமுதனூர் பெனுகொண்டை
பகர்படைவீ டெனுமினைய பதியாளும் படைநிருபர்
மிகுதிறைதந் திடாதுமுறை விடுத்தகங்கொண் டிருந்தன
ரால். (34)

வரிசைதவிர்ந் துளத்தினமை மதியாதுற் றனரிவரென்
றரிபெருமவ் வரசர்தமை யமர்வலியா லறமுறுக்கித்
தெரிமுதனூர் பெனுகொண்டை திகழ்படைவீ டெனப்பகருஞ்
சரிதவிர்முத் தலங்களுக்குந் தான்சிங்கா தனபதியாய். (35)

சிறந்தமணி முடிரூப சேனனெனுந் திறல்வேந்தன்
பிறங்குமக பதியெனவே பெருகுதிரு வளம்படைத்து
மறந்தவிர்நன் னீதிசந்தி வந்தனமே முதலாய
வறங்களெலாம் வழுவாதிவ் வவனிபுரந் தினிதிருந்தான். (36)

இலங்குமதி முடித்தபிரா னிதயபங்கே ருகத்துதித்த
பலன்பெறுதே வாங்கமகி பதிபத்தா யிரங்குலமும்
வலன்புகழ்சீர் தனிலுயர்ந்து வற்றுத கடலெனவே
நிலங்களெலாந் துதித்தேத்த நெடிதுதழைத் திருந்தவன்றே. (36)

**கருத்து :—** மேலே கூறிய விருபாட்சன் ஆமோத நகரத்தை ஆட்சி செய்யும் காலத்தில் உருத்திரன் என்ற மகனைப் பெற்றான். வயது வந்ததும் துர்களாவதி யென்ற இளவரசியை அவன் திருமணம் செய்தான். வயது வந்ததும் உருத்திரன் பட்டத்திற்கு வந்தான். அவனுக்குக் காளசேனன் என்ற மகன் பிறந்தான். அவன் வயது வந்ததும் பதினாயிரம் இளவரசிகளை மணந்தான். ஆனல் ஒருவருக்கும் மகப்பேறு உண்டாகவில்லை. ஒருநாள் கௌதம முனிவர் அரசனிடம் வரவே அரசன் தன் துயரத்தை தெரிவித்தான். முனிவரோ புத்திரகாமேட்டி யாகம் செய்யும்படி ஏவினர். காளசேனமன்னனும் அவ்வாறே யாகஞ் செய்ய யாக குண்டத் திலிருந்து தோன்றிய அமிர்தத்தைப் பத்தாயிரம் அரசிகளுக்கும் அருந்தக் கொடுக்கவே அவர்கள் கருவுற்றுப் பத்தாயிரம் பிள்ளைகளை ஈன்றனர். அப்பிள்ளைகள் சிங்கக் குட்டிகள் போல் வளர்ந்து சகல சடங்குகளும் செய்யப்பெற்று எழுநூறு முனிவர்களாலே உபதேசம் செய்யப் பெற்றார்கள். அவ்விதம் செய்ததினலே எழுநூறு கோத்திரங்களும் ஏற்பட்டன. பதினாயிரம் புதல்வர்களும் விவாகம் செய்து கொண்டு குலங்களைப் பெருக்கினர்கள். காலசேனமன்னன் ரூபசேனன்

என்ற மகனுக்குப் பட்டம் கட்டிவிட்டு மனைவியுடன் தவத்திற்குச் சென்றான். அதுமுதல் ரூபசேனன் நீதியுடன் ஆமோத நகரத்தில் ஆட்சி செய்து வந்தான். அப்போது முதனூர், பெனுகொண்டை, படைவீடு என்ற நாட்டு அரசர்கள் திறை கொடாததினால் அவர்களைத் தோற்கடித்து தானே அப்பகுதிகளுக்கு அரசனாகிச் செங்கோல் செலுத்தி வந்தான். இவ்வாறு தேவாங்கனுடைய வம்சத்தில் பத்தாயிரம் குலங்கள் பெருகி வற்றாத கடல்போல யாவரும் துதிக்கச் செழித்தார்கள்.

## வாழி.

*அறுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.*

பார்வாழி சுரர்வாழி பகர்சுருதி வாழிகலை பலவும் வாழி
கார்வாழி கடல்வாழி காவலர்செங் கோல்வாழி கற்றோர் வாழி
யேர்வாழி மதிமுடித்த விராமலிங்க நாதனெனு மெங்கோன்வாழி
சீர்வாழி வளர்சவுட தேவியுமை வாழியருள் செல்வம் வாழி.

பரந்தபொழிற் சகரைநல்லோர் பகர்முதனூர் பெனுகொண்டை
[படைவீ டென்னத்
தரங்குலவு மிந்நான்கு தலமுதலாகிய சகல தலமும் வாழி
நிரந்தரநன் னிலையமம் வாழிசைவம் வாழிசிவ நேயம் வாழி
வரம்பெறுதே வாங்கமகி பதிபத்தா யிரங்குலமும் வாழி வாழி.

தழுவுமுமை பாகனரு ளினில்வருமித் தேவாங்க சரிதந் தன்னை
யெழுதுமதி யினர்வாசிப் பவர்கேட்போர் துதிப்பவர்மற் றெவ
ரும் வாழி வாழி.
செழுமைபுனை கோவைநகர் குலதிலகர் தேவாங்கர் தலைவர் வாழி
கொழுநிதியி லுயர்ந்தவன்னோர் குலமுழுதும் வாழியெல்லாக்
[குலமும்

தேவாங்க புராணம்-முற்றுப்பெற்றது.

---

**தேவாங்க குலதேவி சவுடாம்பிகையம்மை சரண் டுணை.**

சிவமயம்.

# சேர்க்கை.

## இந்நூல் செய்த காலத்து இயற்றிய

# சாற்றுக்கவி.

---

இஃது

திரு,

## சாமுண்டியாசாரியவர்களியற்றியது.

*அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.*

*மலர்மகளு மதுரமுதிர் கலைமகளுங் குடியிருந்து மகிழ்வு கூரு*
*நலவளமை பலவுநிறை தருமினிய தென்காசை நகரந் தன்னிற்*
*புலவர்துதி புரிந்தினிது புடைசூழப் பூசுரர்கள் பொருந்தி வாழ்த்த*
*நிலவரசர் திறைகுவித்துப் பணிந்துதொழ வமைச்சர் முறை நிகழ்த்த மன்னோ.*

*மருவுபுகழ் வளர்பூமன் மலர்ந்தமுல்லைச் செழுந்தாமன் வதன சோமன்*
*றிருவுலவு முபகாரன் சீலவார் குலதீரன் செயகு பேரன்*
*றருமநய குணநீதன் மருவலர்கள் பணிபாதன் றமிழ்வி நோதன்*
*அருள்பெறுரா சயவாக னருளியவச் சிரதேக னதிவி வேகன்.* (1)

*சுகநிதிசுந் தரபாண்டிய துரைகுலசே கரபாண்டிய சுகுண யோகன்*
*மகபதிநேர் சொக்கலிங்க மாவிவர்க்கு முன்னுதித்த வரிசைத் தோன்றல்*
*சகலசவு பாக்கியவங்கார்* **திருமலைப்போ டயராச** *தயாள சீலன்*
*புகழ்குலவு திம்மயமந் திரியொடுவீற் றிருந்துநிலம் புரக்கு நாளில்.* (2)

*சிங்கார மதிவதனன் செழுந்தமிழ்ப்பா வலர்க்குதவுஞ் சிலாக்கிய லோலன்*
*மங்காத குணசீலன் மாறாத செல்வமிகு வளரும் யோகன்*
*அங்காசை வளம்பதித்தே வாங்கர்தம்மிற் செட்டிமையன் பாக வோங்குஞ்*
*சங்கானு மகிபனரு டவப்புதல்வன்* **மல்லயசுந் தர**வி *வேகன்.* (3)

*வரியதனம் படைத்தசெந்தா மரைமலர்மான் வளர்களப மார்பன்மேருக்*
*கிரியதனங் கிடுதீப நிகரெனவோங் கியசெழுஞ்சற் கீர்த்தி மேவி*
*யரியதனந் தனிலுயர்மால் காசைநகர்த் தேவாங்கர்க் கன்புமிக்க*
*பெரியதனங் கொண்டனவே ளருள்சுதன்* **மல்லய** *சுகுணப்பிரபுடீகன்.*(4)

## சேர்க்கை

திருவன்னம் வளர்மார்பன் செயசுமுகன் புவிமுழுதுங் செழிக்குங் கீர்த்தி
மருவன்ன நிதிபுலவோர் மனப்படிதந் தருளமிர்த வசன லோலன்
கருவண்ண முகின்குழலார் மதனுயர்தே வாங்ககுலன் காசை வாழுங்
குருவண்ண மகராசன் றருமணிமல் லயனெனுஞ்சற் குணவிவேகன். (5)

ஊக்கமணி மருவலரை வென்கண்டன் னவர்வணங்கி லுகந்தன் பாகக்
காக்கமணி லுதித்தருண்மால் கனம்பெறுதே வாங்ககுலன் காசை வாழு
மூக்கமணி யம்பெரிய மல்லயபூ பதிபுதல்வன் முகிநேர் தியாகன்
ஆக்கமணி நெடுமார்ப னீலகண்ட சுமுகனெனு மதிவிவேகன். (6)

வண்டாரம் புயவாணி யருள்பெருகு வாணர்மிசை மகிழ்வு கூர்ந்து
கண்டாரங் குவளையொடு கனதனவா கனங்கணல்குங் கனவான் வாசத்
தண்டாரம் புயசயிலன் றேவாங்க வமிசபுரோ கிதசன் மார்க்கன்
பண்டாரஞ் செட்டி குரு வணசுகிர்த சகலசவு பாக்கிய சீலன். (7)

அங்கயனேர் விழிமடவார் மதன்வாணர் செழுந்தமிழுக் கண்பாய் நல்குஞ்
செங்கயனெண் டிசைமுழுதுந் துலங்கியசற் கீர்த்திபந்தன் சீர்பெற்
[றோங்கும்
பங்கயமான் வளர்புயன்றே வாங்ககுலன் காசைவளம் பதியின் மேவும்
லிங்கயவே ளருள்சுபுத்தி நேய குருவணா னெனுநன் னீதி யோகன். (8)

திருவளரு மிவர்முதலாய்த் தென்காசை யம்பதியிற் சீர்பெற் றோங்கி
மருவுபுகழ் வளம்படைத்து வளர்பத்தா யிரங்குலத்து வந்தோர் யாருந்
தருமநெறி தவறாத தேவலன்றன் சரிதவட மொழிநூ றன்னைப்
பெருகுதமி ழாற்பாடித் தருகவெனப் பிரியமொடு கேட்ப மன்னோ. (9)

குலவுசெழுங் கோயமுத்தூர் வளர்நிதிதே வாங்கர்குல குருவாய் வந்த
நலநளின சுமுக சதா சிவானந்த தேசிகனு நாளு மின்ப
மலியுநகர்க் கலப்பதிவாழ் மூக்கயவேள் செல்வன்மன்னோன் மணிபொற் பாத
சலசமலர் துதியோகி தொட்டயதே சிகனு முன்னூற் றன்மை காட்ட
(10)

அதிகநெடும் புகழ்படைத்த வனையபெருங் கதையதனை யமிர்த மேபோன்
மதுரமிகு செழுந்தமிழாற் பொருள்செறிந்த புராணசிரோ மணியாமென்
துதிபெருகப் பாடியதைக் காசைவளம் பதியிலருள் சுரந்து வாழு [னத்
முதுமறைவாழ்த்திய சவுடநாயகி பொற்கோவின்முன் மண்டபத்தின்
மன்னோ. (11)

காசைநகர் புரக்கும்வங்கார் திருமலைப்போ டயதுரைகாரியவல் லோர்கள்
பேசுதமிழ்ப் பாவலர்தே வாங்கர்பத்தா யிரங்குலத்தோர் பெரியோர் யாரு
நேசமிகச் சூழ்சபையி ரலங்கேற்றி னன்மதுர நிறைந்த கல்வி
வாசமுயர் பழனிவளம் பதிவளர் மாம்பழக் கவிஞன் மதிவல்லோனே.
(12)